# திருக்குர்ஆன் தீர்ப்பு

**முதலாம் பாகம்**

நூலாசிரியர்

**ஷெய்ஹுல் முப்லிஹீன்**
**எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்)**

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண்: 1447,
7 (ப.எண்: 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி: 24342926, 24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
இணைய தளம் : www.tamilvanan.com

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Thirukkuran Theerpu - Part I** |
| Author | : | **Sheihul Mufliheen M.S.M.Abdullah (Rah)** |
| Subject | : | **Spiritualism** |
| Language | : | **Tamil** |
| First Edition in Tamilnadu | : | **2011** |
| Copy right | : | **All Ceylon Thareekathul Mufliheen** |
| Publisher | : | **All Ceylon Thareekathul Mufliheen, Sri Lanka.** |
| First Publication | : | **25.01.1990 (In Sri Lanka)** |
| Second Published | : | **31.01.2005 (In Sri Lanka)** |
| Paper Used | : | **70 Gsm Bank** |
| Paper Size | : | **A5** |
| Size of the Book | : | **1/8** |
| Type used for Text | : | **Kalaham** |
| Number of pages | : | **iv + 224 = 228** |
| ISBN | : | **955 - 1212 - 00 - 2** |

இந்திய விலை : ரூ. 120/-

Publishers in Tamilnadu :

**Manimekalai Pirasuram**
Post Box: 1447,
7 (Old No: 4), Thanikachalam Road,
T.Nagar, Chennai-17
Phone: 24342926, 24346082
email: manimekalai1@dataone.in
website: www.tamilvanan.com

# வாசக நேயர்களுக்கு ஒரு நிபந்தனை

**அன்புப் பெருமக்களே!**

இஸ்லாத்தின் முழுப்பகுதியும் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், பகுத்தறிவு ஆகிய ஐந்து மூலப்பிரமாணங்களைக் கொண்டும் நிலைப்படுத்தப்பட்ட ஒன்றாகும், தெளிவான ஆராய்வும் குர்ஆன் ஹதீஸ்களைப் பற்றிய சரியான அறிவும் இல்லாத ஒருசிலரால் எழுதப்பட்ட நூல்களையும் உபதேசங்களையும் ஆதாரமாய் எடுத்துக்கொண்ட ஒரு சிலர் இஸ்லாத்தின் உண்மைக்கு மாறான 'பித்அத்'துகளை மக்களிடையே எழுத்து மூலமும் உபதேசங்கள் மூலமும் புகுத்தி இஸ்லாத்தை மென்மேலும் புரட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் காணுகிறேன்.

இன்னோரின் விளக்கங்களில் சில இஸ்லாத்தின் அடிப்படையான ஈமானுக்கு முரணாயும் குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறாயும் உண்மையை உணரமுற்படும் மக்களுக்குத் தடையாயும் இருக்கின்றன. ஆகவே, நான் மிகக் கஸ்ரப்பட்டு ஆராய்ந்தறிந்த இஸ்லாத்தின் அடிப்படை உண்மைகளைச் சரியான ஆதாரங்களோடு எத்திவைக்க வேண்டும் என்று விரும்பினேன்.

நான் இந்த நூலை எழுதியுள்ள பாணி எழுத்துலக மரபுக்கு முற்றிலும் மாறானதே. விஷய அட்டவணை கூட இல்லாமல் பிரசங்கம் போலவே எழுதியுள்ளேன். ஒரே விஷயத்தை பல முறை பல வகையாய்க் கூறியும் உள்ளேன். ஆகவே, வாசகர்களாகிய நீங்கள் பொறுமையோடு வாசித்து விளங்கும் படியும், இடையிடையே புரட்டிப் பார்த்துவிட்டு முடிவுக்கு வரவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கும் நமக்குமிடையிலுள்ள நிபந்தனை என்னவென்றால் நீங்கள் அல்லாஹ்வையும் றசூலையும் (குர் ஆன், ஹதீஸுகளை) நம்பிய மூ:மீன்களாய் இருந்தால் இந்த நூலைப் பார்வையிடுங்கள். இல்லையானால் வீசிவிடுங்கள் என்பதே.

இப்படிக்கு

நூலாசிரியர்



# அறிவித்தல்

எமது 'திருக்குர்ஆன் தீர்ப்பு' இரண்டாம் பாகத்தில் அல்லாஹ் ரஸூலின் (குர்ஆன், ஹதீஸ்கள்) சார்பாகவும், மதியிழந்த மக்களால் கொலை செய்யப்பட்ட அன்பியாக்கள் அவ்லியாக்கள் சார்பாகவும் என் பேனை மூலம் ஓர் பகிரங்க சவால் விட்டிருக்கிறேன்.

அல்லாஹ்வுடன் அவனல்லாத இலாஹுகளும் (சர்வ சிருட்டிகளும்) இணையாய், துணையாய், சமமாய், ஜோடியாய், ஒப்பாய் உண்டென்று யாராவது குர்ஆன், ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் மாறாய் நிரூபித்துக் காட்டினால் 100,000 பரிசு தருவதாய்க் கூறியுள்ளேன். அதற்குரிய நிபந்தனைகளும் தந்துள்ளேன். விரும்புவோர் அதனை வாசித்தபின் உங்களுக்கு விரும்பிய எவ்வகையான கல்வியைக் கொண்டேனும் நிரூபித்துக் காட்டுங்கள் இன்ஸாஅல்லாஹ் என் வாக்குறுதியை நான் நிறைவேற்றுவேன்.

*குர்ஆன்: 27:64*
*அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? (இல்லை) நீங்கள் (உண்டென்று) உண்மை சொல்பவர்களாய் இருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்.*

*கலிமத்துத்தையிபா :- அல்லாஹ் தவிர இலாஹு இல்லை.*

*குர் ஆன்: 43:84*
*அவனே வானத்திலும் இலாஹுவாய்ப் பூமியிலும் இலாஹுவாய் இருக்கிறான்.*

*குர்ஆன்: 57:3*
*ஆதியும் அவனே. அந்தமும் அவனே. தோற்றுவதும் அவனே. மறைந்திருப்பதும் அவனே. அவன் எல்லாம் அறிந்தவன்.*

இறுதி ஆதாரமான குர்ஆனுக்கு மாறாய்ப் புரட்ட, மூட, மறைக்க இருட்டடிப்புச் செய்ய உங்களால் முடியவே முடியாது. இறுமாப்பினால் இருட்டடிப்புச் செய்ய விரும்புவோர் முயற்சி செய்து பாருங்கள்.

இப்படிக்கு

நூலாசிரியர்

ஆதாரமின்றியே சர்வ சக்தனான அல்லாஹ்வுக்கே சர்வபுகழும் உரித்தாகட்டும். அவ்வல்லோனின் திருத்தூத ரான எங்கள் றசூலேகரீம்(ஸல்) அவர்களுக்கும் அவர்களை அடியொற்றிச் சென்ற நல்லடியார்களான ஸஹாபாப் பெருமக்கள் மற்றும் அவ்லியாக்கள் மூ∴மீன்கள் சகலருக்கும் சாந்தியும் சமாதானமும் உரித்தாகட்டும். ஆமீன்.

### அன்புப் பெருமக்களே!

இன்றைய உலகிலுள்ள சுமார் அறுநூறுகோடி மக்களும் ஒருவரைப் போல் ஒருவர் இல்லையென்பதை நீங்கள் அறிவீர்கள். இவர்கள் எந்த எந்த மதத்தைப் பின்பற்றியிருந்தாலும் ஒவ்வொரு மனிதனும் அனுபவ அறிவில் வேறுபட்டவர்களாய் இருப்பதால் ஒவ்வொருவரும் ஒவ்வோர் மதுஹபை வகுத்துக்கொண்டு வாழ்கிறார்கள் என்றே நாம் கூறலாம். மதவிஷயமாய் இவ்வுலக மக்களை ஒன்றுபடுத்தி நோக்கும் போது இவர்களை இரு பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். ஒன்று பக்திமான்கள் என்பது மற்றொன்று முக்திமான்கள் என்பது. உலகமக்களில் 99வீதமான மக்கள் பக்திமார்க்கத்தையே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை ஆபிதீன்கள் என்று நாம் கூறலாம். இவர்களுக்கு அடுத்தபடியான முக்திமான்கள் என்போர் மிகச்சிலர்தான். இவர்களைத்தான் நாம் அவ்லியாக்கள், ஆரிபுகள் என்று கூறுகிறோம். ஒவ்வொரு நூற்றாண்டிலும் சுமார் 440 பேரும் இவர்களை அண்டி நேர்வழியில் சென்று கொண்டிருக்கிற பல ஆயிரம் மக்களும் மட்டும்தான் இந்த முக்திமான்கள்.

இவர்களல்லாத பக்திமான்களை நோக்கினால் இவர்களில் ஒரு வகுப்பார் உண்மையான பக்திமான்களாயும் இன்னொரு வகுப்பார் குருட்டு நம்பிக்கையில் ஊறிய குருட்டுப் பக்திமான் களாயும் இருக்கிறார்கள். இது உலக மக்கள் எல்லோரையும் பொருத்த விஷயமாகயிருப்பினும் முஸ்லீம்களைப் பொருத்த வரையில் இந்தப் பக்தி என்பது மிக மிக வலுப்பெற்றதாயும் காலாகாலம் இடைச்செருகல் நிறைக்கப்படுவதாயும் இருப்பதை நான் காணுகிறேன். பெரும்பாலான மக்கள் தங்களின் குருட்டுத் தனமான அனுமானங்களைக் கொண்டே மூட பக்தியை உருவாக்கிக் கொள்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், குர்ஆன் ஹதீஸுகளுக்கு ஒரு சிலரால் தங்கள் தங்கள் இஷ்டம் போல் வியாக்கியானம் தரப்பட்டதாலும் தரப்படுவதாலும் மக்கள் அறிவு வளர்ச்சி அற்றவர்களாய் இருப்பதேயாகும். குர்ஆன் ஹதீஸு களுடைய உண்மையான அர்த்தங்கள் பெரும்பாலும் மூடி மறைக்கப்பட்டிருப்பதால் தான் மார்க்க விஷயத்தில் மக்களில் பெரும்பாலார் திசை தெரியாமல் இருளில் தவிக்கிறார்கள் என்பதை இறை உதவியால் நான் கண்டேன். குர்ஆன் ஹதீஸுகளில் மக்கள்





கொண்டுள்ள ஒரு சில மருட்சிகளை நீக்கிவைப்பது அவசியம் என்பதை உணர்ந்து கொண்ட நான் ஒருசில ஆயத்துகளுடையவும் ஒரு சில ஹதீஸுகளுடையவும் உண்மையான வியாக்கியானங்களை நடுத்தர அறிவுடைய மக்களுக்கு எடுத்துக் கூறவிரும்புகிறேன். இறைவன் உங்களுக்கும் எனக்கும் அறிவு வெளிச்சத்தைத் தந்து நல்லருள் பாலிப்பானாக என்று ஆதரவு வைக்கிறேன்.

### அன்பர்களே!

*"வமா கலக்கத்துல்ஜின்னவல் இன்ஸ இல்லாலிய∴பு தூன்"* என்ற குர்ஆன் ஆயத்துக்கு, *"இன்ஸையும் ஜின்னையும் என்னை வணங்குவதற்காகவே படைத்தேன்"* என்றும் *"வ∴புதுறப்பக்க ஹத்தா எ∴தியக்கல்எக்கீன்,"* என்ற குர்ஆன் ஆயத்துக்கு மவுத்தாகும் வரையிலும் வணங்கு என்றும் பொருள் கூறி ஒரு கூட்டம் பிரசாரம் செய்கிறது. மேலும், இவற்றிற்கு ஆதாரமாய் றசூல் (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் மவுத்தாகும் வரையிலும் வணங்கியிருப்பதால் ஒவ்வொரு மனிதனும் மவுத்தாகும் வரையிலும் வணங்கியே ஆகவேண்டும் என்றும் மூ∴மீனையும் முஸ்ரீக்கையும் பிரிப்பது தொழுகைதான் என்றும் பிரசாரம் செய்கிறார்கள். இவ்விஷயங்களில் உண்மையை உணர்ந்து கொள்ள முடியாத மக்கள் இவர்களைக் கூட்டம் கூட்டமாகப் பின்பற்றுகிறார்கள். நன்றாய்த் தொழுகிறார்கள். ஆனால் இவர்களுடைய வாழ்க்கையில் எக்கட்டத்திலும் அந்த வணக்கங்களினால் பெரும்பாலும் பிரயோசனம் பெறாதவர்களாகவே இருக்கிறார்கள் என்பது வெளிப் படையாய்த் தென்படுகிறது. ஆயினும், இக்கூட்டத்தினர் எங்களுடைய வணக்கத்தின் பலனை ஆகிறாவில்தான் காணலாம் என்கிறார்கள். பிரசாரம் செய்யும் போது வேலை செய்தவனின் கூலியை அவனுடைய வியர்வை காய்வதற்கு முன்பே கொடுத்து விடும்படி கூறுகிற இம்மக்கள் தங்கள் தொழுகையின் கூலியை இறைவன் ஆகிறாவில்தான் தருவான் என்று நம்பியிருப்பது ஆச்சரியம்தான்.

மேலும், உண்ணும் உணவில் பூனை, நாய், பன்றி போன்றவை உட்கொண்டிருப்பினும் பரவாயில்லை அதை நீக்கி விட்டு மீதியை உண்ணலாம் என்றும், தொழுகையில்லாதவன் அவ்வுணவைத் தொட்டுவிட்டால் அது ஹறாம் என்றும் அவ்வுண வைத் தொடவே கூடாதென்றும் சட்ட நுட்பம் தருகிறார்கள். இவர்களுடைய கூற்றுகளை நிருபிக்க எத்தனையோ தினுசான புது புதுச் செய்திகளைப் பேசுகிறார்கள். தொழாதவன் திட்டவட்டமான காபீரேதான் என்றும் தொழாதவன் பேச்சுக்கேட்பது ஹறாம், அவனுக்குச் சலாம் கூறுவது ஹறாம் என்றெல்லாம் சட்டம் தந்து விடுகிறார்கள். யாராதொருவர் பகுத்தறிவைக்கொண்டு ஏதாவது ஒரு கேள்வியைக் கேட்க முற்பட்டால் இஸ்லாத்தில் கேள்வி கேட்பது

ஹறாம், கேள்வி கேட்பவன் ஷைத்தான் என்று உடனே பத்துவாக்கொடுத்து விடுகிறார்கள். ஷரீயத்தைக் கடந்தது மார்க்கமேயல்ல என்றும் தொழுது கொள்ளுங்கள் எல்லாம் சரியாய்விடும் என்றும் அழுதழுது பிரசாரம் செய்கிறார்கள். எக்காரணம் கொண்டேனும் தொழாதவன் பேச்சைக் கேட்கவே கூடாது என்று முத்திரையும் பொறித்து விடுகிறார்கள். இவர்கள் எந்தக் கலாசாலையில் இந்தக் கல்விகளைப் பெற்றுக்கொண்டார்களோ தெரியவில்லை.

*"சுப்ஹானல்லாஹ்"* இவர்களுடைய கல்பில் எவ்விதமான இரும்புத்திரையைப் போட்டு முத்திரையும் வைத்துள்ளான் இறைவன் என்பது அறிவுடையோருக்குத் தெரியும். ஆயினும், அந்த விளக்கவான்கள் தங்களில் போடப்பட்டுள்ள திரையையும் முத்திரையையும் அறிந்துகொள்ளாதவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களையிட்டு ஐயோ! பாவம் பகுத்தறிவு தொழிற்படும் அளவுக்கு இவர்கள் மூளை வளர்ச்சியடையாத மக்கள் என்றுதான் நாம் கூறலாம். மூளை வளர்ச்சியடைந்த பகுத்தறிவாளராய் இருந்தால், இறைவனே சிந்திக்கும் கூட்டத்தில் எங்களைச் சேர்த்துவிடாதே என்று ஓர் மௌலவி பிரார்த்தனை செய்வாரா?

குர்ஆனில் சுமார் 70 இடங்களில் தொழும்படியும் சுமார் 340 இடங்களில் சிந்திக்கும்படியும் ஆராயும்படியும் இறைவன் கூறியிருப்பதை இந்த மௌலவி காணவில்லையா? கண்டும் விளங்கிக் கொள்ளவில்லையா? கண்டு கொண்டும்தான் இப்படிக் கேட்கிறார் என்றால் *"நான் படைத்த கால்நடைகளில் கேவல மானது சிந்திக்கத் தெரியாத மனிதன்"* என்று இறைவனால் கூறப்படுகிற ஆயத்தின்படி இவ்வித பிரார்த்தனை செய்தவர் கால்நடைகளிலுள்ளவர்தான் என்பதில் சந்தேகமுண்டா? இவ்வித மதிமாறாட்டமான மனிதர்கள்தான் நாய், பன்றி பூனைகள் உட்கொண்ட உணவை உட்கொள்ள அனுமதிப்பவர்களாயும் தொழுகையற்றவன் உண்ட உணவை ஹறாம் என்று விலக்கு பவர்களாயும் இருப்பதால் இவர்கள் தோற்றத்தில் மனிதர்களைப் போல் இருப்பினும் மற்றும் விஷயங்களில் கால்நடைகளை விடவும் கேவலமானவர்களாய் இருக்கிறார்கள். இறைவனின் சொல் பூரணமான உண்மை என்பது நிரூபணமாகிறதல்லவா?

குர்ஆனில் இறைவன் *"வதக்கிர் ப இன்னதிக்றாதன்பஉல் மூ.்.மினீன்"* என்று கூறுகிறான். *நீர் நல்லுபதேசம் செய்யும். ஏனெனில் நிச்சயமாக நல்லுபதேசம் விசுவாசிகளுக்கு(மூ.்.மீன்களுக்கு)ப் பயனளிக்கும்.* ஆகவே மூமீன்களாகிய உங்களுக்கு இவ் விஷயத்தில் ஏற்பட்டுள்ள மருட்சியை நீக்குவதற்காக குர்ஆனையும் ஹதீஸுகளையும் கொண்டு என்னாலியன்ற வரையில் விளக்கித்தர விரும்புகிறேன்.





(1)

# பகுத்தறிவு படைத்த மக்களே!

நாம் முன்பு கூறிய *"வமா கலக்கத்துல்ஜின்னவல் இன்ஸ இல்லாலிய.்.புதூன்"* என்ற ஆயத்தினதும் *"வ.்.புது றப்பக்க ஹத்தா எ.்.தியக்கல் எக்கீன்"* என்ற ஆயத்தினதும் உண்மையான கருத்துகளையும் விபரங்களையும் நாம் உள்ளாலுள்ளபடி தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் முதலில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதில் முதலாவது நிபந்தனை என்னவென்றால் ஒரு விஷயத்தில் சரி பிழை கணிப்பதற்கு நாம் எடுத்துக்கொள்ளும் அடிப்படை எது? என்பதே. அதாவது நாம் எந்த ஆதாரங்களைக் கொண்டு சரி பிழை கணிப்பது என்பதுதான். இதற்கு எமது இமாமான குர்ஆனே விடைதருகிறது. அந்த அடிப்படை மன்கூல், மஹ்கூல் என்று கூறுகிறது. அதாவது யுக்தி, சுருதி என்று விபரம் தரப்பட்டிருக்கிறது.

யுக்தி என்றால் பகுத்தறிவு என்பதே பொருள். மனிதன் பகுத்தறிவில் அமையாத ஒன்றை ஒப்புக்கொள்ளமாட்டான் என்பதை இறைவன் அறிந்தவன். ஆகையால்தான் வேதவசனங்களைப் பிற்படுத்திப் புத்தியை முற்படுத்திக் கூறுகிறான். இரண்டாவது, சுருதி என்பது என்னவென்றால் வேதவசனங்கள் என்பதே அதன் பொருள். சுருதி என்றால் அதிர்வினால் ஏற்படும் ஓசை, ஒலி, சப்தம் என்பது பொருள். ஆயினும் இவ்விஷயத்தில் முஸ்லீம்களுக்கும் இந்துக் களுக்குமிடையில் சுருதி என்பதில் ஓர் வேற்றுமை இருக்கிறது. அதாவது இந்துக்கள் ரிஷிமாரினால் உபதேசிக்கப்பட்ட உப நிடதங்கள் ஸுலோகங்கள்தான் சுருதி என்கிறார்கள். இந்த ஓசை அல்லது ஒலி என்பதில் ஆகதநாதம் என்றும் அனாகதநாதம் என்றும் இரு பிரிவுகள் இருப்பதாயும், ஒன்று மனிதனை நோக்கியும் மற்றொன்று தெய்வத்தை நோக்கியும் இருப்பதால் இரண்டையும் வேறுவேறாக்காமல் ஒன்றுபடுத்தியே சுருதி என்று இந்துக்கள் பொருள்கொண்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் இறை வசனமான வேதங்கள் அவர்களிடமில்லாதிருப்பதாலேயே. ஆகவே இந்துக்களிடையே முடிவான சுருதி என்பது உபநிடதங்களும் ஸுலோகங்களுமேயாகும்.

ஆனால் முஸ்லீம்கள் நாதம் அல்லது ஒலி அல்லது ஓசை என்பதை '*ஸல்ஸலத்துல்பீல்*' என்றும் '*ஸல்ஸலத்துல் ஜர்ஸ்*' என்றும் இரண்டு தன்மை நாதங்களையும் ஏற்றுக்கொண்டு ஒவ்வொன்றையும் தனித்தனியாய் விளக்கியிருக்கிறார்கள். ஆகவே முஸ்லீம்களின் கொள்கைப்படி சுருதி அல்லது ஓசை என்பதில் குர்ஆன் '*ஸல்ஸலத்துல் ஜர்ஸைச்*' சேர்ந்ததாய் இருப்பதால் முதலாவது குர்ஆனையும் இரண்டாவது ஹதீஸையும் மூன்றாவது இஜ்மாஉ என்னும் ஏகோபித்த அபிப்பிராயத்தையும் சுருதி என்று கொண்டிருக்கிறார்கள், குர்ஆன் இறை ஒலியாய் இருப்பதால் முதலாமிடமும் ஹதீஸ் ஸல்ஸலத்துல்பீலைச் சேர்ந்ததாயிருப்பினும் ஒரு கமாலுடைய றசூலின் ஒலியாய் இருப்பதால் இரண்டாம் இடமும் சாதாரண அறிவுடைய மனிதர்களின் ஒலியை (இஜ்மாஉவை) மூன்றாம் இடமும் கொண்டிருக்கின்றன. அதாவது சுருதி என்பதில் முஸ்லீம்களிடையே முதலாவது குர்ஆனும் இரண்டாவது ஹதீஸும் மூன்றாவது இஜ்மாஉவும் இடம் பெறுகின்றன.

ஆனால், இந்துக்களிடையே நாம் இஜ்மாஉ என்று கூறுகிற ஏகோபித்த அபிப்பிராயமே சுருதி என்று கூறப்படுகிறது. இதை முதலில் நீங்கள் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

**சுருக்கம்:**

1. குர்ஆன் (வேதம்)
2. ஹதீஸ் றசூல் (ஸல்) அவர்களுடைய விளக்கவுரை
3. இஜ்மாஉ (அறிஞர்களின் ஏகோபித்த அபிப்பிராயம்)
4. கியாஸ் (றசூலைக் கொண்டு ஒப்புவமை காணுதல்)

இந்த நான்குபிரமாணங்களுடன் யுக்தி என்ற பகுத்தறிவும் சேர்ந்த ஐந்து மூலப்பிரமாணங்களும்தான் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட பிரமாணங்கள். இந்தப் பிரமாணங்களில் எத்தனையோ பகுதிகளும் பிரிவுகளும் இருக்கின்றன. இவற்றை எல்லாம் விளங்கித் தெளிவுபெற மிக நீண்ட காலம் பிடிக்கலாம். ஆயினும் இப்போது நமக்குத் தேவையானது எதுவென்றால் பகுத்தறிவு, குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் ஆகிய ஐந்து பிரமாணங்களும் ஒத்துக்கொள்வது எதுவோ, அதுவே இறைவனின் தீர்ப்பு என்பதும், உண்மை என்பதும், இஸ்லாத்தின் மூலாதார உயிர் என்பதும் முஸ்லீம்கள் யாவராலும் ஒத்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். இந்த ஐந்து பிரமாணங்களையும் ஏற்றுக் கொள்ளாத எவரும் தம்மை ஒரு மூ:மீன் முஸ்லிம் என்று கூறுவது பொருந்தாது.





இங்கே ஒரு கேள்வி கேட்கப்படலாம். குர்ஆன் வசனங்களை நோக்கும்போது அறிவுக்கு விரோதமான சில வசனங்களும் தென்படுகின்றனவே? அப்படியிருக்கும் போதும் புத்தி ஏற்றுக் கொள்ளாத குர்ஆனை நாம் ஆதாரமாகக் கொள்வது எப்படி? என்பதுதான் கேள்வி!

பதில்: குர்ஆனுடைய திருநாமங்களில் புர்கான் என்பதும் ஒன்று. புர்கான் என்றால் பகுத்து அல்லது பிரித்து அறிவிப்பது என்பது பொருள். பகுத்து அல்லது பிரித்து அல்லது வேறு வேறாக்கி அறிவிப்பது எது? பகுத்தறிவுதான். ஆகவே புர்கான் என்ற சொல்லுக்கு உண்மையான கருத்து பகுத்தறியும் பகுத்தறிவு என்பதே. ஆகவே பகுத்தறிவுக்கு அணுவேனும் மாறுபடாமல்தான் குர்ஆன் மனிதனுக்கு வழிகாட்டும் என்பது நிச்சயமான உண்மை. இவ்வுண்மையை அதே குர்ஆன் எத்தனையோ இடங்களில் மடக்கி மடக்கி கூறிக்கொண்டேயிருக்கிறது. இது அல்லாஹ் அல்லாத ஒருவரால் கூறப்பட்டிருந்தால் இதில் அனேக முரண்பாடுகளைக் காண்பீர் என்று இறைவன் விளக்குகிறான். ஆகவே, குர்ஆனில் முரண்பாடு இல்லையென்பது உண்மை. ஆயினும் எம்முடைய அறிவுக்கு குர்ஆன் முரணாய்த் தெரிவது ஏனென்றால் எம்முடைய அறிவைப் பகுத்தறிவு என்று நாம் தவறாக எடை போட்டிருக்கிறோம். நம்முடைய அறிவு வஹ்மு என்ற பேதபுத்தியாய் இருக்கின்றதென்பதை நாம் அறிவதில்லை. பகுத்தறிவுக்கு குர்ஆன் அணுவேனும் மாறானதல்ல என்பதை இப்போது உள்ளத்தில் இருத்திக் கொள்ளுங்கள். இப்போது விஷயத்திற்கு வருவோம்.

நாம் முன்பு கூறிய ஐந்து பிரமாணங்களையும் ஏற்றுக் கொள்ளாமல் மனம் போன போக்கில் வாதிப்பவர்களுக்கும் எமக்கும் எவ்வித பேச்சுமே கிடையாது.

நாம் எடுத்துக்கொண்ட இரு ஆயத்துகளிலும் இடம் பெறுகிற இபாதத் என்ற சொல்லிதான் இப்போது நமக்கு வாதம். அதாவது '*இல்லாலிய:புதுான்*' என்பதிலுள்ள இபாதத் என்ற சொல்லையும், '*வஹ்புது*' என்பதிலுள்ள இபாதத் என்ற சொல்லையும் நாம் தெளிந்த அறிவோடு நோக்க வேண்டியவர் களாய் இருக்கிறோம். இந்தச் சொற்களையும் இவற்றைச் சார்ந்து நிற்கிற மற்றும் சொற்களையும் நாம் புரிந்து கொள்ளாவிட்டால் குர்ஆனைக் கொண்டு நேர்வழி பெறமுடியாது. இவ்விஷயத்தில் என் சொந்த அனுபவம் ஒன்றைக் கூறவிரும்புகிறேன். குர்ஆனின் வசனங்கள் ஒன்றோடொன்று எப்படித் தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டறிவது மிகமிகக் கஷ்டமான காரியமாகவும் அறிஞர்களேயன்றிப் பாமரமக்களால் புரிந்துகொள்ள முடியாததாயும் இருக்கிறது.

ஆகவே, இபாதத் என்ற சொல்லை உறுதிப்படுத்தும் மற்றும் வேத வசனங்களான காலிக், றப்பு, அப்து, இபாதத், றுபூபியத், றஹ்மத், உபூதியத், ஸலாத், ஸௌமு, ஸக்காத், ஹஜ்ஜு போன்ற சொற்களையும் ஹிதாயத், ழலாலத் போன்ற சொற்களையும் ஓரளவேனும் நாம் விளங்கிக் கொள்ளாவிட்டால் குர்ஆன் கூறும் உண்மை எமது கல்பில் பதியவே பதியாது. எமது ஆராய்வும் நிறைவுபெறாது.

இவ்விதமான அரபுச் சொற்களை விளக்குவதற்கு மனிதரால் இயற்றப்பட்ட அகராதிகள் ஓரளவு உதவி செய்யலாமே ஒழிய அவ்வகராதிகள் பூரண விளக்கத்தைத் தரமுடியாதவையேயாகும். இறைவசனத்தை அளவிடும் ஆற்றல் மனிதனால் உருவாக்கப்பட்ட அகராதிக்கு எப்படி அமையும். இந்த விவரங்களை பரிசுத்தமான அகில் என்ற அகராதியைக் கொண்டுதான் விளங்கமுடியும்.

(2)

முதலில் '*இபாதத்*' என்ற சொல்லையும் அதன்பின் மற்றும் சொற்களையும் நோக்குவோம். இபாதத் என்றால் என்ன? என்பதுதான் இப்போது நாம் எடுத்துக்கொண்ட கேள்வி?

இபாதத் என்ற சொல் அப்து என்ற சொல்லில் இருந்துதான் தோன்றியிருக்கிறது. இது இலக்கண விற்பன்னர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விஷயம். அப்து என்றால் அடிமை என்பது அதன் பொருள். அடிமையிலிருந்து வெளியாகும் செயல் எதுவாயினும் அச்செயலுக்கு இபாதத் என்பது பொருள். இந்த இபாதத் என்ற சொல் வணக்கம் என்று மட்டும் பொருள்தராது. ஸலாத் என்ற தொழுகை, ஸௌமு என்ற நோன்பு, ஸக்காத் என்ற ஈகை, ஹஜ்ஜு என்ற மக்காயாத்திரைகள் எல்லாமே இபாதத்துதான். அவை மட்டுமல்ல ஊண், குடிப்பு, படுக்கை, மலஜலம் கழித்தல் போன்றவையும் இபாதத்துதான். இப்படியிருக்க தொழுகை மட்டும்தான் இபாதத் என்று கூறுவது எப்படி? வணங்குவதற்காகவே இன்ஸையும், ஜின்னையும் படைத்தேன் என்று இறைவன் கூறுவதாக ஆயத்துக்குப் பொருள் கூறுவது எப்படி?

தொழுகை அல்லது வணக்கம் என்பதைக் குறிப்பிடு வதற்காக இறைவனால் குர்ஆனிலும் றசூல் (ஸல்) அவர்களால் ஹதீஸுகளிலும் ஆரிபீன்களால் இஜ்மாஉவிலும் உபயோகிக்கப் படுகிற சொல் "*ஸலாத்*" என்பதே. அதான் கூறும் போது ஹைய அலஸ்ஸலாத் என்று கூறப்படுகிறது. '*தொழுகைக்கு வாருங்கள்*' என்பதே அதன் அர்த்தம்.





நல்ல செயலோ தீய செயலோ, உள்ளத்தின் செயலோ, உடலின் செயலோ எதுவாக இருப்பினும், செயல், கிரிகை, தொழும்பு என்ற சொற்கள்தான் இபாதத் என்ற அறபுச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச்சொற்கள். ஆகவே இபாதத் என்ற சொல் வணக்கம் என்றோ தொழுகை என்றோ பொருள்படாது. ஆயினும், ஒரு சாரார் அல்லாஹ்வை நோக்கிச் செய்யப்படும் செயல்கள் தான் இபாதத் என்றும், தொழுகை அல்லாஹ்வுக்காக செய்யப்படுவதால் இபாதத் என்பது தொழுகைதான் என்றும் கூறுகிறார்கள். இவர்களுடைய வாதம் சுத்தப்பிசகாய் இருக்கின்றது. ஏனென்றால் விக்கிரக வணக்கவாளிகளான காபீர்கள் முஸ்ரிக்குகளும் அல்லாஹ்வை நோக்கி அவனுடைய பொருத்தத்தைப் பெறுவதற்காகத்தானே விக்கிரகத்தை வணங்குகிறார்கள். இவர்களுடைய வணக்கத்தைத் தொழுகை என்று நாம் கூறலாமா? ஆம், அதுவும் தொழுகை தான் என்றால் நம்முடைய தொழுகைக்கும் அவர்களுடைய தொழுகைக்கும் வேறுபாடு கிடையாமல் போய்விடும். மேலும் இஸ்லாத்தையே '*நான் தெரிந்தெடுத்திருக்கிறேன்*' என்று இறைவன் கூறுவது பொய்யாய் முடியுமே!

இப்போது நாம் கூறுவதைக் கவனித்துப்பாருங்கள். விக்கிரக வணக்கம் செய்தவனும் இபாதத்துத்தான் செய்தான்; முஸ்லீமும் இபாதத்துத்தான் செய்தார். ஆனால், முஸ்ரீக் தீய இபாதத்தும் முஸ்லீம் நல்ல இபாதத்தும் செய்தார் என்றுதான் நாம் கூறலாம். ஒரு முஸ்லீம் வட்டிக்குக் கொடுக்கிறார் என்றால் அவர் தீய இபாதத்துச் செய்தவராகிறார். விக்கிரக வணக்கவாளி இறை அன்பை வேண்டித் தர்மம் செய்கிறார் என்றால் அவர் நல்ல இபாதத்துச் செய்தவராகிறார். ஆகவே, இபாதத் என்றால் செயல் என்பதே அதன் உண்மையான அர்த்தம்.

ஆனால் இவ்விடத்தில் பகுத்தறிவு ஒரு கேள்வி எழுப்புகிறது. செயல், கிரிகை, தொழில் அல்லது தொழும்பு என்பவற்றைச் சிறப்பாக விளக்கித்தரக்கூடிய பல சொற்கள் அறபுபாஷையில் இருக்கும் போது அவற்றில் ஒன்றை உபயோகிக்காமல் 'வமா கலக்துல் ஜின்னவல்இன்ஸ இல்லாலிய∴புதூன்' என்ற ஆயத்திலும் 'வஹ்புதுறப்பக்க ஹத்தா எ∴தியக்கல் எகீன்' என்ற ஆயத்திலும் இபாதத் என்ற சொல்லையே இறைவன் கூறியிருக்கிறானே! அந்தச் சொல்லை இறைவன் ஏன் பாவித்தான்? பிறசொற்களில் ஒன்றை இறைவன் பாவிக்காத காரணம் என்ன? என்பதுதான் நமது பகுத்தறிவின் கேள்வி. நியாயமான கேள்வி. இன்ஷா அல்லாஹ் நாம் விடை கண்டறிவோம்.

அப்து என்ற சொல்லில் இருந்தே இபாதத் என்ற சொல் தோன்றியதென்றும் அப்தில் இருந்து வெளியாகும் உள்புறச் செயல்கள் எவையாயிருப்பினும் அவற்றிற்கு இபாதத் என்பது பொதுப்படையாய்ப் பாவிக்கப்படும் சொல் என்றும் நான் முன்பு கூறினேன். இப்போது அப்து என்றால் என்ன? என்பதை நோக்கு வோம். அப்து என்றால் அடிமை என்பதே அதன் பொருள். அடிமை என்பதைக் கனப்படுத்தும் நோக்கமாக அடியார், அடியான் என்றெல்லாம் கூறப்பட்டாலும் அப்து என்றால் அடிமை என்பது கருத்து. இச்சொல்லில் இன்னோர் உண்மை இருக்கிறது. இச்சொல் மக்கள், தேவர், நரகர் முதலாம் உயர்திணைச் சிருட்டிகளையும் மண், தண்ணீர், காற்று, நெருப்பு, உயிரினம், தாவரம் போன்ற அஃறிணைச் சிருட்டிகளையும் தன்னுள்ளடக்கியதாக வேற்றுமை தரமுடியாததாயும் இருக்கிறது. அதாவது சிருட்டிகள் எவையா யிருப்பினும் அவையாவும் இறைவனின் அப்துக்களாய், அடிமை களாய்த்தான் இருக்கின்றன.

ஆனால் நாம் குறிப்பிடும் ‘வமாகலக்கத்துல் ஜின்னவல் இன்ஸ’ என்ற ஆயத்தில் இன்ஸையும் ஜின்னையும் மட்டுமே இறைவன் கூறுகிறானே யல்லாமல் எல்லாச் சிருட்டிகளையும் கூறவில்லை; ஆகவே இன்ஸிலும் ஜின்னிலும்தான் இபாதத் வெளியாகிறது என்பது போல் ஒரு சந்தேகம் தோன்றுகிறது. விஷயம் அப்படியல்ல.

அப்து என்ற சொல் உபூதியத் என்பதிலிருந்து பிறந்ததாகும். இறைவன் சிருஷ்டிகளை உருவாக்கி வெளிப்படுத்துவதற்கு உபூதியத் என்று கூறுகின்றோம். எல்லாச் சிருஷ்டிகளிலிருந்தும் வெளியாகும் எல்லாச் செயலும் இபாதத்துத்தான். ஆயினும் இன்ஸையும் ஜின்னையும் இறைவன் தனிமைப் படுத்திக் கூறியதற்கு வேறு காரணம் இருக்கிறது. இதை இறை உதவிகொண்டு என்னாலியன்றளவு விளக்கித்தருகிறேன் செவிசாயுங்கள்.

(3)

அப்து என்ற அடிமை இரண்டு வகையாய் இருக்கிறது. ஒன்று, சுயநிர்ணய உணர்வுள்ள அடிமை என்பது. மற்றொன்று சுயநிர்ணய உணர்வு இல்லாத அடிமை என்பது. முதலில் சுயநிர்ணயஉரிமையுடைய அடிமையை (அப்தை) நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். நாம் பணக்காரனாயிருந்து ஆப்ரிக்க நீக்ரோப்





பெண் ஒருத்தியை விலைக்கு வாங்கி அடிமையாக்கிக் கொள்கிறோம். இவள் நமது அடிமைப்பெண் நாம் எவ்வேலையைக் கூறினாலும் அவள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறாள் என்று நம்புகிறோம். இவ்வடிமை எஜமானனின் கட்டளையை மேற்கொண்டு தொண்டு செய்கிறாள். ஆயினும் அவளுடைய சக்திக்கு அப்பாற்பட்ட வேலையைச் செய்யமுடியாமல் இருக்கும் போது எஜமானை வெறுக்கிறாள். சில சமயம் எஜமானின் கட்டளையை மீறுகிறாள். எஜமானுக்குத் தெரியாமலே சிற்சில வேலைகளைத் தனது சொந்த சுயநிர்ணய உரிமையைக் கொண்டு செய்கிறாள். தீர்ப்புக்கட்டுகிறாள். உண்ணல், உறங்கல், மலசலம் கழித்தல், சந்தோஷமடைதல், துக்கப்படல் போன்ற செயல்களையும் சுயநிர்ணய உணர்வைக் கொண்டே செய்கிறாள். இவள் எஜமானுக்குத் தொண்டுழியம் செய்வதும் கூட அவளுடைய சுயநிர்ணய உணர்வு கொண்டுதான்.

இது மட்டுமல்லாமல், எஜமானனின் அன்பைப் பெறவேண்டும் என்று அவள் அவாக்கொள்வது கூடச் சுயநிர்ணய உரிமையைக் கொண்டுதான். சுருக்கமாகக் கூறினால் இவளிடத்தில் தன் சொந்தச் செயலும் எஜமானின் ஏவலால் ஏற்பட்ட செயலும் கலந்திருக்கின்றன. இவளுக்குச் சுயநிர்ணய உரிமை இருப்பதாலும் அதை நீக்கிவிட முடியாது இருப்பதினாலும் சில சமயம் தன் சுயஉணர்வுக்கு அல்லது நப்ஸுக்கு அடிமையாயும் சில சமயம் எஜமானின் அடிமையாயும் இருக்கின்றாள். இந்த விதமான இயல்பு மனிதனுக்கும் ஜின்னுக்கு மேயன்றி வேறெந்த சிருட்டிக்கும் கிடையாது. இங்கே இன்னொரு சந்தேகம் தோன்றலாம். மிருகங்களும் மற்றும் ஜீவராசிகளும் சிற்சில சமயங்களில் சுய உணர்வோடும் சில சமயம் எஜமானின் ஏவலோடும்தானே வாழ்கின்றன. ஆகவே, இன்ஸுக்கும் ஜின்னுக்கும் மற்றும் சிருட்டிகளுக்கும் வேறுபாடு கிடையாதே என்பதுதான் நமது சந்தேகம். விஷயம் அப்படியல்ல

சுய நிர்ணய உரிமை என்று நாம் கூறுவதைத் தெளிவாய்ப் புரிந்து கொள்ளாவிட்டால் நான் தரப்போகிற நுட்பமான விளக்கம் மனதில் அமையாது. நல்லதையும் தீயதையும் ஓய்ந்து பார்த்து விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்யும் உரிமைக்கே சுயநிர்ணய உரிமை என்று நாம் கூறுகிறோம். இந்த உரிமைக்குப் பகுக்கும் திறமை வேண்டும். இந்தப் பகுக்கும் திறமை வஹ்மு என்னும் பேத புத்தியாய் இருப்பினும் சரியே. மிருகங்கள் முதலாம் மற்றும் ஜீவராசிகளுக்கிருக்கும் பகுப்பாய்வு இப்படியல்ல. இன்ஸானையும்

ஜின்னையும் தவிர்ந்த எந்த ஜீவராசியும் அவ்வவற்றின் இயல்பை மீறிப் பகுக்க முடியாததவையாகும். ஊண், உறக்கம், காமம், தங்குமிடம், உயிர்ப்பாதுகாப்பு ஆகிய எந்த ஒரு விஷயத்திலும் அவை தம் இயல்பை மீற முடியாததவையாய் இருக்கின்றன. இன்ஸும் ஜின்னும் இப்படியல்ல. இவர்கள் தங்களுக்கேற்படும் சமய சந்தர்ப்பங்களுக்கேற்றபடி எப்படி எப்படியோவெல்லாம் பகுக்கவும் வாழவும்கூடியவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் எஜமானாயிருக்கின்ற இறைவனின் ஏவலை ஏற்று நடக்கவும் அதை மீறி தங்களிஷ்டம்போல வாழவும்கூடியவர்களாய் இருக்கின் றார்கள். இந்த இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளவர்களான இன்ஸையும் ஜின்னையும் நோக்கித்தான் இவர்களை இபாதத்து க்காகப் படைத்தேன் என்று இறைவன் கூறுகின்றான். ஆகவே, இன்ஸையும் ஜின்னையும் கொண்டு வெளியாகும் செயல்தான் இபாதத் என்பது தென்படுகிறது.

இந்த இபாதத் சுயநிர்ணய உரிமையுடைய செயல் என்றும் சுயநிர்ணய உரிமையற்ற செயல் என்றும் இருவகையாய்ப் பிரிபடுகிறது. ஆகவே நாம் குறிப்பிட்ட ஆயத்தில் இபாதத் என்னும் இருவகையில் எதை அல்லாஹ் நாடினான் என்பதை நாம் கண்டறிய வேண்டியதாய் இருக்கிறது. இபாதத் என்ற சொல்லை இறைவனுடைய ஏவலுக்கமைவாய்ச் சுயநிர்ணய உரிமையுடன் செய்யப்படும் செயல்தான் என்று எடுத்துக்கொண்டால் இது அவாம்களான பாமரமக்களை மட்டுமே சுட்டுவதாகும். குர்ஆன் அவாம்களுக்கு மட்டுமல்ல உலகமக்களான அவாம்கள், கவாஸுகள், கவாஸுல்கவாஸுகள் எல்லோருக்குமே பொதுவான தாகும். ஆகவே இவ்விளக்கம் பிழையாய் முடியும். ஏனென்றால் இவ்விதமான செயல்கள் அல்லது இபாதத்துக்கள் சுயநிர்ணய உரிமையோடு கலந்திருப்பதால் பூரணமான அடிமைத்தனம் அங்கு வெளிப்படாது. பூரணமான அடிமைத்தனம் இல்லையானால் இபாதத் என்ற சொல் தன் சொந்தக் கருத்தை இழந்துவிடும். ஏனென்றால் அப்து என்ற சொல்லடியாய்ப் பிறந்ததே இபாதத் என்பது உண்மை யானால் அப்து என்பது பூரண அடிமையாகவே இருக்கவேண்டும். ஆகவே இப்போது பூரண அடிமை அல்லது அப்து என்றால் என்ன? என்பதை நோக்குவோம்.





(4)

அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறசூலஹு என்று நாம் கூறுகின்றோம். முஹம்மது என்பவர் அப்துவாகவும் (அடிமை யாகவும்) றசூலாகவும் இருக்கிறார் என்பதைப் பிசகற அறிந்து விண்ணப்பம் செய்கிறேன் என்பது அதன் கருத்து. இந்த அப்து (அடிமை) என்பவர் றசூலாயும் இருக்கிறார் என்பதை முழுமனதாக நாம் ஒப்புக்கொண்டுதானே கூறினோம். இந்த றிஸாலத் என்பதோ றப்புடையதாய் இருக்கிறது. இதில் கூட்டுதல் குறைத்தல் செய்ய யாருக்கும் உரிமையில்லை. சுயநிர்ணய உரிமையுள்ள ஓர் அடிமையில் றிஸாலத் வெளியாவதானால் அதில்தான் கூட்டுதல் குறைத்தல் நடைபெறுமே. ஆகவே, சுயநிர்ணய உரிமையற்ற ஒரு பூரண அடிமையில் (அப்தில்) தான் றிஸாலத் வெளியாக வேண்டும். ஆகவே, றசூல்(ஸல்) அவர்கள் பூரண அடிமையாகவிருந்தே றிஸாலத்தை வெளிப்படுத்தி னார்கள் என்பது தெளிவாய் விளங்குகின்றது.

ஆகையால்தான், இறைவன் குர்ஆனில் அவர் எதையும் சுய இஷ்டமாய்க் கூறுவதில்லை என்று விவரம் தருகிறான். இந்த முஹம்மது என்பவர் அப்துவாகவும் றசூலாகவும் இருக்கிறார் என்றுதான் நாம் முன்பு கூறினோம். றசூல் என்பவர் பூரண அடிமையாய்ச் சுயநிர்ணய உரிமையற்றவராகவே இருக்கிறார் என்பது இப்போது நாம் கண்ட உண்மை. ஆனால் அந்த அடிமை மனிதனாயும் மனிதச்செயல்களான ஊண், குடிப்பு, உறக்கம் மற்றும் இன்ப துன்பங்களோடும் சுயநிர்ணய உரிமையுள்ள அடியாராயும் இருக்கிறார்கள். மறதி தவறு கூட இவர்களிடத்தில் இருந்திருக் கின்றன. அநேக ஆதாரங்கள் தரமுடியும்.

இந்தச் சுயநிர்ணய உரிமையோடு அவர்கள் செயல் பட்டவையெல்லாம் இபாதத்துக்களாகவே இருப்பினும் பூரண அடிமைத்தனத்தோடு வெளியான செயல்களல்ல. இவ்விதமான செயல்கள்தான் ஸறகு என்பது. றசூல் (ஸல்) அவர்கள் என் தொழுகை மற்றும் ஊண், குடிப்பு முதலாம் செயல்கள் யாவும் அல்லாஹ்வுக்காகவே என்று கூறியிருக்கிறார்கள். அப்படியானால் றசூல்(ஸல்) அவர்கள் நம் அறிவுக்குச் சுயநிர்ணய உரிமை யற்றவர்களாயும் இருந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையாய்த் தெரிகிறது. இந்த நுட்பம் தான் இஸ்லாத்தின் ஆரம்பமும் முடிவுமாய் இருக்கிறது.

இப்போது நாம் எடுத்துக்கொண்ட விவரம் சரிதானா என்பதைப் பார்ப்போம். அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறசூலுஹு என்ற வாக்கியத்தில் றசூல் (ஸல்) அவர்களின் மூன்று நிலைமைகள் பெறப்படுகின்றன. ஒன்று, முஹம்மது என்னும் சுயநிர்ணய உரிமையுள்ள நம் போன்ற அடிமை என்பது. மற்றொன்று, சுயநிர்ணய உரிமையற்ற பூரண அடிமை என்பது. மூன்றாவது, ஆரம்ப அடிமைத்தனமும் பூரண அடிமைத்தனமும் ஒன்றையொன்று தடைப்படுத்தாத பூரண காமீல் என்பது. இவர்கள் நம்மைப்போல் சுயநிர்ணய உரிமையுள்ள அடிமையாய் (அப்துவாய்) இருந்து கொண்டு செயல்பட்ட தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு போன்ற கடமைகள்தான் ஷரீயத்தில் குறிப்பிடப்பட்ட இபாதத்துக் களாய் இருக்கின்றன. இந்த நிலமையில் இருந்துகொண்டும்தான் தரீக்கத், ஹகீகத், மஹரிபத் ஆகிய நிலமைகளையும் ஏககாலத்தில் பெற்றிருந்தார்கள் என்பது தெளிவாய்ப் புலனாகிறது. இந்த நிலைமை விழிப்பும் உறக்கமும் ஒன்றையொன்று தடைப்படுத்தாமல் ஏககாலத்தில் இருப்பது போன்ற ஓர் அபூர்வநிலமையாகும். இது அறிவில் இலகுவாய் அமையாத ஒரு விஷயம்தான். இது றசூல் (ஸல்) அவர்களுக்கு மட்டும் சொந்தமானதேயன்றி எல்லா மனிதர்களுக்கும் சொந்தமானதல்ல.

இதன் சாரம் என்னவென்றால் சுயநிர்ணய உரிமையுள்ள அப்துவாய் இருப்பது இஸ்லாத்தின் ஆரம்பநிலையாயும் சுயநிர்ணய உரிமையற்ற பூரண அப்துவாய் மாற்றமடைவதே இஸ்லாத்தின் முடிவான நிலையாயும் இருக்கிறது என்பதே. இப்பேச்சு கஞ்சா ஞானத்தால் எழுந்ததல்ல. பூரண ஆதாரங்களோடுள்ளதாகும்.

( 5 )

இப்போது பூரண அடிமை அல்லது சுயநிர்ணய உரிமையற்ற அடிமை என்றால் என்ன? என்பதை நோக்குவோம். நான் ஒரு கண்ணாடியைக் கையில் எடுத்து முன்னால் வைத்துக்கொண்டு என் முகத்தை அல்லது தோற்றத்தை அல்லது ஸுறத்தைப் பார்க்கிறேன். என் முகம் எனக்குத் தெளிவாய்த் தென்படுகின்றது. நான் முகத்தைத் திருப்பாமல் கண்ணாடியில் தென்படுகின்ற முகம் திரும்பவே திரும்பாது. நான் எதைச் செய்கிறேனோ அதைத்தான் அக்கண்ணாடியில் தென்படும் முகத்தால் செய்யமுடியும். எனக்கு எள்ளவும் மாறுசெய்ய அந்தக் கண்ணாடியில் தென்படும் முகத்தால்





முடியவே முடியாது. இந்தக் கண்ணாடியில் தென்படும் எனது ஹுறத் சுய உரிமையற்றதாய் இருப்பதால் அது எனக்கு அடிமையாய் அப்துவாய் இருக்கிறது. இந்தப் பூரண அப்துவான அல்லது அடிமையான ஹுறத்தில் எச்செயல் வெளியாகுமோ அச்செயலுக்குத்தான் இபாதத் என்பது.

கண்ணாடியை நான் உருவாக்கிக் கொண்டது என்னை நான் அறிவதற்குத்தான். பார்க்கிற நான் எஜமானாய் அல்லது றப்பாய் இருக்கிறேன். பார்க்கப்பட்ட ஸுறத் எனது அப்துவாய் அடிமையாய் இருக்கிறது. இன்னோர் சிறு உதாரணத்தைக் கூறுவோம். எனது புலன்களெல்லாம் எனக்கு அடிமைகளாய் இருக்கின்றன. நான் விரும்பாமல் கண்ணினால் பார்க்கவே முடியாது. அந்தக் கண் என்னும் அடிமை எனக்கு மாறுசெய்யவும் முடியாது. என்னுடைய உத்தரவு எதுவோ அதன்படி செயற்படுவது தான் என் புலன்களான அடிமைகளின் வேலை. அப்புலன்கள் எனக்கு மாறுசெய்ய முடியாமல் இருப்பதால் அவை எனக்குப் பூரண அடிமைகளாய் இருக்கின்றன. நான் றப்பாயும் என் புலன்கள் அப்துக்களாயும் இருப்பது போல அல்லது கண்ணாடியில் பார்த்த நான் றப்பாயும் பார்க்கப்பட்ட ஸுறத் என் அப்துவாயும் இருப்பது போல இறைவன் என்னும் றப்பு பார்ப்பவனாயும் அவனுடைய அறிவு பார்க்குமிடமான கண்ணாடியாகவும் அக்கண்ணாடியில் தென்பட்ட ஸுறத்துக்கள் அப்துக்களாயும் இருக்கின்றன.

ஆகவே சுயநிர்ணய உரிமையுள்ள அப்துக்களான இன்ஸும் ஜின்னும் ஆரம்ப நிலைமையிலிருந்து முடிவு நிலைமையான பூரண அப்துவாய் மாற்றமடையும்போது அங்கே வெளியாகும் செயல் றப்பு எனும் எஜமானின் செயலேயன்றி அடிமையான அப்துவின் செயலேயல்ல. இதுதான் இன்ஸானுடையவும் ஜின்னுடையவும் பூரணத்தன்மையாய் இருக்கிறது. இதைத்தான் தௌஹீது என்பது.

இதன் பொழிப்பு என்னவென்றால் சுயநிர்ணய உரிமையுள்ள ஜீவன் என்ற ஜின்னும் இன்ஸும் கீழ் நிலைமையில் இருந்து மேல்நிமையைப் பெறும் பொருட்டு ஈமான், தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு போன்ற கடமைகளைக் கைக்கொள்ள வேண்டிய தாய் இருக்கிறது. இச்செயல்கள் யாவையும் ஒன்று சேர்த்துச் சொல்லப்பட்ட சொல்தான் இபாதத் என்பது. இதுதான் ஷரீயத் என்ற பக்திமார்க்கம். இந்தப் பக்திமார்க்கத்திலுள்ள மனிதன்

தன் கடமைகளை முறையாகக் கையாளுவாரேயானால் அவரிடத்தி லிருந்து சுயநிர்ணய உரிமை அற்றுவிடுவதால், என்றோ ஒரு நாள் சுயநிர்ணய உரிமையற்ற பூரண அடிமையாக மாற்றமடைவார் என்பது நிச்சயம். இது அறிவு விளக்கமற்ற மனிதர்களால் ஒன்றிரண்டு தினங்களில் அல்லது ஒருசில வருடங்களில் பெறக் கூடிய ஒன்றல்ல. பூரண அடிமையாய் இருப்பவரில் வெளியாகும் இபாதத்துக்கள் அந்த அடிமையின் செயல்களல்ல. இறைவனின் செயலாகவே இருக்கும். இவ் விஷயத்தை றசூல் (ஸல்) அவர்கள் தெளிவாய் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். எப்படியென்றால்,

*“என்னுடைய அடியான் நபிலான இபாதத்தைக்கொண்டு இடைவிடாமல் செயல்படுவான். நான் அவனை எப்போது உவர்ந்து கொள்கிறேனோ அப்போது அவன் பார்க்கும் கண்ணாக, அவன் கேட்கும் செவியாக; அவன் பேசும் நாவாக அவன் பிடிக்கும் கரமாக அவன் நடக்கும் கால்களாக நான் ஆகிவிடுகிறேன்”* என்று இறைவன் அறிவிப்பதாக றசூல் (ஸல்) அவர்கள் விளக்கம் தந்துள்ளார்கள். இந்த ஹதீஸ், ஹதீஸுல் குத்ஸியில் இடம்பெறுகிறது.

இந்த ஹதீஸில் சுயநிர்ணய உரிமையுள்ள மனித முயற்சி முதலில் கூறப்பட்டுள்ளது. மனிதன் தன்னை இறைவன் உவக்கும் வரையிலும் இடைவிடாமல் முயற்சி செய்து ஒரு படித்தரத்தை (மகாமை) அடையவேண்டியவனாய் இருக்கிறான். இவ்விஷயம் உலகமக்கள் எல்லோருக்கும் பொதுவான றஹ்மத்தைச் சேந்ததாய் இருக்கிறது. ஆகவே உலகமக்கள் எவராயிருப்பினும் முறைப்படி செயல்பட்டால் இந்த நிலைமையை (மகாமை) அடைய முடியும். இதுதான் பக்தி என்பது. அதாவது றப்புவாகிய அல்லாஹ்வும் அப்துவாகிய நானும் இருக்கிறோம் என்ற துவித உணர்வோடு செயல்படுவதால் இறைமுன்னிலையில் பக்தியில் ஒரு படித்தரம் கிடைக்கிறது. இந்த மகாம் என்பது தொழுகையின்போது குனிவதாலும் நிமிர்வதாலும் கிடைப்பதல்ல. இறைவனோடு உரையாடும் வசனங்களால் கலிமாக்களால் பிரார்த்தனையால்தான் ஏற்படுகிறது. இந்தப் பிரார்த்தனை உரையாடல் என்பது நபிலாயும் நிற்றல் குனிதல் போன்றவை பர்லாயும் இருக்கின்றன.

இவ்விதமாக ஒரு மகாமை மனிதன் பிடித்துக் கொண்டால் இறைவனுடைய உவப்புக் கிட்டுகிறது. அல்லாஹ் விருப்பு வெறுப்பு அற்றவன். ஆயினும் புரிந்து கொள்வதற்காகவே இப்படிக் கூறுகி றோம். இந்த நிலையில் கிடைக்கும் இறைவனின் உவப்பு என்பது





றஹீமியத் என்னும் விஷேட கிருபையைச் சேர்ந்ததாகும். இந்த உவப்புக் கிட்டிவிட்டால் அந்த நிலைமைக்கு ‘ஹால்’ என்று கூறப்படும். இந்த ஹாலைப் பெற்றவர்களில் பல படித்தரங்கள் இருப்பினும் இவர்களிடத்தில் காண்போன், காட்சி, காட்சிப்பொருள் என்ற வேற்றுமை உணர்வு படிப்படியாய் மாய்ந்துவிடுகிறது. இவர்களிடத்தில் குடி கொண்டிருந்த பகுத்தறிவு நுண்ணறிவு என்னும் விவேகமாயும், விவேகம் அகிலாகவும், அகில் மாற்றமடைந்து நூறாகவும், நூர் விஜ்தான் என்னும் இறை அறிவாகவும் அமைந்து விடுகிறது. இவர்கள்தான் கலிமாவினால் உணர்த்தப்பட்ட உண்மையைத் தங்கள் சொந்த அனுபவத்தில் பெற்றுக்கொண்ட நல்லடியார்கள்; அவ்லியாக்கள். இவர்களுடைய ஏற்றம் குனிந்து நிமிர்வதால் ஏற்பட்டதல்ல. கலிமாவை விளங்கி உண்மை கொண்ட ஈமானால் ஏற்பட்டதாகும்.

நாம் முன்பு கூறிய மகாம் என்பது கலிமாவை விளங்கிக் கொண்டாலும் அதில் திடீரென மனிதன் நிலைபெற முடியாதிருப் பதால் இஸ்லாத்தின் கடமைகளை முறைப்படி கையாண்டு படிப்படியாய் இறுதி உச்சநிலையை மனிதன் பெறவேண்டும் என்பதற்காகவே துவித அடிப்படையில் மார்க்கக் கடமைகள் அனும திக்கப்பட்டிருக்கின்றன. இதை இன்னும் விளக்கலாம். எத்தனை எத்தனையோ ஆதாரங்களைத் தரலாம். ஆயினும் நான் விரிவைப் பயப்படுகிறேன்.

மேற்கூறிய விஷயங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் சுயநிர்ணய உரிமையுள்ள அப்துவிடமிருந்தும் சுயநிர்ணய உரிமையற்ற அப்துவிடமிருந்தும் வெளியாகும் இருவிதச் செயல்களையும் ஒன்றுபடுத்தித்தான் அந்த ஆயத்தில் இபாதத் என்ற சொல்லை இறைவன் பாவித்திருக்கிறான் என்பதே.

இவ்வுண்மையை மக்கள் உணரமுடியாதபடி குர்ஆன் ஹதீஸ்களுக்கு வியாக்கியானம் செய்வதும் ஷரீயத்தைக் கடந்தது மார்க்கமல்ல என்பதும்; தொழாதவன் காபிர்தான் என்பதும்; எவ்வளவு மூடத்தனம். குர்ஆன் ஹதீஸ்களில் எவ்விடத்திலேனும் என்னை வணங்குவதற்காக இன்ஸையும் ஜின்னையும் படைத்தேன் என்று கூறப்படவேயில்லை. குர்ஆன் ஹதீஸ்களைப் புரட்டி மறைப்பவர்களதான் உண்மையில் காபிர்களாய் இருக்கிறார்கள். கபர் என்ற சொல்லில் இருந்து பிறந்ததே குப்ர் என்ற சொல்.

குபிரைக் கையாள்பவன் எவனோ அவன் காபீர். கபர் என்றால் மறைத்தல், மூடல், புரட்டல் என்பது பொருள். ஆகவே காபீர் என்றால் மூடி மறைத்துப் புரட்டுபவன் என்பதுதான் கருத்து. உண்மையை வெளிப்படுத்துவோர் காபீர்களல்ல; முமீன்கள்தான். உண்மையை அறியாமல் இருப்பவன் முஸ்ரீக்காய் இருக்கிறான். ஆயினும் காபீர்களுடன் உறவு கொள்ள, உண்ண, மணம்முடிக்க மூ.ஃ.மீன் களுக்கு உரிமையுண்டு, இதை விதண்டாவாதீகள் உணர வேண்டும். விளக்கம்தர அவகாசமில்லை. ஆயினும் குர்ஆனின் 2:221, 5:5ஆம் ஆயத்துக்களைப் புரட்டிப்பாருங்கள். நான் பொய் கூறவில்லை.

(6)

மேலே நாம் எடுத்துக்கொண்ட இரு ஆயத்துகளிலும் இடம் பெறுகிற இபாதத் என்ற சொல்லுக்கு வணக்கம் என்று பொருள் கூறுவது குர்ஆன் ஹதீஸுகளுக்கும் இஜ்மாஉ, கியாஸ்,பகுத்தறிவு முதலாம் பிரமாணங்களுக்கும் மாறான படுபொய்யாய் இருக்கிறது. குர்ஆன் ஹதீஸுகளில் வணக்கம் தொழுகை என்பவற்றைக் குறிப்பிடுவதற்காகப் பாவிக்கப்பட்ட சொல் 'அஸ்ஸலாத்' என்பதே. இதைவிட இபாதத் என்பதற்கு வணக்கம் தான் என்று பொருள் கொண்டால் வேறுபல குற்றங்கள் ஏற்படு கின்றன. எப்படியென்றால், வணக்கத்துக்காகவே சிருட்டித்தேன் என்று இறைவன் கூறியிருந்தால், இறைவனுடைய நாட்டமே நிறைவேறாமல் இருக்கிறது என்றாகும். வணங்குவதற்காகப் படைக்கப்பட்டவர்கள் வணங்காமல் இருக்கிறார்கள் என்றால், இறைநாட்டத்தை உதாசீனம் செய்யக்கூடிய வல்லமை இன்ஸிலும் ஜின்னிலும் உண்டு என்றாகும். அதாவது இறைவனின் சக்தியை அல்லது நாட்டத்தை மீறக்கூடிய சக்தி சிருட்டியில் உண்டு என்று முடியும்.

எந்த ஒரு சிருட்டிக்கும் இறை நாட்டத்தை மீறக்கூடிய சக்தி கிடைக்கவே கிடையாது. இதைக் குர்ஆன் ஹதீஸுகள் தெளிவாய் விவரம் தருகின்றன. இதை விவரிப்பது இப்போது முடியாது. ஏனென்றால் இதில் கலாகத்துடைய விஷயம் புகுத்தப்பட வேண்டியிருக்கிறது. இதை மிகப் பண்டிதர்களாயுள்ள மக்களேயன்றி விளங்கவும் முடியாது. ஆயினும் நடுத்தரவகுப்பாருக்காக சில ஆயத்துகளின் இலக்கங்களை மட்டும் இங்கே தருகின்றேன். அவற்றைத் தப்ஸீர்களில் பார்த்து விளங்கிக்கொள்ளுங்கள். ஆயத் இலக்கங்கள் 2:165, 8:30, 32:13, 8:42, 8:44 இவை போன்ற மற்றும் ஆயத்துகளையும் வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.





வணங்குவதற்காகவே படைத்தான் என்று கற்பனையாய்ப் பொருள் கொள்வது மனிதனுக்கு மிகப்பெரிய ஒரு நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. நான் வணங்கவே படைக்கப்பட்டிருப்பதால் நான் வணங்கியே ஆகவேண்டும் என்று மனிதன் திடசங்கற்பம் கொள்கிறான். ஆனால், அதனால் நான் பெறும் பலன்தான் என்ன? என்பதைக் கூடச் சிந்திக்கமுடியாதவனாய் மாற்றமடைகின்றான். மாற்றப்படுகின்றான். தொழுகையைவிட மேலானதொன்று இல்லையென்றும் ஸுஜுது இல்லாத வணக்கமே கிடையாது என்றும் தீர்ப்புக்கட்டுகின்றான். ஷரீயத்தே மார்க்கத்தின் முடிவு என்று நம்புகின்றான். இதற்கு ஆதாரமாய், றசூலும் ஸஹாபாக்களும் மவுத்தாகும் வரையிலும் வணங்கியிருப்பதால் நாமும் அப்படிச் செய்யாமல் வாழ்வது பிழையே என்றும் நம்புகின்றான். தொழாதவன் எவனோ அவன் காபீர்தான் என்றும் அவன் பேச்சைக் கேட்கவே கூடாது என்றும் தீர்மானிக்கின்றான். இம்மனிதன் அணுவளவேனும் உண்மையை நெருங்கமுடியாதபடி, கன்றுக்குட்டிகளைக் கயிற்றில் கட்டித் தளைபோடுவது போல அவனுடைய சிந்தனாசக்திக்குத் தளைபோட்டுக்கொள்கிறான். அதாவது பகுத்தறிவைப் பறிகொடுத்து விட்டுச் சிந்தனாசக்தியற்றவனாகி விடுகின்றான்.

ஆனால் இவ்விதமாகத் தன் சிந்தனைக்குத் தளைபோட்டுக் கொண்ட அந்த மனிதன் தொழுகையின்போது, உன்னிடமே உதவி தேடுகிறேன்; உன்னையே வணங்குகிறேன்; உனது நல்லாடியார்கள் சென்ற ஸிறாத்து என்ற நேர்பாதையைக் காண்பித்துத் தந்தருள்; உனது கெட்ட அடியார்கள் சென்ற பாதையல்ல என்று விம்மி விம்மி அழுது துஆக் கேட்கிறான். இந்த வணக்கவாளி தீய பாதைக்கும் நல்ல பாதைக்கும் நடுவில் நான் நின்றுகொண்டிருக் கிறேன் என்பதை உணர்ந்து கொள்வதே இல்லை. மேலும் தான் கேட்ட நல்லடியார்களின் பாதை எது? எதை நான் கேட்டேன் என்பது கூட அவனுக்குப் புரிவதில்லை. யாராவதொருவர் இவன் கேட்ட ஸிறாத் என்ற பாதையை விளக்கி அது தௌஹீது என்ற பாதைதான் என்று ஆதாரங்களோடு கூறினாலும் உடனே அவரைக் காபீர் என்றும் ஷைத்தான் என்றும் இவன் பேச்சைக் கேட்பது ஹறாம் என்றும் முடிவு கட்டுகின்றான். தான் நின்றுகொண்டிருக்கும் தொழுகைதான் இந்தப் பாதை என்கிறான். அப்படியானால் இவன் தொழுகையில் கேட்ட பாதை எது? அவன் நின்று கொண்டிருக்கும் பாதைதான் உண்மையென்றால் அதே பாதையில் என்னை ஸ்திரப்படுத்திவை என்றுதான் இவன் துஆ செய்திருக்கவேண்டும் அப்படி இவன் கேட்பதே இல்லை.

அப்படியானால் இவன் கேட்ட நல்லடியார்கள் சென்ற பாதை என்பது வாய்பாடமிட்டுக்கொண்ட அல்ஹம்து சூறாவிலுள்ளதேயன்றி இம்மை மறுமைகளில் உள்ளதல்லபோல் தென்படுகின்றது. கிளிப்பிள்ளைக்குக் கலிமாவைக் கற்றுக் கொடுத்தால் அது தலையை ஆட்டியாட்டிக் கூறிக்கொண்டேயிருக்கும். ஆனால் திடீரென கிளியை நோக்கிப் பூனை பாயும் போது கிளி கலிமா வையும் தலையாட்டுதலையும் மறந்துவிடும். உயிர்ப் பயத்தினால் தன் இயற்கைச் சத்தத்தை எடுத்துக் கொண்டு கீ,கீ என்று அலறு கிறது. இதைப்போலவே இஸ்றாயில் என்னும் பூனை தென்படும் போது வெளியறிவு அல்லது நப்ஸு என்ற கிளி மரணப்பயத்தினால் தன் சொந்த சுபாவத்திற்கே திரும்பிவிடும். அதாவது நப்ஸு எதற்கு அடிமையாய் இருந்ததோ அத்தோடுதான் ஒன்றிக் கொள்ளும். அதன் தொழுகையோ திக்றோ அவ்வேளையில் நினைவுக்கு வராது, இந்த நிலையில் மரணிப்பதை இறைவன் தடுத்து ஆட்கொள்ளுவானாக.

இவ்விதமான மரணத்தை மனிதன் ஏன் பெறுகிறான் குர்ஆன் ஹதீஸுகளினதும் நல்லடியார்களினதும் சொல்லை உதாசீனம் செய்து, மார்க்க விளக்கம் தெரியாத ஷைத்தான்களை வழிகாட்டிகளாக எடுத்துக்கொள்வதுதான் காரணம். அதாவது, மனிதன் குருடனாய் மிருகமாய் வாழ்ந்து, இறுதியில், முடிவில் தகாத மரணத்தைப் பெறுவதற்குக் காரணம் வியாக்கியான கர்த்தாக்கள் குர்ஆன் ஹதீஸுகளுக்குக் கொடுத்த தவறான புரட்டான விளக்கங்களேயாகும். இவ்வித விளக்கவான்கள் தங்கள் வாதத்தை நிரூபிக்கக் காண்பிக்கும் இன்னோர் ஆயத்து *'வ∴ புதுறப்பக்க ஹத்தா எஹ்தியக்கல் எகீன்'* என்பதாகும். இவ் வாயத்துக்கு அவர்கள் தரும் பொருள் மவுத்தாகும் வரையிலும் வணங்கு என்பதே. இதற்கு அனுசரணையாக றசூல் (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் மவுத்தாகும் வரையிலும் வணங்கினார் கள் என்கிறார்கள். றசூலுல்லாஹ் மவுத்தாகும் வரையிலும் வணங்கியிருக்கின்றார்கள் என்பது உண்மை. இது கியாஸைச் சேர்ந்த ஒரு விஷயம். குர்ஆன் ஹதீஸுகளில் தரப்படாத அல்லது அவற்றின்மூலம் விளங்கிக்கொள்ள முடியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காகவே கியாஸைக் கையாளலாமேயன்றி அதைத் தனிப்பிரமானமாய்க் கொள்ள முடியாது. இது உலகறிந்த சட்டம்.

இப்போது பாருங்கள் றசூல் (ஸல்) அவர்களுடைய தொழு கையை நோக்கிக் கியாஸை ஆதாரமாய்க்கொண்டால் தொழாமல் இருப்பதையும் கியாஸாகக் கொள்ள வேண்டும். ஏனென்றால்,





றசூல் (ஸல்) அவர்கள் தொழாமல் இருந்துகொண்டே நபியாக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த நபியை நாம் ஒப்புக்கொண்டி ருந்தால் தொழாமல் திக்கிர் செய்வதும் முறாகபா செய்வதும் கியாஸ்தான் என்றாகும். தொழுபவர்; றசூலுல்லா எப்போது தொழச் சொன்னார்களோ அப்போதிருந்து நாம் தொழவேண்டும் என்று கூறினால் தொழாதவர் றசூல்(ஸல்) அவர்கள் நபியாக்கப்பட்டு 11 வருடங்கள் 9 மாதங்களின் பிறகுதான் தொழுகையைக் கொண்டுவந்திருப்பதால் தொழுகை தரப்பட்ட பின்புள்ள நபியை நீங்கள் ஏற்கின்றீர்களேயன்றி அதற்கு முன்பும் நபியாய் இருந்தார்கள் என்பதை நீங்கள் ஏற்கவில்லையே என்று வாதிப்பார். அதாவது தொழுபவர் கூறும் விஷயங்களுக்கெல்லாம் தொழாதவர் பதில் கூறிக்கொண்டேயிருப்பார். விவாதம் இறுதி நாள் வரையிலும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். இன்று நம் சமூகத்திலுள்ள மிகப்பெரிய ஒரு சாபக்கேடு இதுவாகும். இதற்கெல்லாம் காரணம் மார்க்கவிளக்கம் தெரியாமையே.

விவாதத்தை நிறுத்திவிட்டு உண்மை என்ன? என்பதை முதலில் கண்டறிவோம். 'வ∴புது றப்பக்க ஹத்தா எஹ்தியக்கல் எகீன்' என்ற ஆயத்து என்ன உண்மையைத் தருகிறது என்று பார்ப்போம். இவ்வாயத்து குர்ஆனில் 15:99 இல் இடம்பெறுகிறது. இதில் றப்பு, இபாதத், எகீன் என்ற மூன்று சொற்கள் இடம் பெறுகின்றன. இதில் இபாதத் என்பதற்கு வணக்கம் என்றும் எகீன் என்பதற்கு மரணம் என்றும் பொருள் கொள்வது குர்ஆன் ஹதீஸுகளுக்கு விரோதமான கற்பனையாய் இருக்கிறது. மவுத் தாகும் வரையிலும் வணங்குவது எல்லோராலும் கையாளப்படக் கூடிய ஒன்றல்ல. பலவருடம் நோயில் மூழ்கியுள்ள ஒருவர் சைக்கினை மூலம் தான் தொழலாமேயல்லாமல் நிறைவான தொழு கையைச் செய்ய முடியாது. இந்தச் சைக்கினைத் தொழுகை இமாம்களுடைய சில சட்டங்களை மீறுகின்றது.

உதாரணமாக, ஷாபி மதுஹபில் ஸுஜுது செய்யும்போது இரு கைகள், இரு முழங்கால்கள், இரு பாதங்கள், நெற்றியாகிய ஏழு உறுப்புகள் நிலத்தில் படும்படி செய்யும் செயலே ஸுஜுது என்று சட்டம் இயற்றிருக்கிறார்கள். இதை எல்லா உலமாக்களும் தான் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நோயாளியோ இவ்வித செயலைச் செய்ய முடியாதவனாயிருக்கிறான். அவன் ஸுஜுது விஷயமாய்ச் செய்யும் சைக்கினையே போதுமானதென்றிருந்தால்

ஸுஜுது என்பதற்கு இமாம்கள் வகுத்த வரைவிலக்கணம் பிழையாகிவிடும். குர்ஆனே, ஸுஜுதுடைய விஷயத்தில் இமாம் களுக்கு மாறாகவே சாட்சி கூறுகிறது. ஹதீஸுகளும் குர்ஆனையே ஆதரிக்கின்றன.

இப்போது குர்ஆனில் 16:49ஆம் ஆயத்தைப் பாருங்கள். “வலில்லா ஹியஸ்ஜுத் மாபிஸ்ஸமாவாதிவல்அர்ழி” இதன் கருத்து அல்லாஹ்வுக்கே வானங்களில் இருப்பவர்களும் பூமியில் இருப்பவர்களும் ஸுஜுது செய்கிறார்கள் என்பதே. இன்னும் பல ஆயத்துகள் இருக்கின்றன. இது ஒன்றையே நாம் போதுமாக்குவோம்.

வானத்தில் உள்ளவர்கள் என்னும்போது மலக்குகள் அல்லது வேற்றுக்கிரகங்களில் வாழ்பவர்கள் என்று நாம் பொருள் கொள்ளலாம். இவர்கள் ஸுஜுது செய்கிறார்கள் என்றால் நாம் நம்பலாம். ஏனென்றால் அவர்களுடைய சரியான உண்மை எமக்குத் தெரியாது. ஆனால், பூமியிலுள்ளவர்களும் ஸுஜுது செய்கிறார்கள் என்னும்போது பெரிய ஒரு பிரச்சினை தோன்றுகிறது. பூமியிலுள்ள மக்களில் மிகப்பெரும்பாலார் கல், மண், தங்கம், பொன், வெள்ளி போன்ற பொருட்களுக்கே ஸுஜுது செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆயத்தில் முஸ்லீம்கள் மூ∴மீன்கள் என்று கூறாமல் பூமியிலுள்ள யாவரும் என்றுதான் இறைவன் கூறுகின்றான். ஆனால் இமாம்கள் தந்த விவரப்படி ஸுஜுதில் ஈடுபடுபவர்கள் முஸ்லீம்கள் மட்டும்தான். ஆயத்தில் இறைவன் உலகமக்கள் அனைவரையும் கூறுகிறான். அது மட்டுமா! விக்கிரக வணக்க வாளியின் வணக்கத்தையும் அவனுடைய ஸுஜுதையும் சேர்த்துக் கொண்டு தான் யாவரும் அல்லாஹ்வையே ஸுஜுது செய்கிறார்கள் என்று கூறுகிறான்.

இப்போது உங்கள் புத்தி திணறுகிறதா? இல்லையா? நான் பொய்யா கூறுகிறேன்? இல்லை. குர்ஆன் கூறுவதையே நான் தருகிறேன். இவ்வாயத்திற்கு விளக்கம் தருவதானால் 500 பக்கங்களைக்கொண்ட ஓர் நூலே எழுதலாம். ஆயினும் நாம் இங்கே அவசியமான அளவு மட்டும் கூறுவோம்.

குர்ஆன் கூறுவதுதான் உண்மையென்றால் இமாம்களால் தரப்பட்ட விளக்கம் மட்டுமே சரியானதென்று நாம் எப்படி முடிவுக்கு வரலாம். ஆகவே நாம் உண்மையைக் கண்டறிய விரும்பினால்



ஸுஜுது என்ற சொல்லைக் கொண்டு இறைவன் எதை நாடினான் என்பதை நாம் கண்டறிய வேண்டியவர்களாயிருக்கிறோம். அதாவது எமது வழிகாட்டிகளின் சொல்லையே நாம் கட்டிப்பிடித்துக்கொண்டால் குர்ஆன் எமக்குப் பிழையாகவே தென்படும். குர்ஆன் கூறுவது சரியென்றால் எமது வழிகாட்டிகளின் விளக்கம் பிழையாக முடியும். ஆகவே, நாம் ஆராய்வு செய்து முடிவுபெறாமல் மார்க்க விஷயத்தில் முடிவு கட்டுவது முறையாகாது. இஸ்லாத்தின் உயிர் புரட்டப்பட்டும் சுமார் 1400 வருடங்கள் சென்றுவிட்டன. ஸுஜுது என்ற சொல்லை இப்போது ஞாபகத்தில் இருத்திக்கொள்ளுங்கள். விவரம் தராமல் புரிந்து கொள்ளமுடியாது. இதற்கு முன்னோடியான சில விவரங்களைக் கூறிப் பின்னால் உண்மையை அறிவோம்.

(7)

இப்போது எகீன் என்ற சொல்லை நோக்குவோம். குர்ஆனில் எகீன் என்ற சொல் நாலு வகையாய்ப் பாவிக்கப்படுகிறது. 1ஆவது “இல்முல் எகீன்”, 2ஆவது “ஐனுல் எகீன்”, 3ஆவது “ஹக்குல் எகீன்”, 4ஆவது “எகீன்”. இவ்விபரத்தைக் குர்ஆனில் 56:95, 102:5,7, 15:99 போன்ற ஆயத்துகளில் காணலாம். நான் சுருக்கத்தை விரும்பு வதால் அவற்றை இங்கே எழுதவில்லை.

1. இல்முல் எகீன் என்றால் நூற்கேள்வி அறிவினால் ஏற்பட்ட ஈமான், விசுவாசம், நம்பிக்கை என்பது பொருள்.
2. ஐனுல் எகீன் என்றால் பிரத்தியட்ச அறிவினால் ஏற்பட்ட ஈமான் என்பது பொருள்.
3. ஹக்குல் எகீன் என்றால் உண்மையான தெளிவு பெற்ற ஈமான் என்பது பொருள்.
4. எகீன் என்றால் ஈமான், விசுவாசம், நம்பிக்கை என்பது பொருள்.

நாம் எடுத்துக்கொண்ட ‘வஹ்புது றப்பக்க’ என்ற ஆயத்தில் எகீன் என்று மட்டும்தான் பாவிக்கப்படுகிறது. இந்த எகீன் எது என்பதை நாம் கண்டறிய வேண்டும். மேலே நான் காட்டிய நான்குவித எகீன்கள் உண்டு என்பது குர்ஆனின் தீர்ப்பு. இதை நீங்கள் மறக்கக்கூடாது. இதற்கு ஆதாரமான பல ஹதீஸுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றைமட்டும் இங்கே தருகின்றேன்.

*ஹதீஸ்*
*ஈமான் என்பது முற்றாக எகீனாக இருக்கும். ஆகையால் இந்த எகீன் உண்டாக வேண்டிய எத்தனத்தைக் கற்றுணர்ந்து; பின்பு இருதயத்தில் பதிக்கவேண்டிய வாசலைத் திறக்கவும்.*

இதைப்பற்றிக் கூறுகிற இஜ்மாஉ எவ்வளவோ உண்டு. அவற்றை நான் இங்கே கூறவில்லை. ஆகவே எகீன் என்பது மரணத்தையல்ல. மரணத்தைக் குறிப்பிடுவதற்காகக் குர்ஆனில் மவுத் என்ற சொல்லை இறைவன் சுமார் 47 முறை கூறியுள்ளான். உதாரணமாக ஒன்று மட்டும் தருகிறேன். "குல்லு நப்ஸின் தாயிகத்துல் மவுத்" எல்லா நப்ஸுகளும் மரணமடைந்தேயாகும் என்பதே அதன் பொருள். மையித் என்ற சொல் குர்ஆனில் சுமார் 14 இடங்களில் பாவிக்கப்படுகிறது. மவுத் என்பது ஓர் நிலைமை. அந்தநிலைமை யாருக்கு ஏற்படுமோ அவருக்கு இப்போது மையித் என்பது பெயர்.

குர்ஆன் ஹதீஸுகளில் இவ்வளவு தெளிவான விவரம் தரப்பட்டிருக்கும் போதும் எகீன் என்பது மரணம்தான் என்று ஒருவர் கூறினால் நாம் அவரை விதண்டாவாதி என்றுதான் சொல்லலாம். எகீன் என்ற சொல்லுக்கு மரணம் என்று பொருள் கொள்வது குர்ஆன் ஹதீஷுகளைக் குழிதோண்டிப் புதைப்பதாகவே முடியும். ஆனால் இப்படிப் புரட்டல் வேலையைக் கையாளாவிட்டால் மக்கள் தொழமாட்டார்கள், நம் தொழில் கெட்டுவிடும் என்று நம்பிய ஒரு சிலர் அல்லாஹ்வையும் றசூலையும் மூடர்களாய்க் கண்டார்கள். தங்கள் அறிவே சரியானதென்று கொண்டார்கள். மக்களைக் காக்கிறோம், வழிகாட்டுகிறோம் என்று கூறினார்கள். இந்தப் புரட்டல் உலகின் நாலாபாகங்களிலுமுள்ள பெரும்பாலான முஸ்லீம் மக்களை இருளில் தத்தளிக்க வைத்திருக்கிறது.

ஆனால் இந்த வியாக்கியான கர்த்தாக்கள் தாங்கள் படித்தறிந்த பல தப்ஸீர்களில் இபாதத் என்ற சொல்லுக்கு வணக்கம் என்று பொருள் கொள்பவர் தவறு செய்பவராகிறார் என்றும், எகீன் என்ற சொல்லுக்கு மரணம் என்று பொருள்கொள்பவர் பிழைசெய்த வராகிறார் என்றும் தெளிவான விளக்கம் தரப்பட்டிருப்பதைக் கண்டறிந்தும் அதை மூடிமறைப்பது அல்லது விளங்கிக்கொள்ளாமல் மறுப்பது அறிவுடைமையாகுமா? நடுத்தர வகுப்பாரான உங்களுக்கு அறபுத் தப்ஸீர்களை பார்க்க முடியாவிட்டால் சாதாரண தமிழ்





தப்ஸீர்களையாவது புரட்டிப்பாருங்கள். இந்த இரு ஆயத்து களுக்கும் நாம் தந்த விவரமே கூறப்பட்டிருப்பதைப் பல தப்ஸீர்களில் நீங்கள் காணலாம்.

படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தன்னை வணங்கச்சொல்லி, என்று கஞ்சாமயக்கத் திலுள்ள அஞ்ஞானிகள் பாடிய பாடலைக் கல்பில் போட்டுக்கொண்டு குர்ஆன் ஹதீஸுகளைப் புரட்டுவது பெரும் தவறாகும். மேலே நாம் கூறிய இரு ஆயத்துகளிலும் பாவிக்கப்பட்டுள்ள இபாதத் என்ற சொல் சுயநிர்ணய உரிமையுள்ள அடிமையின் செயலையும் சுயநிர்ணய உரிமையற்ற அடிமையின் செயலையும் ஒன்று சேர்த்துச் சொல்லப்பட்டதாகும். எகீன் என்பது ஈமானையேயன்றி மரணத்தை அல்ல.

இவ்விவரத்தைத் தெளிந்த மனதோடு இன்னும் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். இன்றுள்ள அறபு மற்றும் பாஷைகளிலுமுள்ள தப்ஸீர்களை நோக்கினால் அவற்றுக்கெல்லாம் தலையாய் அமைவது இப்னு அப்பாஸ் என்னும் தப்ஸீர்தான். இது உலகமறிந்த விஷயம்தான். இந்த தப்ஸீர் ஹிஜ்ரி 1280ஆம் வருடம் ஷெய்கு அப்துல் வஹ்ஹாப் இப்னு மர்ஹூம் அஷ்ஷெய்கு முகம்மது மூ.ஃ.மீன் என்பவரால் அச்சிடப்பட்டதாகும். இந்த தப்ஸீரில் நாம் கூறிய விவரம்தான் தரப்பட்டுள்ளன. மேலதிகமான விவரமும் ஒன்று அதில் தரப்பட்டிருக்கிறது. எகீன் என்ற சொல்லுக்கு விளக்கம் தரப்படும்போது இணைவைக்காமல், ஷிர்க்கில்லாமல் மரணிப்பதே அதன் பொருள் என்று கூறப்படுகிறது. அதாவது இந்த மரணம் "குல்லு நப்ஸின் தாயிகத்துல் மவுத்" என்று கூறப்படுகிற இயற்கை மரணமல்ல. இந்த மரணம் எது என்பதை நாம் பார்ப்போம்.

ஷிர்க்கில்லாமல் மரணிப்பது என்றால், அதை 'மவுத்துக் கபுல் அன்தமவுத்' அல்லது 'தஜற்றுத்' அல்லது கட்டவிழ்தல் அல்லது மவுத்தாகாமல் மவுத்தாகுதல் என்று கூறப்படும். சாதாரண அவாமாக இருந்த மனிதன் ஷரீயத், தரீக்கத், ஹகீகத் என்ற படித்தரங்களைக் கடந்து ஹக்கில் ஒன்றும் போது நப்ஸு என்பதும் நான் என்பதும் மவுத்தாகிவிடுகிறது. இப்போதுதான் அவர் நிச்சயம் அல்லது யதார்த்தம் அல்லது சந்தேகமின்மை அல்லது ஹக்குல் எகீன் என்ற நிலைமையை எய்திவிடுகிறார். இந்த நிலையிலுள்ள

ஒருவர் இன்ஸானியத்து அற்று இறக்கும் அதே வேளையில் இறைவனின் தஜல்லியைக் கொண்டு ஹயாத்தைப் பெறுகிறார். இந்த எகீன் என்ற மவுத்துக்கபுல் அந்தமவுத்தை அடைந்தபோது அங்கே வெளியாகும் செயல்யாவும் இறைவனின் செயலாகவே இருக்கும். இதைத்தான் வறுமை நிரப்பமாகும்போது எகீன் பூரணம டையும் என்று றசூல் (ஸல்) அவர்கள் விளக்கம் தருகிறார்கள். றசூலால் கூறப்பட்ட வறுமை பொருளாதார வறுமை என்று ஏமாற வேண்டாம். நான் என்ற சுயநிர்ணய உரிமையில்லாத பூரண வறுமையாகும். அதாவது கண்ணாடியில் நான் கண்ட ஸூறத் எவ்வித சுயநிர்ணய உரிமையில்லாதிருந்தது போல, பூரண அடிமையாய் இருந்தது போல இறைவனுடைய பூரண அப்துவாக இருப்பதே பூரண வறுமையாகும். அப்படியானால் இனிமேலும் அங்கு வறுமை ஏற்படுமா? ஏற்படாது. வறுமைதான் நிரப்பமாய்விட்டதே. ஆகையால் அங்கு இனிமேல் இருப்பது பூரணமான செல்வம்தான். அங்கு எவ்வகையிலும் எந்த விஷயத்திலும் வறுமை ஏற்பட முடியாது.

இவ்விதமான எகீன் ஏற்படும் வரையிலும் இபாதத்துச் செய் என்பதே அதன் சரியான வெளிப்பொருள். இது லாஹிறான கருத்துத்தான். பாதினான கருத்துகள் இன்னும் பல உண்டு. நான் அவற்றை இங்கே கூறவில்லை. தப்ஸீர் விரிவுரையாளரில் சிலர் இப்னு அப்பாஸ் போன்ற தப்ஸீர் விளக்கங்களைப் பாராமல் அல்லது விளங்கிக் கொள்ளாமல், பின்வந்த தப்ஸீர் சிலவற்றில் எகீன் என்பதற்கு இயற்கை மரணம் என்றே பொருள் கூறியிருக் கிறார்கள். சகோதரர்களே! நீங்கள் அறிவுத்தாகம் உடையவர்களாய் இருந்தால் குர்ஆனை இன்னும் கொஞ்சம் கேளுங்கள்.

*குர்ஆன்: 55:26, 27*
*பூமியிலுள்ள யாவும் அழிந்து விடும். மிக்க கண்ணியமும் பெருமையும் தங்கிய உமது இறைவன் மட்டும் நிலைத்திருப்பான்.*

இவ்வாயத்தில் மிக நுட்பமான பல ரகஸியங்கள் இருக்கின்றன. அவசியமான ஒன்றை மட்டும் நோக்குவோம். இவ்வாயத்தின் விதிப்படி பூமியிலுள்ள யாவும் அழிந்துவிடும் என்றால் எப்போது அழியும்? உலகம் முடிவாய் அழியும்போது எல்லாம் அழிந்து விடும். அப்படியானால் ஆகிறா எங்கே ஏற்படும்? அது இதே பூமியில்தான். இதே பூமிதான் மஹ்ஸர் வெளியாக மாற்றம் பெறும். அங்கே மஹ்ஸரில் மூடர்கள் என்ன





பேசிக்கொள்கிறார்கள். ஐயையோ! மாய்கையிலல்லவா மூழ்கியிருந்தோம் என்கிறார்கள். இறைவன் கேட்கிறான் இப்போது நீங்கள் பார்ப்பது உண்மையல்லவா? ஆம் என்கிறார்கள். நான் தருவது குர்ஆனின் விவரம் தான். குர்ஆனைப் புரட்டிப்பாருங்கள்.

இந்த விவரப்படி துன்யாவில் மவுத்தானதும் வெறும் மாய்கை தானே! பாதில்தானே! ஆகிறாதான் உண்மை என்பதைப் புரிந்து கொண்டோம். ஆனால் ஆயத்தின் கடைசிப்பகுதியை நோக்கிப் பாருங்கள். அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான் என்று கூறப்படுகிறது. அப்படியானால் பூமியும் அழிந்து, மஹ்ஷறாய் இருந்த பூமியும் அழிந்து, அவற்றுக்கு ஜோடியாய் இருந்த வானமும் அழிந்த பின்புதானே அல்லாஹ் மட்டும் மிஞ்சவேண்டும். ஆகவே, மறுமை என்பதும் அழியக்கூடியதுதான். அழியக்கூடிய ஒன்றை எகீன் என்று எப்படிக் கூறுவது? உண்மை என்று எப்படிக்கூறுவது? எகீன் என்பதற்கு மவுத்து என்று எப்படிப் பொருள் கொள்வது? ஆகவே எகீன் என்பதற்கு இயற்கை மரணம் என்று பொருள் கொள்வது சுத்தப்பிசகாகும்.

மனிதன் ஈமானை விளங்கியறிந்து மவுத்தாகாமல் மவுத்தா கும் போதுதான் சர்வஆலங்களும் தானும் அழிந்து அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான் என்பது சரியாகும். ஆகையால் அவ்வாயத்தில் எகீன் என்ற சொல்லினால் இறைவன் கருதியது ஹக்குல் எகீனைத்தான்! என்பது நிருபனமாகியிருக்கின்றதல்லவா. பாமர மக்களுக்கு மரணம் என்று பொருள் கூறுவதில் சில நன்மைகள் இருப்பது போல் வஹ்முக்குத் தென்படலாம். அது இஸ்லாத்தின் உயிரான ஐந்து பிரமாணங்களுக்கும் மாறாயும் மக்களை இருளில் தள்ளிவிடுவதாயும் அமையும். நாம் கூறியவற்றை உறுதிப்படுத்த இன்னும் பல ஆயத்துகள் ஹதீஸுகளைத் தரலாம். அறியும் அவா உடையவர்களுக்கு இவ்வளவே போதும்.

'ஷிர்க் இல்லாமல் இறப்பவர் எவரோ அவர் சுவனம் செல்லுவார்' என்பது றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஒரு ஹதீஸாகும். 'அல்மதத்துல் காமில்' என்ற கிதாபில் விளக்கப் படுகிறது. ஷிர்க் இல்லாமல் மரணித்தல் என்பது நாம் கூறிய மவுத்துக்கபுல் அன்த மவுத் என்னும் ஹக்குல் எகீனையே குறிப்பிடும். இந்த ஹதீஸில் எவ்வித இபாதத்துகளையும் குறிப்பிடாமல் இருப்பதையே நீங்கள் சிந்தனை செய்ய வேண்டும். இஸ்லாத்தின் நோக்கம், குர்ஆன் ஹதீஸுகளின் நோக்கம்

மனிதனைச் ஷிர்க்கில் இருந்தும் விடுபடச்செய்து தௌஹீதில் நுழைப்பதேயாகும். ஏனென்றால், உலகிலுள்ள சகலபாவங்களுக்கும் காரணியாய் இருப்பது ஷிர்க்குத்தான். சகல நன்மைகளுக்கும் காரணியாய் இருப்பது தௌஹீதேயாகும். ஆகவே உண்மையான தௌஹீதுக்கு மாற்றமான ஓர் அணுவும் குர்ஆன் ஹதீஸுகளில் கிடையவே கிடையாது என்பதையும், பெரும்பாலார் வெறும் மயக்கிலும் மதவெறியிலும் ஊறிக்கிடக்கிறார்கள் என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

*குர்ஆன்: 31:21*
*அவர்களை நோக்கி அல்லாஹ் இறக்கியதை (குர்ஆனை)ப் பின்பற்றுங்கள் என்று கூறப்பட்டால் அதற்கு அவர்கள் இல்லை, எங்கள் மூதாதைகள் எதன் மீதிருக்கக் கண்டோமோ அதனையே பின்பற்றுவோம் என்று கூறுகின்றனர். அவர்களுடைய மூதாதை களை ஷைத்தான் நரகவேதனையின்பால் அழைத்திருந்தாலுமா? (பின்பற்றுவார்கள்)*

*ஹதீஸ்*
*மனிதர்களில் ஒருகாலம் வரும். அப்போது இஸ்லாத்தின் நாமமேயல்லாது அதன் சத்தியம் (உண்மை) இராது. குர்ஆனில் எழுத்தேயல்லாது அதன் உண்மையான அர்த்தம் இராது. அவர்களின் பள்ளிவாசல்கள் (மஸ்ஜித்கள்) நேர்வழியின்றிக் கெட்டுப்போய் இருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின் கீழ் கெட்ட ஜந்துகளாய் இருப்பார்கள். இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம்.*

(8)

குர்ஆனில் உள்ள ஆயத்துகளை முஹக்கிக்கூன்களான தத்துவமேதைகளும் ஆரிபுகளும் எட்டு வகையாய்ப் பிரித்து விவரம் தந்திருக்கிறார்கள். இன்னொரு கண்ணோட்டத்தின்படி அவாம்களுக் குரியவை, கவாஸுகளுக்குரியவை, கவாஸுல் கவாஸுகளுக் குரியவை என்று மூன்று வகையாய் விளக்கியிருக்கிறார்கள். இன்னொரு கண்ணோட்டப்படி முஹ்கமாத், முதஷாபிஹாத் என்று இரு பிரிவாய் விளக்கியிருக்கிறார்கள். இந்த விவரங்களையெல்லாம் ஒன்றுபடுத்தி நோக்கும்போது குர்ஆனிலுள்ள சுமார் 6666





ஆயத்துகளிலும் கூறி விளக்கப்பட்டிருப்பது மொத்தம் நான்கு விஷயங்கள் மட்டுமேதான். இது எமது புதிய கண்டுபிடிப்பல்ல. இதற்கு முந்திய மக்கள் விளக்கிக் காட்டாமல் அச்சத்தின் காரணமாய் சூசகமாய்க் கூறிய விஷயங்களை நான் விவரிக்கின்றேனேயன்றி ஆரீபீன்களான மேதைகளின் சொற்க ளையோ குர்ஆன் ஹதீஸுகளையோ வீசிஎறிந்துவிட்டு நான் உளறத்தொடங்கவில்லை. என் வாழ்க்கை அனுபவத்தில் உண்மை என்று கண்டதைக் கூறுகிறேன். ஏற்பதோ ஏற்காமால் விடுவதோ உங்கள் சொந்த விருப்பம்.

குர்ஆனில் கூறப்படுகிற நான்கு விஷயங்களில் முதலாவது தௌஹீது என்பதாகும். இதன் சுருக்கம் என்னவென்றால் அல்லாஹ் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிற உஜூது அல்லது தாத்து என்ற அறிவுக்கெட்டாத மூலப்பொருளையும் அதன் குணாகுணங்கள் நாமங்களையும் தவிர அதனுடன் இணையாய் அல்லது ஜோடியாய் வேறு எதுவும் எங்கேயும் எப்போதும் இல்லவே இல்லை என்பதை அனுபவவாயிலாய் உணர்வதாகும். இது நூற்கேள்வியறிவு களினால் உண்டாகக்கூடியதல்ல. தௌஹீதை விவரம்தருவதே தத்துவ விளக்கமாயும் ஞானமாயும் இருக்கிறது. இது அறிவில் அமையும். அனுபவம் கிடையாது. மனிதன் சுயநிர்ணய உணர்வற்ற, கண்ணாடியில் தென்பட்ட ஸூறத்தைப்போல் மாற்றமடையும் போது பூரண அப்துவாய் அமையும் போதுதான் அனுபவம் கிடைக்கும்.

ஆயினும், சுயநிர்ணய உரிமையற்ற வெறும் தோற்றத்தில் இவ்வனுபவம் அமைவதால் அதைச் சிருட்டியின் அனுபவம் என்றும் கூற முடியாது. கண்ணாடியில் தென்பட்ட ஸூறத் என்னும் சிருட்டி வெறும் கற்பனையாய் தனக்கென்று ஓர் உயிரற்றதாய் இருப்பதால் அவ்வனுபவம் சிருட்டியுடையதல்ல. அந்த சிருட்டிக்கு முன்பும் சிருட்டியின் போதும், சிருட்டியின் பின்னும் சிருட்டிக்கு மூலாதாரமாய் இருந்தது எதுவோ அதன் அனுபவமாகவே இருக்கும். இது சிருட்டியின் சாதாரண அனுபவத்துக்கு முரணாய் இருப்பதால் ஒரு சில தினங்களில் இதைப் பெறவும் முடியாது. பல வருடங்கள் மிகமிக அபூர்வபயிற்சிகளில் ஈடுபாடுகொண்டுதான் இந்த நிலைமை யைப் பெறமுடியும். நாம் சிருட்டியாய் வாழ்ந்து இறுதியில் போய்ச்சேர வேண்டிய இடம் தௌஹீது என்னும் அனுபவநிலையாகும். இதை மறந்துவிடாதீர்கள்.

குர்ஆனில் இடம்பெறும் இரண்டாவது விஷயம் ‘றுபூபியத்’ என்பதாகும். அதாவது றப்பு யார்? அப்து யார்? படைத்தல்,

காத்தல், அழித்தல் என்றால் என்ன? ஹிதாயத், ழலாலத் என்பவை எவை? என்ற விவரங்களை அறிவு ஏற்றுக்கொள்ளும் வகையில் விளக்கம் தருகிற ஆயத்துகளெல்லாம் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. இப்பகுதியில் ஊன்றிக் கவனம் செலுத்துவோர் இருவகுப்பார். ஒன்றாம் வகுப்பார் ஸித்திக்கீன்கள், இரண்டாம் வகுப்பார், ஹாஷிக்கீன்கள். இவ்விரு வகுப்பினருக்கும் இடையில் வேறுபல பிரிவுகளும் உண்டு. அவ்விவரம் இங்கே அவசியமல்ல. இதில் உயர் பதவி என்பது உடலினாற் செய்யும் அமல்களால் பெறப்படுவ தல்ல. அறிவைக்கொண்டுதான் இதைப் பெறமுடியும். ஏனென்றால் இப்பகுதி பாதினாயும் உடற்புலன்களுக்கு எட்டாத தாயும் அறிவின் புலன்களுக்கு எட்டக்கூடியதாயும் இருக்கிறது.

குர்ஆனில் இடம்பெறும் மூன்றாவது விஷயம் என்ன வென்றால் றஹ்மத் என்பது. அதாவது றஹ்மத் என்பது என்ன? அது எத்தனை வகை? யார்யாருக்கு எப்படி றஹ்மத்துச் செய்கிறார்? றஹ்மத்தால் ஏற்படும் நன்மைதீமை எவை? என்ற விவரங்களை விளக்கம் தரும் ஆயத்துகள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன. இதில் ஊறித்திளைப்பவர்கள் இரு வகுப்பார். ஒன்றாம்வகுப்பார் அரை குறையான ஹாஷிக்கீன்கள் இவர்கள்தான் உண்மையான ஆபீதீன்கள். இரண்டாவது வகுப்பார் நுண்ணறிவு அல்லது விவேக முடைய அறிஞர்கள். இப்பகுதி வெளிப்புலன்களுக்கும் எட்டக்கூடியவை.

குர்ஆனில் இடம்பெறும் நான்காவது விஷயம் அதாலத் என்பதாகும். அதாவது நீதிநிர்வாகம் என்பதாகும். பொதுப் படையாய்க் கூறினால் இதை அரசாங்க நிர்வாகம் என்றே கூறலாம். றப்பு அரசனாயும் அப்துகள் பிரஜைகளாயும் அமைந்த இந்த அரசாங்கம் பூரண அரசல்ல. அரசின் ஓர் அங்கம் மட்டும்தான். முன்பு கூறிய மூன்றுடன் இதுவும் சேர்ந்துதான் பூரண அரசாக அமைகிறது. இந்த அதாலத் என்ற பகுதியில் அரசனுக்கும் பிரஜைகளுக்கும் உள்ள நீதி, கல்வி, சுகாதாரம், தொழில், போக்கு வரத்து, தன்னிறைவு காணும்வழி போன்ற சகல பகுதிகளும் அடங்கும். இதுதான் ஷரீயத் அல்லது பக்திமார்க்கம் என்றும் ஹுர்புல்பராயிலி என்றும் கூறப்படுகிறது.

இந்த அதாலத் என்னும் ஷரியத் உலக வாழ்வை மட்டும் அடிப்படையாய்க் கொண்டதல்ல. நாம் முன்பு கூறிய றஹ்மத்,





றுபூபியத், தௌஹீது என்ற மூன்று படித்தரங்களிலும் மனிதனைக் கூட்டிச்சென்று எம்முடைய ஆரம்பநிலையை அடைந்து வெற்றிபெறச் செய்வதுதான் ஷரீயத்தின் நோக்கமாகும். ஆகவே நாம் கூறிய இந்த நான்கு படித்தரங்களையும் ஷரீயத் மறுக்கவே மறுக்காது. தடைப்படுத்தாது. அப்படி மறுக்குமேயானால் அது இடைச்செருக லாய் இருக்குமேயன்றி உண்மையான ஷரீயத்தாக இருக்காது. இவ்விஷயம் அறிஞர்கள் அறிந்த ஒன்றுதான். ஆனால் அரைகுறை யாய் நுனிப்புல் மேய்ந்த பட்டதாரிகள் அறியமாட்டார்கள். நாம் காட்டிய இந்த நான்கு நிலைமைகளையும் விளங்கித் தெளிவு பெறுவதுதான் மார்க்க விளக்கம் என்பது. பிக்ஹு என்பதும் இதுதான்.

ஆனால் இன்றைய உலகில் பிக்ஹு என்றால் சட்டம் என்றே பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. இன்றுள்ள பிக்ஹுவை நோக்கினால் அதில் தேர்ச்சியுடையோரை நாம் சட்டத்தரணிகள் என்று கூறலாமேயன்றி மார்க்க விளக்கவான்கள் என்று கூற முடியாது. இவர்கள் ஷரீயத்தில் விதிக்கப்பட்ட அவசியமான சட்ட நுட்பங்களை மிகக் குறைவான அளவு பெற்றுக் கொண்டவர்கள். கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் தம்முடைய *"எஹ்யா"* என்ற கிதாபில் தம்முடைய காலத்திலேயே பிக்ஹு, தௌஹீது போன்ற சொற்கள் அவற்றின் உண்மையான அர்த்தங்களில் இருந்தும் புரட்டப்பட் டுள்ளன என்று கூறுகிறார். அவர்களுடைய காலம் சுமார் 900 வருடங்களுக்கு முன்பு என்பதை மறந்து விடக்கூடாது. ஆகவே ஷரீயத்துக்கு முரணானதாகத் தௌஹீதைக் காணுகிற ஒருவருக்கு எள்ளளவும் மார்க்க விளக்கம் தெரியாது என்பது நிச்சயமான உண்மை. இவர்கள் குர்ஆன் ஹதீஸை ஏற்றவர்களுமல்ல, பகுத்த றிவை ஒத்துக்கொண்டவர்களுமல்ல. பகுத்தறிவை ஏற்றுக்கொள்ள அவர்களிடத்தில் பகுத்தறிவே கிடையாதே! எப்படி ஏற்பார்கள்? இவர்களிடத்தில் உள்ள ஒரேயொரு அறிவு வயிற்றறிவும், நெஞ்செரி வும்தான். உண்மை எப்போதும் ஒழிந்துகொள்வதே இல்லை.

நாம் கூறிய அதாலத் என்பது மனிதரின் பிறப்பிலிருந்து இறப்புவரையிலுமுள்ள சகல அம்சங்களையும் அதன் அதன் சட்டங்களோடு மனிதரின் படித்தரங்களுக்கு ஏற்றபடி விளக்குகிறது. இதன் அடிப்படை குர்ஆன் ஹதீஸுகளும் இஜ்மாஉ கியாஸும்தான். இவ்வவுலகில் அதாலத் என்ற நீதி நிர்வாகம் எப்படி நடைபெறுமோ அதே போல ஆகிறாவிலும் இந்த நீதி நிர்வாகம் நடைபெற்றே யாகும். அதாலத் என்ற ஷரீயத், பர்லு, பர்லுஐன் பர்லுகிபாயா

மற்றும் பலவகை சுன்னத்துகளைக் கற்றுக்கொடுத்து மனிதனைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது ஏன்?

மனித, ஜின் இனங்கள் சுயநிர்ணய உரிமையோடு வாழும் அடிமைகளாய் (அப்துகளாய்) இருக்கின்றன. இவற்றுக்குச் சுயநிர்ணய உரிமை எப்படி ஏற்பட்டது? இவர்களின் வெளிப்புலன்கள் தான் இந்த உரிமையை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. மனிதன் தாய்வயிற்றில் சிசுவாய் இருந்தபோது தன்னுணர்வே யில்லாமல் எதையும் அறியமுடியாத நிலைமையில் இருந்தான். பிறகு இவனுக்குத் தன்னுணர்வு, அதாவது நான் என்னும் உணர்வு ஊட்டப்படுகிறது. நாலாவது மாதத்தில் றூஹு ஊதப்படுகிறது என்பது இவ்விஷயம்தான். இவ்வுணர்வு ஏற்பட்டும்கூட அந்தச் சிசு தன்னையேயன்றி மற்றெதையும் தன் உடலைக்கூட அறிவதோ உணர்வதோ கிடையாது. இச்சிசு நான் என்று இப்போது அறிந்து கொண்டது அதன் நப்ஸையேயன்றி உடலையல்ல. அச்சிசு பூரண வளர்ச்சியடையும்போது தன் உடலையும் நப்ஸையும் ஒன்றுபடுத்தி நான் என்றுணரும் நிலைமையைப் பெறுகிறது. இந்த நிலைமை கிட்டினால் குழந்தை தாய்வயிற்றிலிருந்து வெளிப்பட எத்தனிக்கிறது. நாளான பிறகு வெளிவருகிறது. குழந்தை வெளிப் பட்ட அதே கணத்தில் ஸ்பரிஸ உணர்வு வெளித்தொடர்பால், சூடு, குளிர்களினால் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. எல்லாப் புலன்களுமே வேலை செய்ய ஆரம்பிக்கின்றன.

குழந்தை புலனாட்சியில் சிக்கும்போது உலகின் நாலா பாகங்களின் சகல விஷயங்களும் படிப்படியாய்த் தென்பட ஆரம்பிக் கிறது. அக்குழந்தை தன் புலன்களால் அறியும் அனுபவிக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் தனித்தனியாய் வெவ்வேறாய்க் காணுகிறது. தாயின் சப்தம் வேறு, தந்தையின் சப்தம் வேறு, தாயின் நிறம் வேறு, தந்தையின் நிறம் வேறு, பாலின் சுவை வேறு, மருந்தின் சுவை வேறு என்பது போல ஒவ்வொன்றை யும் தனித்தனியாய் காலத்தால் இடத்தால் மற்றும் எல்லாப் பண்புக ளாலும் வெவ்வேறாகவே குழந்தை அறிகிறது, உணர்கிறது. தான் அறிந்த ஒன்று நல்லதாய்க் கண்டால் அதை விரும்புகிறது. தீயதாய்க் கண்டால் வெறுக்கிறது. நல்லது தவறினால் விரக்தி ஏற்படுகிறது. தீயது அகப்பட்டால் கோபம், வெறுப்பு ஏற்படுகிறது. அதாவது, மனிதனுக்கு இறைவனால் அமானிதமாய்க் கொடுபட்ட ஒன்றின் ஆரம்ப வளர்ச்சி அல்லது பகுத்தறிவு வளர ஆரம்பிக்கிறது. பகுத்தறிவை வளர்ப்பதற்காக அதன் எதிரிடை உணர்வுகள்





விசேடமாய் நப்ஸு *அம்மாறா* உருவாகிறது. இந்த ஆசை என்னும் தீ எரியத் தொடங்கினால் குழந்தையின் அறிவு கொதிக்கும் நீரைப்போல் மாற்றமடைகிறது. குழந்தைக்கு உலகம் முழுமையுமே தேவையாகிறது.

ஆனால் குழந்தை புலனாட்சி இல்லாமல் தன்னுணர்வோடு மட்டும் இருந்தபோது இந்த ஆசைகளோ கொந்தளிப்போ இருந்த தில்லை. இந்த "நான்" என்ற உணர்வு மட்டோடும் இருந்தது எதுவோ அதுதான் நப்ஸு என்பதும் ஆத்மா என்பதும். இதில் பல நுண்விவரங்களுண்டு. நப்ஸு என்றோ ஆத்மா என்றோ கூறினால் றூஹைத்தான் கூறுகிறோம் என்று பொருள் கொள்ளக்கூடாது. றூஹு என்பது வேறு.

இந்த ஆத்மாவை உள்மனம் என்று தத்துவசாஸ்திரிகளும் உளநூல் விற்பன்னர்களும் கூறுகிறார்கள். பற்றற்ற நப்ஸு என்று ஆரிபுகள் விளக்குகிறார்கள். வெளிப்புலன்களால் துாண்டப்பட்டு நிலைகொண்டுள்ள ஆசை, கோபம், பொறாமை முதலாம் நல்ல தீய குணங்கள் யாவும் ஒன்றித்துநிற்பதால் அந்த நப்ஸு கொதிக்கும் நீரைப்போல் மாற்றமடையும்போது நப்ஸு அம்மாறா என்று பெயர் பெறுகிறது. இந்த அம்மாறா குழந்தையின் மூளைவளர்ச்சிக்கேற்ப படிப்படியாய் வளர்ச்சியடைகிறது. குழந்தை ஆணாயினும் பெண்ணாயினும் சுமார் 10 வருடங்களின் பின்தான் மூளை வளர்ச்சி முடிவடைகிறது. ஆகையால் 10 வயதுக்குப்பின் தான் பகுக்கும் அறிவு ஓரளவு தொழிற்பட ஆரம்பிக்கிறது. இதற்கு முன்னிருந்தது வஹ்மு என்ற பேதபுத்திதான்.

இந்த விவரங்களை உள்ளடக்கித்தான் றசூல் (ஸல்) அவர்கள் 10 வயதுவரை திருந்தாத பிள்ளையை அடித்தாவது திருத்துங்கள் என்று கூறுகிறார்கள். இந்த நப்ஸு அம்மாறா இயற்கைச் சட்டங்களை மீறிப் பகுத்தறிவுடன் சேர்ந்து தொழிற்படுமேயானால் மனிதன் மிருகமாக மாற்றமடைகிறான். பயங்கரமான விளைவுகளை இம்மையிலும் மறுமையிலும் பெறுகிறான். இந்தப் பயங்கர விளைவை தடுத்து நிறுத்தி மனிதனை இறை சந்நிதானத்துக்கு இட்டுச் செலுத்த வேண்டும் என்பதற்காகவே குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ்களைக் கொண்டு 10 வயதுக்குள்ளாகவே குழந்தைகளைப் பழக்கவும் அறிவுறுத்தவும் வேண்டும் என்று இஸ்லாம் வரைவிலக்கணம் தந்திருக்கிறது.

இந்தக் குழந்தை சீரான வாழ்க்கையைப் பெறவேண்டுமானால் வாழ்க்கையின் குறிக்கோளை உணரவேண்டியதாய் இருக்கிறது. இது குழந்தையால் அறியமுடியாத ஒரு விஷயம். ஆகவே, அக்குழந்தையின் வழிகாட்டிகள்தான் இதைக் குழந்தைக்கு உணர்த்த வேண்டும். ஆனால் நம்முடைய வாழ்வில் எந்த ஒரு தாய் தந்தையும், மதரஸாக்கள், பாடசாலைகள், கல்விக்கூடங்களும் வாழ்வின் நோக்கம் இதுதான் என்று விளக்கிக் கொடுத்ததாகத் தெரியவில்லை. எமக்குத் தரப்படும் பெரும்பாலான விளக்கம் பணக்காரனாய் கௌரவமாய், உலகின் இன்பங்களை அனுபவிப்பவனாய் வாழும் வழிகளேயன்றி வேறில்லை. இந்த வழிகள் மனிதனை மேலும்மேலும் கொந்தளிக்கும் மனப்பான்மைக்கு இட்டுச் செல்லுமேயன்றி நிம்மதி, சாந்தி கிடைக்கக்கூடிய நிலமைக்கு எடுத்துச்செல்லா. ஆகையால்தான் துன்யா ஒரு பிணக்காடு என்றும் அதை அளவுக்கதிகமாய் உவப்பவர்கள் நாய்கள் என்றும் றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். துன்யாவின் கல்வி பிணத்தில் இருந்து எடுக்கும் உயிரற்ற வெறும் சீழேயாகும் என்று ஒரு நல்லடியார் கூறுகிறார்.

காருண்யமூர்த்தியான இறைவன் வேதங்களைக்கொண்டும் நபிமார்களைக்கொண்டும் இந்த வாழ்வின் குறிக்கோளை உணர்த்தியிருக்கிறான். காலாகாலம் தோன்றும் ஒரு சில நல்லடியார்களைக் கொண்டும் விவரம் தருகிறான். தந்து கொண்டேயிருக்கிறான். அறிவிலிகளான மக்கள் வேதங்களைப் புரட்டிக்கொண்டேயிருந்தால் மனிதகுலம் சாந்தியடையும் பாதையை எப்படிக் கண்டடையும்? எப்போது கண்டடையும்? ஆகவே குர்ஆன் ஹதீஸ்ஃகளுக்குத் தவறான வியாக்கியானம் செய்வது மனித குலத்தை நிரந்தர நரகுக்கு அழைத்துச்செல்வதாகவே முடியும். தெரியாத விஷயத்தில் தலையிடுவது தவறு. தெரியாத விஷயத்தைத் தெரியாது என்று கூறுவதில் குறைவு ஏதும் இல்லை. றசூலுல்லாஹ்கூடச் சிற்சில விஷயங்களைத் தெரியாது என்று கூறியிருக்கிறார்கள்.

இப்போது விஷயத்துக்கு வருவோம். கொந்தளிக்கும் மனப் பான்மையான நப்ஸுஃ அம்மாறா அவசியமானதுதான். ஆனால் அது இறைவனின் உத்தரவை மீறாதமுறையில் எமக்கு அடங்கிவிடும் போதுதான் அதைக்கொண்டு எம்மால் பிரயோசனம் பெறமுடியும். இல்லையானால் மிருகவாழ்வுதான் கிடைக்கும். ஆகவே மனிதனுக்கு நப்ஸுஃ அம்மாறாவை அடக்கவேண்டிய





அவசியத்தையும் முறையையும் விளக்கவேண்டியது மிகமிக அவசியம். இதுதான் இஸ்லாம் ஆரம்பிக்கும் இடம். இந்த ஆரம்ப நிலைமை இரு தன்மைகளைக் கொண்டதாய் இருக்கிறது. ஒன்று அறிவை நோக்கியதாயும் மற்றொன்று அமலென்னும் செயலை நோக்கியதாயும் இருக்கிறது. அறிவை நோக்கிய விஷயம் ஈமான் என்றும் அமலை நோக்கிய விஷயம் இபாதத் என்றும் பெயர் பெறுகின்றன.

பிறக்கிற ஒவ்வொரு குழந்தையும் நல்ல குழந்தையாகவே பிறக்கிறது. பின்பு அதன் தாய்தந்தையர் அதை எஹுஃதியாகவும், நஸாறாவாகவும், மஜுஃஸியாகவும் செய்துவிடுகிறார்கள் என்று றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஒரு ஹதீஸ் இருக்கிறது. பிறக்கும் குழந்தை எதுவானாலும் அதற்கு ஈமான் கிடைக்கும்போது மூ.ஃ. மீனாயும் கிடைக்காத போது மூ.ஃ.மீனல்லாததாயும் வாழுகிறது என்பது உண்மைதான். ஆகையால்தான் மூ.ஃ.மீன்கள் முதலில் ஈமானையும் அதன் செயல்விளக்கமான இபாதத்துகளையும் கற்பிக்க வேண்டியவர்களாகிறார்கள். ‘புனியல் இஸ்லாமு அலாகம்ஸின்’ என்ற ஹதீஸின்படி இஸ்லாம் ஐந்து காரியங்களின் பேரில் நிலைநிறுத்தப்படுகிறது.

1ஆவது: லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைக் கூறுவது. இதில் நான்கு பர்லுகள் அமைகின்றன. ஒன்று நாவால் கூறுவது. இரண்டாவது விளங்கியறிவது. மூன்றாவது விளங்கியறிந்ததை கல்பில் பதிப்பது. நான்காவது கல்பில் பதிந்ததை நழுவவிடாமல் பாதுகாப்பது. இத்துடன் இன்னும் அறியவேண்டிய ஐந்து விஷயங்கள் உண்டு. அவை இங்கு அவசியமில்லாதிருப்பதால் அவற்றை நான் இங்கு கூறவில்லை. இந்த நான்கு விஷயங்களையும் சக்குச் சந்தேகமில்லாமல் அறிந்து உள்ளத்தில் ஏற்றுக் கொள்வதன் பெயர் தான் ஈமான் என்பது.

2ஆவது: அறிந்ததை நழுவவிடாமல் பாதுகாப்பதற்கான இபாதத்துக்கள் இடம்பெறுகின்றன. அவை நான்கு. 1ஆவது தொழுகை என்னும் ‘ஸலாத்’. 2ஆவது சௌமு என்னும் நோன்பு. 3ஆவது ஈகை என்னும் ஏழைவரியென்றும் கூறப்படுகிற ஸக்காத். 4ஆவது ஹஜ்ஜுஃ என்னும் கடமை. இந்த நான்கு இபாதத்துகளும் அவசியமானவர்களுக்கு அவசியமான போது கடமையாகிறது. இதில் சிற்சில விதிவிலக்குகள் இருக்கின்றன. அவை இங்கு நமக்கு இப்போது அவசியமல்ல. இந்த நான்கு விஷயங்களும் ஈமான் நழுவ விடாமல் பாதுகாப்பதற்குரிய உபாயங்களேயன்றி வேறல்ல.

இஸ்லாத்தின் அடிப்படையை ஆராயும்போது மிக நுட்பமான பல ரகஸியங்கள் தென்படுகின்றன. உரியவற்றை மட்டும் கூறுவோம். ஆரம்பத்தில் சொல்லிக்கொடுக்கப்படுகிற கலிமாவின் கருத்து மனிதனின் அறிவில் இலகுவாய் நுழைய முடியாததாயும் வாழ்க்கையில் கண்டறிந்த அனுபவத்துக்கு முற்றும் முரணானதாயும் இருக்கிறது. ஆகவே, கலிமாவினால் அறிந்துகொண்ட உண்மை கல்பைவிட்டு நழுவக் கூடியதாய் இருப்பதனால்தான் நழுவவிடாமல் பாதுகாப்பதற்கான இபாதத்துக்கள் தரப்படுகின்றன. எப்படியென்றால் லாஇலாஹ என்று கூறும்போது இலாஹு இல்லையென்று கூறுகிறோம். இலாஹு என்பது குர்ஆனில் விக்கிரகமான இலாஹுவுக்கும் பௌதீக சூட்சும சிருட்டிகளுக்கும் இறைவனுக்கும் கூடப் பொதுவாக எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துக் கூறப்பட்ட ஒரு பொதுப் பெயர்ச்சொல்லாகப் பாவிக்கப்படுகிறது.

குர்ஆனில்மட்டும் இலாஹு என்ற சொல் சுமார் 102 இடங்களில் பாவிக்கப்பட்டிருக்கிறது. இலாஹு என்பதை பன்மையாக்கி ஆலிஹத் என்ற சொல் குர்ஆனில் சுமார் 34 இடங்களில் பாவிக்கப்பட்டிக்கிறது. இவற்றை ஆராய்ந்த மேதைகள் இலாஹு என்பது ஒரு பொதுப்பெயர்ச்சொல்தான் என்பதை மிகமிக உறுதியாய்ச் சந்தேகமில்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் விளக்கிக்காட்டி நிரூபித்திருக்கிறார்கள். லாஇலாஹ என்றால் அப்தோ, றப்போ, வேறு எதுவுமேயில்லை அல்லது ஒன்றுமேயில்லை என்பதுதான் அதன் உண்மையான அர்த்தம். இல்லல்லாஹ் என்றால் அல்லாஹ் வைத்தவிர என்பது அதன் அர்த்தம். கலிமாவை முழுப்படியாய் நோக்கினால் அல்லாஹ் தவிர ஒன்றுமேயில்லை என்பதே அதன் உண்மையான கருத்தாகும். இதை இபாரத்துன்னஸ், தலாலத்துன்னஸ், இஸாறத்துன்னஸ், இஹ்திலாவுன்னஸ் என்ற நான்கு பிரமாணங்களும் ஒரே முகமாய் நிரூபிக்கின்றன. இவற்றை எமது *'ஈமானின் உண்மையை நீ அறிவாயா'* என்ற நூலில் ஆதாரங்களோடு தெளிவாய் விளக்கியுள்ளேன். அங்கே கண்டு தெளிக. இங்கே அவசியமானதை மட்டும் கூறுகிறேன்.

*லாஇலாஹ இல்லல்லாஹ்* என்னும்போது சத்தப்பிரமானத்தைக் கொண்டு அல்லாஹ்வைத் தவிர ஒன்றுமில்லை என்று கூறுகிறோம். கருத்தைக் கொண்டு இருப்பது யாவும் அல்லாஹ்வே என்று உணர்கிறோம். இது நம் அறிவைக் குழப்புகிறது. அதாவது அல்லாஹ்வையன்றி ஒன்றுமில்லையென்று கூறிய நாம் சிருட்டியான நல்ல தீய பொருட்கள் இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே இருப்பதெல்லாமல் அவனே என்று ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப் படுகிறோம். பிறகு ஸைக்கினையை நோக்கினால் அதுவும் இந்த விஷயத்தையே வற்புறுத்துகிறது. அதாவது, பௌதீக உலகமான சிருட்டி அவன்தான் என்றால் சூட்சும சிருட்டிகளும் அவன்தான் என்று ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தப்படுகின்றோம். உவமானப்





பிரமாணத்தை நோக்கினால் அதுவும் இதையே வற்புறுத்துகிறது. அதாவது நாம் அறிந்த யாவும் அவனேயென்றால் நாம் அறியாதவையும் அவனேதான் என்று ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தப்படுகிறோம். நமது நிலைமை மிகமிகச் சங்கடமாகி விடுகிறது. அத்தர்க் கடையில் நுழைந்த சக்கிலியன் மயக்க மடைவது போல எமது நிலைமையும் ஆகிவிடுகிறது.

நாவினால் கலிமாவைக் கூறிய மனிதனுக்கு இப்பிரச்சினை கிடையாது. ஆனால் விளங்கும் மனிதர்களுக்கோ இது மிகக் கடினமான ஒன்றே. நாவினால் கூறுபவன் இரும்பு வாளிலிருந்தும் சட்டம் என்ற வாளிலிருந்தும் தப்பிக்கொண்டான். ஆயினும், இம்மனிதன் ஒரு கால்நடைக்கு ஒப்பானவன்தான். இவ்வித மனித குலத்தை நோக்கி *"நீங்கள் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை நாவினால் கூறும் வரையிலும் வாள்கொண்டு யுத்தம் செய்யும்படி இறைவன் என்னை ஏவினான். நீங்கள் அப்படிக் கூறினால் உங்களுடைய உடல், பொருள், ஆவி மூன்றும் என்னை விட்டும் காக்கப்படும்"* என்றும் உங்கள் செயலின் கூலி அல்லாஹ்வைப் பொறுத்தது என்றும் றசூல் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். பல யுத்தங்களையே செய்திருக்கிறார்கள். இவர்கள் தற்பாதுகாப்பிற்காக யுத்தம் செய்தார்கள் என்று மருட்சியடைய வேண்டாம். கலிமாவைப் பிரபல்யப்படுத்துவதுதான் அவர்களின் நோக்கமாய் இருந்திருக்கிறது. அனேக ஆதாரங்களைத் தரலாம். நான் விரிவைப் பயப்படுகிறேன். இந்த ஈமான் கொள்ளும் விஷயம் மிகமிகக் கடினமான ஒன்றுதான்.

ஊசியுடைய காதில் ஒட்டகை நுழைவதை விட இன்ஸானுடைய கல்பில் ஈமான் நுழைவது கடினம் என்று ஹதீஸ் கூறுகிறது. இந்த ஒரு விஷயம் மட்டும் கல்பில் நுழையாவிட்டால் வேதங்களைக்கொண்டும், றசூல்மார்களைக்கொண்டும், மலக்குமார்களைக்கொண்டும், ஒடுக்கத்து நாளைக் கொண்டும், கலாக்கதிரைக்றைக்கொண்டும் ஈமான் கொண்டேன் என்று கூறுவது வெறும் மருட்சியாகும். இது ரேப்நாடா கொண்டுள்ள ஈமானேயன்றி உண்மை யான ஈமான் ஆகாது. இதை நிரூபிக்க எவ்வளவோ கூறலாம். எல்லாவற்றையும் எழுத்தில் வடிப்பது முடியாத காரியமே. கலந்துரையாடல்தான் இதை விளங்கிக்கொள்ள இலகுவான வழியாகும். ஆரம்பத்தில் விளங்க முற்படுபவர் ஹுவல் அவ்வலு போன்ற ஆயத்துகள் மூலம் ஆதியும் அந்தமும் வெளிப்பாடான லாஹிறும் உட்படையான பாதினும் இறைவனே தான் என்பதை வாசிக்கிறார்கள். ஆயினும், நாய், பன்றி போன்றவையும் இறைவனின் வெளிப்பாடுதான் என்பதை அவருடைய அறிவு ஏற்க மறுக்கிறது. எல்லாம் அவனின் வெளிப்பாடுதான் என்று கூறுபவர் பொய்யர் என்றும் காணுகிறார்.

*ஹதீஸ்*

*"நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யராக்கவில்லை. நீர் எதைக் கொண்டுவந்தீரோ அதையே பொய்யாய்க் காணுகிறோம்." என்று அபூஜஹ்ல் கூறினான். அப்போது "நபியே அவர்கள் கூறுவது உமக்குக் கவலையளிக்கிறது என்பதை நாம் திட்டமாக அறிவோம். அவர்கள் உம்மைப் பொய்யராக்க வில்லை. ஆனால், இவ்வக்கிரமக்காரர்கள் அல்லாஹ்வுடைய வசனங்க ளையே பொய்யாக்கிப் புறக்கணிக்கின்றனர்" என்ற 6:33 ஆயத்தை அல்லாஹ் அருளினான்.*

*அறிவிப்பவர்: அலி(றழி)*
*ஆதாரம்: திர்மிதி*

அல்அமீன், நன்னம்பிக்கைக்குரியவர் என்று எந்த மக்களால் நபி வர்ணிக்கப்பட்டார்களோ அதே மக்கள்தான் கலிமாவை நபி கூறியதைக் கேட்டபோது பொய்யர் என்றார்கள். மண்ணைவாரி இறைத்தார்கள். கொலையே செய்ய முற்பட்டார்கள்.

(9)

ஆரம்ப முஸ்லீம் கலிமாவை ஒப்புக்கொள்ளா விட்டாலும் கட்சியில் சேர்ந்திருப்பதால் அவனுக்கு அச்சமூட்டவும் ஆதரவூட்டவும் வேண்டியதாய் இருக்கிறது. இவனுடைய நப்ஸை அம்மாறாவை நேரான வழியில் செலுத்த வேண்டியதாய் இருக்கிறது. இவ்வகுப்பார் தான் அவாம்கள் என்பவர்கள். இவர்களுடைய அறிவுக்கேற்றபடி விளக்கிப் படிப்படியாய் ஈமானை நுழைக்காவிட்டால் இவர்கள் கட்சியிலிருந்தும் கூடப் பிரயோசனம் பெறமுடியாமல் போய்விடும். இன்றுள்ள உலக மக்களின் நிலையும் அந்த 1408 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மக்களின் அதே நிலையில்தான் இருக்கிறது. காரணம், இஸ்லாத்தின் உண்மை மறைந்துகிடப்பதேயாகும். ஆகையால்தான் நான் கூறுகிறேன். எக்காரணம் கொண்டேனும் குர்ஆன் ஹதீஸுகளுக்குத் தவறான வியாக்கியானம் செய்யவோ இடைச் செருகல் நுழைக்கவோ கூடாது. உண்மையல்லாததைக் கூறினால் உலகமக்களின் நிலை மேலும் மேலும் படுமோசமாகவே அமையும்.

கட்சியில் சேர்ந்துள்ள முஸ்லிம் படிப்படியாய் முன்னேறும் நோக்கமாகத்தான் ஸறகு என்பது ஆரம்பத்தில் தரப்படுகின்றது. தொப்பியணிதல், உடுத்தல், உண்ணல் போன்றவையெல்லாம் இந்த ஸறகுவைச் சேர்ந்தவையேயாகும். ஆனால் விளக்கவான்களின் மூட விளக்கத்தினால், ஆரம்ப முஸ்லிம் ஸறகு எதுவோ, அத்தோடு





மார்க்கம் நிறைவு பெற்றுவிட்டதாகக் கணிக்கிறான். இவன் பள்ளியில் சென்று தொழுகை முதலாம் இபாதத்துகளிலும் ஈடுபாடு கொள்கிறான். ஆயினும் இவன் தொழுகைக்குத் தகுதியானவன் அல்ல. ஏனென்றால் இவன் வஹ்மு என்ற மூடப்புத்தியில் மூழ்கியிருப்பதால், இறைவனுடன் உரையாடும் உரையாடலை விளங்கமுடியாத போதையில் இருக்கிறான். இவனுடைய வணக்கம் இவனுக்குப் பிரயோசனம் தராது.

*குர்ஆன்: 4:43*

*விசுவாசிகளே! நீங்கள் கூறுவது இன்னதென்று நீங்கள் விளங்கி அறிந்துகொள்ள முடியாதவாறு நீங்கள் போதையாய் இருக்கும் சமயத்தில் தொழுகைக்குச் செல்லாதீர்கள்.*

இந்த ஆயத்தின் உஸூலை ஆராய்ந்தபோது மது போதையை நிறுத்துவதற்கு வந்த ஆயத்து இதுதான் என்பது தெரிகிறது. திர்மிதியில் அலி (றலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒரு ஹதீஸும் இவ்வுண்மையை உறுத்துகிறது. மேலும், இந்த ஆயத் முதஷாபிஹாத் இனத்தைச் சேர்ந்தது என்பதும் புலனாகிறது. கலிமாவை நாவினால் கூறுவதோடு மட்டும் நின்றுகொண்டிருக்கிற, சட்டப்படி மூ∴மீன்களாய் இருக்கிற, சாதாரண மக்களை நோக்கி மூ∴மீன்கள் என்று கூறப்பட்டதாய் இருந்தாலும் இதில் போதை என்பதற்கு நான்கு கருத்துகள் தென்படுகின்றன.

ஒன்றாவது: லாகிரிவஸ்துக்களாலும், மருந்துகள், உணவுகள் வாயி லாயும் போதையாதல்

இரண்டாவது: உலக இன்பதுன்பங்களில் ஊறி ஆசைப்பெருக்கில் மூழ்கிப் போதையாதல் (இதைப் பித்தன், மஜ்னூன் என்றும் கூறலாம்.)

மூன்றாவது: தாங்கள் கூறும் வார்த்தைகளில் (தொழுகையின்போது) உண்மையான அர்த்தம் தெரியாதவர்களாய், வஹ்மு, பேதபுத்தி, அறிவீனம், மருட்சி போன்றவற்றால் போதையாதல். ஆயத்தி லுள்ள 'அறிந்து கொள்ள முடியாத' என்ற வசனம் இதை நிரூபிக்கிறது. இம்மூன்று பொருட்களும் அவாம்களை நோக்கியவையே.

நான்காவது: அல்லாஹ்வையன்றி ஒன்றுமேயில்லை என்றறிந்த ஒரு மூ∴மீன் பனா என்ற ஒரு மகாமில் அறிவுப்போதையில் மூழ்குதல். அதாவது ஹாஷிக்கீனாக மாறி பக்திப்போதையாயும் இருக்கலாம். பனாவில் நுழையும் ஞானஅறிவின்

போதையாயும் இருக்கலாம். இது கவாஸுகளை நோக்கியது. கவாஸுல்கவாஸுகளுக்குப் போதை கிடையாது.

இன்றுள்ள பெரும்பாலான மக்கள் இவ்விதமான ஆயத்துகளைக் கொஞ்சமேனும் அறிந்துகொள்ள முடியாதிருப்பதால் நான் தொழவேண்டாம் என்று மக்களை ஏவுவதாக நம்புகிறார்கள். நான் கூறுவது விளங்கித் தெளிவுபெற்றுத் தொழுதால் வெற்றி பெறலாம் என்பதே. போதையிலிருந்தும் தெளிவு பெற்று வணங்குங்கள் என்றுதான் கூறுகிறேன்.

இவ்வித போதைகளில் மூழ்கியுள்ள பாமரமக்களை நோக்கி இஸ்லாத்தில் முற்றிலும் நுழைந்துவிடுங்கள் என்று இறைவன் கூறுகின்றான். நீங்கள் உங்களை மூ.ஃமீன்கள் என்று கூறாமல் முஸ்லீம்கள் என்று கூறுங்கள் என்று அறிவுறுத்துகிறான். ஆகவே கலிமாவின் நோக்கத்தை கருத்தைப் புரிந்துகொள்ளாத மனிதன் முஸ்லீம் என்ற லேபிலை வைத்துக்கொண்டு இபாதத்தில் ஈடுபடுகிறான். "துன்யா ஒரு பிணக்காடு என்றும் அதை அளவுக்கதியமாய் உவப்பவர்கள் நாய்கள் என்றும்" றசூலுல்லாஹ் கூறுகிறார்கள். ஆகவே லேபிலை மட்டும் எடுத்துக்கொண்ட மனிதன் வெளியில் முஸ்லிமாயும் உள்ளம் நப்ஸு அம்மாறாவில் நிலைபட்டு நிற்பதால் அந்தரங்கத்தில் நாயாகவும் இருக்கிறான். இவர் துன்யாவில் சில அனுகூலங்களைப் பெறலாம், ஆயினும், ஆகிறாவில் இவருடைய இபாதத்துக்கள் சாபக்கேடாகவே அமையும். இதை விளக்கம் தரும் ஆயத்துகள், ஹதீஸுகள் அனேகமுண்டு.

இவ்வித மனிதன் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று கலிமாவுக்குப் பொருள் கொண்டிருக்கின்றான். அல்லாஹ் வேறு; சிருட்டி, அல்லாஹ் அல்லாதவேறு என்று நம்பியிருக்கிறான். இவனுடைய வாழ்க்கை அனுபவமும் இதை உறுதிப்படுத்துகிறது. இது கல்பை விட்டு நழுவக்கூடியதுமல்ல, பாதுகாக்கப்பட வேண்டியதுமல்ல. இது மனிதஇனம் மட்டுமன்றி எல்லா ஜீவராசிகளுக்கும் இயல்பாய் அமைந்துள்ள ஓர் இயல்பூக்கமேயன்றி ஈமானல்ல. அவ்லியாக்களேயன்றி இந்த நம்பிக்கையை யாரும் நழுவவிட்டதேயில்லை. உலகமக்களில் மிகமிகப் பெரும்பாலார் அல்லாஹ் அல்லாதது சிருட்டி என்று நம்பியுள்ள நம்பிக்கையை நழுவவிட்டிருக்கிறார்களா? சிருட்டி வேறு அல்லாஹ் வேறு என்பதை யார்தான் மறுப்பார்?





இவ்வித மனிதனுக்கு மாறாகத்தான் மூ.ஃமீன் அல்லாஹ்வைத் தவிர இலாஹு இல்லையென்று கூறுகிறார். இவர் இஸ்லாத்திலுள்ள ஈமானின் 1ஆம், 2ஆம் பர்லுகளை முடித்தவராய் இருக்கிறார். நாவினால் கூறினார். விளங்கியறிந்திருக்கிறார். இவ்விவரம் அவருடைய வாழ்க்கை அனுபவத்துக்கு முரணானது. நழுவக்கூடியது. பாதுகாக்கப்பட வேண்டியது. இம்மனிதருக்குக் கலிமாவினால் பற்பல நியாயமான சந்தேகங்கள் உருவாகின்றன. இவர் தான்செய்யும் தொழுகை முதலாம் இபாதத்துகளையும் அவற்றின் பிரயோசனங்களையும் அவற்றின் உண்மைகளையும் ஆராய்கிறார். அதாலத்தென்ற நீதி நிர்வாகத்தை (ஷரீயத்தை) முறையாய் கடைப்பிடிக்கிறார். தொழுகையின்போது இறைவனோடு உண்மையாகவே உரையாடுகிறார். நல்லடியார்கள் சென்ற ஸிறாத்து என்ற நேர்பாதை துன்யாவிலுமுண்டு என்று அறிந்ததால் அப்பாதையில் தன்னைச் செலுத்தும்படி வேண்டுகின்றார். இவர் உண்மையான ஒரு முஸ்லீமாயும் ஆரம்ப மூ.ஃமீனாயும் இருக்கிறார். இந்த நிலைமையை உருவாக்குவதுதான் ஷரீயத் தரப்பட்ட நோக்கம். இந்த ஷரீயத் என்பது இறைமுன்னிலையை எய்துவதற்காகத் தரப்பட்ட முதலாம் வகுப்பு அல்லது படித்தரமாகும்.

இந்த ஷரீயத் இதன் அடுத்த படித்தரமான தரீக்கத்தில் நுழைவதற்குரிய ஒரு படியேயன்றி மார்க்கத்தின் இறுதியான விஷயமல்ல. ஓர் ஆரம்ப மூ.ஃமீன் வெளி அமல்களைச் சரியாய்க் கையாள்பவராய் இருப்பதால் ஷரீயத்திலும் இருக்கிறார். உண்மையை ஆராய்ந்தறிவதனால் தரிக்கத்திலும் இருக்கிறார். இவர் தொழுகையில் கேட்ட துஆ அங்கீகரிக்கப்பட்டதால் இறைவனுடைய றஹ்மத்தில் நுழைகிறார். அதாவது அதாலத்தில் இருந்து றஹ்மத்துக்கு ஏறிக்கொண்டிருக்கிறார். இவரை இறைவன் ஆட்கொள்கிறான். இவருடைய சகல சந்தேகங்களும் நீக்கப்படுகின்றன. சர்வமும் இறைவனின் றஹ்மத்தே என்றுணர்கிறார். காலக்கிரமத்தில் ஹகீகத் என்ற ஞான பூமியில் சென்றடைகிறார். இது றஹீமியத்தினால் விசேட கிருபையினால் ஏற்படுகிறது. இவருக்கும் இறைவனுக்குமிடையில் சிற்சில விசேட தொடர்புகள் ஏற்படுகின்றன.

இம்மனிதர் அப்தாலுவாக மாற்றமடைகிறார். அதாவது சாதாரண மனிதர்களுக்கு மாற்றமானவராக நடையுடை பாவனை அறிவு முதலாம் சகலபண்புகளிலும் மாற்றமேற்படுவதால் மாறுபட்டவர், அப்தாலு என்கிறோம். இவர் இறுதியில் விருப்பு வெறுப்பற்று 'தக்தீறைப்' பொருந்திக்கொண்டதால் சலனமற்ற

உள்ளமுடையவராய்ச் சாந்தியின் வாயிலை எய்திவிடுகிறார். ஆயினும் சாந்தியின் வீட்டில் முற்றாய் நுழைந்தவரல்ல. இவருடைய உள்ளம் இறை இரகஸியங்கள் வெளியாகும் நிலைமையைப் பெற்றிருப்பதால் அந்த உள்ளம் வேதமாகக் காட்சியளிக்கிறது. இம்மனிதர் அந்தப் பரிசுத்த வேதத்திலுள்ள உண்மைகளை அறிகிறார். இவருக்கு அறபோ ஆங்கிலமோ வேறுவேறு பாஷைகளோ அவசியமல்ல. இவரிடத்தில் எப்பாஷை உண்டோ அதே பாஷையைக் கொண்டே இறைவன் அவருக்கு விளக்கம் தருகிறான். இவருக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு, கண்ணாடியைப் பார்த்தவனுக்கும் அதில் தென்பட்டவனுக்குமுள்ள தொடர்பைப் போன்று ஆகிவிட்டால் இவரிடத்தில் எதுவும் மறைய, மறைக்க முடியாது. இவ்விதத் தொடர்போடுள்ள பரிபாஷையின் பெயர்தான் அறபு, தெளிவு, என்ற பாஷை. இதைப் பரிபாஷை என்று கூறுவ துண்டு. நாம் அறிந்துள்ள அறபுபாஷையும் முஸ்ஹபும் அறபுநாட்டின் பாஷையாகும். றப்பும் றசூலும் உறவாடிய அறபுபாஷை தெளிவு என்னும் பரிபாஷையாயும் அதை றசூல் (ஸல்) அவர்கள் தமக்குத் தெரிந்த பரிபாஷையைக் கொண்டு மக்களுக்கு அறிவித்த அந்தப் பாஷை அறபுநாட்டின் பாஷையாகவும் இருக்கின்றன. ஒரு சிறு உதாரணம் தருகிறேன்.

*அலிப், லாம், மீம் என்றும் ஹாமீம்* என்றும் இவைபோல் இன்னும் பல அறபு எழுத்துகளிலுள்ள சிற்சில வசனங்கள் குர்ஆனில் இடம்பெறுகின்றன. இவை அறபு எழுத்துகளில் அமைந்திருந்தாலும் அறபு தெரிந்த பண்டிதர்களுக்கும்கூட இவற்றின் பொருள் தெரியவே தெரியாது. ஆனால் நாம் முன்பு கூறிய மூ∴மீனான மனிதர் இறைவனோடு உரையாடும் பரிபாஷையைக் கொண்டு இவ்வித வசனங்களின் உண்மையை உள்ளாலுள்ளபடி அறிகிறார். நான் கூறுவதன் சாரம் என்வென்றால் அறபுபாஷை என்பது இரு பொருள்களையுடையது. ஒன்று, இறைவனும் தன் சொந்த அடியார்களும் உறவாடும் பாஷை என்பது. இந்த அறபு என்ற வசனத்துக்குத் தெளிவு (தெளிவான பாஷை) என்பது பொருள். மற்றொன்று அறபுநாட்டின் பாஷை அறபு என்பது. இதுதான் நாம் வைத்திருக்கும் குர்ஆனின் பாஷை. இந்தக் குர்ஆனின் அந்தரங்கம் நாம் முன்பு கூறிய தெளிவான பாஷையாகும். உம்முடைய பாஷையிலேயே குர்ஆனை இறக்கினோம் என்று கூறுகிறான். இதில் உம்முடைய என்பதில் றசூலின் உடல் உயிர் இரண்டையும் இறைவன் ஒன்றுபடுத்திக் கூறினான் என்பதை நீங்கள் புரிந்துகொண்டால் நான் கூறியதை விளங்கிக்கொள்வீர்கள்.





இவ்விவரத்துக்கு இவ்விடம் பொருந்தாது. நாம் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு வருவோம்.

இந்த ஹகீகத்வாதிகளான, மஹரிபத்வாதிகளான மகான்களை *'அஹ்லுல்ஹல்லி வல்அக்திகள்'* என்றும் அவ்லியாக்கள் என்றும் கூறுகிறோம். இவர்கள்தான் மார்க்கவிளக்கம் பெற்றவர்கள். தீர்ப்புச் செய்யும் ஆற்றலுடையவர்கள். இவர்கள்தான் உண்மையான அஹ்லுல்பைத்துக்கள், ஆகவே இவ்வித மகான்கள் தொழுகை, நோன்பு போன்ற இபாதத்துகளுக்கு என்ன விவரம் தருகிறார்கள், என்ன ஆதாரம் தருகிறார்கள் என்பதைச் சிறிதுஆராய்வோம். இங்கே அப்து, றப்பு என்ற சொற்களை மட்டும் முதலில் நோக்குவோம்.

இனம் காணமுடியாத ஏதோ ஒரு மூலப்பொருள் உண்டு என்றும் அது மனித அறிவுக்கெட்டாதிருப்பதால் அதை ஆராய்தல் செய்ய வேண்டாம் என்றும் குர்ஆன் ஹதீஸுகள் கூறுகின்றன. இந்த மனித அறிவுக்கெட்டாதிருக்கும் மூலப்பொருளைக் குறிப்பிடும் முகமாக முஸ்லீம்கள் தாத்து, வுஜூது, ஹக்கு, அல்லாஹ் என்று கூறுகிறார்கள். இந்துக்கள் கடவுள், பிரமம், அனிர்வசனீயம் என்றெல்லாம் கூறுகிறார்கள். இதேபோல் மற்றும்மதமக்களும் பற்பல சொற்களால் விளக்கியிருக்கிறார்கள். இந்த அடிப்படையை உலகிலுள்ள எல்லா மதங்களுமே ஏற்றிருக்கின்றன. பாஷையில் பேதமுண்டேயன்றி அடிப்படை ஒன்றுதான்.

இந்த மூலப்பொருள் கெட்டழியாமலும் விகாரப்படாமலும் இருந்தபடியே இருந்துகொண்டும் மனித அறிவில் அமையக்கூடிய (பலமர்த்தபா) நிலைமைகளையும் தன்னிடத்தே கொண்டுள்ளதாயும் இருக்கிறது. இந்த மனித அறிவில் எட்டும் நிலைமைகளை மர்த்தபா என்றும் அந்த நிலைமைகளின் ஸூறத்துகளை அல்லது தோற்றங்களை 'லாஹிர்' வெளிப்பாடு என்றும் கூறப்படும். அவசியமானதை மட்டுமே தருகிறேன். எப்போது அந்த மூலப் பொருள் றப்பு என்னும் பெயரைப் பெறுகிறதோ அப்போதே அதன் எதிர்மறையான அப்து என்னும் பெயரையும் பெற்றுவிடுகிறது. றப்பு என்றால் இறைவன், எஜமான், ஆளுபவன் என்பது பொருள். இந்தப் பெயர்கள் ஆளப்படுகிற அப்து என்ற சொல்லில்லாமல் பொருள்தரமாட்டா. அப்து இல்லையானால் றப்பு என்பதும் இல்லை. றப்பு இல்லையானால் அப்து என்பதும் இல்லை. அதாவது மனித அறிவு ஒன்றுக்கொன்று முரணான இரு தன்மைகளைக் கொண்டே யன்றி எதையும் அறியாது. இருளில்லாவிடில்

வெளிச்சமும் வெளிச்சமில்லாவிட்டால் இருளும் கிடையாது. இருளைக்கொண்டு தான் வெளிச்சம்உண்டு என்று கண்டறிகிறோம். வெளிச்சத்தைக் கொண்டுதான் இருள்உண்டு என்றறிகிறோம். உடன்பாடும் எதிர்மறையும் ஒன்றிக்காத ஒன்றை மனித அறிவு உணரவே உணராது. இதை அறிஞர்கள் அறிவார்கள். வஹ்முடைய மனிதன் அறியமாட்டான். நாம் சிருட்டித்த ஒவ்வொன்றையும் ஜோடி ஜோடியாய்ச் சிருட்டித்துள்ளோம் என்ற வேதவசனம் இதை உணர்த்துகிறது. இவ்வசனத்தின் அந்தரங்கம் என்ன? மனிதன் உடன்பாடு எதிர்மறைகளைக் கொண்டேயன்றி எதையும் உணர மாட்டான் என்பதற்காகவே ஜோடிஜோடியாய்ப் படைத்தோம் என்று கூறுகிறான்.

ஒரு பொருள் வேற்றுப்பொருளில்லாமல் தன்னியக்கத்தை வெளிப்படுத்தாது என்பது ஒரு முக்கியமான தத்துவம். அதாவது காலம், இடம் முதலாம் சகலபண்புகளையும் கடந்த ஒன்று யாருக்கு? எங்கே? எதை? வெளிப்படுத்தும்? இது எப்படி மனித அறிவில் அமையும்? அமையவே அமையாது. இதை மனிதன் எப்படி ஈமான் கொள்வது? ஆகவே அந்த இனம் காணமுடியாத ஒன்று பற்பல மர்த்தபாக்களில் பற்பலவாய் ஜோடிஜோடியாய்த் தென்படும் போதுதான் அறியப்படும் பொருளாகிறது. அந்த அன்னியமற்ற நிலைமையை உஜூது என்றும், பற்பலவாய்த் தென்படும் நிலைமையை மவுஜூது என்றும் கூறப்படும். உஜூது, மவுஜூது என்ற இரு சொற்களும் எழுத்தினாலும் சத்தத்தினாலும் மாறுபட்டிருக்கின்றனவேயன்றிப் பொருளினால் மாறுபட்டவையல்ல. இருசொற்களும் உணர்த்துவது ஒரு பொருளைத்தான்.

அப்து, றப்பு என்ற சொற்களும் இப்படித்தான் இருக்கின்றன. ஏதோ ஓர் இனம்தெரியாத பொருளின் ஒரு நிலைமை றப்பு என்றும் அதற்கு எதிர்மறை நிலைமை அப்து என்றும் பெயர் பெறுகிறது. ஆனால் இச்சொற்களால் உணர்த்தப்படும் அந்தரங்கம் ஒன்றாகவே இருக்கிறது. இந்த உண்மை அறிவில் பிடிபடாவிட்டால் ஈமான் கொள்வது முடியாத ஒன்றாகும். ஈமானில்லாத அமல் நிச்சயமாகச் சாபக்கேடாகவே முடியும். ஆகையால் இதை நாம் முதலில் உதாரணங்கள் வாயிலாக விளங்கிக்கொண்டுதான் ஸலாத், சௌமு போன்றவற்றை ஆராயவேண்டும். இல்லாவிட்டால் குர்ஆனோ ஹதீஸோ பிரயோசனம் தராது.





## (10)

என் முகத்தை நான் கண்ணாடியில் பார்க்கும்போது கண்ணாடி என்னைவிட்டும் வேறாக என் முன்னிலையில் இருக்கிறது. அக்கண்ணாடியில் நான் காண்பது எனது ஸுறத்தை அல்லது தோற்றத்தைத்தான். கண்ணாடியில் தென்பட்ட என் ஸுறத்து எனக்கு முற்றிலும் வழிப்பட்ட அப்துவாய் அடிமையாய் இருக்கிறது. நான் விரும்பாத, செய்யாத எதையும் என் ஸுறத்துச் செய்யவே செய்யாது. எனக்கு மாறு செய்யவும் அதற்கு முடியாது. இப்போது நான் எஜமானாய், றப்பாய், ஆளுபவனாய் இருக்கிறது போல் கண்ணாடியில் தென்பட்ட என் ஸுறத் ஆளப்படும் பிரஜையாய் அப்துவாய் அடிமையாய் இருக்கிறது. கண்ணாடியை எப்போது நான் பார்த்தேனோ அப்போதே நான் எஜமான் என்னும் றப்பாயும் என் ஸுறத் அப்தாயும் அடிமையாயும் இருக்கிறது. றப்புவான நான்தான் என் கண்ணாடியில் என் ஸுறத்தை அப்துவாய்க் கண்டேன். இவ்வுதாரணத்தில் ஒரு குற்றம் என்னவென்றால் நான் என்னை விட்டும் வேறாக, என்முன்னிலையில் என்னையல்லாத கண்ணாடியைக்கொண்டுதான் கண்டேன். நான் அப்து என்ற மனிதனாய் இருந்துகொண்டுதான் இப்படிக் கண்டேன். ஆகவே, எனக்கு எஜமானான றப்பு எனக்கு நேர்முரணாகத்தானே இருக்க வேண்டும். ஆம் அவர் நேர்மாற்றமானவர்தான்.

நான், எனது கண்ணாடி இடம், காலம், போன்றவற்றுடன் (நானல்லாத பிற பொருட்களுடன்) இருந்துதான் என்னை றப்பாயும் என் ஸுறத்தை அப்துவாயும் கண்டேன். இறைவன் என் தன்மைக்கு மாற்றமானவன் அல்லவா? அவனையன்றி எதுவுமே இல்லையென்று கலிமா கூறுகிறதல்லவா? அவ்வல்லோன் என் கண்ணாடிக்கு நேர்விரோதமாக அவனுடைய ‘நூர்’ என்ற அறிவையே கண்ணாடியாய்க் கொண்டிருக்கிறான்.

நான் கண்ணாடியை நானல்லாத வேறு இடத்தில் கொண்டிருந்தேன்; இறைவன், வேறுஇடம் அவனையன்றி இல்லாதிருப்பதால் அவனுடைய கல்பையே இடமாக ஆக்கிக் கொண்டான். இறைவனின் அறிவோ அவனாகவே இருக்கிறது. ஆகவே, அவன் தன்னிடத்தே தனக்காக தன் ஸுறத்தையே தன் கல்பில் வெளியாக்கியிருக்கிறான். அவன் தன்னிடத்தே தன் ஸுறத்தையே அப்துவாய்க்

காண்கிறான். இந்த இறைவனுடைய அறிவு நமது அறிவு போன்ற தல்ல. அவனுடைய கல்பும் நம்முடைய கல்பைப் போன்றதல்ல. இந்த இறை கல்பை 'லவ்ஹு' என்றும் அறிவை நூர் என்றும் 'கலம்' என்றும் குர்ஆன் ஹதீஸ்கள் விவரம் தருகின்றன. ஆரீபீன்கள் எவ்வளவோ அழகான விவரம் தந்திருக்கிறார்கள்.

இதை நீங்கள் முதலில் தெளிவாய் விளங்கவேண்டும் என்பதற்காக ஒரு சிறு உதாரணம் தருகிறேன். நீங்கள் உண்மையை உணரும் அவாவுடையவர்களாயிருப்பின் கவனித்து நோக்குங்கள். எனக்குள்ள மனம், உள்ளம், அறிவு அல்லது இருதயம் ஒன்றே ஒன்றுதான். அந்த அறிவு என்னை விபசாரத்தில் ஈடுபட வற்புறுத்து கிறது. பிறகு அதனால் ஏற்படும் நன்மை தீமைகளை விளக்குகிறது. பிறகு நன்மை தீமைகளை எடைபோடுகிறது. பிறகு நன்மையோ தீமையோ ஒன்றை விரும்புகிறது. விரும்பியதை எடுத்தும் கொள்கிறது. விபசார நோக்கத்தைத் தந்தபோது அந்த அறிவு ஷைத்தான் என்றும் எடை போடும்போது மனிதன் என்றும் பகுத்தறிவு என்றும் அதன் நன்மை தீமைகளை விளக்கும் போது மலக்கென்றும் தீர்ப்புச் செய்யும்போது றப்பு என்றும், எஜமான் என்றும் பெயர் பெறுகிறது. இந்தப் பற்பல நிலைமைகளில் பற்பல ஸூறத்துகளில் தென்பட்டதெல்லாம் என்னிடம் இருந்த ஒரேயொரு அறிவுதான். ஆரம்பத்திலும் முடிவிலும் இருந்தது. அந்த அறிவுதான் வெளிப்படையாயும் உட்படையாயும் (மறைந்ததாயும்) இருந்தது. என் அறிவு என்னிடத்தில் ஒவ்வொரு நிலைமையைப் பெற்றிருந்த போது ஒவ்வொரு பெயரைப்பெற்றது. இத்தனைக்கும் காரணமாய் இருந்த நான்என்பவன் இருந்தபடிதான் இருந்தேன். இருக்கிறேன். இருப்பேன். என் அறிவில் வெளியான எதிலும் நான் கட்டுண்டவ னேயல்ல. நான் எத்தோற்றத்தினாலும் எச்செயலினாலும் அசூசிப் படவேயில்லை.

இப்போது றசூல்(ஸல்) கலிமாவைக்கூறி அதற்கு ஆதார மாய்க் கூறிய முதலாவது குர்ஆன் ஆயத் 'ஹுவல் அவ்வலு வல்ஆகிறு வல்லாஹிறு வல்பாதினு வஹுவபிகுல்லிஷையின் அலீம்' என்பதாகும். இவ்வாயத்து குர்ஆன் 57:3ஆம் வசனமாய் இடம்பெறுகிறது. இதன் பொருள் ஆதியானவன் அந்தமானவன் வெளிப்படையானவன் உட்படையானவன் சகலதையும் அறிந்தவன் என்பதே. அனேக ஆதாரங்கள் உண்டு. இங்கே இதைமட்டும் போதுமாக்குவோம்.





நான் கண்ணாடியில் கண்ட என்ஸூறத் நிலையற்ற சொந்த மான தனித்தன்மையற்ற வெறும் கற்பனையாய் பாதிலாயும் நான் ஹக்காயும் இருந்ததுபோல சர்வ ஆலங்களும் இறைவன் தன் கண்ணாடியில் காணும் அவனின் லாஹிறான வெறும் கற்பனைத் தோற்றமாயும் அஸ்மா என்னும் நாமமாயும் அவன் ஹக்காயும் இருக்கிறான். மற்ற யாவும் பாதிலாய் இருக்கின்றன. அவனுடைய அஸ்மாக்களின் ஸூறத்துகள்தான் சர்வ ஆலங்களுமாய் இருக்கி ன்றன. இறைவன் நாடும்போது அவனுடைய கண்ணாடியை நீக்கிக் கொள்வான். சர்வ ஆலங்களும் அழிந்து விடும். "குல்லுமன் அலைஹா பான்" என்ற குர்ஆன் வசனத்தின் பொழிப்பு இதுதான். யாவும் அழிந்துவிடும், அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான் என்பதே அதன் சாரம்.

இங்கே சாதாரண மனிதனுக்கு மிகமிகக் கடினமான பல சந்தேகங்கள் ஏற்படுகின்றன. எல்லாவற்றிற்கும் இங்கே விடை கூற அவகாசமில்லை. நீங்கள் விரும்பினால் நான் எழுதிய 'ஈமானின் உண்மையை நீ அறிவாயா?' என்ற நூலில் சந்தேக நிவர்த்தி என்ற தலைப்பில் கேள்வியும் பதிலும் ஆதாரங்களும் தந்துள்ளேன். அங்கே கண்டு தெளிக. இங்கே நமக்கு இப்போது அவசியமானது என்னவென்றால் ஹக்கு என்ற மூலப்பொருள் இருந்தபடியே இருக்க அதனிடத்தில் அதன் வலிமையைக் கொண்டே சர்வஆலங்களாயும் வெளியாகியிருக்கிறது என்பது மட்டுமே.

ஆகவே றப்பு என்ற சொல்லும் அப்து என்ற சொல்லும் ஏதோ ஒரு ஹக்கின் இரு நிலைமைகளுக்கிடப்பட்ட இரு பெயர்களேயன்றி இரு பொருள்களல்ல. அப்து என்றும் றப்பு என்றும் வெவ் வேறான இரு பொருட்களுண்டு என்பது வஹ்மு என்ற மருட்சி யாகும். குர்ஆன், ஹதீஸுகள், இஜ்மாஉ, கியாஸ், பகுத்தறிவு ஆகிய பிரமாணங்களுக்கு வஹ்மு மாறானது. இதை ஒவ்வொரு மனிதனும் பல வருட முயற்சி செய்தேனும் விளங்கிக் கொள்ளாவிடில் ஈமானில் ஒன்றமுடியாது.

## (11)

நீங்கள் இப்போது ஸலாத் என்ற தொழுகையை ஆராய்ந்து உண்மையை அறியக்கூடிய பக்குவத்தில் இருந்தாலும்கூடத் திடீரென அதை ஏற்கமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். ஏனென்றால் 'ஸலாத்' என்றால் தொழுகைதான். அதைவிட வேறோர் ஸலாத் கிடையாது என்று பரம்பரைபரம்பரையாய் அறிந்து

அதிலேயே ஊறி வளர்ந்த எமக்கு அதன் அந்தரங்கத்தைக் கூறும்போது அதை எம் அறிவு திடீரென ஏற்றுக் கொள்ளாது. ஆகையால் ஸலாத்தைப்போல் உள்ள சௌமு (நோன்பு) போன்ற ஒன்றைச் சரியாய் விளங்கிக்கொண்டால் ஸலாத்தில் ஏற்படுகிற மயக்கத்தை இலகுவாய் நீக்கலாம். ஆகையால் சௌமு என்ற சொல்லை முதலில் நோக்குவோம்.

சௌமு என்றால் நோன்பு அல்லது உண்ணாவிரதம் என்று பொருள்படும். நோன்புக்கு நிய்யத் செய்யும்போது 'நவைத்சௌமகதின்' என்று கூறுவதில் இச்சொல் இடம்பெறுவதை நீங்கள் அறிவீர்கள். சௌமு என்றால் தடுத்தல், தடைப்படுத்தல் என்பதே அதன் கருத்து. அதிகாலையிலிருந்து மாலைவரையிலும் மனிதன் தன்னுடைய கண், செவி, மூக்கு, வாய், முன்துவாரம், பின்துவாரம், ஆகிய ஒன்பது துவாரங்கள் வாயிலாகவும் எதையும் உட்புகுத்தாமல் தடுத்தல், தடைப்படுத்தல் என்பதே அதன் பொழிப்பு. இதன் வெளிப்படை அனுஷ்டானம்தான் இந்த விபரம். இதற்குப் பல சட்டங்கள் உண்டு. இதற்கு உட்படை விவரம் உண்டு. இந்த உட்படை விளக்கம் என்னவென்றால் கல்பைக் கட்டளைக் கமைவாய்ப் பழக்குவதே. இவ்வளவுதான் நாம் நம் வழிகாட்டிகள் வாயிலாய் அறிந்து கொண்ட விளக்கம். இதற்குதவியாய் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு எவ்வளவோ சட்டநுட்பங்களை இமாம்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள். இவர்களுடைய சட்டநுட்பங்களை ஆராயும்போது இவர்கள் அவாம்களான பாமரமக்களுக்கு வெளிப்படையான லாஹிறை மட்டும் விளக்கினார்களேஒழிய ஹக்கை உண்மையான அந்தரங்கத்தை விளக்கவே இல்லை. இவர்களுடைய சட்டங்களில் ஒன்று குறிப்பிட்ட நேரம்வரையிலும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க வேண்டும் என்பது. இன்னொன்று ஹைலு நிபாஸுடைய பெண்கள் பரிசுத்தமாகும் வரையிலும் சௌமு என்ற நோன்பை நோற்கக்கூடாது. கலாச் செய்ய உரிமையுண்டு.

இந்த இமாம்களால் வகுக்கப்பட்ட, நாம் கூறிய இரு சட்டங்களும் குர்ஆனின் சில ஆயத்துகளுக்கு முரண்படுகின்றன. எப்படியென்றால் மர்யம் (அலை) ஓரிடத்தில் குழந்தையைப் பெற்றுக்கொண்டபோது சில மனிதர்கள் அவரைப் பார்க்கப்போய் இருக்கிறார்கள். அவர்களை நோக்கி *"நான் நோன்பிருக்கிறேன். இன்று எவருடனும் பேசமாட்டேன்"* என்று கூறிவிடும்படி இறைவன் அறிவிக்கிறான். ஆயத்தை முதலில் கவனியுங்கள்.





*குர்ஆன்: 19:26*
*நீ புசித்துக் குடித்துக் கண்குளிர்ந்திருப்பாயாக. நீ எம் மனிதரைக் கண்டபோதும் நான் நிச்சயமாக றஹ்மானுக்காக நோன்பு நோற்கிறேன். ஆகவே இன்றைய தினம் எவருடனும் பேசமாட்டேன் என்று கூறிவிடு.*

இதுதான் அவ்வாயத்தின் கருத்து. இந்த ஆயத்தில் நோன்பு என்பதற்கு சௌமு என்ற சொல்லே பாவிக்கப்பட்டிருக்கிறது. பிள்ளைப்பேறு அடைந்த மர்யம் (அலை) ஹைலுநிபாஸுடன் இருந்தவர்கள். இமாம்களின் சட்டப்படி இவர் நோன்பு நோற்க முடியாது. ஆயினும் இவர் பரிசுத்தமானபிறகுதான் இப்படி இறைவன் கூறினான் என்றால் இமாம்களின் கூற்று பிழையல்ல. ஆயினும் மர்யம் (அலை) நோன்பு பிடிக்காமலே இருந்து கொண்டும் இப்படிக் கூறியிருந்தால் இறைவனே பொய் சொல்லும்படி கூறினான் என்றாகும். தவிர இமாம்களின் கூற்றுப்படி நோன்பாளி உண்ணக் குடிக்க முடியாது. ஆனால் ஆயத்தில் உண்டு குடித்து கண் குளிர்ந்திரு என்றும் அதேவேளை நோன்பிருப்பதாய்க் கூறும்படியும் இறைவன் கூறுகிறான். ஆகவே உண்டு குடித்துக்கொண்டும் நோன்பிருக்கலாம் போல் தென்படுகிறது. இமாம்களோ இதை மறுக்கிறார்கள். இவ்விஷயத்தில் குர்ஆனுக்கும் இமாம்களுக்கும் விரோதம் தென்படுகிறது.

மேலும் இவ்வாயத்தில் றஹ்மானுக்காக நோன்பு பிடித்திருக் கிறேனென்று கூறும்படி இறைவன் கூறுகிறான். நமக்கோ, அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்கும்படி கட்டளையிடப்படுகிறது. இந்த ஆயத்துப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இவ்வாயத்தில் அறிஞர்களான மகான்களுக்கு எவ்விதக் குழப்பமும் கிடையாது. ஏனென்றால் எவ்வாயத்தில் சந்தேகம் தோன்றுமோ அதே ஆயத்து அதற்கு விடையையும் தரும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால், ஈமானைப் பெற்றுக்கொள்ளாத மக்களுக்கு இது தென்படுவதில்லை. இவ்வாயத்தில் இன்னும் மிகப்பெரிய ஒரு குழப்பம் தென்படுகிறது. அதைப்பின்னால் ஆராய்வோம்.

இப்போது நாம் குர்ஆனையும் இமாம்களையும் நம்புவதானால் சௌமு என்றால் என்ன? என்பதை ஆராய வேண்டியவர்களாகின்றோம். சௌமு என்ற சொல்லால் உணர்த்தப்படும் தடுத்தல் என்பது நான்கு வகை என்பதைக் குர்ஆன் ஹதீஸ்கள் விவரம் தருகின்றன. இந்த நான்கு வகையையும் நாம் அறிந்து கொள்ளாமையினால்தான் எமக்குக் குழப்பம் ஏற்பட்டது. சௌமு அல்லது தடுத்தல் என்பதில்,

1ஆவது வகுப்புக்குரிய அல்லது ஷரீயத்துக்குரிய வெளிப்படை நோன்பைத்தான் இமாம்கள் விளக்கியிருக்கிறார்கள். இது நம் எல்லோருக்கும் தெரிந்திருப்பதால் நான் அதை இங்கு கூற வேண்டியதில்லை.

2ஆவது சௌமு தரீக்கத்தைச் சேர்ந்ததாய் இருக்கிறது. இதன் பொது விவரம் என்னவென்றால் கல்பு என்ற பூமியில் களைகளான தீய சுபாவங்கள் தலைதூக்காமல் தடுத்தல் என்பதாகும். இது இறவாமல் இறக்கும் வரையிலும் ஒற்றை நோன்பாக நோற்கப்பட வேண்டியது. இதற்கும் பல சட்டங்கள் உண்டு. இதை பாதினுடைய உலமாக்கள்தான் அறிவார்கள்.

3ஆவது சௌமு ஹகீகத்துடையதாய் இருக்கிறது. இதுவும் இறவாமல் இறக்கும்வரையிலும் ஒற்றை நோன்பாக நோற்கப்பட வேண்டியதாகும். அதாவது அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்ற எண்ணம் அணுவும் கல்பில் நுழையாமல் தடுத்தல் என்பதே அதன் சாரம். ஷிர்க்கில்லாத உள்ளத்தோடு இருத்தல் என்பதே நோக்கம். இதற்கும் மிகக்கடினமான சட்டங்கள் உண்டு. இவற்றை அவ்லியாக்களேயன்றி அறியமாட்டார்கள்.

4ஆவது சௌமு மஹரிபத்தைச் சேர்ந்தது. அதாவது நான் என்னும் சுயநிர்ணய உரிமை தன்னில் நுழையாமல் தடுத்தல் என்பதே அதன் சாரம். இதற்கும் பல சட்டங்கள் இருக்கின்றன. இதை ஆரிபுகளான பாரவான்களேயன்றி அறியமாட்டார்கள்.

நாம் மிகச்சுருக்கமாய்க் கூறிய இந்த நான்குவகைகளும் குர்ஆன் ஹதீஸ்களில் இடம்பெறுகின்றன. மர்யம் (அலை) அவர்கள் பிடித்த நோன்பு பாமரமக்களுக்குக் கற்பிக்கப்பட்ட ஷரீயத்தின் நோன்பல்ல; இது தரீக்கத்தின் இறுதி எல்லையிலுள்ள நல்லடி யார்களின் நோன்பாகும். இதைச் ஷரீயத்தின் சட்டங்கள் தடைப் படுத்தாது. இந்தநோன்புக்கு ஹைலு நிபாஸோ ஊண்குடிப்போ தடையாகாது. இதையறியும்போது இறைவன் பொய் கூறும்படி சொல்லவே இல்லை என்பதும் தென்படுகிறது. இமாம்களும் தப்பிவிட்டார்கள். இமாம்கள் புகஹாக்கள். இவர்கள் தரீக்கத்தை விளக்கவேண்டிய அவசியமில்லாதவர்கள். இந்த நோன்பையும் குர்ஆன் சௌமு என்றுதான் கூறுகிறது. ஆகவே இவ்வித நோன்பிற்கும் நம்முடைய உண்ணாவிரத நோன்பிற்கும் பேதம் தெரியாத நாம் திணறுகிறோம். இந்தத் திணறலுக்குக் காரணம் மார்க்கவிளக்கம் தெரியாமைதான்.





நாம் கூறியது றசூலுக்கு முந்திய மர்யம் (அலை) அவர்களு டைய விஷயம்தான். ஆனால் எமது றசூலும் இப்படியான நோன் பிருந்தார்களா? ஆம். அவர்களுடைய 35 வயதிலிருந்து உபாத் தாகும் வரையிலும் இவ்விதமான நான்கு வகை நோன்புகளையும் கையாண்டிருக்கிறார்கள். நிறைய ஆதாரங்களுண்டு. நான் விரிவைப் பயப்படுகிறேன். நோன்பு றசூல் (ஸல்) அவர்களுக்கு முன்பும் இருந்ததுதான். றசூல் (ஸல்) அவர்கள் சீர்திருத்தம் செய்து தந்ததெல்லாம் ஷரீயத்துடைய அமல்களைத்தான். ஆகையால் தான் இனிமேல் வேறொரு ஷரீயத் அவசியமில்லாதிருக்கிறது. மற்றும் மூன்று படித்தரங்களையும் அஸ்ஹாபுல்யமீன் என்ற 10 ஸஹாபாக்களுக்கும் தெளிவாய் விளக்கியிருக்கிறார்கள். மற்றும் ஸஹபாக்கள் பக்குவநிலையில் இருந்திருந்தால் அவர்களுக்கும் அவ்விவரங்களை அறிவித்திருப்பார்கள். தௌஹீதை எல்லோ ருக்கும் பொதுப்படையாயும் அதன் அந்தரங்கங்களை உரியவர்க ளுக்கு மட்டும் கூறியிருக்கிறார்கள். நாமும் அவர்களைத்தான் பின்பற்றிச் செல்கிறோம். புதிதாக எம்முடைய அறிவாற்றலால் கண்டுபிடித்து நாம் எதையும் கூறவில்லை. றசூலில் நான்கு வகை நோன்பும் நிரப்பமாய் இருந்தன. நமக்கு விளக்கப்படவில்லை.

## (12)

இப்போது தொழுகை என்ற ஸலாத்தை நெருங்குவோம். இந்த சௌமு என்பது எப்படி நான்கு வகையாய் அமைகிறதோ அதே போல ‘ஸலாத்’ என்ற தொழுகையும் நான்கு வகையாய் இருக்கிறது. ‘ஸலாத்’ என்றால் ஒதுங்கியிருத்தல், கல்வத்தில் இருத்தல் என்று ஆரீபீன்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். எம்முடைய அறிவிற்கும் அதுவே சரியாய் தென்படுகிறது. ஆயினும் ஸலாத் என்ற சொல்லைக் கொண்டும் உலமாக்கல் துஆ, ஸுக்கூர், தக்பீர், ஸலாத்துடன் கையாளப்படும் தொழுகை என்று கூறுவதை நாம் மறுக்கவில்லை. அதாவது மனிதனுடைய உள்ளம் அல்லது அறிவு ஆழ்ந்த உறக்கத்தின்போது மட்டும்தான் உலகையும் அதன் சகல விஷயங்களையும் விட்டு ஒதுங்கியிருக்கிறது. இவ்வேளையில் அமைதி சாந்தி ஓரளவு கிட்டினாலும் அது நிரந்தர சாந்தியல்ல. ஆகவே மனம் ஒதுங்கியிருந்து சாந்தி பெறுவது முடியாததாய் இருக்கிறது. இதைத் தெரிந்துவைத்திருக்கும் இறைவன் பூரண சாந்தியை மனிதன் பெறவேண்டும் என்பதற்காகவே ஸலாத்தை ஈர்ந்தருளியிருக்கிறான். ஆகவே, மனம் சாந்தியடைய வேண்டுமானால் ஒதுங்கியிருப்பது மட்டும்

போதாது. மனம் எப்படி ஒதுங்கியிருந்தாலும் சாந்திதரும் இன்னொன்றோடு ஒன்றி நின்றே சாந்தியைப் பெற வேண்டும். இது அதன் இயற்கை சுபாவம். ஒதுங்கியிருத்தல் என்னும்போது ஒன்றை விட்டொதுங்கி இன்னொன்றோடு ஒன்றியிருத்தல் என்பதே அதன் சரியான அர்த்தம்.

மனம் அல்லது நப்ஸு அல்லது அறிவு எல்லாவற்றையும் விட்டு ஒதுங்கி இறைவனோடு ஒன்றி நில்லாதவரையிலும் தன்னிறைவோ சாந்தியோ பெறாது. ஆகவே இறைவனுடன் ஒன்றுவதே உஸ்லத்தாயும் சாந்தி ஏற்படும் சாதனமாயும் இருக்கிறது. இதில் அவாம்களின் பங்கு என்னவென்றால் ஒருநாளைக்கு ஐந்து வேளையாவது துன்யாவின் பராக்கைவிட்டு ஒதுங்கி இறைவனோடு ஒன்றிநிற்பதேயாகும். இதைத்தான் ஷரீயத்தில் ஸலாத் என்று கூறப்படுகிறது. இதற்கும் பல சட்டதிட்டங்கள் உண்டு. இவற்றை இமாம்கள் குர் ஆன் ஹதீஸுகள் இஜ்மாஉ, கியாஸ்களைக்கொண்டு எமக்கு வகுத்துத் தந்தி ருக்கிறார்கள். இமாம்களின் சட்டநுட்பங்களில் சிற்சில முரன்பாடு களிருப்பினும் நோக்கம் ஒன்றாகவே இருப்பதால் நாம் ஷரீயத் துடைய ஸலாத்தில் எந்த இமாமைப் பின்பற்றியும் செயற்படலாம். அதாவது நாம் இறைவனைக் காணாவிட்டாலும் அவன் எம்முன்நிலையில் இருப்பதாய் நம்பி அவனுடைய அருளைவேண்டி உரையாடுவது பிராத்தனை புரிவதே ஸலாத் என்ற தொழுகையின் நோக்கமாகும். இதில் இமாம்களிடையே அபிப்பிராய பேதம் இல்லை.

இது அல்லாஹ் வேறு; சிருட்டி வேறு என்ற துவித உணர்வோடுள்ள செயல்தான். ஆயினும் ஆரம்ப மனிதனுக்கு இது அவசியமாய் இருப்பதால் இதை இஸ்லாம் அனுமதிக்கிறது. இதற்குப் பல காரணங்களுண்டு. இங்கே விவரம் தர அவகாசமில்லை. ஆனால், இந்தத் தொழுகையின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாத பாமரமனிதன் இதனால் எவ்விதப் பயனையும் பெறமாட்டான். அதனால் தண்டனைகூடக் கிடைக்கலாம். இத்தொழுகையில் மிக அபூர்வ இரகஸியங்கள் இருப்பினும் பெரும்பாலும் இதில் பெறப்படுவது இக்லாஸ் என்னும் ஏகாக்கிரசித்தம்தான்.

இருதய அடக்கமும் அவயவ சாட்டாங்கமும் தவிர மற்றப்படி யாதொரு தொழுகை இல்லையென்று றசூல்(ஸல்) விளக்கு கிறார்கள். ஆனால் நம் மக்களில் பெரும்பாலார் பின்பற்றல் முறையில் செயல்படுகிறார்களேயன்றி உண்மையை உணர்ந்து





செயல்படுவதாய் தெரியவில்லை. இப்போது குர்ஆனிலுள்ள ஓர் ஆயத்தை நோட்டமிடுங்கள்.

*குர்ஆன்: 20:14*
*நிச்சயமாக நான்தான் அல்லாஹ். என்னைத்தவிர இலாஹு இல்லை. என்னையே நீர் வணங்கும். என்னைத் திக்ர்(தியானம்) செய்யும் பொருட்டுத் தொழுகையை (ஸலாத்தை)க் கடைப்பிடியும்.*

இவ்வாயத்தின் இறுதியில் "வஅகிமிஸ்ஸலாத்தலிதிக்ரி" என்று கூறுகிறான் இறைவன். இதில் குறிப்பிடப்பட்ட திக்ர் என்பது நான்கு வகையாய் இருக்கிறது. இதைக் குர்ஆன், ஹதீஸுகள் விளக்குகின்றன.

1ஆவது: திக்றுல் ஜல்லி என்று கூறப்படும். இது நாவினால் திக்று செய்வதைக் குறிப்பிடும், இதில் அல்லாஹ்வுடைய நாமங்களான கலிமாக்களும் துஆவும் இடம்பெறுகின்றன. இதுதான் சாதாரணமனிதன் கையாளும் தொழுகையில் இடம்பெறுகிற திக்று.

2ஆவது: திக்றுல் கைபி அல்லது திக்றுல் கல்பி என்று கூறப்படும். இது மனத்தினால், உள்ளத்தினால் திக்று செய்வதைக் குறிப்பிடும். இதற்குச் சாதாரண மனிதனின் லாஹிறான வெளித் தொழுகை இடம்தராது. ஏனென்றால் வெளித் தொழுகையின் சிற்சில சட்டங்களை மீறாமல் இதைக் கையாள முடியாது. திக்று என்றால் நினைத்தல் என்பதுதானே பொருள். நினைத்துக் கொண்டிருப்பவருக்கு வெளித் தொழுகையின் சில அம்ஸங்களைப் பூரணமாய் முடிக்க இவரால் முடியாது.

3ஆவது: திக்றுல் றூஹி என்று கூறப்படும். இது மனித அறிவு மாயும் நிலைமையில் றூகில் இருந்து பெறப்படும் திக்றாயிரு ப்பதால் இதற்கும் வெளிப்படைத்தொழுகை இடம் தரவேதராது.

4ஆவது: திக்றுல் ஸிர்ரி என்று கூறப்படும். இது இறை அறிவு மனிதனை ஆட்கொள்ளும் நிலைமை. திக்று என்பது ஞாபகப்படுத்துவது தானே! எதை ஞாபகம் செய்வது? மறந்துவிட்ட ஒன்றைத் தான் ஞாபகம் செய்வது. மறந்துவிட்டது எது? என்னுடைய பூர்வீக உண்மை, நான் யார் என்பது எனக்குத் தெரியாமல் மறந்திருப்பதை இப்போது ஞாபகப்படுத்துகிறேன். ஞாபகப்படுத்துவது அல்லது நினைப்பது எப்படி? இப்போது நினைவில் இருப்பதை மறந்துதான் மறந்ததை நினைவுக்குக் கொண்டுவரவேண்டும்? சர்வ

ஆலங்களையும் என் உடலையும் கூட மறக்காமல் என் ஆரம்ப நிலைமையை ஞாபகத்திற்குக் கொண்டுவரவே முடியாது. இதுதான் கலிமா லாஇலாஹ, என்று கூறுவதன் அர்த்தம். இலாஹுவான அகில உலகமும் நானும் இல்லை என்னும்போது பூரண மறதி ஏற்படுவதால் மறந்துபோன விஷயம் நினைவுக்கு வருகிறது. இந்த மறதியிலும் ஞாபகம் செய்வதிலும் இருக்கிற ஒருவர் எப்படி வெளித்தொழுகையைக் கையாளமுடியும்?

இப்போது பாருங்கள் வஅகிஸ்ஸலாத்தலிதிக்ரி என்ப திலுள்ள திக்று நான்கு வகையாய் அமைந்தது போல ஸலாத் என்ற தொழுகையும் நான்கு வகையாய் அமையாவிட்டால் ஆயத்துப் பிழையாய் முடியும். ஆகவே ஸலாத் என்ற சொல்லுக்கு ஒதுங்கியிருத்தல் என்று பொருள் கொள்ளாவிட்டால் ஆயத்து அறிவுக்கு விரோதமாகவே அமையும். ஆயத்து இறைவனின் பேச்சு. அது பிழையாகாது. நமக்கு இங்கு ஏற்படுகிற மயக்கம்தான் என்ன? ஸலாத் அல்லது தொழுகை என்றால் பள்ளிவாசலுக்குப் போய் எல்லோரும் செய்வது போல் செய்வதே தொழுகையென்றும் அதைவிட வேறொரு தொழுகை கிடையாதென்றும் நம்பியிருந்த மூடநம்பிக்கைதான் எம்மை மயக்கியது. ஆகவே நாம் கையாளும் வெளித்தொழுகை மட்டும்தான் தொழுகையென்று ஏமாறாமல் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு நோக்கும் போது தனித்திருந்து திக்று செய்கிற மனிதனும் தொழுது கொண்டுதான் இருக்கிறார் என்பது தெரியவரும்.

தனித்திருந்து முறைப்படி திக்று செய்பவர் தரீக்கத்தின் ஆரம்ப நிலையில் இருக்கிறார். சாதாரண தொழுகையாளி கடமையை நிறைவேற்றும் நோக்கையும் சுவர்க்கத்துள் நுழையும் நோக்கத்தையும் கொண்டு தொழுகிறார். தரீக்கத்வாதியோ சர்வ சுகபோக வாழ்வையும் உதறித்தள்ளி அவற்றை மறந்துவிட்டு இறைவனின் பேரன்பை அல்லது இறைவனையே, உன்னை எனக்குத்தா என்கிறார். தொழுகை மூமீன்களின் மிஹ்றாஜ் என்பது றசூலின் வாக்கு. வெளித்தொழுகை உயிரற்றதாயும் மாறலாம். தரீக்கத் மனிதரின் தொழுகை நிச்சயமாக உயிருடையதுதான். தரீக்கத் மனிதர் அல்லாஹ்வுடன் தானும்; தன்னுடன் அல்லாஹ்வும் இருப்பதாய் அறிவதால் அவரிடமிருந்து அல்லாஹ்வுக்கு மாறான எச் செயலும் இடம்பெறாது. சாதாரண மனிதன் இப்படியல்ல. தொழும்போதே கஞ்சாக்கடையின் ஞாபகம் அல்லது வட்டிப் பணத்தின் ஞாபகம் போன்றவற்றோடுதான் மிகக்கஷ்டப்பட்டுத் தொழுகையை நிறைவேற்றுகிறார். ஒரு 10 ரூபாய் வருமானம்





கிடைக்கும் என்றால் அதற்காக எவ்வித பொய்யும் கூறுவார். எவ்வித தந்திரோபாயமும் கையாளுவார். தரீக்கத்வாதியிடத்தில் இந்த மூடத்தனங்கள் தலைகாட்டமுடியாது.

நாம் முன்பு கூறிய வெளித் தொழுகையாளிகளை நோக்கித் தான் றசூல் (ஸல்) அவர்கள் இமாம் ஜமாஅத்தோடு வணங்குவது தனித்து வணங்குவதைவிட 26 மடங்கு சிறந்தது என்று கூறினார்கள். ஏனென்றால் இம்மக்களின் தொழுகை அங்கிகரிக்கப்படாவிடிலும் அங்கு கூடியிருக்கும் யாராவதொரு வருடைய பொருட்டைக் கொண்டேனும் அது அங்கிகரிக்கப்படலாம் என்பதற்காகத்தான். இந்த ஹதீஸைப்போல், தரீக்கத்துடைய மக்களை நோக்கி இமாம் ஜமாஅத்தாய் வணங்குவதைவிட தனித்து வணங்குவது இரண்டு மடங்கு சிறந்தது என்று கூறியுள்ளார்கள். இவ்விரு ஹதீஸுகளும் ஒன்றுக்கொன்று முரணானவை. ஆயினும் இவ்விரு ஹதீஸுகளும் உண்மையானவைதான். இவ்விரு ஹதீஸுகளிலும் தொழுகை என்பதை விளக்கப் பாவிக்கப்படும் சொல் ஸலாத் என்பதே. இவ்விரண்டு ஹதீஸுகளும் உண்மையானவை என்பது உசூலை ஆராய்ந்த அறிஞர்களுக்குத் தெரியுமேயன்றிப் பாமரமக்கள் அறியமாட்டார்கள்.

இந்தத் தரீக்கத் மனிதர் பள்ளிவாசலுக்குப் போகாதி ருப்பதால் சமூகமக்களிடையே பிரச்சனைக்குரியவராகிறார். இவருடைய நிலையை அறியாத அறிஞர்களும் பாமரமக்களும் இவரை வழிகெட்டவராய்க் கணிக்கிறார்கள். இவரையும் இவருடைய அறிவையும் அடக்கி ஒடுக்கித் தங்களைப்போல் மந்தைகளாக்கிக் கொள்ள முனைகிறார்கள். இது இறைவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால்தான் இவர்களைக் கலைத்துவிடவேண்டாம் என்று 1408 வருடங்களுக்கு முன்பே இறைவன் ஒரு கடினமான சட்டத்தைத் தந்திருக்கிறான். குர்ஆனைப் புரட்டிப்பாருங்கள்.

*குர்ஆன்: 6:52*
*தங்கள் இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பிக் காலையிலும் மாலையிலும் பிரார்த்தனை செய்வோரைக் கண்டால் நீர் வெருட்டி விடாதீர். அவர்களுடைய கணக்கில் இருந்து யாதொன்றும் உம்முடைய பொறுப்பாகாது. உம்முடைய கணக்கில் இருந்து யாதொன்றும் அவர்களுடைய பொறுப்பாகாது. ஆகவே நீர் அவர்களை வெருட்டினால் அக்கிரமக் காரர்களில் நீரும் ஒருவராகிவிடுவீர்.*

இதுதான் ஆயத்தின் கருத்து. இதைத் தப்ஸீர்களைக் கொண்டு பலமுறை வாசித்துப் பாருங்கள். இந்த ஆயத்துக்கு விளக்கம் தருகிற எத்திவைக்கும் கும்பல் '*அழுது தொழுது பிரார்த்தனை செய்வோரைக் கண்டால்*' என்று புரட்டுகிறார்கள். இவர்களின் கூற்று படுபொய்யேயாகும். இவ்வாயத்தில் ஸலாத், இபாதத், அமல் என்ற சொற்கள் பாவிக்கப்படவில்லை, துஆ என்ற சொல்தான் பாவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தக் கும்பலைப்போல் அறிவு தடுமாறியவர்களல்ல றசூலுல்லாஹ். தொழுகையைக் கற்பிக்கவந்த நபி தொழுவோரை விரட்டுவார்களா? தொழாமல் சும்மா இருந்து கொண்டு துஆச் செய்பவரைத்தானே வெருட்டுவார்கள். அப்படி வெருட்டவேண்டாம் என்றுதான் இறைவன் கூறுகிறான்.

ஆகவே, இம்மனிதர் வெளித்தொழுகையைத் தொழாத வராயும் பிரார்த்தனை செய்பவராயும்தான் இருந்திருப்பார். இவ்வித நிலையிலுள்ள மனிதரைத்தான் நாம் தரீக்கத்தின் ஆரம்ப நிலையில் உள்ளவர் என்கிறோம். இந்த விவரம் பிழையென்றிருந்தால் இறைவன் வெருட்டிவிடும்படியே கூறியிருப்பான். ஆகவே தொழாமல் இருந்து கொண்டு ஒருவர் திக்றில் ஈடுபாடு கொண்டால் அவர் வழி கெட்டவர் என்றும் அவரையோ அவர் பேச்சையோ எழுத்தையோ தடைசெய்ய வேண்டும் என்றும் பிரசாரம் செய்வோர் மூளை வளர்ச்சியுள்ள மனிதர்கள்தானா? மார்க்கவிளக்கம் தரக்கூடியவர்கள்தானா? குர்ஆன் ஹதீஸுகளைப்பற்றிய விளக்கம் அணுவுமில்லாத பாமர மக்களான இவர்கள்தானா இஸ்லாத்துக்கு உயிரளிப்பவர்கள்?

இவர்கள் உளறுவது வாய்வேதாந்தமே அன்றி இஸ்லாமிய வேதாந்தமல்ல. ஒரு ஸுபியைத் தட்டிக்கலைக்கப் பூரணகாமீலான றசூல் (ஸல்) அவர்களுக்கே அதிகாரமில்லையென்றால் மார்க்கம் என்ற சொல்லுக்கோ தீன் என்ற சொல்லுக்கோ பொருள் தெரியாத ஜாஹில்களுக்கு ஸுபிகளைக் கலைக்க காபீர் என்று கூற அதிகாரம் கொடுத்தது யார்? சில சமயம் நண்பர் இல்யாஸோ, அப்துல் வஹ்ஹாப் அவர்களோ தைமியா அவர்களோதான் இவ்வதிகாரத்தைக் கொடுத்திருக்க வேண்டும். மேலே நாம் காட்டிய ஆயத்தில் இன்னும் இரு விவரங்கள் தென்படுகின்றன.

1ஆவது: காலையிலும் மாலையிலும் என்றுதான் இறைவன் கூறுகிறான். பிரார்த்தித்துக் கொண்டிருப்போரைக் கண்டால் என்றுதான் கூறுகிறான். இதில் காலமும் மத இனமும் கணித்துக் கூறப்படவில்லை. அதாவது மு.்.மீன்களை எனறு கூறாமல் எல்லா மக்களையும் ஒன்று சேர்த்தே இறைவன் கூறுகிறான்.





2ஆவது: காலை மாலை என்றால் மொத்தம் ஒரு நாள், 24 மணித்தியாலமும் அமைகின்றது. காலையில் கொஞ்ச நேரமும் மாலையில் கொஞ்ச நேரமும்தான் என்றும் பொருள்படுகிறது. காலை என்பது குழந்தை, மாலை என்பது வயோதிபம் என்றும் பொருள்படுகிறது. காலை என்பது பகுத்தறிவின் ஆரம்பம் என்றும் மாலையென்றால் அறிவின் முதிர்ச்சி (அகில்) என்றும் பொருள் படுகிறது. இன்னும் எத்தனையோ பொருள்களைக் கூறலாம். ஆகவே இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பிப் பிரார்த்தனையில் ஈடுபடும் மக்கள் எச்சமூகத்தை எந்த மதத்தை எந்த நாட்டைக் கொண்டவர்களாயிருப்பினும் (இந்து, முஸ்லீம், எஹுது, நஸாறா போன்றோராயினும்) அவர்களைத் தட்டிக் கலைப்பது குர்ஆனுக்கும் ஹதீஸுகளுக்கும் மாறான அக்கிரமச் செயலாகும். இச்செயல்தான் வழிகேடு என்பது. குர்ஆனை இப்போது பாருங்கள்.

*குர்ஆன்: 33:36*
*அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் யாதொரு விஷயத்தைப் பற்றிக் கட்டளையிட்ட பின்னர் அவ்விஷயத்தில் வேறு அபிப்பிரா யப்படுவதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமை இல்லை. அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறுசெய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்.*

தொழுகையென்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளத மனிதனும் தொழாதவன் காபீர்தான் என்று கூறுகிறானே? எந்த ஆதாரத்தைக் கொண்டு கூறுகிறான்? அவனுக்குரிய ஒரேயொரு ஆதாரம் அவன் கல்பில் குடிகொண்டுள்ள மேலெண்ணம் அல்லது ஷிர்க் என்ற உளநோய்தான்.

*ஹதீஸ்*
*வீண் விதண்டாவாதம் புரிந்து தங்கள் நோக்கத்தைச் சாதித்துக் கொள்வதில் மிகக்கடினமான இத்தகையோரைக் குறித்தே மனிதர்களில் அல்லாஹ்வுக்கு மிக வெறுப்பானவர்கள் வீண் விதண்டாவாதம் புரிவதில் கடினமானோர் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: ஆயிஷா(றலி)*
*ஆதாரம்: புஹாரி, முஸ்லீம்.*

*குர்ஆன்: 4:103*
*நீங்கள் தொழுகையை முடித்துக் கொண்டால் உங்கள் நிலையிலும் இருப்பிலும் படுக்கையிலும் அல்லாஹ்வின் பெயரைக்கூறி திக்று செய்துகொண்டேயிருங்கள். நீங்கள் அச்சமற்றவர்களாகி விட்டால் தொழுங்கள். ஏனென்றால் நிச்சயமாகத் தொழுகையோ விசுவாசிகள் குறிப்பிட்ட நேரத்தில் செய்யவேண்டிய கடமையாகவே இருக்கிறது.*

இவைபோன்ற ஆயத்துகளை அடிப்படையாய்க் கொண்டு தான் புகஹாக்கள் தொழுகை முடிந்தபின் திக்று செய்வதை ஆமோதித்திருக்கிறார்கள். இது அவாம்களான ஆரம்பமுஃமீன் களைப் பொறுத்தவரையில் முற்றிலும் சரியானதுதான். ஆனால் இதில் பாவிக்கப்பட்டுள்ள வசனங்களை ஆராயும்போது இது தரீக்கத்வாதிகளைத் தடைப்படுத்தாது என்பது தெரிகிறது. இதை நூல் வடிவில் விளக்குவது பொருந்தாது. அப்படிச் செய்வது ஷரீயத்தை உடைப்பதாகவும் பாமரமக்களைப் படுகுழியில் தள்ளுவதாயும் முடியும். ஆகவே, சாதாரணமனிதன் தொழுகை முடிந்தபின்பு திக்றில் ஈடுபாடு கொள்வதே நல்லது. ஆயினும் திக்றை விடத் தொழுகை பெரியது என்று ஏமாறக் கூடாது. மேலும் இவ்வித ஆயத்துகள் தரீக்கத், ஹகீகத், மஹரிபத்வாதிகளை கட்டுப்படுத்தாது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை விவரித்து விளக்குவது எல்லோருக்கும் பொருந்தாது. ஆகவே இதை விவரிக்காமலே விட்டுவிடுகிறேன்.

விஷயத்திற்கு வருவோம். தனித்திருந்து திக்கிர் செய்வதும் முறாக்கபா செய்வதும் றசூல் (ஸல்) அவர்களது வாழ்வில் 35ஆவது வயதில் இருந்து ஆரம்பமான வேலையாகும். நபிப்பட்டம் கிடைக்கப்பெற்றும் சுமார் 11 வருடம் ஒன்பது மாதங்களின் பின்தான் தொழுகை தரப்பட்டிருக்கிறது. இவர்களது வாழ்வின் உண்மையான அனுபவத்தைக் கொண்டுதான் படிப்படியாய்க் கடக்கக்கூடிய வகையில் இஸ்லாத்தைத் தெளிவாய் விளக்கி வைத்திருக்கிறார்கள். தரீக்கத்துடைய மனிதர்கள் வழிகெட்டவர்களோ மார்க்க விளக்கம் தெரியாதவர்களோ காபிர்களோ அல்ல. இவர்களை வழிகெட்டவராய்க் கணிப்பவர் எவரோ அவரே வழிகெட்டவர் என்பது குர்ஆனின் தீர்ப்பு.





## (13)

கவாஸுகளான பகுத்தறிவு தொழிற்படும் மக்களுக்கு தெளிவு ஏற்பட வேண்டும் என்பதற்காக 'ஸலாத்' தொழுகை என்பதை வேறொரு கண்ணோட்டத்தில் நோக்குவோம். றசூல் (ஸல்) அவர்கள் மிஹ்றாஜின்போது பைத்துல் முகத்தீஸுக்குப் போய் நபிமார்கள் றசூல்மார்களுடன் 'ஸலாத்' என்ற தொழுகையை நடத்தியிருக்கிறார்கள். இந்த ஹதீஸ் யாவரும் அறிந்த ஒன்றுதான். அதன் பின்புதான் அங்கிருந்து வானுலகம் சென்று இறைவனுடன் உரையாடித் தொழுகை என்னும் 'ஸலாத்'தைப் பெற்றுத் தந்திருக் கிறார்கள். நாம் கூறுவது உண்மைதான் என்றால் றசூல் (ஸல்) அவர்கள் பைத்துல் முகத்தீஸ் பள்ளிவாசலில் தொழுத தொழுகை எது? நிச்சயமாக நாம் அறிந்திருக்கிற வெளித் தொழுகையாக இருக்கமுடியாது ஏன்? வானுலகம் போகுமுன்பும் தொழுதிருக் கின்றார்களே! வெளித்தொழுகையை வானுலகம் போய்வந்த பிறகுதானே செய்திருக்கிறார்கள்.

அடுத்து மிஹ்றாஜின்போது இறைவனைத் தரிசிக்க முன்பு இறைவன் 'ஸலாத்'தில் இருக்கிறான் என்று அபூபக்கர் (ஸித்) அவர்களுடைய தொனியைப் போன்ற ஒரு தொனியைக் கேட்டதாகவும் நபிஅவர்கள் நமக்குமுன் அபூபக்கர் வந்துவிட்டாரா என்று நினைத்ததாகவும் நாம் ஹதீஸ்கள் வாயிலாய் ஏறக்குறைய எல்லோருமே அறிந்திருக்கிறோம். இவ்வித ஹதீஸ்களை வியாக்கியானம்தந்த உலமாக்களின் பேச்சும் நாம் அவ்வேளையில் கூறிய சுபஹானல்லா என்ற வார்த்தையும் இன்றும் நம் நினைவில் இருக்கிறது. ஆனால் அந்த உலமாக்களிடம் எதிர்க்கேள்வி கேட்கும் ஆற்றல் எம்மிடம் இல்லாதிருந்திருந்தது.

இப்போதாவது கேட்போம். மேலே காட்டிய விஷயங்களில் குர்ஆன் ஹதீஸுகளில் தொழுகை என்பதை குறிப்பிடப்பட்ட சொல் (ஸலாத்) என்பது தானே! அப்படியானால் இறைவனும் நம்மைபோல்தான் நிற்புத்தரிப்பு றுகூஉ ஸுஜுது போன்ற நிலை களைக் கொண்ட தொழுகையில் இருந்திருப்பானா? அப்படியானால் நமக்கும் அவனுக்கும் வேறுபாடுதான் என்ன? ஆகவே ஸலாத் என்ற சொல்லை எந்த நோக்கோடு எவ்வெவ்விடத்தில் எப்படி எப்படி விளக்கம் தரப்பட்டிருக்கிறது என்பதை நாம் கண்டறியாமல் விதண்டாவாதம் செய்வதால் குர்ஆன் ஹதீஸ்கள் என்ற இறுகிய சுரியில் காலை மாட்டிக்கொள்வோம்.

மக்களில் பெரும்பாலார் நினைப்பதுபோன்ற ஒரு சாதாரண நூல்லல்ல குர்ஆன். அது இறைவனின் கலாம். ஹதிஸூம் அப்படித்தான். அது நம்மைப்போன்ற ஒரு மனிதரின் பேச்சல்ல. குர்ஆனின் விளக்கம் அதுதான். அது கமாலுடைய ஒரு றசூலின் பேச்சு. இம்மையில் எவன் குருடனோ அவன் ஆகிறாவிலும் குருடனே.

பாமரமக்கள் கையாளும் தொழுகை மட்டும்தான் ஸலாத் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்ட தொழுகை என்று பொருள் கொள்ளக்கூடாது. திக்ரு என்ற சொல் எப்படி நாலு வகையாய்த் தரப்பட்டதோ அந்தத் திக்ருகளின் வகைக்கேற்ப தொழுகை எனும் ஸலாத்தும் நான்குவகையாய் தரப்பட்டிருக்கிறது அப்படி இல்லை யென்றால் 'திக்ருக்காகத் தொழு' என்ற பொருள் தருகிற 'வஅகிமிஸ்ஸலாதலிதிக்றி' என்ற 20:14ஆம் இலக்கமுடைய குர்ஆன் ஆயத்துப் பொய் என்றாகும். குர்ஆன் கூறுவதே உண்மை யென்றால் நாம் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் பொருள். குர்ஆனில் பிழை காண்பவன் இன்ஸானல்ல. அவன் ஷைத்தானாகவோ அறிவில்லாத மிருகமாகவோதான் இருப்பான். வேறொரு கண்ணோட்டத்தில் குர்ஆனை மறுப்பவன் எவனோ அவனை முஷ்ரிக் என்றே கூறலாம். இப்லீஸ் முஷ்ரிக்கல்ல அவன் காபீர்தான். குர்ஆனில் ஆதாரமுண்டு.

ஸலாத் என்ற சொல்லால் உணர்த்தப்படுகிற தொழுகை நாம் கையாளும் தொழுகை மட்டுமே என்று ஒரு சாரார் கூறுவது வெறும் குருட்டு நம்மிக்கையேயன்றி ஆதாரபூர்வமானதல்ல. இது எமது சிறுவயதில் ஊட்டப்பட்ட மருட்சியாகும்.

*குர்ஆன்: 10:39*
*என்கினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் தாவீல் (ஆதாரம்) அவர்களுக்குக் கிடைக்காததுமான சங்கதியைப் பொய்யென்று அவர்கள் கூறுவார்கள்.*

வணங்குவதற்காகவே படைத்தான் என்றால் நோன்பு ஸகாத் ஹஜ்ஜு போன்றவை சுன்னத் என்றும் தொழுகை மட்டுமே பர்லு என்றும் ஆகும். எதற்காகப் படைக்கப்பட்டானோ அதைச் செய்வது தான் அவனுடைய பர்லு. மற்றவையெல்லாம் பர்லல்ல என்று கூற நேரிடும். இப்போது பாருங்கள் ஸலாத், சௌமு, ஸக்காத், ஹஜ்ஜு ஆகிய இக்கடமைகள்யாவும் பர்லானவைதான்.





இவற்றில் ஒன்றை மட்டும் அதாவது ஸலாத்தை மட்டும் வணக்கம் என்று கூறமுடியாது. எல்லாமே வணக்கம்தான். நிரந்தர நோயாளி நோன்பு பிடிக்கமுடியாது. இவருக்கு வேறு விதிவிலக்குகள் உண்டு. பணவசதியற்றவர் ஸகாத் கொடுக்கமுடியாது. அவர்பெயரில் அது பர்லல்ல. வசதியற்றவர் ஹஜ்ஜு செய்வது அவர் பெயரில் பர்லல்ல. அப்படியானால் இவற்றோடொத்த தொழுகைமட்டும் எல்லார் பேரிலும் என்று கூறுவது எப்படிச் சரியாகும்? விஷயம் அப்படியல்ல. மூ.:.மீன்கள் பேரில் பர்லு என்பதில் சில சட்ட நுட்பங்கள் உண்டு. இந்த விவரம் இங்கு நமக்கு அவசியமல்ல. அவ்விவரம் பின்னால் இடம்பெறுகிறது.

எல்லாக் கடமைகளும் எல்லார் பேரிலும் பர்லு என்பது உண்மை. ஆயினும் இதில் காலம், இடம், வயது, அறிவு, நோய் போன்ற மற்றும் காரியங்களையும் மனிதனின் பூரண உண்மை யையும் அறிந்திருக்கிற இறைவன் மனிதனின் சௌகரியத்துக்காக நான்கு படித்தரங்களை வகுத்து அவை ஒவ்வொரு படித்தரத்துக்கு முரிய பூரண விளக்கத்தையும் தந்திருக்கிறான். நீங்கள் படிப்படியாய் கடந்து செல்ல வேண்டும் என்று கூறுகிறான். றசூலைக் கொண்டு விளக்கிக் காட்டிஇருக்கிறான். ஒரு நோன்பாளி நோன்பை முறித்துக் கொண்டால் அல்லது நோன்பு நோற்காது இருந்தால் அவருக்கு ஒரு விதிவிலக்கு மார்க்கத்தில் உண்டு. அதன் விதியை (தண்ட னையை) அவர் ஏற்றுக்கொண்டால் அவரின் நோன்பு அங்கீக ரிக்கப்பட்டது என்பது பிக்ஹுச்சட்டம். ஆனால் நோன்பு விஷயத்தில் இவ்வுண்மையை ஏற்றுக்கொண்ட நாம் தொழுகை விஷயத்தில் முற்றும் முரணாய் நின்றுகொள்ளுகிறோம். காரணம் என்ன தெரியுமா? தொழுகையைக் கேடயமாகக் கொண்டே ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு கூட்டம் நம்மக்களை மேய்த்திருக் கிறார்கள். அவர்களின் விளக்கங்கள் எங்களுடைய பகுத்தறியும் தன்மையை பறித்துவிட்டிருக்கின்றன.

முன்பெல்லாம் நூல் எழுதும்போது இதைப்படிப்பவன் மூ.:. மீன்; கேட்பவன் மூ.:.மீன்; படியாதவன் காபீர்; கேளாதவன் காபிர்; என்று சமூக மக்களுக்கு ஒரு சாரார் விலங்கிட்டார்கள். அதன் பின் ஆங்கில பாஷை கற்பது ஹறாம் என்று ஒரு கூட்டம் விலங்கிட்டது. இவர்களுடைய பத்வாக்களை மீறிய ஒரு சில மக்கள்தான் இன்று சிந்தனையாளராயும் ஆங்கிலம் தெரிந்தவர் களாயும் மாறினாகள். இன்று ஒரு கூட்டம் தொழாதவன் காபீர் என்றும் காபீர் பேச்சைக் கேளாதே என்றும் இஸ்லாத்தில் கேள்வி கேட்பது ஹறாம் என்றும் பத்வாக் கொடுத்து மக்களை மிருகங்க ளாய் மாற்றிக் கொண்டிருக்கிறது; நாம் மனிதரானால் முதலில்

பகுத்தறிவுக்கு இடமளிக்க வேண்டும். குர்ஆன், வீண் சந்தேகம் ஒரு கரைக்கும் இழுத்துச் செல்லாது என்று கூறுவது உண்மை. அப்படியானால் நியாயமான சந்தேகம் ஏதோ ஒரு கரைக்கு இழுத்துச்செல்லும் என்பது ஆயத்தின் அந்தரங்கம்.

அறிவு என்பது ஈமான்தாரிகளின் தவறிப்போன சொத்தாய் இருப்பதால் அதை எங்கே கண்டாலும் அவர்கள் அடையக் கடமைப்பட்டவர்கள் என்றும் அறிவு என்ற பெட்டகத்தின் திறவு கோல் நியாயமான கேள்வியாய் இருக்கும் என்றும் றசூல் (ஸல்) அவர்கள் வாயிலாய்க் கூறுகிறார்கள். மனித அறிவை வளரவிடாமல் தடைசெய்வது பல கோடாகோடி மக்களைக் கொலைசெய்வதை விட மோசமான செயல் என்பதை நாம் உணரவேண்டும்.

(14)

இப்போது நாம் ஆரம்பத்தில் எடுத்துக்கொண்ட *"வமாக லக்கத்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லாலிய:.புதூன்"*, *"வ:.புதுறப்பக்க ஹத்தா எ:.தியகல் எகீன்"* ஆகிய 51:56ஆம், 15:99ஆம் ஆயத்துகள் இரண்டிலும் பாவிக்கப்படுகின்ற இபாதத் என்ற சொல் வணக்கம் என்ற பொருள் மட்டும் கொண்டதல்ல என்ற உண்மையையும் ஸலாத் என்பது நான்குவகை என்ற உண்மையையும் நீங்கள் உணர்ந்து கொண்டால் குர்ஆன் கூறுவது உண்மை என்பதை ஒப்புக்கொள்ள உங்களால் முடியும். பகுத்தறிவுக்குக் குர்ஆன் மாறுபடாது என்பதை மறந்து விடாதீர்கள். மேலே மிகச்சுருக்கமாய்க் கூறிவந்த விஷயங்களில் ஷரியத், தரீக்கத் ஆகிய இரண்டை மட்டுமே நான் விளக்கினேன். இப்போது இவ்வளவே உங்களுக்குப் போதுமானதாகும். ஹகீகத் மஹரீபத்துகளின் விஷயங்களை நீங்கள் அனுபவத்தில் பெறுங்கள்.

இப்போது நான் முன்பு காட்டாத சில நுட்பங்களை விளக்கி வைக்க நினைக்கிறேன். சிந்தனையைச் சிதறவிடாமல் செவி தாழ்த்துங்கள்.

படைத்ததில் முதலாவது படைப்பு என் நூறே. அதாவது என் ஒளியே என்று றசூலுல்லாஹ் கூறியிருக்கிறார்கள். குர்ஆன் ஹதீஸ் முதலாம் ஐந்து பிரமாணங்களின்படியும் கலிமாவை நோக்கினால் அல்லாஹ்வைத் தவிர ஒன்றுமே இல்லை என்பதைத்தான் அக்கலிமா வற்புறுத்துகிறது. இதன் சரியான உண்மையை நான் இறை உதவிகொண்டு சரியான ஆதாரங்க





ளோடு எமது 'ஈமானின் உண்மையை நீ அறிவாயா?' என்ற நூலில் விளக்கிக் காட்டியிருக்கிறேன். அக்கலிமாவுக்கு நான் கொடுத்த விரிவுரை சரியென்றால் நாம் இப்போது கூறிய ஹதீஸில் ஒரு பெரிய மயக்கம் ஏற்படுகிறது.

அதாவது அல்லாஹ்வை அன்றி ஒன்றுமில்லையென்றால் யாரை யார் படைப்பது? படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று வேலைகளையும் இறைவன் செய்கிறான் என்றால் நம்ப முடியவில்லை. ஏன்? அவன்தான் ஸமதாய் இருக்கிறானே! தேவையற்றவன் செயலில் ஈடுபடவேண்டியதில்லையே! '*இன்னமல் அஹ்மாலு பின்னிய்யாத்தி*' என்று நமக்கு விளக்குகிறார்கள் றசூல் (ஸல்) அவர்கள். செயல்கள் யாவும் நோக்கத்தைப் பொருத்தது என்பதே அதன் அர்த்தம். நோக்கமின்றி செயல் வெளியாகாது என்றால் இறைவனுக்கு ஏதோ ஒரு நோக்கம் இருக்க வேண்டும். நோக்கமுடையவன் தேவையுடையவன். எம்மைப்போன்ற மனிதன் தேவையற்ற சமதாய் இருக்க முடியாது. தேவையுடையவன் சமதாயும் சமது தேவையுடையவனாயும் இருக்க முடியாதல்லவா? ஆகவே படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை அதற்கான சொற்பிரயோகங்கள் எம்மை மயக்கத்தில் ஆழ்த்துகின்றன. குர்ஆனில் நிறைய இந்த மூன்று விஷயங்களும் இடம்பெறுகின்றன.

தன்னில் இருந்தே படைத்தான் என்றால் அதையும் ஏற்க முடியாது? ஏன்? தன்னிலிருந்து படையுண்டவை வெளியான பிறகு அவன் குறைவுள்ளவனாய் நிறைகுறைந்தவனாய் மெலிந்தவனாய் மாறுவான். படைத்தல் தொழிலைச் செய்யவேண்டிய தொழிலாளி யாகவும் மாறிவிடுவான். சமது என்பவருக்கு இது பொருந்தாதே.

மெய்தான், வேறு ஓரிடத்தில் வேறொருவர் வைத்திருந்த மண், தண்ணீர் போன்றவற்றை எடுத்துச் சிருட்டிகளை உருவாக் கினான் என்றால் இதுவும் ஒத்துவராது. ஏன்? அவனையன்றி ஒன்றுமே கிடையாதென்றல்லவா குர்ஆன் மடக்கிமடக்கிக் கூறுகிறது. அப்படி வேறொருவர் அவனுடன் இருந்திருந்தால் அவர்களுக் கிடையில் யுத்தமே நடந்திருக்கும். இதையும் குர்ஆன் விளக்கம் தருகிறது.

சீ.சீ. இதெல்லாம் பிழை, இல்லாமையில் இருந்து அவன் தன் வல்லமையால் வெளியாக்கினான் என்றால் இதையும் பகுத்தறிவு ஏற்காது. ஏன்? இல்லாதது வரவே வராதென்றும் இல்லாதது என்றும் இல்லாததேதான் என்று அதே குர்ஆனும்

ஹதீஸ்களும் விளக்கம் தருகின்றன. இந்த அடிப்படையில் எவ்வளவோ தத்துவவிளக்கங்களை அறிஞர்கள் தந்திருக்கிறார்கள். இல்லாதது இல்லாதது தான். அது எப்போதும் இருப்பதாகாது. ஆகவே படைத்தல் என்றால் என்ன? என்பதை அறியாத எம் அறிவு திணறுகிறதல்லவா? இதை நாம் விளங்கியறிய வேண்டும். இல்லையானால் அல்லாஹ்வையும் றசூலையும் ஈமான் கொள்ள முடியாது.

இந்தப் படைத்தல் காத்தல் அழித்தல் என்பவை நமது பரம்பரை பரம்பரையாய்ப் பாவிக்கப்பட்டு வந்திருப்பதால் இச் சொற்களில் நாம் கவனம் செலுத்தவில்லை. எம் அனுபவத்தில் படைத்தல் என்றால் ஒன்றை இன்னொன்றாக மாற்றுவது என்று கண்டிருக்கிறோம். களிமண்ணைப் பானையாய்ப் படைப்பது போல. அழித்தல் என்றால் பானையை உடைத்து மண்ணாக்குவது போல. காத்தல் என்றால் பானையைப் பானையாய் வைத்துக் காப்பதுபோல. இதுதான் மனிதர்களின் சொந்த அனுபவம். இதைக் கடக்கும் அறிவு பெரும்பாலாரில் இல்லாதருப்பதால் நான் இதே அனுபவத்தைக் கொண்டு விளக்கம் தரவிருப்புகிறேன். இல்லாவிட்டால் புரிய முடியாது.

உண்மையை நோக்கினால் இந்தப் படைத்தல் அழித்தல் காத்தல் என்ற மூன்று விஷயங்களும் சொல்லினால் பேதப்பட்டாலும் கருத்தினால் ஒன்றாகவே அமைந்திருக்கின்றன. இதை விளக்க ஓர் உதாரணத்தை முதலில் எடுத்துக்கொள்வோம். சிகரெட்டை நாம் புகைக்கும் போது அது படிப்படியாய் எரிந்து முடிவில் சாம்பராகிவிடுகிறது. முன்பு சிகரட்டாய் இருந்தது இப்போது சாம்பராய் மாறிஇருக்கிறது. சிகரட்டின் இறப்புச் சாம்பலின் பிறப்பாய் இருக்கின்றது. சிகரட் அழியாவிட்டால் சாம்பல் பிறக்க (படைக்கப்பட) முடியாதிருக்கிறது. ஆகவே, அழித்தலே படைத்தலும்; படைத்தலே அழித்தலுமாய் அமைகின்றன. காத்தல் என்பதும் இதே பொருளை யொட்டித்தான் இருக்கிறது. ஒரு பொருள் அழிந்து இன்னொரு பொருளாய் மாறும் வரையிலும் இருக்கும் நிலைமையைக் காத்தல் என்கிறோம். ஆகவே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற சொற்கள் ஒரே விஷயத்தில் மூன்று நிலைமைகளை விளக்கும் வெவ்வேறு சொற்களாய் அமைந்திருக்கின்றன. ஆயினும் இம்மூன்று சொற்களாலும் விளக்கப்படும் விஷயம் ஒன்றே ஆகும்.

ஆனால் றசூல் (ஸல்) அவர்களால் தரப்பட்ட ஹதீஸுகளிலும் குர்ஆனில் தரப்பட்ட விதிகளின் படியுமுள்ள படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை இப்படியல்ல. ஹதீஸிலும் குர்ஆனிலும்





படைத்தலுக்காகப் பாவிக்கப்படும் சொல் *‘காலிக்’* என்பதாகும். நாம் ஆரம்பத்தில் எடுத்துக்கொண்ட *‘வமாகலக்கத்துல்ஜின்னவல் இன்ஸ இல்லாலிய.்.பதூன்’* என்ற ஆயத்தில் இடம்பெறுகிற படைத்தான் என்பதில் உள்ளதும் இந்த *‘காலிக்’* என்ற சொல் தான். இந்த காலிக் என்ற சொல்லுக்குப் படைப்பவன் படைத்தல் என்று நாம் தமிழில் பொருள் கொண்டாலும் ஒன்று இன்னொன்றாய் மாறுவது என்பதும், இல்லாததை உருவாக்கினான் என்பதும் பொருளல்ல. ஆகவே, இன்ஸையும் ஜின்னையும் நூறையும் படைத்தான் என்று கூறும்போது சிகரட்டில் நாம் காட்டிய உதாரணம் போல ஒன்றை இன்னொன்றாய் மாற்றினான் என்று பொருள் கொள்ளக்கூடாது. அப்படிப் பொருள் கொண்டால் இந்துக்களின் கொள்கையை உறுதிப்படுத்துமே அன்றி இஸ்லாத்தின் கொள்கையை நிலைப்படுத்தாது. இது சுத்தப்பிசகாய் முடியும்.

மனிதனுடைய வஹ்மு என்ற பேதபுத்தியில் இந்துக்களின் மறுபிறவிக் கொள்கை உண்மைபோல் தென்பட்டாலும் பகுத்தறிவு இடத்தில் அது பிழையானதுதான். இந்துக்களின் கொள்கை பௌதீக உலகை மட்டும் அடிப்படையாய்க் கொண்ட இடைச்செருகலாகும். இந்துக்களின் அடிப்படையான ரிக், யஜுர், சாம, அதர்வணம் ஆகிய நான்கு மதங்களிலும் மறுபிறவி மறுக்கப்பட்டே இருக்கிறது. இதற்கு ஆதாரம் தரமுடியும்.

இஸ்லாத்தின் கொள்கையோ எல்லையில்லாத ஞானப் பிரகாசமான உண்மையாகவும் பகுத்தறிவு பூரணமாய் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. ஆகவே கறுப்புக் கண்ணாடி யைக் கல்பில் போட்டுக்கொண்டு குர்ஆன் ஹதீஸுகளை நெருங்கக் கூடாது என்று நான் அறிவுரை கூறுகிறேன்.

இப்போது றசூலால் கூறப்பட்ட ஹதீஸிலுள்ள படைத்தல் எப்படி என்பதைப் பார்ப்போம். படைத்தல் என்று மூன்றுவகையாய் இருக்கிறது. இதில் இரண்டு இஸ்லாத்திற்கு விரோதமாய் இருப்ப தாலும் அதை விளக்க நமக்கு அவகாசம் இல்லாதிருப்பதாலும் அவை இரண்டையும் நீக்கிவிட்டு அவசியமானதை இஸ்லாம் ஆமோதிப்பதை மட்டும் நோக்குவோம். இஸ்லாத்தில் கூறப்படும் படைத்தல் சிருஷ்டித்தன்மைக்கு நேர் முரணானது. காரணகாரியப் பொருத்தம் என்ற இயற்கை நியதியைக் கடந்ததாய் இருக்கிறது. காரண காரியத்தைக் கடந்த ஒன்று பகுத்தறிவில் அமையாது. ஆகவே, அகில் என்ற விசேட அறிவைக் கொண்டேயன்றி அறியவும் முடியாது. ஆகையால் பகுத்தறிவை அகிலாக நாம் ஆக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதுவும் எம்மால் முடியாத காரியம்தான்.

ஆயினும் காருண்ய மூர்த்தியான அல்லாஹ் நமக்கு இதை விளக்கித்தரக்கூடிய ஓர் ஆயுதத்தை எமக்கு அமானிதமாக நல்கி இருக்கிறான். அதுதான் கலிமத்துத் தையிபா என்பது. இந்த ஆயுதம் விளங்கிக் கொள்பவரின் அறிவு மனோ உறுதிகளுக்கேற்ப உடடியாகவோ தாமதித்தோ வேலை செய்யலாம். ஆகையால்தான் இஸ்லாம் கலிமத்துத்தையிபாவைக் கொண்டு ஆரம்பமாகிறது. இதில் தேர்ச்சி பெறாதவன் இன்ஸான் என்றோ கலீபா என்றோ பெயர் பெறமுடியாது. ஆகையால்தான் வாள் கொண்டு கலிமாவைப் புகுத்தவேண்டிய நிலைமை றசூல் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டது. ஆகவே படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை எவை? என்ற விவரத்தைக் கலிமாவைக்கொண்டே நோக்குவோம்.

கலிமா உணர்த்தும் உண்மை என்ன? அல்லாஹ்வை அன்றி ஒன்றும் கிடையாது என்பதே அதன் சாரம். அல்லாஹ்வை அன்றி ஒன்றுமில்லை என்றால் இருப்பது அவனே என்று பெறப்படுகிறது. அந்த அல்லாஹ் என்பதை நாம் விளங்கிக் கொள்வதற்காகப் பொருள் என்றே வைத்துக் கொள்வோம். இப்பொருளையன்றி அதனுடன் வேறு பொருள் இல்லாதிருப்பதால் அப்பொருள் எப்போதுமே இடைத்தாக்கத்துக்குள்ளாகாது. மாறுபடாது, அழியாது. அதன் சொந்த நிலைமையை விட்டும் மாற்றமடையாது ஏன்? அப்பொருளை அழிக்க, மாற்ற, கூட்டக் குறைக்க, இடைத்தாக்க மேற்படுவதற்கு வேறு பொருள் எதுவுமே அதனுடன் இல்லையே. காலம் இடம் கூடக் கிடையாதே. ஆகவே அது இருந்தபடியேதான் இருக்கும். இது அறிவு பெற்றுக்கொண்ட விஷயம்தானே.

இப்படி நிலையாய் உள்ள ஒரு பொருளில் இயல்பாய் அமைந்துள்ள அதன் குணாகுணங்கள் (அஸ்மா, ஸிபத்து) அப்பொருளை விட்டு நீங்கவும் வெளிப்படவும் முடியாது. நீக்குவதற்கு வேறுபொருள் அதனுடன் இல்லை. வெளிப்படுவதற்கு அதனுடன் இடம் இருந்ததில்லை. முன்பு வெளிப்படாமல் இருந்தது பிறகு வெளியாவதற்கு, அதனுடன் காலம் என்ற ஒரு தனிப்பொருளும் கிடையாது. ஆகவே நாம் குறிப்பிட்ட அப்பொருளுக்குப் பெயரும் கிடையாது. ஏன்? பெயர் கூறுவதற்கு அதனுடன் எதுவும் இல்லை. நிறம் தோற்றம் போன்ற எல்கைகளோ மட்டுத் திட்டங்களோ கிடையாது. சிருட்டியாய் உள்ளது எதுவும் இப்பொருளுடன் தனி (உஜூது)ப் பொருட்களாய் இல்லாமல் இருப்பதால் சிருட்டி அறிவில் இப்பொருள் அமையவே அமையாது. இப்படி ஒன்றுண்டு என்பதைப் பகுத்தறிவால் அனுமானிக்கலாமே அன்றி உண்மையை அறியமுடியாது.





இதைச் சுருக்கமாய்க் கூறுவதானால் இப்பொருள் காபிலியத் தற்றதாய் இருக்கிறது. அதாவது எதையும் ஏற்றுக்கொள்ளும் தன்மை அற்றதாய் இருக்கிறது. ஏன்? அதற்கு எதையும் கொடுப்பதற்கு வேறு ஆள் இல்லை. எதையும் ஏற்க வேண்டிய அவசியம் அதிற்கில்லை. அது ஸமது தேவையற்றது, நிரப்பமானது. குல் ஹுவல்லாஹு அஹது என்ற சூறாவை நோக்கிப் பாருங்கள். அல்லாஹ் என்பது அஹதாய் இருக்கிறது. அஹது என்றால் ஒன்று என்பது பொருளல்ல. இலக்கங்களைக் கடந்து நிற்பதை ஒன்று என்ற இலக்கத்தில் எப்படிக் கட்டுப்படுத்துவது? நாம் விளங்கிக் கொள்வதற்காக வேண்டுமானால் ஒன்று என்று கூறுவோம். ஆனால் அஹது என்றால் ஏகமானது. அதையன்றி வேறில்லாதது என்பதே. அதை நாம் இரண்டில்லாத ஒன்று என்று கூறுவோம். இந்த அல்லாஹ் ஸமது தேவையற்றவன். இவன் பெறவுமில்லை பெறப்படவுமில்லை. இந்த ஸூறாவில் அல்லாஹ் அஹது, ஸமது என்ற மூன்று திருநாமங்கள் பாவிக்கப்படுகின்றன. நாமத்தை ஏற்றுக்கொள்ளாதிருந்த ஒன்றுக்கு இந்த நாமங்கள் எப்படி ஏற்பட்டன? ஏன் ஏற்பட்டன?

சிருட்டியின் அறிவில் அமையாமல் இருந்ததை அமைக்கும் நோக்கமாகவே இவை தரப்பட்டிருக்கின்றன. அப்படியானால் இந்த நாமங்கள் வெறும் கற்பனை நாமங்கள்தானா? இல்லை, கற்பனையான நாமங்களல்ல. இந்த நாமங்களின் வெளிப்படையான லாஹிறை நோக்கினால் அறிவில் அமையும். இந்த நாமங்களுக்கு அகராதிகள் தரும் வெளிப்பொருட்கள் மட்டும்தான் உண்டு என்று கொள்ள முடியாது. அப்படி எடுத்துக் கொண்டால் இந்து மதக்கொள்கைதான் நிலைப்படும். இந்த உண்மையை மனதில் இருத்திக்கொள்ளுங்கள்.

இந்த நாமங்களின் துணை கொண்டு நோக்கும்போது நாம் குறிப்பிட்ட மூலப்பொருள் அறிவில் அமையக் கூடியதாய் ஒரு பகுதியையும் அறிவில் அமையாத ஒரு பகுதியையும் தன்னுள் பொதிந்ததாய் இருக்கிறது. அறிவில் அமையும் பகுதி லாஹிர் என்றும், அமையாத பகுதி பாதின் என்றும் கூறப்படும். இவ்விரு நிலைமையையும் தன்னுள் கொண்டு நிற்கும் நிலையை அமா என்று கூறப்படும். அமா என்றால் இருள், மூடல் என்றெல்லாம் பொருள் கூறுவது பாமர மக்களை நோக்கியதாகும். அமா என்பதற்கு வேறு அர்த்தம் உண்டு. நம் அறிவு விளங்கிக்கொண்ட பகுதியை றப்பு, றஹ்மான் என்ற சொற்களாலும் விளங்காத பகுதியை குன்ஹு, தாத்து, வுஜூது என்ற சொற்களாலும்

அறிந்து கொள்கிறோம். விளங்கிய, விளங்காத இரு பகுதிகளையும் ஒன்றிணைத்தே அல்லாஹ் என்ற நாமம் கூறப்பட்டிருக்கிறது. இது குர்ஆனில் சிற்சில இடங்களில் *"இஸ்தியாரா"* இரவலாய்ப் பாவிக்கப் பட்டிருக்கிறது. குர்ஆனிலுமுள்ள 57:3ஆம் ஆயத்தான *"ஹுவல் அவ்வலு"* என்ற ஆயத்து ஒன்றே இதற்கு ஆதாரத்துக்குப் போதுமானதாகும்.

*குர்ஆன்: 6:103*
*எவருடைய பார்வையும் அவனை அடையாது.*

மறைந்த பகுதியான தாத்தைப் பார்க்க முடியாது, அறிய முடியாது என்பதே ஆயத்தின் பொருள்.

விளங்கும் பகுதியின் வெளிப்படை முஆமலாத்துடைய இல்மென்றும் உட்படை முகாஸபாத் என்றும் பெயர் பெறும். நம்மிடையே உள்ள உலமாக்கள் கற்றுக்கொள்வது வெளிப்படை என்ற முஆமலாத்தைத்தான்; இது இல்முல்எகீன், ஐனுல்எகீனோடு நின்று விடும். உட்படையான முகாஸபாத் பாதினுடைய உலமாக்கள் கற்றுக்கொண்டது. இதுதான் ஞானம் என்பது. இது ஹக்குல்எகீனைச் சேர்ந்தது. இவ்விரண்டு பகுதியுடன் விளங்காத பகுதியையும் அனுபவத்தில் பெறுவதே கமாலுல்எகீன் என்பது.

இங்கே நான் குறிப்பிட்ட ஹக்குல் எகீன் ஏற்படும்போது மனிதன் இன்ஸான் என்ற பெயரைப் பூரணமாய்ப் பெறுகிறான். கமாலுல் எகீன் நிரப்பமானால் கலீபாவாக இருக்கிறான். இன்ஸான் என்றால் இறைவனோடு உரையாடுபவன் என்பது பொருள், கலீபா என்றால் பிரதிநிதி என்பது பொருள். இவ்விரு தன்மைகளையும் எவர் அடைந்து விட்டாரோ அவர் இறைவனோடு ஒன்றிவிட்டார் என்கிறோம். இருபொருள் ஒன்றாய்ச் சேர்ந்துவிட்டது என்பது கருத்தல்ல. தன்னறிவில் ஏற்படுத்தப்பட்டிருந்த மருட்சி நீங்கி எதார்த்த நிலையை உணர்ந்து கொண்டார் என்பதே பொருள். இந்த எதார்த்த நிலையைப் பெறும் வரையிலும் செய்யவேண்டியவை எவையோ அவற்றைச் செய்வதற்கு வழிகாட்டுவதே தீன் என்பதும், மார்க்கம் என்பதும்.

*குர்ஆன்: 45:18*
*(நபியே) மார்க்கத்தின் ஷரியத் என்னும் வழியில்தான் உம்மை ஆக்கியிருக்கிறோம். அதனையே நீர் பின்பற்றி நடப்பீராக. அறிவற்றவரின் விருப்பங்களை நீர் பின்பற்றாதீர்.*





இதுதான் றசூலின் வெளிப்படை என்பது. மார்க்கத்தின் ஆரம்பம்தான் ஷரியத்தேயன்றி மார்க்கத்தின் முடிவு என்பதல்ல. சாதாரண பாமரமக்களான உம்மிகளுக்காகவே இந்த வழியை உம்மிகளின் நபி கடைப்பிடித்திருக்கிறார்கள். தாங்கள் செய்யாத ஒன்றை நபிமார் எத்திவைக்க அவர்களுக்கு உரிமையில்லை. அப்படியானால் தரீக்கத்தின் அறிவு அவர்களுக்கு இருந்த தில்லையா? இதற்குரிய விடையை நான் முன்பே கூறியுள்ளளேன். ஆயினும் சிறு விவரம் தருகிறேன். றசூல் (ஸல்) அவர்களுக்குத் தொழுகையைக் கொண்டுவருவதற்கு முன்னும் பின்னும் ஐந்து நிலைமைகளும் ஒன்றையொன்று தடைப்படுத்தாமல் இருந்திருக் கின்றன. சில ஸஹாபாப் பெருமக்களுக்கும் இந்த நிலை ஓரளவு இருந்திருக்கிறது. ஆதாரங்கள் உண்டு.

நானும் உங்கபைப்போன்ற ஒரு மனிதனே. ஆயினும் என்னைப் போன்றவர் எவரும் இல்லையென்று றசூல் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஏககாலத்தில் எல்லாப் படித்தரங்களிலுமே றசூல் (ஸல்) இருந்திருக்கிறார்கள். முதலாம் வகுப்பு மாணவன் இரண்டாம் வகுப்பிற்குப் போனால் பாடசாலையை விட்டுவிட்டான் என்று பொருள் கொள்ளலாமா? வகுப்புத்தான் மாறினான். ஷரீயத்தைவிட வேறுவழியில்லை என்று வாதிப்போர் இந்த ஆயத்தை நோக்குவார்களா?

*குர்ஆன்: 72:16*
*(நபியே மக்கள்) தரீக்கத்தில் உறுதியாய் இருந்தால் தடையி ன்றியே அவர்களுக்கு மழையைப் பொழிவித்துக் கொண்டிருப் போம்.*

இப்போது மார்க்கத்தின் மற்றொரு பகுதி தரீக்கத் என்பது தெரிகிறதல்லவா? இவ்வாயத்தில் குறிப்பிடப்பட்ட மழை துன்யாவின் மழை என்று மட்டும் பொருள்கொள்ள வேண்டாம். தடையில்லாத மழையினால்தானே நூஹு (அலை) காலத்தில் பிரளயம் ஏற்பட்டது. ஆகவே இங்கே குறிப்பிடப்பட்டது அருள் மழையாகும். மேலும் உலக மக்கள் யாவரையும் குறிப்பிடாமல் தரீக்கத்தின் மக்களை மட்டுமே கூறுகிறான் இறைவன் என்பதைக் கவனித்துக் கொள் ளுங்கள். நீங்களே ஹகீகத் மஃறிபத்தின் ஆயத்துகளைக் கண்டறிந்து தெளிவுபெறுங்கள்.

நாம் கூறிய நான்கு நிலைமைகளிலும் மனிதனை நடாத்திச் செல்லும் உயிர் கலிமாவாகவும் அதன் உடல் இபாதத்துகளுமாய் இருக்கின்றன. இதைத்தவிர வேறு எவ்வழியில் சென்றும் தன் குறிக்கோளை மனிதன் பெறவே மாட்டான். ஆகையால்தான் நான் இஸ்லாத்தை மார்க்கமாகத் தெரிந்தெடுத்தேன் என்று இறைவன்

கூறுகிறான். நீங்கள் சிந்திப்பதில்லையா? சிங்கத்தைக் கண்டு விரண்டோடும் காட்டுக் கழுதைகள்போல் நல்லறிவைக்கண்டு பயந்து எங்கே ஓடுகிறீர்கள் என்று கிண்டல் செய்கிறான். ஏதோ வெல்லாம் கூறி விளக்குகிறான். பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடிப்பது போலவே மனிதனும் போய்க்கொண்டிருக்கிறான். வீணான மேலெண்ணத்தை நீக்கிவிட்டு மார்க்கத்தை விளங்கியறியுங்கள், வெற்றிபெறுங்கள்.

*ஹதீஸ்*

*எவருடைய உள்ளத்தில் அணுப்பிரமாணமாவது பெருமை (மேலெண்ணம்) உள்ளதோ அவர் சுவனம் செல்லமாட்டார்.*

*அறிவிப்பவர்: இப்னுமஸ்ஊத் (றலி)*
*ஆதாரம்: முஸ்லிம்*

இப்போது எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு வருவோம்

(15)

இறைவனின் ஆக்கல் அல்லது சிருட்டித்தல் எப்படி என்பதை நோக்குவோம். மனம் அல்லது உள்ளம் என்பது கண், செவி, மூக்கு, நாக்கு போன்ற எந்த ஒரு புலனுக்கும் எட்டாததாய் இருக்கிறது. அப்படி இருந்தும் புலன்களால் உணரக்கூடிய, அறிவால் அறியக்கூடிய, உருவப் பொருட்களான சகல சிருட்டிப் பொருட்களும் கனவின் போது அந்த மனத்தில் தென்படுகின்றன. ஆனால், மனம் கெட்டழிந்தோ விகாரப்பட்டோ இக் காட்சியை உருவாக்கிக் கொள்வதில்லை. அந்த மனம் நம்மை விட்டுப் பிரிந்து எங்காவது சென்று அந்தக் காட்சியைக் காண்பதும் இல்லை; சிருஷ்டிப்பதுமில்லை. புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாமல் பரிசுத்தமாய் இருந்த மனம் தன் சுயநிலையில் இருந்துகொண்டே தன்னிடத்தில் மண், தண்ணீர், காற்று, நெருப்பு முதலான பௌதீகப் பொருட்களையும் நன்மை தீமைகளையும் சர்வ ஆலங்களையும் கண்டுகளிக்கிறது. இந்தக் காட்சி வேறு எங்கோ இருந்து வந்து மனதில் புகவில்லை. இந்தக் கனவுக் காட்சியில் கண்ட சகல வஸ்துகளையும் பஞ்ச புலன்களைக் கொண்டும் அனுபவிக்கிறோம்.

உணவு முதலாம் பொருட்களை உண்டுகளிப்பதும் கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பதும் பெண் இன்பத்தை அனுபவித்து ஸ்கலிதமாவதும் மறுக்கமுடியாத உண்மை. ஆனால் புலன்களுக் கெட்டாத மனம் என்றும் இருந்தது போலவே இருக்கிறது. கனவில் வெளியான காலம், இடம் போன்றவற்றையும் அவற்றின் கட்டுப்





பாட்டில் உள்ள சகல வஸ்த்துகளையும் அணுவும் தவறாமல் கண்டுகொண்டிருந்ததும் அந்த மனம்தான். அந்தக் கனவில் கண்ட நாய், பன்றி போன்றவையும் மலஜலம் போன்ற அசுசிப் பொருட்களையும் மணம், துர்நாற்றம் போன்றவற்றையும் மனிதன், ஜின், ஷைத்தான் போன்றவற்றையும் கண்டுகொண்டிருந்ததும் அப்போது ஒவ்வொரு சிருட்டியும் நான், நான் என்றுணர்ந்து கொண்டிருந்த தன்னுணர்வை உருவாக்கியதும் அந்த மனம்தான். அந்தத் தன்னுணர்வுகள், கனவில் வெளியான ஒவ்வொரு பொருளும் தன்னுடையதே என்று நம்பியிருந்தாலும் கனவைக்கண்ட மனத்தின் உணர்வேயன்றிக் கனவில் வெளியான பொருட்களின் உணர்வேயல்ல. ஆயினும், கனவின் போது ஒவ்வொரு சிருட்டியும் தன்னுணர்வைத் தனித்தனியாய்க் கொண்டிருந்தன என்பது உண்மை தான்.

கனவில் வெளியான ஒவ்வொரு சிருட்டியும் நான் கனவில் வெளியான வெறும் கற்பனைத் தோற்றமும் நாமமும்தான் என்பதை உணர்வதே இல்லை. உணர்ந்தால் கனவு கலைந்துவிடும். இப்படிக் கலைந்து விட்டால் கனவில் வெளியான தன்னுணர்வு மனத்தின் உணர்வேயன்றித் தனியான வேறோர் உணர்வல்ல என்பது அந்த மனத்துக்குத் தென்படும். கனவில் வெளியான சிருட்டிகள் யாவும் மனத்தில் பதிந்திருந்து உற்றபோது வெளியான தென்பதும் தெரியவரும். மறைந்திருந்த நிலைமையை அமா என்றும், கனவு வெளியான நிலைமையை வெளிப்பாடு அல்லது படையுண்டது என்றும் கொள்ளலாம். இதுதான் லாஹிர் வெளிப்படையென்பது.

கனவில் தோன்றிய ஒவ்வொன்றும் நான், நான் என்று வெவ்வேறாய் நம்பியதும் செயல்பட்டதும் உண்மை. கனவில் ஒரு நாய் கடித்ததும் இரத்தம் பீறிட்டதும் ஆஸ்பத்திரியில் சேர்த்ததும் உண்மை. விழிப்படைந்தபோது நான் கண்டது கனவு என்று உணர்ந்ததும் அந்த மனம்தான். தன் திட்டப்படி கனவில் அத்தனை காட்சிகளையும் சிருட்டிகளையும் வெளியாக்கியபோதும் அதற்கு முன்பும் கனவு கலைந்தபின்னும் நிலையாய் இருப்பது மனம்தான். தன்னால் உருவாக்கப்பட்ட காலம் இடங்களைக் கடந்ததாய் கனவில் வெளியான சிருட்டிகளின் அறிவில் அமையாததாய் எட்டாததாய் இருந்ததும் அந்த மனம்தான். கனவில் வெளியான நல்ல தீய பொருட்களுக்கெல்லாம் மூலாதாரமாய் அமைந்திருந்ததும் அந்த மனம்தான். ஆதியாய் இருந்ததும் கவனில் வெளியாகிக் காட்சியளித்ததும் மறைந்ததும் முடிவில் மிஞ்சுவதும் அந்த மனம்தான்.

நாம் இப்போது கூறியது உதாரணம்தான். இறைவனுக்கு எவ்வகையிலும் ஒப்புவமை காட்டமுடியாது. ஆகவே நாம் தந்த உதாரணத்தில் சில வழுக்கள் இருப்பினும் நீங்கள் வழுக்களை நோக்காமல் உதாரணத்தைப் பொதுப்படையாய் வைத்துக்கொண்டே விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வுதாரணத்தில் பல விஷயங்கள் அடங்கியுள்ளன.

1ஆவது: அரூபமாய் மறைவாய் இருந்த மனத்தில் உருவப்பொருட்கள் வெளியானது போல மறைந்திருக்கிற றப்பிடத்தில் உருவப் பொருட்களான சர்வஆலங்களும் வெளியாகிஇருக்கின்றன என்பது தென்படுகிறது.

2ஆவது: மனத்தில் மறைந்து ஒதுங்கி இருந்தவை குறிப்பிட்ட நேரத்தில் கனவாய் வெளியானதுபோல றப்பில் இயல்பாய் மறைந்து ஒடுங்கியிருந்த யாவும் அவற்றின் அவசியத்தின் போது வெளியாகிக் கொண்டிருந்தன, வெளியாகிக் கொண்டிருக்கின்றன என்பது தென்படுகிறது.

3ஆவது: கனவில் வெளியானவை வெறும் கற்பனைத் தோற்றமாயும் மனத்தின் ஒவ்வொரு நாமமாயும் இருக்கின்றன என்பது தென்படுகிறது.

4ஆவது: கனவில் தோன்றி மறைந்த பொருட்கள் முன்பிருந்த நிலைமைக்கே மீண்டுவிடுகின்றன என்பது தென்படுகிறது.

5ஆவது: படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை கனவைப் பொறுத்ததாய் இருந்ததுபோல் படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை சர்வஆலங்களையும் பொறுத்தவையாய் இருக்கின்றன. இம்மூன்று நிகழ்ச்சிகளும் ஒரே விஷயமாக இருக்கின்றன.

6ஆவது: கனவு வெளியாவதற்கு முன்பும் கனவின் போதும் அதன் பின்பும் நிலையாய் மாறுபடாமல் மனம் இருந்தது போலவே அல்லாஹ் சர்வ ஆலங்களுக்கு முன்பும் ஆலங்களின் போதும் ஆலங்கள் அழிந்த பின்பும் இருந்தான்; இருக்கிறான்; இருப்பான்.

7ஆவது: கனவில் வெளியான எந்தவொரு நல்ல தீய பொருளினாலும் மனம் அதன் பரிசுத்தத்தன்மையிலிருந்தும் மாறுபடாமல் அசுசியாகாமல் இருந்தது போல இறைவனும் அவனில் வெளியான எப்பொருளினாலும் அசுசியாகாமல் இருக்கிறான்.





8ஆவது: மனம் தன்னிடத்தே தனக்காக மனாமை உருவாக்கியது போல் இறைவன் அவனிடத்தே அவனுக்காகச் சர்வஆலங்களையும் உருவாக்கியிருக்கிறான்.

9ஆவது: கனவின் போது அதாலத் என்ற நீதிநிர்வாகத்தை மனம் நடாத்தியது போல சிருட்டி உலகத்தில் அதாலத் என்ற நீதி நிர்வாகத்தை இறைவன் நடாத்திக் கொண்டிருக்கிறான்.

10ஆவது: கனவின் போது மனதில் வெளியான இன்ஸானுக்குச் சுமார் இருபது தத்துவங்கள் வேலை செய்தன. அவன் விழிப்பு நிலையில் நாற்பது முதல் தொண்ணூற்றாறு தத்துவங்களுக்கும் இடைப்பட்ட நிலையில் உலகைக் காண்கிறான். அதாவது கனவின் போது கண்ட அனுபவத்தைவிடப் பலமடங்கு அதிகமான அனுபவத்தை விழிப்பு நிலையில் பெறுகிறான். இதைப்போலவே கனவு என்ற துன்யாவில் கண்ட அனுபவத்தைவிடப் பன்மடங்கு அதிகமான இன்பத்தை அல்லது துன்பத்தை ஆகிறாவில் காணப்போகிறான். ஆகிறாவையும் துன்யாவைப் போன்ற ஒரு கனவே என்று கொண்டால் அதற்கப்பால் உள்ள இறைசன்னிதானம் இன்னும் மிகமிகக் கூடிய தெளிவான அனுபவமாகவே இருக்கும்.

இப்படி இன்னும் எவ்வளவோ கூறலாம். இப்போது நோட்ட மிடுங்கள். மனம் என்பதை லவ்ஹு என்று வைத்துக் கொள்ளுங்கள். மனதில் சர்வ நிகழ்சிகளையும் உருவாக்கிய, கண்டுகளித்த அறிவை நூர் (றசூலின் ஒளி) என்று வைத்துக்கொள்ளுங்கள். அதையே கலம் என்றும் கொள்ளலாம். அந்த நூறே அதாலத்தின் அதிகாரி என்றும் வைத்துக் கொள்ளுங்கள். நான் என்றுணர்கிற மனத்தை விட்டுவிட்டு இன்னும் நுட்பமாய் மேலேறி நான் என்று உணர்வது எனது றூஹே என்றும் வைத்துக் கொள்ளுங்கள் இந்த றூஹை உஜூதாகவும் வைத்துக் கொள்ளுங்கள் இந்த றூஹு என்ற உஜூது இருந்தபடியே இருக்க அதில் இயல்பாய் அமைந்துள்ள ஸிபத் என்ற சக்தியைக்கொண்டு (ஸிபத்தையும் நூர் என்று கொள்க) தன்னால் உருவாக்கப்பட்ட மனம் என்ற லவ்ஹுவில், தன் நாமங்களான சர்வ சிருஷ்டிகளையும் தான் விரும்பிய தோற்றத்தில் மனாம் என்ற நிலையில் வெளியாக்கியது. தான் விரும்பிய போது அதை அழிக்கவும் முடியும். மீண்டும் ஆக்கவும் முடியும். மறந்து விடாதீர்கள்.

இப்போது மனம் என்றால் என்ன என்பதைப் பாருங்கள்; றூஹு என்றால் என்ன என்பதை நோக்குங்கள். ஒரு பல்லி மேலிருந்து கீழே விழும்போது வால் தெறித்து விடுகிறது. வாலை இழந்துவிட்ட பல்லி வேதனையடைகிறது. பல்லியைவிட்டு நீங்கிய

வாலும் துடிக்கிறது. வேதனை அடைகிறது. இல்லாவிட்டால் துடிக்காது. வேதனையை உணர்வது மனம்தானே! மெய்தான். பல்லி வேதனையடையலாம் ஏன்? அதனிடத்தில்தான் மனம், இருதயம் என்பவை இருக்கின்றன. வால் ஏன் வேதனையடைகிறது? அதற்கும் மனம் என்பது ஒன்று உண்டா? அல்லது பல்லியின் மனத்தின் ஒரு பகுதி உடலோடும் ஒரு பகுதி வாலோடும் ஆகிவிட்டதா? பல்லியிடம் இருந்த மனது பல்லியோடுதான் இருக்கிறது என்றால் வால் ஏன் துடிக்க வேண்டும்? அப்படியானால் மனம் என்பது என்ன? எங்கே இருக்கிறது?

உண்மையை நோக்கினால் மனதில்தான் பல்லியின் உடலும் வாலும் இருந்திருக்கின்றன. ஆனால் பல்லியோ மனம் என்பது எனக்குள் இருந்தது. என் இரத்தாசயத்தில் அல்லது மூளையில் இருந்தது என்று நம்பியிருந்தது. இதைப்போல இறைவனுடைய மனம் என்னும் லவ்ஹில்தான் சர்வசிருட்டிகளும் இருக்கின்றன. பல்லி நினைத்ததுபோல மனிதனும் என்னுள்ளே இருக்கிறது என்று நம்பியிருக்கிறான். வியாபகமாய் நீக்கமற நிறைந்ததாய் இருந்த லவ்ஹு என்ற மனத்தில் சர்வ ஆலங்களும் கற்பனையாய் வெளியாகி இருப்பதால் ஆலத்தில் உள்ள எந்த ஓர் அணுவும் லவ்ஹை விட்டும் ஒளிந்து மறைந்துகொள்ள முடியாது. மனம் பல்லியின் உபாதையை, வாலின் உபாதையை அறிந்தது போல சர்வசிருட்டிகளின் சர்வ இயக்கங்களும் லவ்ஹுக்குத் தெரியத் தானே செய்யும். ஏன்? லவ்ஹைத் தவிர அதில் வெளியான வெளியாகும் யாவும் லவ்ஹில் உள்ள கற்பனைகளாகவே இருக்கின்றன. லவ்ஹுவில் இல்லாதது இல்லாததே ஆனால் அதில் இல்லாதது எதுவும் இல்லை. ஏன்? அது சமதுடையது. தேவையற்ற வனுடையது; தேவையற்றது; எதுவும் அதற்கு வேண்டியதல்ல. (நுட்பமாய் உணர்க) மண்ணுக்குள் மறைந்து வாழும் நாக்குளிப்பாம்பு அல்லது மண்புழுவை நீங்கள் அறிவீர்கள். அந்தப் பாம்பு ஒன்றுக்கு ஒரே உயிர்தான் உள்ளது. அந்தப் பாம்பை நாம் இரு துண்டுகளாக வெட்டிவிட்டால் அவ்விரு துண்டங்களும் இறந்துவிடாமல் காலக்கிரமத்தில் வாழ்ந்து இரு பாம்புகளாகவே மாறிவிடுகின்றன. அப்படியானால் அதன் உயிர் இரண்டாக வெட்டப் பட்டு விட்டதா? அல்லது முன்னிருந்த ஒரே உயிரைக் கொண்டுதான் இரு துண்டங்களும் வாழ்கின்றனவா? ஒரே உயிரில்தான் அந்தப் பாம்பு ஆரம்பத்தில் இருந்தது போல அதே உயிரில்தான் இப்போதும் அந்த இரு துண்டுகளும் வாழ்கின்றனவா? இதைப்போலவே சர்வ ஆலங்களும் ஏதோ தனித்த ஓர் உயிரில்தான் இயங்குகின்றன. அந்த மண்பாம்பை நான்கு துண்டங்களாய் வெட்டியிருந்தால்





அந்த நான்கு துண்டங்களுமே தனித்தனிப் பாம்புகளாய் வாழும். வாழ்கின்றன. கலைக்களஞ்சியத்தில் இந்த உண்மையை நீங்கள் கண்டறியலாம். (நுட்பமாய் உணருங்கள்) இதற்கதிகமான விவரம் தரமுடியாது. மன்னிக்கவும்.

## (16)

கவனத்தை வேறுவகையில் செலுத்தாமல் கிரகியுங்கள். மனம் என்று நாம் கூறிய லவ்ஹு என்பதும் ஒரு சிருட்டிதான். என் மனம் என் அறிவில் அமைந்த ஒரு முடிச்சு அல்லது கட்டாக இருக்கிறது. என் அறிவைக்கொண்டே, நான் என் அறிவுக்கு குன் ஆகு என்ற இயல்புணர்வால் முடிச்சிட்டிருக்கிறேன். மனம் என்னுள் பொதிந்தது என்று நம்புகிறேன். நான் என்பது யார்? நான் என்பது என்னுடலோ உடலுக்குள் இருப்பதோ, உடலுக்கு வெளியில் இருப்பதோ அல்ல. என்னைப்பற்றி நான் இப்போது அறியாமல் இருக்கிறேன். ஏன்? நான்தான் என்னறிவில் முடிச்சுப்போட்டுக் கொண்டிருக்கிறேனே! எப்படி அறிவது? அப்படி அறிவதானால் நான் என்ன செய்யவேண்டும்? என் அறிவிலுள்ள முடிச்சை அவிழ்த்துக் கொள்ள வேண்டும். எப்படி அவிழ்ப்பது? அவிழ்க்கும் ஆயுதமும் என்னிடம்தான் உண்டு. அதுதான் கலிமத்துத்தையிபா என்பது. சிருட்டியான மனிதன் பெற்றுக்கொண்ட அமானத் என்பது இக்கலிமா தான். இந்த அமானத் பல பிரிவுகளைக் கொண்டிருப்பினும் முழு உண்மை கலிமாதான். இதற்கதிகமான நுண் விபரங்களைக் கவாஸுகளான நீங்கள் விளங்கிக் கொள்ளமாட்டீர்கள் என்பதை இறையுதவியால் நான் அறிவேன். ஆகையால் இதற்கு மேல் ஏறிப்போகாமல் இவ்வளவோடு வைத்துக்கொண்டு நோக்குவோம். இவ்விவரம் எழுத்தில் வடிப்பதற்கு அவ்வளவு இலகுவானதல்ல. ஆகவே, மேலதிக விவரம் தேவைப்படுவோர் எம்முடன் கலந்து உரையாடுவதே நல்லது சரியானது.

நான் என்ற இயல்பான எண்ணம் றூஹு என்ற எனக் குடையது. என் அறிவினால் என் அறிவுக்கு இட்ட கட்டளையைக் கொண்டு என் அறிவின் ஓர்மாத்தபாவை (நிலைமையை) மனம் என்று ஆக்கி அதில் *'இஸ்தியாரா வாக'* இரவலாக நான் என்பதை அமைத்திருக்கிறேன். இதை என் மனம் என்று கூறுகிறேன். இது நான் என் ஸூறத்தை என் வல்லமையை என் சர்வ விஷயங் களையும் பார்க்க உணர அறிய ஆக்கிக்கொண்ட கண்ணாடியாகும். அப்படியானால் நான் என்னை முன்பு காணாமல் இருந்தேனா? இல்லை; இது என் லாஹிர்-வெளிப்படை, காலம் நான் உருவாக்கியது. அது நானே. என் மனத்தில் வெளியான சிருட்டி

வாயிலாயும் என்னை அறிய நாடினேன். (நாடினேன் என்றால் விருப்பம் ஆசை என்பது பொருளல்ல) “*இறாதா*” என்பதை விளக்க இவ்விடம் பொருந்தாது. இந்த லாஹிர் என்பது இன்ஸானிடத்தில் புதியதேயன்றி என்னிடத்தில் புதியதல்ல. நான் பேசும் பேச்சு என்னிடம் இயல்பாய் உள்ளதுதான். உங்கள் முன்னிலையில் அப்பேச்சு வெளியாகும் போது அது உங்களிடத்தில் புதிதான சிருட்டியாகிறது. என்னிடத்தில் புதியதுமல்ல பழையதுமல்ல.

இவ்விளக்கம் உங்களுக்கு மருட்சியை ஏற்படுத்தக் கூடாது. றப்புப் பேசுவது போல் பாவனை செய்து உங்களுக்கு விளக்கம் தருகிறனேயன்றி நான் றப்பு என்று கூறுவதாய் மருண்டு விடாதீர்கள்.

நான் என்ற றூஹு எப்போது உண்டோ அப்போது என்னி டத்தில் உள்ள யாவும் என்னோடு இருந்தவைதான். நான் வேறு அவை வேறல்ல. அவை என்று ஏன் கூறுகிறோம்? என்னிடமிருந்த என் ஸுறத்துகளை என்னை விட்டும் தனித்தனியான பொருட்கள் என்று மனம் நம்பியதனால்தான் என்னை விட்டும் என் தோற்றங்கள் வேறு என்று மனித மனம் காணுகிறது. ஏன் அந்த மனம் அப்படிக் காணுகிறது? அந்த மனம் என் உத்தரவில் கட்டுண்ட சிருட்டியாய், தன்னிலை மறந்ததாய் அனாநிய்யத்தைக் கொண்டதாய் இருப்பதால்தான். இப்போது பாருங்கள்; அந்த றூஹுக்கு இடமோ, காலமோ கிடையாது. அது சர்வவியாபகமாய் அறிவில் எட்டாததாய் அதையன்றி ஒன்றுமே இல்லாததாய் இருக்கிறது. அது ஒவ்வொரு படித்தரத்தில் (மர்த்தபாவில்) அறியக் கூடியதாயும் இருக்கிறது. அந்த றூஹுவுக்கு பெயரும் கிடையாது. அப்படியிருந்தும் ஓர் மர்த்தபாவில் நூர்-அறிவு என்றும் இன்னொருநிலைமையில் லவ்ஹு என்றும் இன்னோர் நிலைமையில் கலம் என்றும் இன்னோர் நிலைமையில் அர்ஸு என்றும் ஓர்நிலைமையில் குர்ஸி என்றும், இன்னொரு நிலைமையில் வானம், பூமி, மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்றும் வெவ்வேறு பெயர்களையும் ஸுறத்துகளையும் பெற்றிருக்கிறது. இது அறிவில் அமையமுடியாத ஒரு விஷயமா? ஆதாரமற்ற ஒரு விஷயமா? இல்லை. தெளிந்த அறிவில் இது அமையும். குர்ஆன் ஹதீஸுகளின் ஆரம்பமும் முடிவும் இந்த விஷயம்தான். இதை விளங்கித் தெளிவு பெறுவதே இஸ்லாத்தின் குறிக்கோளாகும். படுத்துறங்கிக் கனவு கண்டு கொண்டிருக்கிற மனிதனை எழுப்பி விழிப்பு நிலைக்குக் கொண்டு வருவதுபோல வஹ்மு என்ற பேத புத்தியில் ஊறித் தூங்கிக்





கொண்டிருக்கிற மனிதனைப் பகுத்தறிவுவாதியாய் மாற்றி மறந்துபோன தன் சுய நிலையை நினைவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே கலிமா, குர்ஆன், ஹதீஸுகளின் உண்மையான நோக்கமாக இருக்கிறது. நான் றூஹு என்று காட்டியது இன்ஸானின் றூஹையேயன்றி அல்லாஹ்வையல்ல என்பதை நீங்கள் மறக்கக்கூடாது. “மன் அறபநப்ஸஹுபகத் அறபறப்பஹு” என்பது ஒரு றிவாயத். தன் நப்ஸை அறிந்தவன் தன் றப்பை அறிவான் என்பதே பொருள்.

*குர்ஆன்: 53:23*

*இவையெல்லாம் நீங்களும் உங்கள் மூதாதைகளும் வைத்துக் கொண்ட வெறும் பெயர்களேயன்றி ஒன்றுமில்லை. அதற்காக அல்லாஹ் உங்களுக்கு யாதொரு ஆதாரத்தை இறக்கிவைக்க வில்லை. அவர்கள் சரீர இச்சையின் பொருட்டு வீண் சந்தேகத் தைப் பின்பற்றுவதேயன்றி இல்லை. நிச்சயமாக அவர்களுக்கு இறைவனிடமிருந்து நேர்வழி வந்தேயிருக்கிறது.*

இவ்வாயத்தில் விக்கிரகம் முதலாம் சர்வசிருட்டிகளும் வெறும் (கௌனி) நாமங்களே என்பது விளக்கப்பட்டுள்ளது. சரீர இச்சையென்பது புலனாட்சியில் கட்டுண்ட மனத்தின் வஹ்மு என்ற பேதபுத்தியாகும். இந்த வஹ்முதான் நாமத்தைப் பொருளாய்க் காணுகிறது.

*குர்ஆன்: 67:20*

*இந்த நிராகரிப்போர் (காபீர்கள்) வெறும் மாய்கையிலன்றி வேறில்லை.*

*குர்ஆன்: 28:74*

*இறைவன் அவர்களை நோக்கி எனக்கு இணையானவை என்று நீங்கள் எண்ணிக்கொண்டிருந்தீர்களே! அவை எங்கே? என்று கேட்கும் நாளை அவர்களுக்கு ஞாபகமூட்டும்.*

அல்லாஹ் அல்லாதவைதான் சிருட்டியென்று மனிதன் நம்புகிறான். இறைவனுடன் இறைவன் அல்லாததும் உண்டு என்று இறைவனுக்கு இணையாக்குகிறான். உண்மையாகவே சிருட்டி என்பது வெறும் நாமத்தின் ஸுறத்தே என்றும் அது அல்லாஹ் அல்லாததல்ல என்றும், இந்த இணையேற்படுத்தல் உங்கள் எண்ணமே (உளநோயே) என்றும் இறைவன் விளக்குகிறான்.

*குர்ஆன்: 34:27*
*அல்லாஹ்வுக்கு இணையானவையென நீங்கள் அவனுக்குச் சமமாகச் சேர்த்து வைக்கிறீர்களே! அவற்றை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள். (அவனுடன் ஒன்றுமே) இல்லை, அவனே மிகைத்தோனும் ஞானமுடையோனுமாகிய அல்லாஹ் வாகும் என்று கூறும்.*

விக்கிரகங்களை முஷ்ரிக்கீன்கள் அல்லாஹ் போன்றவை என்றோ அல்லாஹ்தான் என்றோ கூறவில்லை, ஆகவே சமமானவர்கள் என்பது சிருட்டி அல்லாஹ் அல்லாதது என்று எண்ணியதால் சிருட்டியும் அல்லாஹ்வைப் போன்ற மூலப்பொருள் என்ற எண்ணத்தினால் (உளநோயினால்) சமமாகக் கண்டார்கள் என்பது ஆயத்தின் விரிவுரை.

*குர்ஆன்: 26:213*
*ஆதலால் நீர் அல்லாஹ்வுடன் வேறொரு கற்பனை ஆண்டவனை அழைக்காதீர் அதனால் நீர் வேதனைசெய்யப்படுவீர்.*

இவ்வாயத்தில் கூறப்பட்ட கற்பனை ஆண்டவன் யார்? மனிதன், சிருட்டி, அல்லாஹ் அல்லாதவை என்று நம்புவதால் அவை அல்லாஹ்வைப் போன்ற மூலப் பொருட்களே என்று கற்பனை பண்ணுகிறான். இதுதான் இணையாக்கல் சமமாக்கல் என்பது. அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையுமுண்டு என்றால் அவனுடன் அவனல்லாத சமமானவையும் உண்டு என்று ஆவதால் மனிதன் தன் மனத்தால் கற்பனையான ஆண்டவனை ஆக்கிக் கொள்கிறான்.

*குர்ஆன்: 26:98, 99*
*உங்களை (விக்கிரகங்களை அல்லது சிருட்டிகளை) இறை வனுக்கு சமமாக்கி வைத்தோம். குற்றவாளிகளேயன்றி எங்களை வழிகெடுக்கவில்லை.*

*குர்ஆன்: 26:97*
*அல்லாஹ்வின்மீது சத்தியமாக நாங்கள் வழிகேட்டில்தான் இருந்தோம்.*

மனிதன் ஆகிறாவில் கூறும் வார்த்தைதான் இது. இன்னும் எவ்வளவோ ஆயத்துகளையும் ஹதீஸுகளையும் தரலாம். இந்த ஆயத்துகள் ஒவ்வொன்றையும் விஞ்ஞான ரீதியாய் விளக்குவ





தானால் ஒவ்வோர் ஆயத்தையும் ஒவ்வொரு புஸ்த்தகமாய் எழுதலாம். கலிமாவைப் புரட்டாமல் உள்ளபடியே வைத்துக் கொண்டு சரியானதோர் அறிஞரிடம் விளங்கித் தெளிந்துகொண்டால் எவ்விதப் புத்தகங்களும் அவசியமல்ல. குர்ஆன் ஹதீஸுகளே போதுமானவை.

நான் மேலே மிகச்சுருக்கமாய்க் கூறிய விவரத்தை நீங்கள் பல கண்ணோட்டங்களோடு ஆராய்ந்தால் இறைவனையன்றி ஒன்றுமே இல்லையென்றும் அவனின் ஸுறத்தையல்லாமல் சிருட்டி என்ற ஒரு தனி வஸ்து இல்லையென்பதையும் இதை உணரச் செய்வதே இஸ்லாம் என்பதையும் அதன் ஆதாரங்களே குர்ஆன் ஹதீஸுகள் என்பதையும் உணர்ந்து கொள்வீர்கள். இதை விட்டுவிட்டு இறைவனைப் புதுடில்லிக்குப்போய்ச் சந்திக்கவோ அர்ஸுவுக்குப் போய்ச் சந்திக்கவோ முடியாது. அவன்தான் நம்மோடு இருக்கும்போது எங்கே அவனைத் தேடுவது?

ஆகவே படைத்தல், காத்தல், அழித்தல், என்ற இவை மனிதனிடத்திலேயன்றி அல்லாஹ்விடத்தில் அவனோடு இயல்பாய் உள்ளவையேதான். இதற்குமேல் விவரம் இங்கு தரமுடியாது. நான் இங்கு கூறியுள்ள விஷயங்களை பிக்ஹுக்கிதாபுகளோ கஞ்சாஞானிகளின் ஞானப்பாடல்களோ விளக்கம்தரா. குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டே விளங்கித் தெளிவுபெற வேண்டும்.

கவிஞர்கள் வழிகெட்டவர்கள் என்றும் அது உமக்குத் தகுமானதல்ல என்றும் கவிஞர்கள் ஒவ்வொரு திடலிலும் தட்டலை கிறார்கள் என்றும் இறைவன் குர்ஆனில் விவரம் தருகிறான். ஆகவே, குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டே வழிகாணுங்கள்.

*குர்ஆன்: 26:224, 225*
*கவிஞர்களையும் வழிகெட்டவர்கள்தான் பின்பற்றுகிறார்கள். நிச்சயமாக அவர்கள் ஒவ்வொரு திடலிலும் தட்டழிந்து திரிகிறார்கள் என்பதை நீர் பார்க்கவில்லையா?*

மேலோட்டமாய் நோக்காமல் திடல், தட்டழிதல் என்பவை எவை? என்று ஆராயுங்கள்.

## (17)

மனித அறிவில் எட்டாதிருந்த ஒன்றை மனித அறிவு எட்டக்கூடியதாய் இப்போது நாம் அறிந்திருப்பதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம். நாம் எடுத்துக்கொண்ட மூலப்பொருளான வுஜூது ஒன்றேயென்றும் அதையன்றி வேறொன்றில்லை என்றும் மூ.்.மீன்கள் அறிந்திருப்பதையே இன்றைய விஞ்ஞான உலகமும் தீர்ப்புக்கட்டியிருக்கிறது. இதில் எவருக்கும் பிரச்சினையே கிடையாது. ஆயினும், அறிவில் இது பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. எப்படியென்றால் மனிதனுக்கு அவன் தன் சொந்தப்புலன்களையும் அறிவையும் கொண்டு அறிகிற அனுபவிக்கிற அனுபவத்துக்கு, ஒன்றையன்றி ஒன்றுமில்லை என்ற கொள்கை முரணாய் நம்பமுடியாததாய் இருக்கிறது. உலகின் சகல பொருட்களையும் நோக்கினால் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாய்த் தனித்தன்மையு டையவையாய்த் தென்படுகின்றன. பொருளல்லாத குணங்களைக் கூட தனித்தனியாய்க் காணுகிறோம். அனுபவிக்கிறோம். ஆகவே அனுபவத்திற்கு முரணான ஒன்றை எம்மால் ஏற்கமுடியாமலிருக் கிறது. இதைப்பற்றிக் குர்ஆன் என்ன விவரம் தருகிறது என்பதைக் கேட்டுப்பார்ப்போம்.

*குர்ஆன்: 21:22*
*வானம் பூமியாகிய அவ்விரண்டிலும் அல்லாஹ் அல்லாத இலாஹுௗகள் இருந்தால் அவ்விரண்டும் கேட்டை அடைந்தி ருக்கும் (அழிந்திருக்கும்).*

இந்த ஆயத்தில் பாவிக்கப்பட்ட ஆலிஹத் என்ற சொல் இலாஹுௗ என்ற சொல்லின் பன்மையாய் இருக்கிறது. இலாஹுௗகள் அல்லது ஆலிஹத் என்றால் வணங்கப்படுகிற பௌதீக சூட்சும சிருட்டிகளே என்பதில் உலமாக்கள் எவரும் மறுப்புத் தெரிவிக்க மாட்டார்கள். ஆனால் உலகம் பூராவும் இந்த இலாஹுௗகள் இருந்தன, இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அப்படியிருக்கும் போதும் குர்ஆன் இல்லையென்று கூறுகிறது. மேலும் அல்லாஹ் அல்லாத இலாஹுௗ என்றே கூறுகிறது. அதாவது வணங்கப்படுகிற இலாஹுௗக்கான பௌதீகவிக்கிரகங்கள் இல்லையென்று கூறுகிறது. ஆகவே அந்த விக்கிரகங்களான ஆலிஹத்துகள் அல்லாஹ்தான் என்பதை இந்த ஆயத்து வற்புறுத்துகிறது. இதை நாம் நம்புவது கடினமாகவே தென்படுகிறது. ஆலிஹத்தென்று பன்மையில் கூறியி ருப்பதால் ஆலிஹத் என்பதை ஆழமாய் நோட்டமிடுங்கள்.





மேலும், அப்படியிருந்தால் வானம் பூமி யாவும் அழிந்து விடும் என்றும் இந்த ஆயத்து விவரம் தருகிறது. இப்போது நாம் எமது பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். வானம் பூமி ஏன் அழிந்து விடும்? அல்லாஹ் அல்லாத இலாஹுௗ அல்லாஹ்வுடன் இருந்தால் தான் அழிந்துவிடும். அதாவது அல்லாஹ் அல்லாத இலாஹுௗகள் அல்லாஹ்வுடன் மோதும்; மோதினால் வானம் பூமியாவும் அழிந்து அல்லாஹ் மட்டும்தான் மிஞ்சுவான். அழிவது இல்லாததுதான். அது தனியான இலாஹாய் இராது. ஒரு பொருள் அழிய அல்லது மாற்றமடைய இன்னொரு பொருள் அதனுடன் இருக்கவேண்டும். சிகரெட் நெருப்புடன் மோதுவதால் மாறுபாடடைகிறது. அழிகிறது. சிகரெட்டும் நெருப்பும் தனிதனிப் பொருளாய் இருப்பதால்தான் மோதுகின்றன. சிகரெட் மட்டுமே தனித்திருந்தால் அல்லது நெருப்பு மட்டுமே தனியாய் இருந்தால் ஒவ்வொன்றும் தம்மைத்தாமே அழித்துக்கொள்ளா.

சிகரெட் தனிப்பொருளாயும் நெருப்பு சிகரெட்டல்லாத வேறு பொருளாயும் இருந்ததால் தான் மோதிக்கொண்டன. சிகரெட் நெருப்புடன் மோதியழிந்து இறுதியில் சாம்பராய்விடுகிறது. அழிந்து போன சிகரெட் இப்போது இல்லை. இப்போதிருப்பது சாம்பர் மட்டுமே. அப்படியானால் சிகரெட்டின் இன்னொரு தோற்றம் சாம்பராயும் சாம்பரின் வேறோரு தோற்றம் சிகரட்டாயும் இருக்கிறது. இங்கே சாம்பர் மிஞ்சும் போது சாம்பர் உண்மைப்பொருளாயும், அழிந்துபோன சிகரெட் இன்மைப்பொருளாயும் இருக்கிறது. சிகரெட் இப்போது கற்பிதமான தோற்றம்தான். சிகரெட் அழிவதற்குக் காரணம் சிகரெட்டல்லாத நெருப்பும் இருந்ததே. இந்த நிகழ்ச்சியில் மூன்று பொருட்கள் இடம்பெறுகின்றன. ஒன்று நெருப்பு மற்றது சிகரெட் அடுத்தது சாம்பர். இவைமட்டுமல்ல, இன்னும் காலம், இடம், காற்று மற்றும் யாவும் அடங்கும்.

அல்லாஹ் என்னும் உஜுௗதோடு வேறு எதுவும் கூட்டாக, இணையாக, ஜோடியாக இல்லையென்பதே கலிமாவும் குர்ஆன் ஹதீஸுௗகளும் தரும் விவரம். ஆகவே அவனைத் தாக்க, மோத வேறு பொருள் கிடையாது. பூமியிலுள்ள இலாஹுௗகள் சிகரெட்டையும் நெருப்பையும் போல், அல்லாஹ் என்ற இலாஹுௗவுடன், அல்லாஹ் அல்லாத தனித்தனி இலாஹுௗகளாய் இருந்ததால்தான் நெருப்புக்கும் சிகரெட்டுக்கும் ஏற்பட்ட மோதல் நிகழும். அப்படி இதுகாலவரையில் நிகழவில்லை. வானம் பூமி இருந்து கொண்டேயிருக்கின்றன. ஆகவே அந்த இலாஹுௗகளான ஆலிஹத்துகள் அல்லாஹ்வைப்போல், அல்லாஹ் அல்லாத தனித்தனி உஜுௗதுகளேயல்ல. அவை இனம் தெரியாத உஜுௗதின் ஓர் மர்த்தபாவில் உள்ள ஏதோ ஒரு தோற்றமாகவே இருக்கும்.

அது பொருளல்லாத வெறும் ஸுறத்தும் நாமமுமாகத்தான் இருக்கும். அந்த இனம் தெரியாத ஒன்றுதான் மிஞ்சப்போவது.

மேலும் அந்த ஆயத்தில் அல்லாஹ் அல்லாத இலாஹுகள் இருக்குமானால் என்று வலியுறுத்திக் கூறப்படுவதால் அவை அல்லாஹ்வாகவே இருக்கின்றன என்று தென்படுகிறது. இந்த இலாஹுகள் வெறும் கற்பனைத் தோற்றங்களும் நாமங்களுமே என்ற அடிப்படையை நோக்கினால் சர்வ ஆலங்களும் கற்பனைத் தோற்றங்களும் நாமங்களுமே என்று தென்படுகிறது. இன்னொரு நுட்பம் என்னவென்றால் சர்வ ஆலங்களும் அவற்றிலுள்ள சர்வ சிருட்டியும் ஜோடி ஜோடியாய்ப் படைக்கப்பட்டிருப்பதாய்க் குர்ஆன் கூறுகிறது. சிருட்டி ஜோடியுடையதாய் இருந்தால் சிருட்டிக்கு மாற்றமான சிருட்டிகர்த்தா (இறைவன்) ஜோடியில்லாத வனாகவே இருக்க வேண்டும். அவனும் ஜோடி உடையவன்தான் என்றால் சிருட்டிக்கும் சிருட்டிகர்த்தாவுக்கும் பேதமில்லாமல் ஆகிவிடும். அதாவது சிருட்டிகர்த்தாவும் சிருட்டிதான் என்று ஆகிவிடும். ஆகவே மன்கூல் மஹ்கூலான இரு பிரமாணங்களின் படியும் உஜுதுடன் இன்னோர் உஜுது கிடைக்கவே கிடையாது என்பதை இப்போது ஓரளவு தெரிந்து கொண்டோம்.

அல்லாஹ்வான உஜுதுடன் அல்லாஹ் அல்லாத வேறு உஜுதும் உண்டு என்று மனிதன் தன் மூடத்தனத்தால் தன் உள்ளத்தில் ஓர் அடிப்படை எண்ணத்தை ஆக்கிக் கொண்டிரு க்கிறான். இந்த ஆக்கலைத்தான் அக ஆக்கல் என்றும் ஷிர்க் என்றும் ஓர் உளநோய் என்றும் குர்ஆன் ஹதீஸ்கள் விவரம் தருகின்றன. இந்த ஆயத்து மிகப்பெரிய ஒரு விஞ்ஞான விளக்கத்தைச் சுமார் 1408 வருடங்களின் முன்பே தெளிவாய் விளக்கியிருந்தும் அதை முஸ்லீம்களில் பெரும்பாலார் ஏற்கவும் இல்லை. ஆராயவும் இல்லை. இவ்வாயத்தின் உண்மையைத் தெரிந்து கொண்ட நல்லடியார்கள் அதை வெளிப்படுத்திய போதெல்லாம், மார்க்க விளக்கம் தெரியாத லேபில்பட்டதாரிகளால் காபீர், முர்த்தத் என்றெல்லாம் பட்டம் சூட்டப்பட்டார்கள். அவர்களின் எழுத்துகள், பேச்சுக்கள் ரத்துச் செய்யப்பட்டன. ஆகவே நல்லடி யார்களின் சொற்களை மக்கள் ஆராய முடியாமலே போய்விட்டது. எம் காலத்தில் அந்த நல்லடியார்கள் எமக்குத் தென்படவில்லை. அவர்களின் வாதம் நமக்குத் தெரியாது. ஆயினும், பரம்பரை வழக்கத்தினால் வாயைக் கொண்டு அவர்களை நல்லடியார்கள் என்று கூறிக் கொள்கிறோம். ஆனால், அவர்களின் கொள்கை





விளக்கமோ குர்ஆனாகவே இருக்கிறது. இவ்வாயத்தைக் கொண்டு இப்போது நமக்கு அவசியம் என்ன வென்றால்

1ஆவது: உண்மைப் பொருள் அல்லாஹ்வாக இருக்கிறது.

2ஆவது: சர்வ உலகங்களும் அவற்றிலுள்ள சர்வ சிருட்டிகளும் வெறும் கற்பனைத் தோற்றங்களும் நாமங்களுமே. இதை அறபுபாஷையில் பாதில் அல்லது ஹுறூர் என்றும் தமிழ்பாஷையில் மாய்கை என்றும் கூறப்படும்.

3ஆவது: இந்த நாம ரூப பேதங்களான சர்வ ஆலங்களும் அல்லாஹ் வினால் கற்பனைசெய்யப்பட்ட கற்பனையாயும் றப்பின் லாஹிறான ஸுறத்தாயும் இருக்கின்றன.

4ஆவது: நாம் காணும் உலகம் சிகரெட்டைப்போல் இருக்கிறது. சிகரெட்டில் எங்கு எப்படியென்று தெரியாமல் மறைந்திருந்த சாம்பரைப்போல் எல்லா உலகங்களிலும் மிஞ்சப்போகிற றப்பு மறைந்தவன் போல் தென்படுகிறான். அவனை மறைந்ததாய்க் காணுவது மருட்சியேயன்றி உண்மையல்ல. அவன் மறைந்தவ னேயல்ல. அவனை மறைக்க அவனுடன் எதுவுமே இல்லை. இங்கே எடுத்துக் கொண்ட சிகரெட்டின் உதாரணம் இறைவன் விஷயத்தில் ஒத்துவராதென்பதை நான் அறிவேன். ஆயினும் விளக்கத்துக்கு இது போதுமானது. இது இந்துக்களின் உதாரணம் போன்றதுதான். ஆயினும், இதனால் குறிப்பிடப்பட்ட உண்மைதான் இங்கு நமக்கு அவசியமானது.

*குர்ஆன்: 2:115*
*நீங்கள் எங்கு திரும்பினாலும் அல்லாஹ்வுடைய முகம் (வஜ்ஹு) அங்கு இருக்கிறது.*

*குர்ஆன்: 2:186*
*நிச்சயமாக நான் சமீபத்திலிருக்கிறேன். என்னை அழைப்பவ னுடைய அழைப்புக்கு விடையளிக்கிறேன்.*

*குர்ஆன்: 9:40*
*திடனாக அல்லாஹ் நம்மோடிருக்கிறான்.*

*குர்ஆன்: 57:4*
*நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களோடு இருக்கிறான்.*

*குர்ஆன்: 7:7*
*நாம் அறிந்திருப்பவற்றை நிச்சயமாக அவர்களுக்குக் கூறுவோம். நாம் மறைவாக இருக்கவில்லை.*

மேலதிகமான விவரம் தேவையானால் ***'ஈமானின் உண்மையை நீ அறிவாயா?'*** என்ற எமது முதல் நூலைப் பார்வையிடுங்கள்.

(18)

இவ்விடயத்தில் இந்துக்களுக்கும் மூ.்.மீன்களுக்குமிடையில் ஒரு சிறு வேறுபாடு இருக்கிறது. அதாவது சிகரெட்டில் சாம்பர் மறைந் திருந்ததுபோல என்பது இந்துக்களின் கொள்கையாகும். இதை இஸ்லாம் ஹுலுல் இத்திஹாது என்று கூறுகிறது. இவ்விடத்தில் இஸ்லாத்தின் கொள்கை இதுவல்ல. ஏதோ ஓர் இனம் தெரியாத பொருளின் இரு தோற்றங்கள்தான் சிகரெட், சாம்பர் என்பவை அல்லாமல் அவை தனித்தனி உண்மைப் பொருட்களல்ல என்பதே. ***"லைஸக்க மிதிலிஹி ஸையுன்"*** அவனைப் போன்றதோ போன்றதைப் போன்றதோ கிடையாது என்கிறது குர்ஆன்.

நாம் கூறிய ஆயத்தின் விவரத்தை மனதில் இருத்துவதற்காக இன்னொரு ஆயத்தை நோக்குவோம்

*குர்ஆன்: 37:35, 36*
*அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று அவர்களுக்குக் கூறப்பட்டால் நிச்சயமாக அவர்கள் கர்வம் கொண்டு என்னே! நாங்கள் பைத்தியம் கொண்ட ஒரு கவிவாணருக்காக எங்களுடைய இலாஹுகளை நாங்கள் விட்டுவிடுவோமா என்று கேட்கின்றனர்*

இவ்வாயத்திலும் மிகநுட்பமான ஞானவிளக்கம் தென் படுகிறது அவசியமானதை மட்டும் பேசுவோம். அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று கூறுகிற நபி அந்த இலாஹுகளை வணங்கவேண்டாம் என்றும் கூறுகிறார். இவருடைய கலிமா எல்லா இலாஹும் அல்லாஹ்தான் என்பதை வலியுறுத்துகிறது. அதை வணங்காதேயென்று கூறப்படுவதால் இலாஹு அல்லாஹ் அல்லாதது என்று தென்படுகிறுது. ஆகவே இவர் ஒரு பைத்தியம்தான் என்று தீர்ப்புக்கட்டினார்கள். இந்த நபி கூறுகிற





வேதவசனங்கள் மிகச்சிறப்பான இலக்கண இலக்கியங்களோடு அமைந்திருந்ததால் இவர் ஒரு கவிவாணரே என்று முடிவுசெய்தார்கள். நாம் அவ் வேளையில் இருந்திருந்தால் நாமும் அபூஜஹ்லைத்தான் நம்முடைய இமாமாக ஏற்றிருப்போம். நீதிமன்னன் உமரே பாருக் (றலி) அவர்கள்கூட ஆரம்பத்தில் அபூஜஹ்லின் பிரதான மந்திரி போல்தான் இருந்திருக்கிறார்கள். இல்லாவிடில் நபியை வெட்டிக் கொலைசெய்ய வாளைத் தூக்கியிருப்பார்களா?

ஆனால் அந்த எழுத்து வாசனையே கிடையாத உம்மிநபி முஸ்ரிக்கீன்களான மக்களின் உள்ளத்தில் குடிகொண்டிருந்த ஒரு கடினமான உளநோயை நீக்கவேண்டும் என்பதற்காகவே கலிமா என்ற மருந்தையும் அதற்குரிய பத்தியமாக விக்கிரக வணக்கத்தைச் செய்யவேண்டாம் என்றும் கூறியிருக்கிறார்கள். இந்த நபி உம்மி போல் எமக்குத் தென்பட்டாலும் உண்மையாகவே எந்தவொரு கல்விமானும் தெரிந்துகொள்ளாத மிகமிக அபூர்வமான கல்விகளை எல்லாம் கற்றவராகவே இருந்திருக்கிறார். இக்கல்வி ஹிறாக் குகை யில் அவர்களுக்குக் கிடைத்தது. இது கலாசாலைக் கல்வியல்ல. இந்த உளநோயின் பெயர்தான் ஷிர்க் என்பது.

இந்த உளநோயை நீக்கும் மருந்தாகக் கலிமாவும், பத்தியமாக விக்கிரகவணக்க நீக்கமும், மருந்து சரிவர வேலை செய்வதற்கு உதவியாய்த் தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு என்ற உணவுகளும் தரப்பட்டிருக்கின்றன. நாம் மருந்தைக் குடிக்காதவரையில் பத்தியமோ, உணவோ நம் நோயைக் குணப்படுத்தாது. இது நம் வாழ்வில் காணுகிற ஒவ்வொரு மனிதர் மூலமும் உணரக் கூடியதாகவே இருக்கிறது. குர்ஆனில் 23:86, 43:9, 31:25, 29:61, 29:63 போன்ற ஆயத்துகளை ஆராய்ந்தால் வானையும் பூமியையும் படைத்துப் போஷிக்கும் இறைவனை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டிருந்த மக்களை நோக்கியே அவர்கள் முஷ்ரீக்குகள் என்று இறைவன் கூறுகிறான். குர்ஆனை எடுத்துப் பாருங்கள். இவர்கள் விக்கிரகத்தை வணங்கியதனால்தான் அப்படி இறைவன் கூறினான் என்று மருட்சியடைய வேண்டாம். அதைப் பின்னால் விளக்குவேன். இந்த முஷ்ரிக்குகளிடத்தில் ஒரு கொள்கையும் ஐந்து செயல்பாடுகளும் இருந்திருக்கின்றன. இவர்களின் கொள்கையை அந்த ஐந்து செயல்களும் உறுதிப் படுத்திக் கொண்டிருந்தன. ஆகவேதான் றசூல் (ஸல்) அவர்கள் அம்மக்களின் கொள்கைகளையும் செயலையும் மாற்றி இறை

நாட்டப்படி முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தை வெகு தெளிவாய் விளக்கி ஆதார நூலான குர்ஆனையும் இறைவனிடமிருந்து பெற்றுத் தந்திருக்கிறார்கள். தங்கள் வாயினால் விவரம் கூறினார்கள். செயலிலும் செய்து காட்டினார்கள்.

இந்த முஷ்ரிக்கீன்களிடத்தில் இருந்த கொள்கைதான் என்ன? அல்லாஹ் என்பவன் அர்ஸில் தனியாக இருக்கிறான். மறைந் திருக்கிறான். சிருட்டிகளின் சகல காரியங்களையும் அவனே இயக்கு கிறான். அவன் அபாரவல்லமையுடையவன். சிருட்டிகள் அவனால் படைக்கப்பட்டவைதான். ஆயினும் அவை அல்லாஹ் அல்லாத தனித்தனி மூலப்பொருட்களாய் இருக்கின்றன. இந்த அல்லாஹ்வை மனதில் நிறுத்த அல்லாஹ்விடம் போய்ச்சேர நெருங்கிச்சேர உதவியாகவே (வஸீலாவாக) உருவத்தை அல்லது விக்கிரகத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இதுதான் அவர்களின் கொள்கை விளக்கம். இன்றுள்ள பெரும்பாலான முஸ்லிம்களில் ஒன்று மட்டும்தான் வித்தியாசம். முஷ்ரிக்கீன்கள் விக்கிரக வணக்கத்தை வஸீலாவாக எடுத்துக் கொண்டிருந்தார்கள். முஸ்லிம்கள் விக்கிர கத்தை நீக்கிவிட்டு தொழுகையை வஸீலாவாக எடுத்துக் கொண்டி ருக்கிறார்கள். செயலில் தான் முஸ்லிமுக்கும் முஷ்ரிக்குக்கும் வேறுபாடு தென்படுகிறதேயன்றி கொள்கை விளக்கம் ஒன்றாகவே இருக்கிறது. இதை இஸ்லாத்தின் கொள்கையென்று கூறமுடியாது. இதன் சரியான விவரத்தை ஆதாரங்களோடு எமது முதல் நூலில் தெளிவாய் விளக்கியுள்ளேன். அவற்றை இங்கே கூறவேண்டிய தில்லை ஆயினும் அவசியமான சில விஷயங்களை மட்டும் இங்கே தருகிறேன்.

(19)

முஷ்ரிக்கீன்கள் கையாண்ட செயல்கள்; விக்கிரக வணக்கம், அவற்றிடம் உதவிதேடல் ஆதரவு வைத்தல், நாமம் சூட்டுதல் அவை இலாபநஷ்டம் தரும் என்று நம்பிக் காணிக்கை செலுத்தல் பலியிடல் போன்றவை தாம். நமது றசூலுடைய காலத்தில் மட்டும்தான் முஷ்ரிக்கீன்கள் இருந்திருக்கிறார்களா? இல்லை. ஒவ்வொரு நபியுடைய காலத்திலும் முஷரிக்கீன்கள் இருந்திருக்கிறார்கள். நபிமார்களின் போதனைகளால் ஒருசில





மக்கள் ஈமான் கொள்ள மீதியானோர் ஒருவரையொருவர் பின்பற்றி இறுதிநாள் வரையும் இருப்பார்கள். எமது றசூலுக்கு முந்திய றசூல்மார்கள் அவ்வக்காலத்திற்கேற்றபடி சிற்சில சீர்திருத்தங்களை மேற்கொண்டார்கள். எமது றசூல் இனிமேல் எவ்வித சீர்திருத்தமும் அவசியமில்லாதபடி பூரணமாய் சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள், அவ்வளவுதான். ஆனால் றசூல் எதையும் புதிதாய்த் தந்ததில்லை. முந்திய நபிமார் எதைக் கொண்டுவந்தார்களோ அதைத்தான் சீர்திருத்தினார்கள். றசூலால் கூறப்பட்ட ஒரு விஷயம் தௌறாத்தில் இருக்கின்றதென்றால் றசூல் அதைக் கொப்பியடித்தார்கள் என்று பொருள் கொள்ளக்கூடாது.

நாம் கூறுவதன் சாரம்தான் என்ன? அல்லாஹ் என்ற மூலப் பொருளுடன் அல்லாஹ் அல்லாத வேறு மூலப் பொருட்களும் உண்டு என்று நம்புவது ஷிர்க்காய் இருக்கிறது. அதாவது ஷிர்க்கின் ஆணிவேராய் இருக்கிறது. உதவிதேடல் வணங்குதல் போன்றவை கிளைவேர்களாய் இருக்கின்றன. வணக்கத்துக்குரிய நாயன் யாரும் இல்லை அல்லாஹ்வைத் தவிர என்று கலிமாவுக்குப் பொருள் கொண்டால் முஷ்ரிக்கீன்களின் கொள்கையே உறுதிப்படுத்தப்படும். எப்படி என்றால் அல்லாஹ் மட்டும்தான் வணக்கத்துக்குரியவன் என்றால் மற்றும் சிருட்டிகள் வணக்கத்துக்குரியவையல்ல என்று ஆகும். சிருட்டி அல்லாஹ் அல்லாததென்றால் அல்லாஹ் அல்லாத மூலப்பொருட்களே சிருட்டியென்றாகும். அப்படியானால் அல்லாஹ் வுடன் அல்லாஹ் அல்லாத தனித்தனிப் பொருட்களும் உண்டு என்றாகும். இதுதான் ஷிர்க்கின் ஆணிவேர். இதைத்தான் குர்ஆன் கலிமத்துல் கபீஸா என்றும் நாற்றக்கலிமா என்றும் விவரம் தந்து கொண்டிருக்கிறது. இஸ்லாம் புரட்டப்பட்ட காலத்தில் யாரோ சிலரால் தான் கலிமாவுக்கு இப்படிப் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. இது உலமாக்களால் உருவானதல்ல.

ஆயினும், பின்வந்த பிக்ஹுடைய உலமாக்கள் இதை ஆராயாமலே இன்றுவரையிலும் ஒருவரையொருவர் கண் மூடித்தனமாய்ப் பின்பற்றுகிறார்கள். காலத்தில் சிறந்தது என்னுடைய காலம் அதன் பின் தாபியீன்களின் காலம், அதற்குப் பின் பொய் பரவிவிடும் என்று றசூலுல்லாவால் கூறப்பட்ட ஹதீஸ் இருக்கிறது. இதைப்போன்ற பல ஹதீஸ்களும் ஆயத்துகளும் இருக்கின்றன.

இந்த நல்லகாலம் றசூலின் மறைவுக்குப் பிறகு சுமார் 30 வருடங்கள்தான். அதன்பிறகுதான் கலிமா புரட்டப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் உண்மையான உலமாக்களுக்குத் தெரியும். லேபில்கள் அறியமாட்டா.

ஆகவே *"வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர"* என்று கலிமாவுக்குப் பொருள் கொள்பவர் எவரோ அவர் குர்ஆன் ஹதீஸுகளின் விதிப்படி முஷ்ரிக்காக இருக்கிறார். அபூஜஹ்லின் கொள்கையை ஆதரிப்பவராய் இருக்கிறார். ஊக்கமளிப்பவராய் இருக்கிறார். இவரோ இவரைப் பின்பற்றுபவர்களோ நிரந்தர நரகுக்குரியவர்கள். ஷிர்க்குடையவர் களின் பாவம் மன்னிக்கப்பட முடியாதது என்பதை குர்ஆன் விளக்குகிறது. 'வானம்முட்டப் பாவம் செய்தாலும், எல்கையை மீறிப் பாவம் செய்தாலும் நான் மன்னிப்பேன், என் அருட்கொடையில் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள் என்றும் ஷிர்க்கை மன்னிக்கமாட்டேன் என்றும், இறைவன் கூறுகிறான். இவற்றை எமது முதல் நூலில் தெளிவாய் விளக்கியுள்ளேன். அங்கு கண்டுதெளிக. மேலேகாட்டிய கொள்கைக்கு மாற்றமாய் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாத எதுவுமில்லையென்று எவர் கலிமாவை விளங்கித் தெளிவு பெறுகிறாரோ அவர் முஷ்ரிகிற்கு மாற்றமான மூ:மினாய் இருக்கிறார். இவர் கூறும் கலிமா தையிபாவாக மணக்கும் கலிமாவாக இருக்கிறது. இவர்தன் தவறுகளால் காபிராக மாற்றமடையலாம். ஆயினும் அது மன்னிக்கப்படக்கூடிய குற்றமே. இந்தச் ஷிர்க் என்பது இப்படியல்ல, இவற்றுக்கு ஆதாரங்கள் உண்டு.

முஷ்ரிக், அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாததுமுண்டு என்று நம்புவதால் அல்லாஹ்வுக்கு இணையை ஜோடியை உண்டாக்கிக்கொள்கிறான். செருப்புடையவார் அறுந்து போனாலும் இறைவனிடத்திலேயே உதவி தேடுங்கள் என்ற ஹதீஸை முஷ்ரிக் வாயினால் கூறலாம். செயல்பட முடியாது. சக்கிலியனின் உதவியால் தான் செருப்பின் வார் தைபட வேண்டும். மூ:மீன் இந்த ஹதீஸை உண்மையாய்க் காண்கிறார். சக்கிலியன் அல்லாஹ்வுடைய (மழ்ஹர்) ஒரு வெளிப்பாடு என்று காணுகிறார். சக்கிலியனிடம் செருப்பைத் தைத்துக்கொள்வார். அல்லாஹ்தான் உதவினான் என்று நம்புகிறார். ஊண், உடை மற்றும் யாவும் இப்படித்தான் இருக்கின்றன. அதாவது முஸ்லிம்களின் லேபிலைப் போட்டுக்கொண்ட முஷ்ரிக் குர்ஆன் ஹதீஸுகளின் எந்த ஒரு





விதியையும் செயல்படுத்த முடியாமல் இருக்கிறான். மூ:மீன் அப்படியல்ல. யாரிடம் எந்த உதவிகிட்டினாலும் அது அல்லாஹ்வின் உதவியே செயலே என்பதை பிரத்தியட்சமாய்க் காண்கிறார். ஏன்? அவர்தான் அல்லாஹ்வையன்றி வேறொன்றிருப்பதாய் அறியவில்லையே. எங்கே? எது? எப்படி? நடப்பினும் அல்லாஹ்வின் செயலே என்று தக்தீரைப் பொருந்திக்கொள்ளும் மூன்றாம் வகுப்பில் நுழைந்துவிடுகிறார்.

இந்த மூ:மீனிடத்தில் *'நான்'* என்னும் உணர்வுகூடக் காலக் கிரமத்தில் இல்லாதொழிந்து விடும். ஏன்? அல்லாஹ்வையன்றி ஒன்றுமேயில்லையென்ற ஈமான் றூஹுடைய ஈமானாய் (ஹகீகத் துடைய ஹக்குல் எகீனாய்) மாறும்போது நான் என்றுணர்பவன் அவனேயன்றி வேறோர் நான் கிடையாது என்று காண்பதால் அவர் தன்னையே இழந்து மௌத்தாகி இறையருளால் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறார். இவர் மவுத்தாகாமல் மவுத்தாகி ஹயாத் தைப் பெற்றிருப்பதால் இவரில் வெளியாகும் செயல் இறைவனின் செயலேயாகும். உப்புக்கல்போல் இருந்த மனிதன் கடலில் விழுந்து கரைந்த உப்புக்கல்லைப்போல் இறையறிவு என்ற ஞானக்கடலில் மூழ்கிவிடுகிறார். இவருக்கும் நரகுக்கும் கேள்விக் கணக்குக்கும் எவ்வித தொடர்புமே கிடையாது. உலகிலேயே இவருடைய விஷயம் முடிவுபெற்று விடுகிறது. இவ்விதமான பூரணநிலைமையை மனிதனுக்கு ஏற்படச்செய்வதே கலிமாவின் நோக்கமாய் இருக்கிறது. எந்த ஓர் அமலும் இந்த நிலைமையை உருவாக்காது.

இறைவனுடன் அவன்னல்லாததும் உண்டு என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. விஞ்ஞானம் இடம்தராது. பகுத் தறிவு இடம்தராது; குர்ஆன் ஹதீஸுகள் இடம்தரா; இஜ்மாஉ, கியாஸ் இடம்தரா.

*குர்ஆன்: 27:64*
*அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? நீங்கள் உண்மை கூறும் உண்மையாளராய் (ஸித்திக்கீன்களாய்) இருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டுவாருங்கள் என்று நீர்கூறும்.*

அவனல்லாத எந்த இலாஹும் இல்லவே இல்லையென்பது குர்ஆன் ஹதீஸுகளில் உள்ள இறுதித்தீர்ப்பாகும். உலகின் எப்பாகத்தில் உள்ள எந்த மதத்தை எந்தக் கல்வியை எந்தக் கலையை நீங்கள் எடுத்துக்கொண்டாலும் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாததும் உண்டு என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது.

*குர்ஆன்: 50:05*
*இவ்வாறிருந்தும் அவர்களிடம் வந்த உண்மையை (வேதத்தை) அவர்கள் பொய்யாக்கி வெறும் குழப்பத்துக்குள்ளாக்கி விட்டனர்.*

*குர்ஆன்: 54:40*
*(மனிதர்) நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை நிச்சயமாக மிக்க எளிதாக்கியிருக்கிறோம். (மனிதர்களில்) நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?*

நாம் கூறுகிற சுத்தமான தௌஹீதை மறுக்கக்கூடிய எந்தவொரு வசனமும் குர்ஆன் ஹதீஸுகளில் கிடைக்கவே கிடைக்காது. அப்படியிருப்பதாய்க் காண்பது வஹ்மேயாகும். இவ்விஷயம் முழுமையையும் ஒரேநாளில் ஒரே நூலில் விளக்கவும் விளங்கவும் முடியாது. காரணம், இஸ்லாத்தின் உண்மை சிதறுண்டு கிடப்பதே. இந்தத் தௌஹீதை ஏற்றுக்கொண்டால் அமலில் ஈடுபாடு கொள்ளமுடியாதே என்று சில அறிஞர்கள் கூட மருட்சியடை கிறார்கள். இது விளங்காமையால் ஏற்பட்ட வெறும் மருட்சியாகும். இன்ஸா அல்லாஹ் இந்த நூலின் இரண்டாவது பாகத்தில் இதை விவரமாய் விளக்கித் தெளிவுபடுத்துவேன். பொறுமையடையவும்.

இந்தத் தௌஹீது விஷயத்தில், உலகில் தோன்றிய பல இன, பல மதங்களிலுள்ள பல மேதைகள் வாழ்கின்றார்கள். கொள்கை ஒன்றேயாயினும் அதை விளக்கும் பாணியிலும் பாஷை யிலும் வேறுபடுகிறார்கள். இவ்விஷயத்தில் என் அனுபவத்தைக் கொண்டு நான் கூறுவதானால் தௌஹீது விஷயத்தில் குர்ஆன் ஹதீஸுகளே முதலிடம் பெறுபவையாயும் விசேட பாண்டித்திய முடையவையாயும் இருக்கின்றன. மனிதனின் பகுத்தறிவு அணு வேனும் மறுக்கமுடியாத படி பூரணமாய் விளக்கம் தருபவை அவைதான். ஆயினும் லேபில் பட்டதாரிகள் இதையறியமாட்டார்கள்.

அன்புப்பெருமக்களே! அறிவுடைய மக்களே! இறைவன் மர்த்தபாக்களால் உயர்ந்தவன் என்று குர்ஆன் கூறுகிறது. மர்த்தபா என்றால் நிலைமை என்று நாம் பொருள் கொள்ளலாம். இந்த மர்த்தபாக்கள் எல்லாம் மூன்று பெரும் பிரிவுகளில் அடங்குகின்றன. அவை அஹது, உஹது, வாஹிது என்பவையாகும். அஹது என்பது உஜூதை தாத்தை மூலப்பொருளைச் சுட்டியதாகும். உஹது என்பது அவனுடைய (நூர்) அறிவு என்பதைச் சுட்டியதாகும். இதையே றிஸாலத் என்றும் கூறுகிறோம். ஹகீகத் முஹம்மதிய்யா





என்று கூறப்படுவதும் இதுதான். வாஹிது என்பது இன்ஸானியாவைக் குறிப்பிடும். இந்த மூன்று மர்த்தபாக்களும் காலத்தினாலோ இடத்தி னாலோ ஒன்றைவிட்டு மற்றொன்று வேறானதேயல்ல. ஆகவே மூன்று என்பதும் உண்மையல்ல. மனித அறிவு விளங்கிக் கொள்வதற்காகவே இப்படிப் பிரித்துக் கூறப்படுகிறது. இந்த மூன்று மர்த்தபாக்களும் உண்மையில் ஒன்றேதான்.

இன்ஸான், ஜின் ஆகிய இருவகுப்பாரும் ஷிர்க் என்ற ஒரு கடினமான உளநோயில் ஊறியிருப்பதால் இவ்வுண்மையை உணராமல் வாழ்கின்றார்கள். இந்த உளநோய் மனிதனின் புலன்கள் வாயிலாகவே உண்டாகிறது. இந்தப் புலன்களால் ஏற்பட்ட மருட்சியை (ஷிர்க்கை) நீக்கிக் கொள்வதற்காகக் கலிமாவும் தொழுகை முதலாம் கடமைகளும் தரப்பட்டிருக்கின்றன. இந்த இபாதத்துகளின் முழுநோக்கம் கலிமாவைக்கொண்டு ஷிர்க்கில் இருந்து விடுபடுவதும் தௌஹீதில் மனிதனை நிலைகொள்ளச் செய்வதுமேயாகும். இந்த இபாதத்துகள் ஆரம்ப மூ.்.மீன்களுக்குரிய பயிற்சித்திட்டத்தின் முதலாவது பகுதிதான். உங்களிடம் அகராதிகள் இருந்தால் ஸலாத் என்ற சொல்லுக்கு என்ன பொருள் தரப்பட்டி ருக்கிறது என்பதைப் பாருங்கள். ஸலாத் என்றால் ஒதுங்கியிருந்து வணங்கல், கல்வத்தில் இருத்தல், மடக்கல், பிரார்த்தனை என்பதை அறிந்துகொள்ளலாம். சாதாரண மனிதன் ஒரு நாளைக்கு ஐந்து வேளை ஸலாத் என்ற ஒதுங்கியிருத்தலில் இருக்கிறான். தெளிவு பெற்ற மனிதர் இறக்கும் வரையிலும் ஸலாத்தில்தான் இருக்கிறார். இதைவிட எத்திவைக்கும் கூட்டம் உளறுவதுபோல குர்ஆனுக்கு மாற்றமாக எதையும் குழப்பியடித்து மனிதனின் சிந்திக்கும் ஆற்றலைப் பறிக்கவோ பாழ்படுத்தவோ வேண்டியதில்லை.

இவ்வுண்மையை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் குர்ஆன் ஹதீஸுகளை உள்ளபடி உணர வேண்டும் என்றால் உலக மேதைகளான முஸ்லீம், கிறிஸ்தவ, எஹுூது, இந்து மேதைகளும், விஞ்ஞான உலகமும் குர்ஆன் ஹதீஸுகளும் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் வேதங்களும் உபநிடதங்களும் ஏகமனதாய் ஏற்றுக்கொண்டுள்ள ஐந்து பிரதானமான தத்துவங்களை நீங்கள் மனதில் புரிந்துகொள்ள வேண்டும்.

1ஆவது தத்துவம்: மௌஜூது மஹ்தூமாகவும்; மஹ்தூபு மௌஜூ தாகவும் மாறாது. இதன் அர்த்தம் உள்ளதாய் இருப்பது இல்லாத தாகவோ; இல்லாதது, உள்ளதாகவோ ஆகாது என்பதே.

2ஆவது தத்துவம்: தாத்தியாத்துத் தாத்தைவிட்டு நீங்காது. இதன் அர்த்தம் சுயதன்மைக்கு அல்லது தோற்றத்துக்கு அவசியமானவை எவையோ அவை சுயதன்மையை அல்லது தோற்றத்தை விட்டும் மாறாது, நீங்காது என்பதே.

3ஆவது தத்துவம்: கல்புல் ஹகீகதி முஆலுன். இதன் அர்த்தம் எதார்த்தமான சுயதன்மை அல்லது நிலைமை அல்லது தோற்றம் மாறுபடுவதோ அழிவதோ முடியாத காரியம்.

4ஆவது தத்துவம்: அஹ்றாலுடைய உஜூது ஜவாஹிறுடைய உஜூதுக்கு ஐனாக இருக்கும். இதன் அர்த்தம் ஆதேயம் என்னும் குணத்தின் உண்மை ஆதாரம் என்னும் உண்மைப்பொருளின் உண்மையாகவே இருக்கும் - அதாவது ஆதாரம் ஆதேயம் என்பவை சொல்லினால் வேறுபட்டிருந்தாலும் உண்மையில் ஆதாரமும் ஆதேயமும் ஒன்றுதான்

5ஆவது தத்துவம்: தாத்து என்ற உஜூது அல்லது ஆதாரம் எப்போதும் அழியாததாயும் அதன் குணமான ஆதேயம் ஒவ்வொரு செக்கனிலும் மாறுபடுவதாயும் இருக்கும்.

இந்த ஐந்து தத்துவங்களையும் சரிவர உணர்ந்து கொள்ளாத ஒருவர் மார்க்க ஆராய்வு செய்வது பிரயோசனம் தராது. குர்ஆன் ஹதீஸ்களோ நல்லறிஞர்களின் பேச்சுகள் எழுத்துகளோ இவருக்குப் பிரயோசனப்படாது. இப்போது நான் விளக்கிக்காட்டிய தத்துவங்களைப் பலமுறை வாசித்துப் புரிந்து கொண்டு எமது பேச்சைக் கவனியுங்கள்.

உஜூது என்பதைத் தமிழில் கூறுவதானால் அதன் கருத்து, உள்ளமை, தரிபாடாய் இருப்பது, முழுமுதற்காரணமாய் அமைந் திருப்பது என்பதே அதன் அர்த்தம். அறபு பாஷையில் வேறு சொற்களால் கூறுவதானால் ஹக்கு, தாத்து, குன்ஹு என்று கூறலாம். இந்த உஜூதை இஸ்லாம் மட்டுமல்லாமல் உலகிலுள்ள எல்லா மதங்களுமே வெவ்வேறு பாஷையில் வெவ்வேறு பாணியில் விளக்கியிருக்கின்றன. இதை யாரும் மறுக்க முடியாது. இந்த உஜூது என்பதை எல்லா மதங்களுமே மூன்று வகையாய் விவரம் தருகின்றன. இங்கே நான் இஸ்லாத்தின் விளக்கத்தை மட்டுமே தருகிறேன்.





1ஆவது: வாஜிபுல் உஜூது
2ஆவது: மும்தனிஉல் உஜூது
3ஆவது: மும்கினுல் உஜூது

இந்த விவரம் தற்கால நடைமுறையிலுள்ள தௌஹீதுக் கிதாபுகளிலும் இடம்பெற்றிருப்பதைத் தற்காலத்திலுள்ள மௌலவி மார்கள் யாவருமே அறிவார்கள். ஆயினும், அவர்களில் மிகப் பெரும்பாலார் விளங்கிக் கொள்ளாதவர்களாய் இருக்கிறார்கள். நாம் அதை ஓரளவு விளக்குவோம்

1ஆவது: வாஜிபுல் உஜூது என்றால், எப்போதும் நித்தி யமாய் மாறுபடாமல் அழியாமல் இருக்கிற உண்மை, ஹக்கு, ஆதாரம் என்பதே அதன் பொருள்.

2ஆவது: மும்தனிஉல் உஜூது என்றால், எப்போதும் இல்லாதது, பொய்யானது, என்பது அதன் பொருள். இது வாஜிபுல் உஜூதுக்கு நேர்முரணானது. இப்படியொன்று இல்லவே இல்லை. ஏனென்றால் உண்மையுள்ள இடத்தில் பொய்யும்; பொய்யுள்ள இடத்தில் உண்மையும்; இருக்க முடியாது. பொய் இல்லாததுதான் அது இருக்கமுடியாது. அப்படியானால் இதை உஜூது என்று ஏன் கூறவேண்டும்? என்று ஒரு கேள்வி பிறக்கலாம். உண்மையான உஜூதோடு ஒப்பிட்டு விளக்குவதற்காக உஜூது என்று கூறப்பட்டுள்ள தேயல்லாமல் இது உஜூதேயல்ல - உஜூது அல்லாதது எப்போதும் இல்லாததேயென்பதை நீங்கள் சரியாய் விளங்கிக்கொள்ள வேண்டும்.

3ஆவது: மும்கினுல் உஜூது என்றால் ஒரு கணம் இருப்ப தாயும் மறுகணம் மறைவதாயும் தென்படுகிற ஓர் உண்மைப் பொருள் என்பதே அதன் அர்த்தம். இதை விளக்கத்துக்காகத் தற்காலிக உண்மை என்று நாம் வைத்துக் கொள்ளலாம். தற்காலிகமான ஒன்றுக்கு நாம் ஏன் உஜூது என்று பெயர் கூறுகிறோம்? இது உண்மையாய் இருக்கிற ஹக்கு என்னும் உஜூது தான். ஆனால், இது கணத்துக்கு கணம் தோன்றி மறைவதால் தான் இதைத் தற்காலிக உஜூது என்கிறோம். இதுதோன்றி மறைவது மனித அறிவில் ஏற்பட்ட மருட்சியாய் இருக்கிறதேயன்றி அது எப்போதும் மறைவதோ, மாறுவதோ இல்லை. அப்படி மாறுபட்டால் - மறைந்தால் உஜூது என்றாகாது. எமது விளக்கத்துக்காகவே தற்காலிக, என்று கூறுகிறோம். இது

இல்லாமை என்ற மும்தனிஉல் உஜூதுடன் சேரமுடியாது. இல்லாததுடன், இருப்பது எப்படிச் சேரும்? ஆகவே இந்த மும்கினுல் உஜூது என்பது, உண்மையான உஜூதேதான். வாஜிபுல் உஜூதுக்கும் மும்கினுல் உஜூதுக்கும் வேறுபாடு கிடையாது. உஜூதின் குணம் அல்லது பண்புதான் மும்கினுல் உஜூது என்று பெயர் பெறுகிறது. குணியை விட்டுக் குணம் எப்போதும் எவ்வகையிலும் வேறுபடாது. (நுட்பமாய் உணர்க.) ஆகவே இதை நாம் ஆதேயம் என்று கூறலாம். ஆதேயம் என்றால், ஆதாரத்தின் பண்பு,குணம், ஸூறத், நாமம் எல்லாமே அதில் அடங்கும்.

(20)

இதை முதலில் சரியாய் அறிவில் அமைத்துக் கொள்ள ஒரு சிறு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். நெருப்பு அல்லது தீ என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இது நெருப்புத்தான் என்று நாம் கூறுவது எதை? பழுப்பு, அல்லது மஞ்சள், அல்லது செந் நிறமாய்த் தென்பட்ட சுவாலையை அல்லது விறகைத்தான். அந்த நெருப்பின் குணம் அல்லது பண்பு எமக்குத் தெரியாது. குணத்தை அறிவதற்காகக் கையை அதில் வைக்கும்போது கை எரிந்து விடுகிறது, வேதனை தாங்க முடியாத நாம் நெருப்புச் சுட்டுவிட்டது என்கிறோம். இப்போது முதலில் நெருப்பின் நிறம் என்ற ஸூறத்தையும் அதன் பின் நெருப்பின் குணத்தையும் அறிந்து கொண்டோம் என்பது உண்மைதான். ஆயினும், நெருப்புச்சுட்டது என்னும்போது, நெருப்பின் குணத்தைத்தான் நாம் உணர்ந்தோமேயன்றி நெருப்பை நாம் காணவே இல்லை. இதே போல நெருப்பின் ஸூறத்தான சுவாலையைக் கண்டுகொண்டுதான் *'நெருப்பைக் கண்டுகொண்டேன்* என்று கூறினோம். உண்மையை நோக்கினால் நெருப்பின் ஸூறத்தை, அல்லது தோற்றத்தைத்தான் நாம் நெருப்பு என்று கூறினோம்.

நாம் கண்ட அந்த வெளிக்காட்சி உண்மையான ஒரு பொருள் போலத் தென்பட்டாலும் அந்த ஸூறத்து கணத்துக்குக் கணம் மாறுபடுவதாய் இருக்கிறது. இந்த ஸூறத்து நெருப்புக்குரியது தான். ஆயினும், அது நெருப்பேயல்ல. நெருப்பின் தோற்றம் அல்லது ஸூறத்தைக் கண்டுகொண்ட நாம் அதன் உண்மை தெரியாதிருப்பதால் அது நெருப்பேதான் என்கிறோம். இதேபோல ஞானத்தைப்பற்றித் தெளிவு பெறாத மூடன், நாய், பன்றி கூட அல்லாஹ்தான் என்கிறான். நெருப்பின் ஸூறத்து மாறுபாடடைவதால் தான் நாம் அதைத் தற்காலிக உஜூது என்கிறோம். முதலில்





நெருப்பின் ஸூறத்தைக் கண்ணினால் கண்டுகொண்டு இது நெருப்பு என்கிறோம். இப்போது கையைத் தீய்த்துக் கொண்டபிறகு, இது நெருப்பு என்கிறோம். தீக்கும் குணம் நெருப்புக்குரிய குணம்தானே? நெருப்பின் குணத்தை ஸ்பரிஸத்தால் அறிந்துகொண்டு இது நெருப்புத்தான் என்கிறோம். இக்குணம் நெருப்புக்குரிய குணம்தானே? இப்போது எமது புலனினாலும் ஸ்பரிஸ அறிவினாலும் நெருப்பின் ஸூறத்தையும் அதன் குணத்தையும் அறிந்தோமேயன்றி, நெருப்பை நாம் அறியவேயில்லை. ஆயினும், நெருப்பின் ஸூறத்துக்கும் அதன் குணத்துக்கும் நெருப்பு என்ற சொல்லை இஸ்திஆராவாக, இரவலாகப் பாவித்திருக்கிறோம். இது பெரும்பாலாருடைய அறிவில் பிடிபடுவதேயில்லை.

நெருப்பின் ஸூறத்தைக் கண்ட கண் அறிவும் நெருப்பின் குணத்தைக் கண்ட ஸ்பரிஸ அறிவும் உண்மையில் அறிவேயல்ல. இது எல்லா ஜீவராசிகளுக்கும் கொடுக்கப்பட்ட இயற்கையறிவாகும். இதுதான் வஹ்மு என்று பெயர்பெறுகிறது. நாம் நெருப்பைப்பற்றி இப்போது தெரிந்துகொண்ட விஷயம் அதன் ஸூறத்தையும் குணத்தையும் தான். ஆனால், நெருப்பு என்று ஏதோ ஒன்று உண்டு என்றும், அதற்குரிய நிறம், பெயர், குணங்களையே அறிந்திருக் கிறோம் என்றும் நெருப்பு என்ற சொல்லினால் சுட்டப்படும் பொருளை நாம் காணவோ அறியவோ இல்லையென்றும் எம்மறிவு இப்போது ஏற்றுக்கொள்ளவில்லையா?

இங்கே நெருப்பு என்ற சொல்லினால் சுட்டப்பட்ட ஏதோ இனம் தெரியாத, அறிவில், அனுபவத்தில் பெற்றுக்கொள்ளாத ஒன்றையே வாஜிபுல் உஜூது என்று இங்கே கற்பனை பண்ணிக் கொள்வோம். இது மனித புலன்களுக்கு எட்டாமல் அறிவில் அமையாமல் இருந்து கொண்டும் அறிவில் எட்டக்கூடியதாயும் புலன்களுக்கு எட்டக்கூடியதாயும் காட்சியளிக்கிறது. பழுப்புச் சிவப்பு நிறமுடையதாயும் சுட்டெரிக்கும் குணம் உடையதாயும் காட்சி யளித்தது. புலன் பொறிகளாலும் அறிவாலும் அறிவது ஓரறிவாகவே இருப்பதால், அதன் ஸூறத்தையும் குணத்தையும் ஒன்றுபடுத்தி இவையிரண்டையும் குணம், ஸிபத்து, பண்பு என்றல்லாம் கூறுகிறோம். இந்த *'ஸிபாத்'* என்பதில் குணமும் ஸூறத்தும் அடங்கியுள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள்.

நெருப்பு பச்சைமரத்திலும் நீரிலும் நிலத்திலும் சர்வ பொருட்களிலும் உண்டு என்பது பகுத்தறிவுக்குத் தெரியும். ஆயினும் இப்பொருட்களில் நாம் நெருப்பைக் கண்ணினாலோ ஸ்பரிஸ உணர்வினாலோ காணப்பதில்லை? இது ஏன்? சுவாலை என்ற ஸூறத்தோ, எரிக்கும் குணமோ, நீரிலும் நிலத்திலும் எமக்குத்

தென்படாமையால்தான் அங்கு நெருப்பு இருப்பதாக நாம் அறிவ தில்லை. இதிலிருந்து நாம் புரிந்து கொள்வதுதான் என்ன? நெருப்பின் ஸூறத்தையும் அதன் குணாகுணங்களையும் கொண்டேயன்றி நெருப்பு என்றொரு பொருள் இருந்துகொண்டிருப்பதாக மனித அறிவு உணரவே முடியாது. ஸூறத், குணம் என்பவை இல்லையானால் ஒரு பொருள் உண்டு என்பது எப்படி நிரூபணமாகும்? இருக்கும் பொருள் எதுவோ அதன் குணாகுணமும் அதனுடன் இருக்கத்தானே வேண்டும். குணாகுணம் இல்லையானால் பொருளும் இல்லை.

மேலும் நெருப்பை நாம் அறிவதானால் நெருப்பு நாமாக இருந்தாலேயன்றி அறியவும் முடியாது. ஏன்? நெருப்பைவிட்டும் இடத்தினால், காலத்தினால் நாம் வேறுபட்டிருக்கிறோம். ஒரு பொருள் இன்னோர் பொருளை விட்டும் வேறாய் இருக்கை யில் அப்பொருளின் குணத்தையும் சூறத்தையும் அறியுமே யன்றி அதன் பூரண உண்மையை உணராது. இது ஒரு தத்துவம். அறிவதானால் அல்லது உணர்வதானால் அறிப வன், அறியப்படும் பொருள், அறிவு இம்மூன்றும் மூன்றென்ற நிலைமை நீங்கி ஒன்று என்ற நிலைமை ஏற்பட வேண்டும். இதுவும் ஒரு தத்துவம்தான்.

இப்போது நோட்டமிட்டுப் பாருங்கள். அல்லாஹ் எல்லாவற் றையும் சூழ்ந்து அறிகிறவன், பார்க்கிறவன், சர்வவல்லமையும் உடையவன் என்ற சொற்களின் அர்த்தம்தான் என்ன? ஏழு வானங்களுக்கு அப்பால் இருக்கிற ஒன்று உலகில் உள்ள ஒன்றை எப்படி அறியும்? உலகில் உள்ள யாவும் அதுவாக இருந்தாலே யன்றி அறியாது. குத்றத்தால் அறிகிறதென்றால் இது ஜாஹிலின் பேச்சு. நாம் விளக்கிய தத்துவங்களைக் கொண்டு நோக்குங்கள். ஒரு பொருள் அப்பொருளாய் இருந்தாலேயன்றி அதன் பூரண உண்மையை அறியாது. நெருப்பு நானல்லாமல் இருந்ததால், நெருப்பின் பூரண உண்மை எனக்குத் தெரியாமல் இருந்தது. நானே நெருப்பாய் இருந்திருந்தால் என்னைப்பற்றி நான் அறிந்திருப்பேன்.

ஆகவே, இறைவன் எல்லாம் அறிந்தவன் என்பது உண்மையானால் அவனே எல்லாமாக இருக்கவேண்டும். சிருட்டிகள் யாவும் அவன்தானே அவையாய் இருக்க அவற்றைச் சிருட்டித்த றப்பு தூயவன் என்று கூறப்படுவது இந்த உண்மை தான். நெருப்பின் தோற்றத்தையும் குணத்தையும் அறிந்த நாம் நெருப்பு என்ற ஒரு பொருள் உண்டு என்று நம்புவது போலவே சர்வ ஆலங்களையும் அவற்றின் குணங்களையும் கண்ட மனிதன்





அவற்றிற்கு ஆதாரமான ஓர் இறைவன் இருக்கவேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறான். இது ஈமான்தான். நெருப்பின் ஸிபத்தைக்கொண்டு நெருப்புண்டு என்றறிந்தது போல இறைவனின் ஸிபத்தென்னும் வெளிப்பாடான சர்வ ஆலங்களையும் கொண்டு இறைவன் இருப்பதை உணர்கிறான்; அறிகிறான். இந்த அறிவு ஒவ்வொரு பொருளையும் வெவ்வேறாய்த் தனித்தனியாய்க் காண்பதால்தான் ஏற்படும். ஆகவே உலகப்பொருட்கள் எதையும் தனித்தனியாய் வெவ்வேறாய்க் காண்பதும் வாழ்வதும் ஈமான்தான் சரியானதுதான். இம்மனிதன் ஈமானைப்பெறக் காட்டுக்குப் போக வேண்டியதில்லை.

ஆனால் நெருப்பின் ஸூறத்தை, குணத்தைவிட்டும் வேறான தொரு பொருள்தான் நெருப்பு என்றும்; அது, அதன் ஸூறத்தையும் குணத்தையும் விட்டுப்பிரிந்திருக்கிறது என்றும் நாம் கொண்டால், நம்மை மிருகம் என்று கூறுவதா? மனிதன் என்று கூறுவதா? குணம்தான் குணியைவிட்டுப் பிரியாதே. நாம் முதலில் கூறிய தத்துவ விளக்கம் என்ன? ஆதாரத்தை (குணியை) விட்டு ஆதேயம் (குணம்) ஒருபோதும் பிரியாது விலகாது என்பதுதானே. சர்வ ஆலங்களும் றப்பின் ஸிபத்தே (குணாகுணமே) என்றால் இந்தக் குணாகுணங்களை விட்டு (ஸிபத்தைவிட்டு) அவன் எங்கே ஒளித்துக் கொண்டிருப்பான்? அவன் ஒளிந்து மறைந்து கொள்ள இடம் ஏது? மெய்தான் அர்ஸில் இருக்கலாம். சரிதான் சர்வ ஆலங்களையும் விட்டு அர்ஸு வேறானதென்றால் அர்ஸில் இருக்கிற அவனுக்கு ஆலத்தைப்பற்றிய விவரம் எப்படித் தெரியும்? சர்வத்தையும் அவன் அறிந்தவன் என்று நாம் குர்ஆனில் ஓதுவது பிழையாய்விடும். விஷயம் அப்படியல்ல. அர்ஸு என்பது சர்வ ஆலங்களையும் கடந்த ஒன்றல்ல. சர்வ ஆலங்களும் அர்ஸும்கூட அவனில் அவனுக்காக அவனாகவே இருக்கிறது.

இப்போது பாருங்கள், நெருப்பு என்ற சொல்லினால் நாம் உணர்ந்து கொண்ட பொருள் அரூபியாயும் அதன் குணாகுணங்கள் ரூபியாயும் இருக்கின்றன. நாம் கூறும் நெருப்பு என்ற சொல் கூட உண்மையான நெருப்பின் இலாஹியான (சொந்தமான) பெயரல்ல. அதற்குப் பெயர் கிடையாது. அப்பெயரை இஸ்திஆரா (இரவலாக) கௌனியாகத்தான் நாமமிட்டிருக்கிறோம். பெயரில்லாத நிலைமையை நெருப்பின் உஜூது குன்ஹு என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த உஜூதாய் இருக்கும் நெருப்பு தன்னிலேயே, தனக்காக, தன்குதறத் என்ற வல்லமையைக் கொண்டு ஸூறத்தாயும் குணமாயும் காட்சியளிக்கிறது.

இதைப்போலவே வாஜிபுல்உஜூது என்னும் அல்லாஹ் தான் என்றும் இருந்தபடியே இருந்துகொண்டு, அதில் இயல்பாய் அமைந்துள்ள குதறத் என்ற சக்தியைக் கொண்டு, தன்னிடத்தே, தனக்காக, சர்வ ஆலங்களுமாய் தானே வெளியாகியிருக்கிறான். காட்சிப் பொருளான சர்வஆலங்களும் அந்த றப்பின் ஸூறத்தாய் இருக்கிறது. சர்வ ஆலங்களிலுமுள்ள சர்வசக்தியும் அந்த வுஜூதின் குணமாய் இருக்கிறது. அதன் குன்ஹூ என்ற சுயநிலைமை, புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாததாய் இருக்கிறது.

இந்த றப்பு மறைந்தது போல் தென்படும் நிலை மையை (மர்த்தபாவை) பாதின் என்கிறோம். புலன்களுக்குத் தென்படும் தோற்றத்தை (மர்த்தபாவை) லாஹிர் என்கிறோம். அதன் சக்தி புலன்களுக்கெட்டாமல் அறிவுக்கெட்டுவதால் இதை ஸிபத்துடைய ஆலம் என்கிறோம். எமது கண் லாஹிறையும் அறிவு பாதினையும் சேர்ந்ததாயும் இருப்பதால்தான் இந்த நாமங்களை நாம் கையாளுகிறோம். இதன் ஆரம்பத்தை அறியமுடியாதிருப்பதால் ஆதி (ஆதியற்றது) என்றும், முடிவைத் தெரிந்துகொள்ள முடியாதிருப்பதால் அனாதி (முடிவற்றது) என்றும் கூறுகிறோம். எல்லாம் அதுவாகவே இருப்பதால் எல்லாம் அறிந்தது என்கிறோம்.

றசூல் (ஸல்) அவர்களால் மக்களிடையே பிரச்சாரம் ஆரம்பமானபோது (நபியின் 42ஆவது வயதில்) முதன்முதலாக லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைக் கூறி அதற்கு ஆதாரமாய் குர்ஆனில் உள்ள 57:3ஆம் ஆயத்தான “*ஹூவல் அவ்வலு வல்ஆகிறு வல்லாஹிறு வல்பாதினு வஹூவ பிகுல்லிஷையின் அலீம்*” என்ற ஆயத்தை ஓதிக்காட்டியிருக் கிறார்கள். இதன் அர்த்தம் ஆதியும் அவனே, அந்தமும் அவனே, தோற்றுவதும் அவனே, மறைந்திருப்பதும் அவனே, அவன் சகலவற்றையும் அறிந்தவன் என்பதே. இதன் பிறகுதான் நீங்கள் நீர் கொள்ளும் பாத்திரத்தைக் கயிற்றில் கட்டி கீழ்ப் பூமியாகிய பாதாளத்துக்கு அனுப்புவீர்களேயானால் நிச்சயமாக அது அல்லாஹ்வின் பேரில் விழும் என்று கூறி விளக்கியிருக்கிறார்கள். இந்த விவரங்கள் எமது முதல் நூலில் இடம் பெறுகின்றன. இங்கே நான் அவற்றை விவரிக்கவில்லை.

இவ்விஷயத்தில் நமக்கு அவசியமானது மூன்று விஷயம் தான். முதலாவது கலிமா. அதை உறுதிப்படுத்தும் முதலாவது ஆதாரம் குர்ஆன், அடுத்தது ஹதீஸ் என்பதே. சில தப்ஸீர் களில் லாஹிர் என்பதற்கு வெளியானான் என்று பொருள்





கூறப்பட்டிருக்கிறது. அது பிசகு. வெளியாவதற்கு இடமும் அவசியமும் இறைவனுக்கு வேண்டியதில்லை. ஆகவே தோன்றுவது, தென்படுவது, சுட்டப்படுவது என்பதுதான் சரியான தமிழ். வெளியானான் என்றால் முன்பு முடியாமல் இருந்தான் என்றாகும். ஆயினும், பாமர மக்களுக்கு வெளியானான் என்பதை விளக்காமல் வெளியானான் என்று கூறுவது தவறு.

நாம் இங்கு கூறிய விவரத்தை நிரூபிக்க எண்ணிலடக்க முடியாத அவ்வளவு அதிக ஆதாரங்களைத் தரலாம். குர்ஆன் ஹதீஸூகளின் உண்மை நோக்கம், இதை மனித அறிவுக்கு விளக்கம் தருவதே. இது பகுத்தறிவுக்கு அணுவேனும் முரணில்லாத விஷயம்தான். இதை ஒருவர் ஏற்கவில்லையென்றால் அவர் அறிவுடையவருமல்ல குர்ஆன் ஹதிஸூகளை ஏற்றுக் கொண்டவருமல்ல. அவருக்கும் நமக்கும் பேச்சுக் கிடையாது.

அல்லாஹ் என்பவன் என்றும் இருந்தது போலவே இருக்கிறான் என்பதன் அர்த்தம் என்னவென்றால், நாம் முன்பு கூறிய உஜூது அதன் சக்தி, நாமம், ஸூறத் என்ற எவ்வித வேறுபாடுமற்ற தனித்த ஒன்றாகவே (அஹதாக, ஏகமாக) இருக்கிறது. காலம் என்பது, உஜூதின் சக்தியாயும், இடம் அதன் அஸ்மா என்ற ஸூறத்தைச் சேர்த்ததாயும் இருப்பதால், உஜூது எப்போது உண்டோ, அப்போதே அதன் குத்றத்தும் ஸூறத்தென்னும் அஸ்மாவும் அப்போதே அதனிடம் உள்ளதுதான். முன்பின் என்பது அதனிடமில்லை. முன்பின் என்பது மனித அறிவு காலத்தில் கட்டுண்டிருப்பதால் ஏற்படுகிற மருட்சியாகும். உள்ள காலம் நிகழ்காலம் மட்டுமே. அதுதான் அல்லாஹ் என்பது.

## (21)

இறைவன் வெளியாகியிருக்கிறான் என்பதில் இஸ்லாத் துக்கும் பிற மதங்களுக்கும் இடையில் வேறுபாடு தென்படுகிறது. அதாவது உலகில் உள்ள சர்வமதங்களும் மூலப்பொருள் ஒன்றேயொன்றுதான் என்பதை ஏகமனதாய் ஏற்றிருக்கின்றன. ஆயினும் அப்பொருள் மனித அறிவில் அமையக்கூடிய விவரத்தில் வேறுபடுகின்றன. அதாவது, அல்லாஹ் எப்படி வெளியாகியிருக் கிறான் என்பதில்தான் வேறுபடுகின்றன. இதற்குச் சில உதாரணங்களை எடுப்போம். பல்லாயிர வருடங்களின் முன் தோன்றி மறைந்த சங்கரர் என்பவர் உண்மைப்பொருளின் நிழல்தான் சர்வஉலகங்களும் என்று கூறுகிறார். இன்னொருவர் சிலந்தி வெளியிடும் நூலைப்போல உலகம் இருக்கிறது என்றும், சிலந்தி உண்மைப் பொருள் போலும் அதன் நூலைப்போல் வெளிவந்ததே உலகம் என்றும் கூறுகிறார். மேலும், பிரளயத்தின்போது சிலந்தி

தன் நூலைத் தன்னுள் இழுத்துக்கொள்வது போல உண்மைப் பொருளும் தன்னிடத்தே பிரளயத்தின்போது உலகை உள்வாங்கிக் கொள்கிறது என்றும் கூறுகிறார்.

இன்னொருவர், மண்விகாரப்பட்டு பானையாவது போல உண்மைப் பொருள் விகாரப்பட்டு உலகாய் இருக்கிறது என்கிறார். இன்னும் பல கூறலாம். இவ்விஷயத்தில் ஏதோ ஓர் உண்மையுண்டு என்பதில் முஸ்லீம்களுடன் இவர்களும் சமம்தான். ஆயினும் தத்துவவிளக்கத்திலும் ஞானத்திலும் இஸ்லாம் மற்ற மதங்களை விட்டும் வேறுபடுகிறது. இவ்விஷயங்களில் எல்லா மதங்களையும் இஸ்லாம் மறுக்கிறது. *'ஏகமான (ஒன்றே) உண்மைப் பொருள்'* என்று ஏற்றுக்கொண்ட மக்கள் மூ∴மீன்களே என்று குர்ஆன் கூறுவதால்; சங்கரர், அரிஸ்டோட்டில், டோல்ஸ்டாய், சோக்ரட்டீஸ், கென்பியூஸியஸ் போன்றோரையும் மூ∴மீன்களாய் ஏற்க வேண்டியதாய் இருக்கிறது. குர்ஆன் ஹதீஸுகளில் நிறைய ஆதாரங்களுண்டு. ஆயினும், இந்தப் பிறமத மூ∴மீன்களுக்கும் முகம்மது றசூல்(ஸல்) அவர்களைப் பின்பற்றிய மூ∴மீன்களுக்கு மிடையில் வேறுபாடுண்டு என்பதையும் குர்ஆன் ஹதீஸ்கள் விவரம் தருகின்றன.

பிறமத மூ∴மீன்களையும் இஸ்லாத்திலுள்ள மூ∴மீன்களையும் நோக்கி ஆராய்வு செய்தால் ஓர் உண்மை புலனாகிறது. அதாவது பிறமத மூ∴மீன்கள் தௌஹீதைப் பூரணமாய் ஒத்துக்கொண்டிருந்தாலும்கூட முற்றாய்ச் ஷிர்க்கில் இருந்தும் விடுபடவில்லையென்பது தென்படுகிறது. இதை இறைவன் மன்னித்துப் பொருந்திக்கொண்டுதான் இவர்களை மூ∴மீன்களுடன் சேர்க்கிறான். ஆர்ப்பளவாவது ஈமானுடையவன் கரைசேர்க்கப்படுவான் என்பது றசூலுடைய ஹதீஸ்.

இந்தப் பிறமத மூ∴மீன்களின் கொள்கை விளக்கத்தை நீங்கள் அறிந்திருப்பது அவசியமாகிறது. இல்லாவிட்டால் எமது இஸ்லாத்தின் கொள்கையை விளங்கிக் கொள்ள முடியாது. அல்லாஹ்வின் நிழல்தான் உலகம் என்றால் அல்லாஹ் அல்லாத இடமும் அல்லாஹ்வுடன் உண்டு என்றாகும். இது ஷிர்க்கில்தான் நிலைப்படுத்தும். தௌஹீதில் நுழைய இடம்தராது. அல்லாஹ் சிலந்தியைப் போல் உலகை வெளியாக்கினான் என்றாலும் பிசகுதான். நூல் வெளியாகச் சிலந்தியுடன் சிலந்தியல்லாத இடமும் வேண்டும். இதுவும் ஷிர்க்கிலேயே நுழைக்கும். களிமண்போல்





விகாரப்பட்டான் என்றால், அதுவும் பிசகுதான். ஒரு பொருள் மாறுபடுவதானால் இன்னொரு பொருள் அதனுடன் இருக்கவேண்டும். இல்லாவிடில் இடைத்தாக்கம் நிகழாது. விகாரம் மாறுபாடு என்பவை ஏற்பட இடைத்தாக்கம் வேண்டும். தன்னுடன் இன்னொரு பொருளை வைத்துக்கொண்டிருப்பது சிருட்டியாய் இருக்குமேயன்றி உஜூதாகாது. ஆகவே, இதுவும் ஷிர்க்கிலேயே நுழைக்கும். இஸ்லாமோ இக்கொள்கைகள் யாவையும் உதறித்தள்ளிவிட்டுத் தனக்கென்ற ஒரு பாதையைத் தந்திருக்கிறது. மேலே காட்டிய இக்கொள்கைகளெல்லாம் *'ஹுலூல் இத்திஹாது'* என்று தீர்ப்புக்கட்டியிருக்கிறது.

இஸ்லாம் காட்டும் தௌஹீது என்பது இப்படியல்ல. *'இஷ்ராக்'* என்பது *'ஷிர்க்'* என்ற சொல்லடியாக *'இப்ஆலு'* என்னும் ஒலிநிறையில் பிறந்த ஓர் அறபுச்சொல்லாய் இருப்பதுபோல, தௌஹீது என்பதும் *'அஹ்ஹத'* என்ற சொல்லடியாய்ப் பிறந்த *'தப்ஈலுன்'*, *'இப்ஆலுன்'* என்ற ஒலி அளவைகளால் நிறுத்தெடுக்கப் பட்ட பிறவினைப் பெயர்ச்சொல்லாய் இருக்கிறது. தௌஹீது என்றால் மனிதனுடைய வஹ்மு என்ற பேதபுத்தியில் பலவாயும் பல தத்துவங்களாயும் காண்பதைப் பகுத்தறிவைக் கொண்டு ஒன்றாய், ஒரே தத்துவமாய் ஏகமாய்க் காண்பது என்பதே அச்செயலின் உண்மையான அர்த்தமாகும். இதைத்தான் ஒருமைப்படுத்தல், ஏகமாக்கல் என்று கூறப்படுவது. எமது முதல் நூலில் இதன் விவரம் தரப்பட்டுள்ளது.

இதன்சாரம், ஏதோ ஒன்று உண்டு, அதனுடன் வேறுஎதுவுமே இல்லையென்று அறிந்து அனுபவவாயிலாய்ப் பெறுவது என்பதே. ஷிர்க் என்பது இதற்கு முரணானது. உள்ள ஒன்றைச் சாரக்கண்ணன் இரண்டாய்க் காண்பதுபோல்; உள்ள ஒரு உண்மையைப் பலதாய்க் காண்பதே ஷிர்க் என்பது. ஷிர்க் வேறு, குபிர் வேறு. ஷிர்க் மன்னிக்கப்படாத குற்றம், குபிர் மன்னிக்கப் படக்கூடிய குற்றம். நாம் கூறிய உண்மையைப் பகுத்தறிவு பூரணமாய் ஏற்று அமுல்படுத்தக் கூடிய வழிவகைகளை விளக்கிக்கொண்டிருப்பது இஸ்லாமும் அதன் அடிப்படைக் குர்ஆன் ஹதீஸுகளும்தான். இந்தப் பெருமை உலக மதங்கள் எதற்குமே கிடையாது. ஆனால் இன்றைய முஸ்லீம் உலகு இதை மறந்துவிட்டு எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது.

நாம் கூறும் இஸ்லாத்தின் முதலாவது மந்திரம்தான் கலிமத்துத்தையிபா என்பது. இக்கலிமா லா என்ற வாளால் உட்படை வெளிப்படையான சர்வ ஷிர்க்கையும் ஒரே நொடி யில் வெட்டிவீழ்த்தி விடுகிறது. இலாஹுஃ பொதுப் பெயர்ச் சொல் என்பது உண்மைதான் என்றால்; இலாஹுஃ இல்லை யென்னும் போது நாய், பன்றி, நான், அவன் எல்லாம் எங்கேயிருக்கிறது? எல்லாம் அழிந்து விட்டன. பிரளயம் உண்டாய்விட்டது. வானம், பூமி, றப்பு, றஹ்மான் எதுவும் கிடையாது. இல்லல்லாஹ் என்னும் போது அல்லாஹ் மட்டுமே இருக்கிறான். அவனுடன் வேறு எதுவுமே கிடையாது என்று பெறப்படுகிறது. இங்கே இஷ்றாக் என்ற சொல்லுக்கோ ஷிர்க் என்ற சொல்லுக்கோ இடம் கிடையாது. அந்தச் சொற்களிறந்துவிட்டன. எப்படி இறந்து விட்டன? அல்லாஹ்வை யன்றி ஒன்றுமேயில்லை என்னும்போது சொற்கள் ஏது? பொருட்கள் ஏது? அவனுடன்தான் எதுவுமேயில்லையே. இதுதான் இஸ்லாத்தின் உயர்பதவி. ஈமான் என்பது இது தான். ஆனால் இது அறிவில் அமைகிறதேயன்றி அமுல் செய்யமுடியாமல் இருக்கிறது. இதை அமுல்படுத்துவது எப்படி? இதற்கு இஸ்லாம் வழிகூறுகிறது. நிரூபித்துக் காட்டியிருக்கிறது. இதைச் சமீபத்தில் கண்டறிவோம்.

இந்தத் தௌஹீதினால் பெறவேண்டிய பூரணத்தன்மையை ஷிர்க் என்ற நோய் பட்டமரமாக நரகின் எரிகட்டையாக மாற்றி விடுகிறது. ஆகவே இந்த ஷிர்க்கையும் தௌஹீதையும் விளங்கிக்கொள்ளாமல் எம்மை நாம் மூ.ஃமின் என்று கூறமுடியாது. இன்னொரு விஷயம், தௌஹீது என்ற அரபுச்சொல்லுக்குத் தமிழில் பாவிக்கப்படக்கூடிய சொற்கள் ஏகத்துவம், அத்வைதம் என்பவை தான். ஏகத்துவம் என்றால் ஏகமாயுள்ளது ஒரே தத்துவம் என்பது பொருள். தத்துவம் என்றால் உண்மை ஹக்கு என்பது அதன் அர்த்தம். அத்துவைதம் என்றால் (அ + துவிதம் = அத்வைதம் அல்லது அத்துவிதம்) என்பதாகும். இரண்டல்ல ஒன்றுதான் என்பது அதன் பொருள். இதை தமிழ் அறிவு கற்றவர்களுக்குத் தெரியும். ஒருசில மூடர்கள் தௌஹீதுதான் இஸ்லாத்தின் கொள்கை யென்றும் அத்துவிதம் இந்துக்களின் கொள்கையென்றும் பாமர மக்களைக் குழப்புகிறார்கள். கொள்கை விளக்கமே தெரியாத மூடன் வேறு எதைத்தான் கூறுவான்? தமிழ்ப்பாஷையின் விவரமாவது தெரியவேண்டுமே. தத்துவஞானி லுக்மான் (அலை) அவர்கள் தம் மகனை நோக்கி "அன்பு மகனே! அறிஞர்களின் சபையைப் பற்றிக்கொள். தத்துவ ஞானிகளின் உரைகளைச் செவியுறும்.





ஏனெனில் மரித்த பூமியை மழையின் மூலம் உயிராக்குவது போல மரித்த மனதை ஞானஒளியால் அல்லாஹ் உயிர்ப்பிக்கிறான்" என்று போதித்தார்கள் என றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபீ உமாமா (றலி)
ஆதாரம்: தப்ரானி.

இப்போது விஷயத்துக்கு வருவோம். '*நான் மீம் இல்லாத அஹமது*' என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் எல்லோ ருக்கும் தெரிந்ததுதான். மீமை நீக்கிவிட்டால் அஹது என்பதே கருத்து. நான் என்று குறிப்பிடப்பட்டது எதுவோ அது அஹது என்ற தாத்தாக இருக்கிறது. அதில் இயல்பாய் அமைந்திருந்த அறிவு நூறாய் இருக்கிறது. உஹது என்பதும் இதுவே. ஸிபத் என்பதும் அதுதான். அதன் சக்தி வெளியாகும் ஸ்தானம்தான் ஸூறத் என்ற உடலாய் இருக்கிறது. இது வாஹிதெனும் நாமமாய் இருக்கிறது. இந்த அஸ்மா என்ற தோற்றம் இப்போது நம்மிடமில்லாமல் மறைந்து விட்டது. இது ஆதேயம் என்பதாகும். தோன்றுவதும் கணத்துக்குக் கணம் மாறுபாடடைவதும் இதன் இயல்பு. நூறாக, குத்றத்தாக இருந்ததுதான் றிஸாலத் என்பது. இது மறைவதும் அழிவதும் இல்லை. ஆயினும் குறைபடுவதும் நிரப்பமடைவதும் உண்டு. குறையும் போது ஷிர்க்கும் நிறைவாய் இருக்கும் போது தௌஹீதும் நிலைபெறுகின்றன. இத்தனைக்கும் மூலகாரணமாய் இருந்த நான் என்பது அறிவுக்கெட்டாமலே இருந்தது; இருக்கிறது.

*குர்ஆன்: 21:107*
*"வமா அற்ஸல்னாக இல்லா றஹ்மத்துன்லில் ஆலமீன்"*

என்று இறைவன் கூறுகிறான். *"அகிலமனைத்துக்கும் றஹ்மத்தாகவும் றசூலாகவும் உம்மை அனுப்பினோம்"* என்பதே அதன் கருத்து. றஹ்மத்தும், றிஸாலத்தும் ஒன்றாயிருக்கும் போதும் அவற்றை வெவ்வேறு பிரித்து இறைவன் கூறுகிறான். இயற்கைத் தத்துவங்களான மண், தண்ணீர், காற்று, நெருப்பு போன்ற முதலாம் பொருட்களைக்கொண்டு, எல்லா மனிதரும் அனுபவிக்கும் பொதுப்படை உபயோகத்தையே நாம் றஹ்மத் என்று அறிந்திருக்கிறோம். ஆயினும் இது றஹ்மத்தின் ஆரம்பம்தான். இந்த றஹ்மத்துக்கு ஓர் உச்சநிலையும் உண்டு, இதுதான் றிஸாலத் என்பது. இது றஹீமியத் என்ற விசேட கிருபையாகும்.

றஹ்மத் என்பது இல்லையானால் உலகம் அழிவடைந் திருக்கும். றஹ்தமத்தைக் கொண்டே சர்வ ஆலங்களும் நிலைப்பட்டி ருக்கின்றன. றிஸாலத்தில்லையானால் பகுத்தறிவே இல்லாத மிருகங்கள், தாவரங்கள் மட்டும்தான் வாழமுடியும். ஆகவே றஹ்மத் இருப்பதானால் இன்ஸுூம், ஜின்னும், றஹ்மத்தும், றிஸாலத்தும் இருந்தே ஆகவேண்டும். ஆகவே அஸ்மாவாய் இருந்த றசூலின் தோற்றம் எம்மிடம் இல்லை என்பது உண்மையானாலும் றிஸாலத் அழிவுபடவோ ஒளிந்துகொள்ளவோ இல்லை. இது இன்றும் இருந்து கொணடுதான் இருக்கிறது. இந்த றிஸாலத்திலுள்ள ஒவ்வோர் அணுப்போன்ற கதிர்தான் ஒவ்வொரு மூ.ஃமீனிலும் இடம் கொள்கிற தௌஹீது என்னும் ஈமானின் அறிவாக இருக்கிறது. *“அற்வாஹுுடைய ஆலத்தில் தெறித்த நூறின் துளி எந்த றூஹுுவில் பட்டதோ அந்த றூஹுு ஈமான் கொண்டதாய் அமையும்”* என்ற ஹதீஸின் ஸாரம் இதுதான்.

சர்வ ஆலங்களும் றஹ்மத்தைக் கொண்டும் றிஸாலத் தைக் கொண்டும் தரிபட்டிருப்பதால் இவற்றிற்கு மூலாதாரம் நூறாய் இருக்கிறது. இந்த நூறின் பிரகாசம் அணுவுமில்லையானால், உலகம் அழிந்துவிடும். மனிதனுக்காகவே உலகம். அல்லாஹ் என்று கூறுபவன் ஒருவனாவது இருக்கும்வரை உலகம் அழிவு பெறாது என்பதன் இரகஸியம் இதுதான். இந்த நூர் என்பதே அப்தையும் றப்பையும் பிரிக்கும் தானமாயும் இருக்கிறது. ஒரு பொருளை இரண்டாய்ப் பிரிப்பதோ இருபொருளை ஒன்றாய்ச் சேர்ப்பதோ இதன் கருத்தல்ல. அதாவது அறிவின் ஆரம்பம் (அல்லது ஈமானின் ஆரம்பம்) றப்பு வேறு; அப்து வேறு என்ற துவித உணர்வோடு ஆரம்பமாகி இரண்டற்ற ஒன்றுக்கே இவ்விரு பெயர்களும் என்ற முடிவோடு ஈமான் முடிவு பெறுகிறது. இந்த நூர் என்பது உஜுூதாகவும் உஜுூதின் குணமாகவும் அதன் அஸ்மாவாகவும் இருப்பது அறிவில் அமையக் கூடியதுதான், ஒரு கண்ணோட்டத்தில் உஜுூதாவும், வேறு ஒரு கண்ணோட்டத்தில் சிருட்டியாயும், இன்னொரு கண்ணோட்டத்தில் அப்துக்கும் றப்புக்கும் இடைப்பட்டதாயும் தென்படுகிறது. இது மனித அறிவின் மருட்சியால் ஏற்பட்ட மயக்கமேயன்றி உண்மையல்ல. இங்கே *“படைத்தவற்றில் முதலாவது படைக்கப்பட்டது என் நூறே”* என்று றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸை ஞாபகம் செய்து பாருங்கள்.





தாத்து என்றும் நூர் என்றும் இருந்த ஏதோ ஒன்றுதான் அஸ்மா என்ற உடலாயிருந்த முகம்மது(ஸல்) அவர்களுக்குச் சிபத் என்ற வலிமையைக் கொண்டு வஹி அறிவித்தது. ஆகவே, *“அனுப்பப்பட்ட தூதனும் தானாய், அனுப்பிய றப்பும் தானாய் பெற்றுக்கொண்ட றசூலும் தானாய் தன் நப்ஸிடத்திலேயே அந்த றசூல் இருந்தார்கள்”* என்று ஆரிபுகள் கூறுவது சரியான உண்மைதான். ஆனால், இதை விளங்கிக்கொள்ள அறிவு வேண்டுமே. இந்த விவரத்தை முன்னிட்டுத்தான் அவர்களைக் காத்தமுன் நபி என்றும் முத்திராங்கமான நபி என்றும் கூறப்படுகிறது. இந்தக் காத்தமுன் என்பது முழுமை பெற்ற றிஸாலத் என்று பொருள்படும். இந்த உண்மை இனிமேல் வேறு எந்த நபியினாலும் கொண்டுவரத் தேவையில்லாதபடி நிரப்பம் பெற்றதாய் இருக்கிறது. ஆகவே, இனிமேல் மார்க்கத்தை விளக்கிக்காட்ட வலிமார் மனிதர்கள் தேவையே அல்லாமல் புது நபிமார்கள் அவசியமில்லை.

முற்கால நபியுடன் அல்லது அதைவிடவும் உயர்வுள்ள மனிதர்களும் றசூலின் உம்மத்தில் உண்டு. ஆயினும், அவர் களுக்கு நபி என்றோ, றசூல் என்றோ பெயர் கிடையாது. இவர்களின் பொதுவான பெயர் ஒலி என்பது. இவர்களுக்கேற்படும் வஹிக்குப் பெயர் இல்ஹாமத், இல்முல்லத்துன்னி என்பது. ஆகையால்தான் *‘இன்று நாம் உங்கள் மார்க்கத்தைப் பூர்த்தியாக்கினோம்’* என்று இறைவன் கூறுகிறான். இப்போது நமக்கு வேண்டியவர்கள் நபிமார்களல்ல; மார்க்கவிளக்கம் தரக்கூடிய ஒலிமார்களே.

நாம் கூறிய இந்த தௌஹீதுடைய இல்மின் பெயர்தான் ஹகீகத்துடைய இல்மு என்றும் தஸவ்பு என்றும், முகாஸபத்துடைய இல்மு என்றும் கூறப்படுவது. இந்த இல்மு இன்றுள்ள பெரும்பாலான மதரஸாக்களில் ஊட்டப்படுவதில்லை. இவர்கள் கற்றுக்கொள்ளும் இல்மு இபாதத்துடைய இல்மாகும். இதை முஆமலாத் என்று கூறப்படும். நாம்கூறிய தௌஹீதில் அணுவும் பிசகாமல் இருந்து கொண்டுதானே றசூல் (ஸல்) ஷரீயத்தையும் செய்து காட்டியிருக்கி றார்கள். அவர்களுடைய எந்த நடையுடைபாவனையும் குர்ஆனா கவே இருந்தது என்று ஆயிஷா (ஸித்) அறிவிக்கிறார்கள். இஸ் லாத்தை நீங்கள் அறிந்துகொள்வதானால் ஆயிஷா (ஸித்) அவர்களை விசாரணைபண்ணித் தெரிந்து கொள்ளுங்கள் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். மிக நீண்ட காலமாக

இவ்வுண்மை மறைந்து கிடப்பதால் தற்காலத்திலுள்ள பெரும் பெரும் மௌலவிகள் கூட இதை அறியாதவர்களாய் இருக்கிறார்கள். இது ஓர் புது மார்க்கம் என்கிறார்கள்!

(22)

ஒன்றைத்தவிர ஒன்றுமே இல்லையென்றால் அல்லாஹ்வும் பன்றியும் ஒன்றுதானா? மலமும் ஜலமும் அல்லாஹ்தானா? ஏவல் விலக்கல் தேவையில்லையே என்றெல்லாம் உங்களறிவு குழம்பு கிறது என்பதை இறை உதவியால் நான் அறிவேன். இந்த விதமான பல கேள்விகளுக்கு எமது முதல் நூலில் ஆதாரங்களோடு விளக்கி யுள்ளேன். அங்கு கண்டு தெளிவு பெறுங்கள். ஒன்றைமட்டும் இங்கே விளக்குகிறேன். இவ்வறிவு மிகத் துல்லியமானதால், குத்பா ஓதும் போது நித்திரை தூங்கி விழிப்பதுபோல இல்லாமல் முழுக் கவனத்தையும் இப்பேச்சில் செலுத்துவது அவசியமாகும். தூக்க மயக்கிலோ வஹ்மிலோ மயங்கிவிட்டால் நான் பொறுப்பாளியல்ல.

அல்லாஹ்வுடைய நல்லடியார்களான ஒலிமார்கள் (சேகு முறப்பிகள், குத்துபுல் அக்தாபுகள், குத்புகள், ஹுறபாக்கள்) எந்த நிலைமையில் உள்ளவர்களானாலும் குர்ஆன் ஹதீஸை ஏற்றுக் கொண்ட எந்த ஒரு மூ.்.மீனும் எந்த ஒரு பொருளையும்; அது, அல்லாஹ்தான் என்று கூறமாட்டார்கள். நபிமார்களில் சிலரை இறைவன் அவனுடைய சிற்சில திருநாமங்களைக் கொண்டு கனப்படுத்திக் கூறியிருக்கின்றான். ஆனால், அல்லாஹ் என்ற நாமத்தை எந்த ஒரு பொருளுக்கும் பாவித்திருப்பதாகக் குர்ஆன் ஹதீஸ்கள் விளக்கம் தரவில்லை. கலிமாவைக் கொண்டு நோக்கி னாலும், குர்ஆன் ஹதீஸுகளை நோக்கினாலும் எந்த ஒரு பொருளுக்கும் இப்பெயர் கூறக்கூடாது என்பது புலனாகிறது. ஏனென்றால், நாம் பொருளாய்க் காண்பவையாவும் வெறும் கற்பனையான தோற்றங்களேயன்றிப் பொருட்களேயல்ல. பொருள் என்றால் கருத்து என்பதே அர்த்தம். ஏதோ ஒவ்வொரு சொல்லின் (அஸ்மாக்களின்) கருத்துத்தான் எம்மிடையே பொருளாகத் தென்படுகிறது. இது எமது புலனாட்சியைப் பொறுத்தவிஷயம். ஆழ்ந்த உறக்கத்தின் போது புலனாட்சி அடிபடுவதால் உறங்குகிற வனிடத்தில் உலகம் என்ற பொருளே கிடையாது.





எமது புலன்களின் அமைப்புக்கேற்றபடியே நாம் உலகைக் காணுகிறோம். எமது புலன்கள் வேறுவகையாய் மாற்றப்பட்டால் இப்போதுள்ள உலகு வேறுவகையாய்த் தெரியும். ஆகவே நாம் காணும் பொருட்கள் எம் புலன்களிடத்தில் பொருள்போலத் தென்பட்டாலும் உண்மையான வஸ்த்துக்களல்ல. ஆகவே, பொருளைப் பற்றியே தெரிந்து கொள்ளாத நாம் ஒரு பொருளை நோக்கி இது அல்லாஹ்தான் என்று கூறமுடியாது. ஈமான் தாரிகளான மூ.்.மீன்கள் மற்றும் சேகுமுறப்பிகள் ஈமானை விளங்கித் தெரிந்தவர்கள். அல்லாஹ்வுக்கு மூ.்.மீன் என்றொரு நாமம் உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த ஈமான்தாரிகள் புலனறிவைக் கொண்டும் சுயமான நல்லறிவைக் கொண்டும் அனுபவத்தைக் கொண்டும் குர்ஆன் ஹதீஸ் முதலாம் ஆதாரங்களைக் கொணடும் ஒவ்வொரு பொருளையும் அதனதன் ஹுக்கும்களை (சட்டங்களைக்) கொண்டு வெவ் வேறாகவே அறிந்திருக்கிறார்கள். இவை அத்தனைக்கும் ஆதாரம் அல்லாஹ்வே என்றும் அறிந்திருக்கிறார் கள். ஒவ்வொரு பொருளுக்குமுரிய ஹுக்கும்களான சட்டங்களோடுதான் வாழ்கிறார்கள்.

மீனைக் கையில் தூக்கிக் கொண்டு அல்லாஹ்வை அல்லாஹ் வாங்கிவருகிறான் என்று கூறமாட்டார்கள். இப்படிக் கூறுவோர் பாரவான்களின் பரிபாஷைகளை விளங்கிக்கொள்ள முடியாத மூடர்களேயாகும். இந்த மூடர்களைப் போல் மூ.்.மீன்கள் உளறிக்கொள்ள மாட்டார்கள். ஒரு பொருளை நோக்கி *“இது அல்லாஹ்தான் தாத்துத்தான்”*, என்று கூறும்போது கூறியவர் பொய் சொன்னவராகிறார். அது, உது, இது என்ற படர்க்கை, முன்னிலை, தன்மை ஆகிய இவற்றில் ஏதாவது ஒரு சொல்லைக் கொண்டு அது அல்லாஹ் நான் அல்லாஹ் என்று கூறும் போது மற்றவை யெல்லாம் அல்லாஹ் அல்ல என்றாகும். இது திரிபுடியுணர்வு கொண்ட சுத்தமான ஷிர்க்காகும். நானும் அல்லாஹ்; இதுவும் அல்லாஹ் என்று கூறினால், பல அல்லாஹ் உண்டு என்றாகும். இரண்டு தாத்தோ, இரண்டு அல்லாஹ்வோ கிடையாது.

ஆகவே, இப்படிக் கூறுவது உண்மைக்கு மாற்றமான படுபொய்யாகும். இவருடைய அறிவு இதை உணரமுடியாத ஹைவானுடைய அறிவைவிடவும் கீழ்த்தரமானதாய் இருக்கிறது. ஹைவான்களில் கீழ்த்தரமானது பன்றிதான். ஆகையால்தான் *“அல்லாஹ்வைக் கண்டேன் என்பவன் பொய்யனாயும் பன்றியாயும் இருக்கிறான்”* என்று கூறப்பட்டது. இதற்கெல்லாம் காரணம் தௌஹீது என்பதைக் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு சரியாய்ப் புரிந்து கொள்ளாமைதான்.

*ஹதீஸ்*
*காலங்களில் சிறந்தது என் காலமும் பிறகு என் காலத்தை அடுத்தவர்களின் (தாபீயீன்கள்) காலமும் பிறகு அவர்களை அடுத்தவர்களின் (தபுஉத்தாபியீன்) காலமும் ஆகும். பிறகு பொய் பரவி விடும்.*

*அறிவிப்பவர்: இப்னு உமர் (றலி)*
*ஆதாரம்: திர்மிதி*

*ஹதீஸ்*
*இந்த மார்க்கம் 12 கலீபாக்கள் காலம்வரையில் மிகைத்தும் ஆற்றல் வாய்ந்ததாகவும் இருக்கும். அவர்கள் அனைவரும் குறைஷிகளாகவே இருப்பார்கள் என்று றசூலுல்லாஹ் கூற; அதன் பின் என்ன நடக்கும்? என்று வினவ; விஷமமும் குழப்பமும் மார்க்கத்தில் ஏற்பட்டுவிடும் என்று கூறினார்கள்*

*அறிவிப்பவர்: ஜாபிர் இப்னுஸமூரா*
*ஆதாரம்: புஹாரி, முஸ்லீம், அபூதாவூத், திர்மிதி.*

*ஹதீஸ்*
*ஒரு நூற்று எண்பது ஆண்டுகள் கழிந்த பின்னர் என் சமூகத்தவர் தனித்திருப்பதையும் மலை உச்சியில் மறைந்திருப்பதையும் நான் அவர்களுக்கு ஆகுமானதாகச் செய்கிறேன் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்*

*அறிவிப்பவர்: ஈஸாஇப்னுவாகிதி (றலி)*
*ஆதாரம்: றஜீன்.*

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்ட காலம்தான் இமாம்கள் பலர் தோன்றிய காலம், மார்க்கம் குழம்பிய காலம், கலிமா புரட்டப்பட்ட காலம் இதுதான்.

*ஹதீஸ்*
*என் சமூகத்தவரின் கிலாபத் முப்பது ஆண்டுகள் இருக்கும். அதன்பின் அரசுரிமையாகிவிடும். என்று றசூல்(ஸல்) கூறி னார்கள்.*

*அறிவிப்பவர்: ஸபீனா(றலி)*
*ஆதாரம்: அபூதாவுத், திர்மிதி*

*ஹதீஸ்*
*இஸ்லாத்தின் திரிகை 35 அல்லது 36 அல்லது 37 ஆண்டுகள் சுற்றிக்கொண்டிருக்கும். பின்னர் அவர்கள் அழிந்தால் முன்*





*அழிந்தவர்களுடைய வழி இருக்கிறது. அவர்களில், அவர்களின் மார்க்கம் நிலைபெற்றிருக்குமானால் 70 ஆண்டுகள் நிலைப் பட்டிருக்கும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார். இஸ்லாத்தின் தொடக்ககாலத்திலிருந்தா? அல்லது ஹிஜ்ரத்திலிருந்தா? என்று நான் வினவினேன். தொடக்ககாலத்தில் இருந்து என்று அவர்கள் மறுமொழி கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: இப்னுமஸ்ஊத் (றலி)*
*ஆதாரம்: அபூதாவுத்.*

இஸ்லாம் றசூலுடைய காலத்துக்குப் பின் எவ்வளவு காலம் நிலைத்திருந்தது என்பதையும், புரட்டல் எப்போது ஆரம்பமானது என்பதையும் சிந்தனை செய்து தெளிவு பெறுங்கள்.

ஆண்டவனே இமாம்களுக்கு நேர்வழிகாட்டிப் பாவங் களுக்கு மன்னிப்புக்கொடுப்பாயாக என்று றசூலுல்லாஹ் கூறியிருக்கிறார்கள். இமாம்கள் என்றால் யார்? என்று கேட்ட போது மக்களை வழி நடத்துபவர்கள் என்று அபூபக்கர் (ஸித்) அவர்கள் விளக்கம் கூறியுள்ளார்கள். இன்னும் எவ்வளவோ கூறிக்கொண்டே போகலாம். றசூலுடைய மறைவுக்குப்பின் சுமார் முப்பது வருடங்கள்தான் உண்மையான ஈமான் இஸ்லாம் இருந்திருக்கிறது. அதன் பின் கலிமாவைப் புரட்டி இஸ்லாம் வேறுதிசையில் திருப்பப்பட்டுத் தொழுகையே மார்க்கம் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. இது ஆராய்வுள்ளவர்களுக்கேயன்றித் தென்படாது. ஆகையால்தான் இன்று உண்மை பொய் போலத் தென்படுகிறது.

(23)

இஸ்லாத்தின் உண்மையான கொள்கை வஹ்தத்துல் வுஜுதுக் கொள்கையேயாகும். இதன் ஆரம்பம் தான் வஹ்தத்து ஸ்ஷுஹுதுக் கொள்கை என்பது. ஆனால், இன்று இந்த உண்மை புதையுண்டு கிடக்கிறது.காரணம் என்னவென்றால் இன்றுள்ள பெரும்பாலான மதரஸாக்கள் வஹ்ஹாபிஸ நாடுகளின் உதவியோடு இயங்குகின்றன. அவர்களின் கொள்கை விளக்கமே மதரஸாக்களில் கற்பிக்கப்படுகின்றது. அவர்கள் தங்களைச் சுன்னத்வல்ஜமா அத்துக்கூட்டம் என்று கூறிக்கொள்வதால் மக்கள் ஏமாந்து விடுகிறார்கள். மக்கள் அப்படி அவர்களுடைய கொள்கையைப்

பரப்பாவிட்டால் அவர்களுக்கு நிதி உதவி கிடைக்காது. உண்மை இதுதான். ஆகவே இவர்களுடைய கொள்கை விளக்கம் என்ன என்பதை நாம் ஓரளவேனும் அறிய வேண்டியதாய் இருக்கிறது. இவர்களில் பல பிரிவுகள் உண்டு. அவற்றில் இன்று நம்மிடையே உலாவும் தப்லீக் ஜமாஅத் என்பதும் ஒன்று. இவர்கள் தங்களை வஹ்ஹாபிகள் அல்ல என்றும், நாங்கள் குர்ஆன் ஹதீஸுகளையும் இமாம்களையும் ஏற்றுக் கொள்கிறோம் என்றும் கூறுகிறார்கள். ஆகவே, நாம் இவர்களைப் பற்றித்தான் மிகமிகத் தெளிவாய் அறிய வேண்டியதாய் இருக்கிறது.

ஏனென்றால் வஹ்ஹாபிகள் அவர்களுடைய கொள்கை விளக்கத்தைப் பகிரங்கமாய்க் கூறுகிறார்கள். விரும்பியவர் ஏற்கலாம். விரும்பாதோர் மறுக்கலாம். ஆனால், தப்லீக்கை அப்படி மறுக்க முடியாதிருக்கிறது. ஏன்? அவர்களுடைய கொள்கை விளக்கம் மக்களுக்குத் தெரியாது. தொழுகை முதலாம் செயல் களை மிகமிகக் கடினமாய்க் கையாள்வதால், பாமரமக்கள் இவர்களை முற்றாய் நம்பிப் பின்பற்றுகிறார்கள். இந்த மக்கள் இஸ்லாத்துக்கு விரோதமான முறையில் செயல்படுவதால் சிந்த னையை இழந்துவிட்டு மீண்டும் மீண்டும் படுகுழியிலேயே தள்ளப் படுகிறார்கள். இவர்களுக்கு எமக்குத் தெரிந்த விவரத்தைக் கூறவேண்டியது அவசியமாய் இருக்கிறது. இந்தக் கூட்டத்தார் குர்ஆன் ஹதீஸுகளை ஒத்துக்கொள்வதாய் வாயினால் கூறிக் கொண்டாலும், அவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்வதே இல்லை. பிறருடைய பேச்சைக் கேட்கக்கூடாது என்று இவர்கள் ஆரம்பத் திலேயே மக்களைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். இதேவேளை இறைவனும் இம்மக்களின் கல்பில் ஒரு முத்திரையைப் பொறித்து விடுகிறான். ஆகவே, இவர்கள் எந்த ஒரு நல்லறிவையும் ஏற்றுக் கொள்ளமுடியாத கால்நடைகளாகவே மாற்றமடைந்து விடுகிறார்கள். இவர்களை ஏமாற்றி வழிகெடுக்க அக்கூட்டத்தார் கொண்டுள்ள ஒரே ஒரு கேடயம் தொழுகைதான்.

இவர்களுடைய ஆரம்பத் தலைவர் தைமியா என்பவரே. இவரையும் இவருக்குப் பின் அவருடைய ஸ்தானத்தை அடைந்தவர் களையும் பின்பற்றியவரே தப்லீக் ஜமாஅத்தாரின் ஸ்தாபகர் இல்யாஸ் என்பவர். இவர் ஒரு சாதாரண மௌலவிதான். இவருடைய கொள்கை விளக்கங்களை உர்து நூற்களில் காணலாம். உர்து பாஷை எமக்குத் தெரியாமல் இருந்ததால் இவர்களுடைய நூற்களைப் பல உலமாக்களைக் கொண்டு வாசித்து விளங்கிய





பிறகுதான் இவருடைய கொள்கைவிளக்கம் தெரியவந்தது. இவருடைய, கொள்கை விளக்கங்களை இங்கே சுருக்கமாய்த் தந்திருக்கிறேன். கவனியுங்கள்.

1ஆவது: றசூல் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடத்தில் செருப்புத்தைக்கிற சக்கிலியனைவிடக் குறைந்த பதவி உடைய வர்களாய் இருக்கிறார்கள். தக்வியத்துல் ஈமான் என்ற நூலில் 14ஆம், 19ஆம் பக்கங்களில் காணலாம்.

2ஆவது: றசூலுக்கு மரியாதை செய்வது மூத்த சகோதரனுக்கு மரியாதை செய்வது போல் செய்ய வேண்டும். மேலதிகமாய்ச் செய்வது விலக்கப்பட்டதாகும். தக்வியத்தில் ஈமான் 60ஆம் பக்கம் காணலாம்.

3ஆவது: அல்லாஹ் என்பவன் பொய்சொல்லக் கூடியவ னாகும். அவன் பொய் சொல்ல மாட்டான் என்பதை ஏற்கமாட்டோம். எக்ரோஸிதக்வியத்துல் ஈமான் என்னும் நூலில் 32ஆம் பக்கம் காணலாம். அல்லாஹ் பொய் கூறுவது சாத்தியம்தான் என்று வஹ்ஹாபிகளின் ஒரு தலைவர் மௌலவி முகம்மது இஸ்மாயீல் திஹ்லவியால் எழுதப்பட்ட ஏக்ரோஸி என்ற நூலில் 145ஆம் பக்கம் காணலாம்.

4ஆவது: றசூல்(ஸல்) அவர்கள் ஓர் அற்ப அணுவை விடவும் அல்லாஹ்விடத்தில் குறைந்தவர்கள். தக்வியத்துல் ஈமான் 55ஆம் பக்கம் காணலாம்.

5ஆவது: அல்லாஹ் எவரை நாடுவானோ அவரையே தன்னிடம் ஷபாஅத்துச் செய்யக் கூடியவராக ஆக்குகிறான். றசூலு க்குச் ஷபாஅத்துண்டு என்று கூற முடியாது. அதே நூல் 33ஆம் பக்கம்.

6ஆவது: றசூல்(ஸல்) அவர்கள் இறந்து மண்ணோடு மண்ணாகி விட்டார்கள். அதே நூலில் 60ஆம் பக்கம்.

7ஆவது: றசூலுக்கு எம்மை விட எந்தச் சக்தியும் கிடையாது. நமக்காகச் ஷபாஅத் செய்யமாட்டார்கள். அதே நூலில் 10, 26, 27ஆம் பக்கம்.

8ஆவது: றசூலிடம் மறைவான அறிவுண்டு என்று கூறுவது ஷிர்க்ஆகும். அதே நூலில் 27, 58ஆம் பக்கம்.

9ஆவது: றசூலை யாமுஹம்மத், யாரசூலல்லாஹ் என்று கூப்பிடுவது ஷிர்க்காகும். அதே நூல் 23ஆம் பக்கம்.

10ஆவது: றசூலின் றவ்லாஷரீபை தரிசிப்பதற்காக மட்டும் பிரயாணம் செய்வது ஷிர்க்காகும். அதே நூல் 10, 40ஆம் பக்கம்.

11ஆவது: றவ்லா ஷரீபுக்கு முன்னால் மரியாதை செய்வது ஷிர்க்காகும். அதே நூலில் 40ஆம் பக்கம்.

12ஆவது: றசூலைப் போன்றவர்கள் அல்லது சமமானவர்கள் இருப்பது சாத்தியம்தான். அதே நூலில் 31ஆம் பக்கம்.

13ஆவது: றசூல் எம்மைப் போன்றவரேயன்றி எம்மைவிட மேலானவரல்ல. பராஹீனே காத்திஆ என்ற நூலில் 3ஆம் பக்கம்.

14ஆவது: றசூலை விட ஷைத்தானுக்கு அதிக அறிவுண்டு. பராஹீனே காத்திஆ என்ற நூலில் 51ஆம் பக்கம்.

15ஆவது: றசூல் மறைவான விஷயங்களை அறியக் கூடியவர் என்பது ஆச்சரியமல்ல. அம்மாதிரியான அறிவு சாதாரண மனிதனுக்கும் குழந்தைக்கும் பைத்தியக்காரனுக்கும் உண்டு. உயிர்ப் பிராணிகளுக்கும் உண்டு. தப்லீக் ஸ்தாபகர் இல்யாஸின் குரு அஸ்ரப் அலிதானவி என்பவரால் எழுதப்பட்ட ஹிப்லுல் ஈமான் நூலில் 7ஆம் பக்கம் காணலாம்.

16ஆவது: அல்லாஹ்விடம்தான் நமக்கு வேலையுண்டேயன்றி றசூலிடத்தில் நமக்கு வேலை கிடையாது. ஹிப்லுல் ஈமான் 7ஆம் பக்கம்.

17ஆவது: றசூல் பேரில் மௌலூது ஓதுவது; எழுந்து நின்று மரியாதை செய்வது; பித்அத்தும் ஷிர்க்கும் ஆகும். அப்படிச் செய்வது இந்துக்களின் செயலுக்கொப்பானது. மௌலவி றஸீத் அகமதினால் எழுதப்பட்ட 'பத்தாவா றஸீதிய்யா' என்ற நூலில் 13ஆம் பக்கம்.

18ஆவது: தொழுகையின் போது றசூலின் ஞாபகம் வருவது மாடு, கழுதைகளின் ஞாபகம் வருவதைவிடக் கெட்டதாகும். மௌலவி இஸ்மாயீலுத்தானவியால் எழுதப்பட்ட ஸிறாத்தே முஸ்தகீம் என்ற நூலில் 86ஆம் பக்கம்.





19ஆவது: கஹ்பா ஷரீபில் 4 முஸல்லாக்கள் விரித்திருப்பது பழிக்கப்பட்டதாகும். ஸபீலுர்ரஸாது என்ற நூலில் மௌலவி றஸீத் அகமது என்பவரால் கூறப்பட்டிருக்கிறது. மேலும் இன்னும் எவ்வளவோ தரலாம் இவர்களுடைய விளக்கம் இதுதான். இவர்கள் ஷிர்க் பித்அத் போன்றவற்றின் உண்மை தெரிந்த மூமீன்களாய் இருந்தால் இப்படியெல்லாம் கூறமாட்டார்கள். இவற்றைப்பற்றி எள்ளளவும் அறிந்து கொள்ளாத மக்கள் விளக்கில் விழுந்தழியும் விட்டில்பூச்சிகளைப் போல அழிந்து கொண்டிருக்கிறார்கள்.

குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், பகுத்தறிவு முதலாம் பிரமாணங்களுக்கு முழுமாறாய் அமைந்துள்ள இவ்விதமான மருண்ட கொள்கையை அத்திவாரமாய் அமைத்துக்கொண்டு சுமார் 50 வருடங்களுக்குள்ளாக முளைத்தெழுந்ததுதான் தற்போது நம்மிடையே உலாவும் தப்லீக் என்பது. ஆயினும், இவர்கள் தொழுகைக்குத்தானே அழைக்கிறார்கள் என்று நம்பிய பாமர மக்கள் இவர்களைப் பின்பற்றுகிறார்கள். இக்கூட்டத்தினால் பிற்காலத்தில் எமது குழந்தைகளுக்கேற்படப் போகிற விளைவுகளைப் பகுத்துணர ஆற்றலில்லாத பட்டதாரிகளும் இக்கூட்டத்தில் இடம் பெறுவதால் பாமர மக்கள் இவர்களைப் பூரணமாய் நம்புகிறார்கள். ஆனால் இவர்களில் எவருக்குமே கொள்கை விளக்கம் தெரியாது. இக் கூட்டத்திலுள்ள ஒரு சிலருக்கு அமீர் பதவி அளிக்கப்படுகிறது. இந்த அமீர்கள் பதவியை ஏற்றுக்கொண்டவுடன் அதைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வளவோ பகீரதப்பிரயத்தனம் செய்கிறார்கள்.

இந்த அமீர்களுக்கு இறைவன் உடனாகவே ஒரு கீல் (தார் சட்டையை) அவர்களுடைய உள்ளத்தில் போர்த்திவிடுகிறான். இதன் பெயர்தான் *"ரியா"* - மேலெண்ணம், வரட்டுக்கௌரவம் என்றெல்லாம் கூறப்படுவது. இந்த *"ரியா"* மனிதனின் பகுத்துணரும் ஆற்றலையே பறித்துவிடுகிறது. இவ்விதமான கொள்கையுடையோர் தங்களை சுன்னத்துவல்ஜமாஅத்தார்கள் என்றும் மூ.ஃ.மீன்கள் என்றும் கூறுகிறார்கள். இந்த ஸ்தாபனங்களுக்கு மூலகர்த்தாவாயிருந்த தைமியா என்பவருக்கும் அவரைப் பின்தொடர்ந்த அப்துல் வஹ்ஹாப், இல்யாஸ் போன்றோரும் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லையென்று கலிமாவுக்கு வலிந்துரை கொண்டிருந்தவர்கள். இமாம்களை யும் குர்ஆன் ஹதீஸ்களையும் பூரணமாய் ஏற்றுக்கொள்ளாதவர்கள், அப்து வேறு றப்பு வேறு என்ற கொள்கையுடையவர்கள். இவர்கள் தௌஹீதை எள்ளளவும் புரிந்து கொள்ளாதவர்கள். இவர்கள் பிக்ஹுவிலுள்ள சிற்சில சட்ட நுட்பங்களைக் கொண்டு ஒவ்வோர் கட்சியை நிலைப்படுத்த முனைந்தவர்கள்,

அவ்லியாக்களை மறுப்பவர்கள். இவர்களுக்கும் இஸ்லாத்தின் உயிரான தௌஹீது என்னும் ஈமானுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

*ஹதீஸ்*

*விதண்டாவாதம் புரிந்து தங்கள் நோக்கத்தைச் சாதித்துக் கொள்வதில் மிகக் கடினமானவர்களைக் குறித்து: மனிதர் களில் அல்லாஹ்வுக்கு மிக வெறுப்பானவர் விதண்டாவாதம் புரிவதில் கடினமானவர்களே என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: ஆயிஷா(றலி)*
*ஆதாரம்: புஹாரி, முஸ்லீம்.*

*குர்ஆன்: 3:104*

*உங்களிலிருந்து ஒருசாரார் நல்லதின் பேரில் அழைப்பவர்களாக இருந்து கொள்ளட்டும். அவர்கள் நன்மையின்பாலழைத்து நல்லதை ஏவித் தீயதை விலக்குவார்கள். அவர்களே வெற்றி பெற்றவர்கள் என்று இறைவன் கூறியுள்ளான். இந்த ஆயத்தைப் பல கண்ணோட்டங்களோடு நோக்குங்கள். இதில் மூன்று விடயங்கள் விளக்கப்படுகின்றன.*

1ஆவது: உங்களில் எத்திவைக்கும் கூட்டம் அவசியம் என்பது தென்படுகிறது.

2ஆவது: எத்திவைக்கும் கூட்டம் செய்யவேண்டிய வேலை நன்மையை ஏவுவதும் தீமையை விலக்குவதுமாகும். இன் னும் ஒரு நுட்பம் நன்மையை ஒருமையிலும் தீமையை ஒருமையிலும் கூறப்பட்டுள்ளது. அதாவது நல்லது ஒன்று என்றும் தீமை ஒன்று என்றும்தான் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், பல்லாயிரம் நன்மைகளும் பல்லாயிரம் தீமைகளும் இருப்பதை நாம் அறிகிறோம். ஆயினும் நன்மை ஒன்று என்றும், தீமை ஒன்று என்றும்தான் இறைவன் கூறுகிறான்.

3ஆவது: அவர்கள் வெற்றி பெற்ற நல்லடியார்கள் என்று விவரம் தருகிறான் இறைவன். இம்மூன்றையும் முதலில் சிந்த னைக்கெடுங்கள். அதாவது, இந்த ஆயத்தில் விவரிக்கப்பட்ட கூட்டம் வெற்றி பெற்ற நல்லடியார்களான அவ்லியாக்கள் என்னும் அஹ்லுல் ஹல்லிவல்அக்திகளான நல்லடியார்களே என்னும் நாம்





அறிந்து கொண்டோம். ஆகவே, தாங்கள் எந்த அடிப்படையில் எதை எத்திவைக்கிறோம், எதைப் பேசுகிறோம், என்பதை உணர்ந்து கொள்ளாத கால்நடைகளை விடக் கேவலமான பாமரமக்களை எத்திவைக்கும் கூட்டம் என்று எப்படிக் கூறுவது? இக்கூட்டம் எவ்விஷயத்தில் வெற்றி பெற்றிருக்கிறது. தலைச்சன் ஆடு எவ்வழியில் செல்கிறதோ அதே வழியில் முன்பின் யோசிக்காமல் செல்லும் செம்மறியாட்டுக் கூட்டத்தைப் போலுள்ள மக்கள் எதை எத்திவைப்பார்கள்? இவர்களுக்குத்தான் நல்லடியார்கள் எத்திவைக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

அடுத்த விவரம், நன்மையை ஏவித் தீமையை விலக்கு பவர்கள் என்று இறைவன் கூறுகிறான். நன்மை எது? தீமை எது? தொழுகைதான் நன்மை என்றும்; தொழாமல் இருப்பது தீயது என்றும், பொருள் கூற முடியுமா? முடியாது. ஏனென்றால் தொழுவது மட்டுமே முற்றான முடிவான நன்மை என்று எப்படிக் கூறுவது? ஈமான் இல்லாத தொழுகையோ, வேறு இபாதத்துகளோ, நன்மையாகாது என்று குர்ஆன் ஹதீஸுகள் விவரம் தரும்போது; எல்லா இபாதத்துகளாலும் பிரயோசனம் என்ற நன்மையைப் பெறுவ தானால்; ஈமானை எத்திவைத்தால்தான் நன்மையை ஏவுபவர்கள் என்றாகும். ஏனென்றால் ஷரீயத்து நிரப்பமாக்கப்பட்டிருக்கிறது. இதில் எவ்வித மாற்றமும் செய்ய எவருக்கும் அவசியமோ அதிகாரமோ இல்லாதபடி இமாம்கள் மற்றும் அறிவாளர்கள், ஷரீயத்துடைய விபரத்தைத் தெளிவாய் விளக்கியிருக்கிறார்கள். இதை யாருக்கும்; யாரும்; எத்திவைக்கவேண்டிய அவசியமே கிடையாது. றிஸாலத்து என்ற ஞானம் அல்லது ஈமானுடைய விஷயம் மனிதரிடம் நிரப்பம் பெறாததாயும் எவ்வளவு தூரம் சென்றாலும் முடிவு பெறாததாயும் இருப்பதால்தான் இதை எத்திவைப்பதற்காக அந்த றிஸாலத் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது.

'வமா அர்ஸல்னாக இல்லாறஹ்மத்துன்லில் ஆலமீன்' என்று குர்ஆன் விவரம் தருகிறது. இந்த றஹ்மத்து என்ற றிஸாலத் இல்லையானால், சர்வ ஆலங்களும் அழிந்தொழிந் திருக்கும். ஆலம் இருப்பதால் றிஸாலத்து இன்னும் இருந்து கொண்டிருப்பது புலனாகிறது. றசூல் (ஸல்) அவர்கள் எப்போது வபாத்தானார்களோ அப்போதே ஷரீயத்தின் வாசல் அடைபட்டு விட்டது. ஏன்? ஷரீயத்தை நிரப்பமாக்கி இனிமேல் எவரும் எவ்வித

புது ஷரீயத்தையும் தூக்க முடியாமல் நிலைப்படுத்திய பிறகுதான் றசூல் (ஸல்) அவர்கள் மறைந்தார்கள். ஆகவே, இனி ஒரு புது ஷரீயத்தோ அதை எத்திவைப்பதோ அவசியமல்ல. ஆனால் இந்த ஷரீயத் உயிரற்றதாய் எப்போது மாற்றமடைகிறதோ அப்போது, அதைச் சீர்திருத்துவதற்காகவே றிஸாலத் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே தொழுகையின் உயிரான ஈமான் என்னும் விசுவாசத்தை விளக்கி எத்திவைப்பதற்குத்தான் எத்திவைக்கும் கூட்டம் தேவை. இந்த நல்லடியார்களான அவ்லியாக்கள் அந்த றிஸாலத்தில் நுழைந்து வெற்றியடைந்தவர்களாய் இருப்பதால்தான் அவர்களை எத்திவைக்கும்படி கூறுகிறான் இறைவன். ஆகவே, அவ்லியாக்களான நல்லடியார்களால் எத்தி வைக்கப்பட வேண்டிய விஷயம் றிஸாலத்திலுள்ள ஈமான் என்ற விஷயமேயல்லாமல் தொழுகையின் விஷயமல்ல என்பது புலனாகிறது. மேலும், ஈமானே நல்ல விஷயங்கள் அத்தனைக்கும் தாயாய், உயிராய் இருப்பதால் எத்திவைக்கவேண்டிய நல்ல விஷயம் ஈமானே என்பதும் தெளிவாய் அறிவுக்குப் புலனாகிறதல்லவா?

உலகிலுள்ள சர்வ தீமைகளையும் நோக்கினால் இத்தீமைகளுக்கு எல்லாம் உயிராய் இருப்பது ஷிர்க்கு என்பது தென்படுகிறது. அதாவது ஷிர்க்கை நீக்கிக் கொண்டால் தீமை என்பதே இல்லாமலாகிவிடும். ஆகவே தீமையை விலக்குவார்கள் என்று இறைவன் கூறுவதன் விவரம் இப்போது தென்பட்டுவிட்டது. அதாவது, தீமைகளுக்கு உயிராய் இருக்கும் ஷிர்க்கையே அவர்கள் விலக்குவார்கள் என்பது புலனாகிறது. ஆகவே எத்திவைக்கும் கூட்டமான நல்லடியார்களின் தொண்டு ஷிர்க்கை நீக்கித் தௌஹீதை உறுதிப்படுத்திக் காப்பதேயாகும் என்பதும்; இக்கடமையில் ஈடுபாடுடையவரே தப்லீக் செய்யும் அவ்லியாக்களைச் சேர்ந்தவர் என்பதும் தெரிகிறதல்லவா?

ஷிர்க் என்றால் விக்கிரக வணக்கம்தான் என்று நம்பிக் கொண்டு வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று கூறிக் கொண்டால், அதுவே ஈமான், தௌஹீது என்றும் நம்பித் தங்களைத் தாங்களே படுகுழியில் வீழ்த்திக் கொண்டிருக்கிற விலங்குகளுக்கொப்பான, பகுத்தறிவு தொழில்படாத, குர்ஆன் ஹதீஸுகளின் வாசனையையே எத்திக் கொள்ளாத மூடமக்களை எத்தி வைக்கும் கூட்டம் என்று கூறலாமா? ஆம் கூறலாம். ஏன் தெரியுமா? இவர்கள் குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறாயிருந்த அபூ





ஜஹ்லின் கூட்டத்தின் கொள்கையான ஸிர்க்கை எத்திவைக்கிறார்களே. ஆகையால் இவர்கள் மூமீன்களுக்கெதிரான எத்தும் கூட்டம் என்று கூறலாம்.

அவ்லியாக்களான நல்லடியார்களின் கூட்டம்தான் எத்திவைக்கும் கூட்டம் என்பது உண்மையானால், இது விஷயத்தில் றசூல் (ஸல்) அவர்கள் இப்போதுள்ள எத்திவைக்கும் கூட்டத்தைப் பற்றி எதையாவது நமக்கு எத்திவைத்துள்ளார்களா? ஆம். எத்திவைத்துள்ளார்கள்.

*ஹதீஸ்*

*அந்திய காலத்தில் ஒரு கூட்டம் வருவார்கள்: அவர்கள் உலகத்தில் மார்க்கத்தைத் தாறுமாறாக்குவார்கள். அவர்கள் மனிதர்களை வஞ்சிப்பதற்காக ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொள்வார்கள். அவர்களுடைய நாவு தேனைப்பார்க்கிலும் இனிமையாக இருக்கும். அவர்களின் இருதயங்கள் ஓநாயின் இருதயமாய் இருக்கும். இந்த ஹதீஸ் கன்ஸுல் உம்மால் என்ற கிதாபில் 7ஆம் பாகம் 124ஆம் பக்கம் இடம்பெறுகிறது.*

(இந்த ஹதீஸ் நம்மிடையே உலாவும் தப்லீக்கை நோக்கியது.)

ஆட்டுத் தோலைப் போர்த்திக் கொள்வார்கள் என்றால், உலகிலுள்ள பிராணிகளில் சாதுவானது ஆடுதான். தாடியுள்ளதும் அதுதான், அதுபோல இவர்களும் தாடியுடன் நீண்ட அங்கியுடன் தஸ்பீஹ் மணியுடன் சாதுக்கள் போல் நடிப்பார்கள் என்பதே. அவர்களின் நா தேனைவிட இனிமையானதென்றால், அவர்களுடைய வர்ணனையான கற்பனை உபதேசங்கள் மிக இனிமையாய் இருக்கும் என்பதே. தாடி நனைந்து விடும் அளவு அழுதழுதுதானே விளக்கம் தருகிறார்கள். கேட்பதற்கு இன்பமாய்த்தான் இருக்கிறது. இவர்களுடைய உள்ளம் ஓநாய் இருதயம் போன்றதென்றால் இவர்களுடைய கல்பு உலகையும் பொருளையும் கௌரவத்தையுமே பற்றி நிற்கும் என்பதே. துன்யா ஒரு பிணக்காடு. அதை அதிகமாக உவப்பவர்கள் நாய்கள் என்பது றசூலின் ஹதீஸ் அல்லவா?

*ஹதீஸ்*

*மறுமை நாள் வருவதற்குள்ளாக இரவின் காரிருள் போன்று பித்தனாக்கள் ஏற்பட்டுவிடும். மனிதன் காலையில் ஈமான் தாரியாய் இருந்து மாலையில் நிராகரிப்பவனாக மாறி*

*விடுவான். அன்றி பல கூட்டத்தினர் உலகப்புகழ் பொருள் களுக்காகத் தங்களின் மார்க்கத்தை விற்றுவிடுவார்கள்.*

*அறிவிப்பவர்: அனஸ் (றலி)*
*ஆதாரம்: திர்மிதி.*

*ஹதீஸ்*
*அண்மையில் என் சமூகத்தவரிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். அப்போது ஒரு பிரிவார் ஏற்படுவார்கள். அவர்கள் நன்மொழி கூறுவார்கள். குர்ஆனை ஓதுவார்கள். அது அவர்களுடைய மார்பின் ஆரம்ப எலும்பையும் கடக்காது (உள்ளத்தில் பதியாது) வேட்டைப் பொருளிலிருந்து அம்பு வெளிப்படுவது போல மார்க்கத்தை விட்டும் அப்புறப்படு வார்கள். பின்னர் திரும்பவும் மாட்டார்கள், அம்பு அதன் கூட்டை அடையும் வரை. அவர்கள்தான் படைப்புக்களில் மிகக் கெட்டவர்கள். அவர்களைக் கொல்பவர்களுக்கும் அவர்களால் கொல்லப்படுபவர்களுக்கும் சுபசோபனம் உண்டாகட்டும். குர்ஆனின் பக்கம் மக்களை அழைப்பார்கள். ஆனால் அதில் அவர்களுக்கு எவ்விதமான சம்பந்தமும் கிடையாது. அவர்களை எவர் கொல்கிறாரோ அவர் அல்லாஹ்வை நெருங்கியவர்களில் மேலானவராவார் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நாயகமே அவர்களு டைய அடையாளம் என்ன? என்று தோழர்கள் வினவினார்கள். அடையாளம் மொட்டையடிப்பது என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அனஸ்(றலி)*
*ஆதாரம்: அபூதாவூத்.*

*(இந்த ஹதீஸ் தப்லீக்கையும் வஹ்ஹாபிஸத்தையும் சுட்டியது)*

இந்த ஹதீஸுக்கு விவரம் தருவதானால் நாம் மிக நீண்டதூரம் போக வேண்டும். இப்போது எம்மால் முடியாத வேலை. ஆயினும், மொட்டையடித்தல் என்பதை மட்டும் கூறுவோம். மொட்டையடித்தல் என்றால் தலை முடியை வழித்துக் கொள்வது என்று பொருளல்ல. நல்லடியார்களின் கப்று ஸ்தானங்கள் மார்க்க விளக்கம் என்பவற்றை உடைப்பார்கள் என்பதே பொருள். இன்னும் எத்தனையோ ஹதீஸுகளைக் கூறலாம். நஜ்தான் என்னும் கிராமத்தில் தஜ்ஜாலின் கொம்பு முளைக்கும் என்று றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஒரு ஹதீஸ் உண்டு. அங்கே பிறந்தவர்தான் அப்துல் வஹ்ஹாப் என்பவர். அவரின் செயல்பாடு தான் இன்றுள்ள வஹ்ஹாபிஸம். அதற்கு வாலாக அமைந்துள்ளது தான் இல்யாஸ் என்பவரின் தப்லீக்.





சரிதான். அப்படியானால் உண்மையான எத்திவைக்கும் கூட்டத்தாரைப்பற்றி றசூல் (ஸல்) என்ன கூறியுள்ளார்கள் என்று கேட்கிறீர்களா? இதோ கேளுங்கள்.

*ஹதீஸ்*
*''இஸ்லாம் வெளியாகும் போது அற்பமாக உதவி யற்றதாக இருந்தது போல இனிமேலும் ஆகிவிடும். ஆகை யால் உதவியற்றவர்களுக்குச் சுபசோபனம் உண்டாகக் கடவது என்று றசூல் (ஸல்) அவர்கள் கூற, உதவியற்றவர்கள் யார்? என்று ஸஹாபாக்கள் வினவ எனது மார்க்கத்தில் கட்டுக் குலைக்கப்பட்டவற்றை ஸ்திரப்படுத்தி வைப்பவர் களும் மற்றவர்கள் நாசம் செய்தவற்றை விருத்தி செய்ப வர்களுமே என்று விடை கூறினார்கள். (இம்மக்கள் மிகச் சொற்பமானவர்கள் உதவியற்றவர்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்).*

*ஹதீஸ்*
*''நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு நூற்றாண்டின் துவக்க த்திலும் என்னைப் பின்பற்றும் இந்த இனத்தவருக்காக இவர் களின் மார்க்கத்தைப் புத்துயிரளித்துத் தரும் ஒருவரை (முஹ் யித்தீனை) எழுப்பித் தருவான்" என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)*
*ஆதாரம்: அபூதாவூத்.*

இன்னும் பல தரலாம். அவசியமல்ல. மேலே நாம் காட்டிய குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டும் பகுத்தறிவைக் கொண்டும் உண்மையை உணருங்கள். நாம் காட்டிய குர்ஆன் ஹதீஸுகளின் தீர்ப்புப்படி நம்மிடையே உலாவும் கூட்டங்கள் இஸ்லாத்திலுள்ள ஈமான், ஷிர்க், பாஸிக், குபிர், முனாபீக், முஸ்லீம், மூ.்.மீன் என்பவற்றை அறியாத சிந்திக்கத் தெரியாத, சிந்திக்க முடியாத, பாமர மக்களாய் அதிலும் மிகமிகக் கீழ்ப்படித்தரத்திலுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

*குர்ஆன்: 2:78*
*அன்றிக் கல்வியறிவில்லாதவர்களும் அவர்களிலுண்டு. அவர்கள் வேதத்தைப்பற்றிக் (கேள்விப்பட்டுள்ள) வீண்நம்பிக்கைகளைத் தவிர உண்மையை அவர்கள் அறியவேமாட்டார்கள். அவர்கள் வீண் சந்தேகத்தில் ஆழ்ந்துகிடப்போர்தான்.*

என்று இறைவன் கூறுகிறான். ஆனால் நம்மிடையே உலாவும் தப்லீக்கில் பெரும் பெரும்பட்டதாரிகள்கூட இருக்கி றார்களே. கல்விமான்களே ஏற்றிருக்கும் கூட்டத்தைத் தவறான கூட்டம் என்று எப்படிக் கூறுவது?

இவர்களைக் கல்விமான்கள் என்று கூறுவது தவறாகும். இவர்கள் படித்துப் பட்டம் பெற்றவர்கள். ஓதிப்பட்டம் பெற்றவர்களே யன்றிக் கல்விமான்களல்ல. ஓதுதல், படித்தல் வேறு, கற்றல், கல்விமானாதல் வேறு. ஓதுதல் படித்தல், நூற்கேள்வியறிவால் ஏற்படுவது. கற்றல் என்பது ஆராய்தல், கிளறுதல், தோண்டுதல் என்ற பொருளுடையது. இப்பொருளைத்தான் இறைவன் ஆயத்தில் குறிப்பிடுகிறான். ஓதியவர்களையும் படித்தவர்களையும் பாமரர் களையும் சேர்த்தே உம்மிகள் என்று கூறுகிறான். உம்மிகள் என்றால் எழுதவாசிக்கத் தெரியாதவர்கள் என்பது மட்டும் கருத்தல்ல. றசூலின் காலத்தில் சிறந்த எழுத்தாளர் கவிபுனைவோர் இருந்திருக்கி றார்கள். இவர்களை உம்மிகள் என்றே இறைவன் கூறுகிறான். உம்மிகள் என்பதற்கு அந்தரங்கமும் உண்டு. படித்து ஓதிப் பட்டம் பெற்றோர் ஆராய்ந்து தெளிவு பெறும்போதுதான் கல்விமான் என்று பெயர் பெறுகிறார்கள், தப்லீக்கிலுள்ளவர்கள் ஓதிப்படித்துப் பட்டம் பெற்றவர்களேயன்றிக் கல்விமான்களல்ல. கல்விமான்களாய் இருந்தால் குர்ஆன் ஹதீஸுகளை ஆராய்ந்து உண்மையைக் கண்டிருப்பார்கள். தொழுகையை மட்டும் வற்புறுத்த முற்படமாட் டார்கள். றசூல்(ஸல்) அவர்கள் நான் கல்வியின் பட்டினம் என்று கூறியுள்ளார்கள். இவர்களிடமிருந்த கல்வி ஓதிப்படித்துப்பெற்ற கல்வியல்ல. ஆராய்ந்து தெளிவு பெறுவதே கல்வி என்பது. இப்போது இந்த ஹதீஸுகளைப் பாருங்கள்.

*ஹதீஸ்*

*“இபாதத்துக்களில் சிறந்தது எது? என்று றசூல் (ஸல்) அவர்களிடம் கேட்ட போது, அல்லாஹ்வைப்பற்றிய அறிவு (ஈமான்) என்று கூறினார்கள். எந்த அறிவு? என்று திரும்பவும் கேட்க அல்லாஹ் சுப்ஹானஹுவதஆலாவைப் பற்றிய அறிவு என்று கூறினார்கள். நாங்கள் இபாதத்துக்களான தொழுகை, நோன்பு, ஸக்காத் போன்ற அமல்களைக் கேட்கும் போது தாங்கள் அறிவைப்பற்றிக் கூறுவதென்ன? என்று மீண்டும் கேட்டபோது, அல்லாஹ்வை அறிவதுடனே அற்பமான இபாதத் தும் பிரயோசனம் செய்கிறது. ஆனால் இறைவனைப்பற்றிய அறிவீனத்துடனே எந்த வணக்கமும் இபாதத்தும் அமலும்*





*பிரயோசனம் கொடாது என்று கூறினார்கள்”.* இந்த ஹதீஸை *எஹ்யா ஊலூமுத்தீன் என்ற கிதாபில் கஸ்ஸாலி (றஹ்) அழகான முறையில் விளக்கம் தந்திருக்கிறார்கள்.*

*ஹதீஸ்*

*“நடுநிலைமையைக் கொண்டு இறை முன்னிலையை எய்திக் காலையிலும் மாலையிலும் இரவின்பிற்பகுதியிலும் இபாதத்தில் (வணக்கங்களில்) பெரும்பாலும் ஈடுபடுங்கள். மார்க்கப்பிரசா ரமும் செய்யுங்கள். மேலும் அறிந்து கொள்ளுங்கள்: நிச்சய மாக எவருடைய வணக்கமும் அவரைச் சுவர்க்கம் சேர்த்து விடாது என்று கூறினார்கள். அப்போது நாயகமே! தாங்கள், தங்களுடைய... என்று மக்கள் வினவினார்கள். அதற்கு றசூல் (ஸல்) அவர்கள் முடியாது, அல்லாஹ்வுடைய மன்னிப்பும் கிருபையும் என்னை அடைந்தால் ஒழிய என்னுடைய வணக்கமும் என்னைச் சுவர்க்கத்தில் சேர்த்துவிடாது என்று கூறினார்கள்.”*

இந்த ஹதீஸ் அபூஹுறைறா(றலி) அவர்களால் கூறப்பட்ட ஸஹீஹான உண்மையான ஹதீஸாகும். இந்த ஹதீஸ் புஹாரி என்னும் ஹதீஸ் கிரந்தத்தில் இடம்பெறுகிறது. இக்கூற்று என்னுடைய பொய்ப்பிரசாரமல்ல: உண்மையான ஹதீஸ்தான்.

இப்போது குர்ஆனைப் பாருங்கள்.

*குர்ஆன்: 43:37*

*நிச்சயமாக ஷைத்தான்கள் அவர்களை நேரான பாதையிலிருந்து தடுத்துவிடுகின்றார்கள். எனினும் அவர்களோ தாங்கள் நேரான பாதையில் இருப்பதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறனர்.*

இன்னும் பாருங்கள் 45:7ஆவது ஆயத்தில் *“கற்பனையாய்க் கூறும் பாபிகளுக்கெல்லாம் கேடுதான் என்று இறைவன் கூறுகிறான். மேலும் 50:5 இவ்வாறிருந்தும் அவர்களிடம் வந்த உண்மையானதை (அல்லது வேதத்தை) அவர்கள் பொய்யாக்கி வெறும் குழப்பத்துக்குள்ளாக்கி விட்டனர்.”* என்று இறைவன் கூறுகின்றான். மேலும் *“மனிதர்க்கு வேண்டிய உதாரணங்கள் யாவற்றையும் இந்தக் குர்ஆனில் நிச்சயமாகக் கூறியே இருக்கிறோம். எந்த அத்தாட்சியை அல்லது ஆதாரத்தை நீர் அவர்களிடம் கொண்டுவந்த போதிலும் நீரும் உம்மைச் சேர்ந்தோரும் பொய்யர்களேயன்றி வேறில்லையென்று, இந்த நிராகரிப்போர் நிச்சயமாகக் கூறுவார்கள்”* என்று இறைவன் கூறுகிறான்.

இதில் நிராகரிப்போர் என்பதில் காபீர் என்ற சொல் பாவிக்கப்படுகிறது. குபிர் என்றால் நிராகரிப்பு என்றே நம் நாட்டவர்கள் நம்பியிருக்கிறோம். இது வியாக்கியானம் செய்தவர்களின் தவறு. நிராகரிப்பு என்பது மறுப்பு என்று பொருள்படும். இது முஷ்ரீக்குகளைக் குறிக்கும். குபிர் என்பது வேறு. இது மறைத்தல் மூடல் என்றுதான் பொருள்படும். ஆகவே காபீர் என்பது முஷ்ரீக்கையல்ல. குர்ஆனில் இறைவன் கூறிய உண்மைகளை மறைப்பவர்கள் என்பதே அதன் உண்மை. குபிர் என்பது நான்கு வகையானது.

மேலே காட்டிய ஹதீஸ்கள் ஆயத்துகளை ஆராய்ந்தால் பல உண்மைகள் தென்படுகின்றன. இபாதத்துகளான எல்லா வணக்கங்களையும் விட அல்லாஹ்வை அறியும் ஈமான் என்ற அறிவு மிக மேலானதென்றும், இந்த அறிவில்லாத எந்த அமலும் பிரயோசனம் தராது என்பதும், ஷிர்க் என்ற பாவத்தில் இருந்து விடுபட்டாலேயன்றிச் சுவனம் நுழையமுடியாதென்றும், ஸிறாத் என்ற நேரான பாதையில் இருந்து தவறுவது ஷைத்தான்களினால் ஏற்பட்ட மருட்சியே என்றும் தெரிந்து கொண்டோம். மேலும் குர்ஆன் ஹதீஸுகள் மருட்சியாளரான மூடமக்களுக்குப் பொய்யாகவே தெரியும் என்றும் இப்போது அறிந்து கொண்டோம்.

ஆகவே, இங்கே நாம் அறிய வேண்டிய விஷயம் என்ன வென்றால், தற்போது நம்மிடையே உலாவும் கூட்டம் உண்மையான தப்லீக்கல்ல என்பதே. ஏனென்றால் நான் மேலே சுருக்கமாய்த்தந்த விவரப்படி எத்திவைக்க வேண்டிய நன்மை என்பது உண்மையாய் குர்ஆனில் கூறப்படுகிற ஈமான் என்ற தௌஹீதின் விஷயமே என்பதும் அதற்கு மாற்றமான ஷிர்க் என்பதன் தீமையை விளக்கி அதன் உண்மையை மக்களுக்குப் புரிய வைக்கவேண்டியது என்பதுமே தப்லீக்கின் கடமையாய் இருக்கிறது. இது என்னுடைய தீர்ப்பு என்று கொள்ளாமல் குர்ஆன் ஹதீஸுகளின் தீர்ப்பு என்று நீங்கள் எடுத்துக்கொண்டால் முதலில் மன்னிக்கப்படாத குற்றமான ஷிர்க்கையும் அதன்பின் வெற்றி பெறுவதற்குதவியான ஈமானின் அல்லது தௌஹீது என்பதன் உண்மையையும் நீங்கள் விளங்கி யறிய வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். இவ்விஷயத்தில் நாம் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் என்னும் ஆதாரங்களை அடிப்படையாய்க் கொண்டு ஆராய அறிய வேண்டுமேயன்றி மனம் போன போக்கில் விவாதிப்பதும் உண்மையைக் குழப்பியடிக்கக்கூடிய உபாயங்களைக் கையாள்வதும் பெரும் பிழையாகவே அமையும்.





எம்மை நாம் ஏமாற்றுவது மட்டுமல்லாமல் எதிர்கால இளம்சந்ததியை இருளில் தள்ளிவிடுவதாயும் அமையும். ஆகவே இல்யாஸ் போன்றோரின் கூற்றுகளையும் அவர்களின் கொள்கை விளக்கங்களையும் நாம் சரியாய்ப் புரிந்து கொள்வதானால் நாம் சரியான அடிப்படையில் நின்றுதான் நோக்கவேண்டும். இஸ்லாத்தின் உண்மையான ஈமானென்னும் தௌஹீதையும் அதன் விவரங்களை யும் அதற்கெதிரான ஷிர்க்கையும் அதன் விவரத்தையும் பொறுமை யோடு விளங்கிக் கொண்டால்தான் நாம் உண்மையான சுன்னத்து வல்ஜமாஅத்தென்னும் நல்லடியார்களின் கூட்டத்தில் சேரமுடியும். ஜென்னத்தில் நுழைய முடியும். எந்தக் கட்சியிலுள்ள எந்தக் கொள்கை, குர்ஆனுக்கு மாற்றமானது என்பதைக் கண்டறிய முடியும். அதைவிட முன்கூறிய தப்லீக்கின் அடிப்படைக் கொள்கைகள் ஒவ்வொன்றுக்கும் விடைதருவதானால் மிக நீண்ட நேரம் பேச வேண்டியேற்படும். அது மட்டுமல்லாமல் ஆரம்ப அறிவில்லாத மக்கள் திடீரென விளங்கிக் கொள்ளமுடியாமலும் போய்விடும். ஆதலால் அவர்களுடைய கொள்கைகளை வைத்துவிட்டு நாம் கூறும் குர்ஆன் ஹதீஸுகளின் விவரங்களை முதலில் புரிந்து கொண்டால் நான் விளக்கிக் கூறாமலே உண்மையை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

*குர்ஆன்: 9:17*
*இணையைக் கற்பித்து வணங்கும் இவர்கள், தாங்கள் இணைவைப்போர்தாமென்று (அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று) கூறிக்கொண்டிருக்கும் வரையில் அல்லாஹ்வுடைய பள்ளிகளைப் பரிபாலனம் செய்ய அவர்களுக்கு உரிமையில்லை. இவர் களுடைய நன்மைகள் யாவும் அழிந்து விட்டன. அவர்கள் என்றென்றும் நரகிலே தங்கிவிடுவார்கள்.*

இவைபோல் இன்னும் தரலாம். இப்போது அறிவைக்கொண்டு நோக்கிப்பாருங்கள். இன்று நம் நாட்டில் பெரும்பாலும் ஈமானைப் பற்றியறியாத எத்தும் கூட்டம்தானே பள்ளிவாசல்கள் ஒவ்வொன்றிலும் அமீர்களாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓர்மூஃ. மீன் இவர்களின் ஜமாஅத்தைத் தொடர்ந்து தொழ முன்வருவாரா?

*குர்ஆன்: 6:128*
*“அன்றி இவ்வாறே ஒவ்வோர் ஊரிலும் ஆங்காங்குள்ள பாபிகளை நாம் தலைவர்களாக்கியிருக்கிறோம். அங்கு அவர்கள் விஷமம்*

*செய்துகொண்டிருப்பார்கள். எனினும், அவர்கள் தங்களுக் கேயன்றிச் சதி செய்துவிட முடியாது. அவர்கள் உணர்ந்து கொள்ளமாட்டார்கள்."*

இவ்விதமான பாபிகள்தானே நல்லடியார்களின் பேச்சை, எழுத்தைத் தடைசெய்யும் நோக்கமாய் விஷமச் செயலில் ஈடுபட்டி ருக்கிறார்கள். எத்துக்கூட்டத்துக்கெதிரான பிரசாரத்தை அதிகார பலத்தால் தடைப்படுத்த முனைகிறார்கள்

*குர்ஆன்: 6:69*
*(விதண்டாவாதத்தில் மூழ்கிய) அவர்களுடைய கணக்கில் இருந்து யாதொன்றும் பரிசுத்தவான்களின் பொறுப்பாகாது எனினும், அவர்கள் (இதனை) தவிர்த்துக் கொள்வதற்காக அவர்களுக்கு நல்லுபதேசம் செய்வது கடமையாகும்.*

இவ்விதமாக மருண்ட மக்கள் தப்லீக் இல்லையானால் பள்ளிவாயில்கள் பாழாய்விடுமே என்கிறார்கள். தப்லீக் நம் நாட்டில் படையெடுப்பதற்கு முன் பள்ளிவாயில்கள் பாழ்விழுந்து மனித சஞ்சாரமின்றித், தொழுகையாளர்கள் இன்றிக் கிடந்ததுண்டா? தௌஹீதை எத்திவைத்தால் தொழுகை நின்றுவிடுமே என்று பயப்படுவதும் அறிவீனம்தான். தௌஹீதில் நிலைப்பட்டு வெளித் தொழுகையைக் கைவிடுவதானால் பல வருடங்களும் போகலாம். ஹயாத்துவரையும் நிலைப்படாமலும் போகலாம். ஒரு கிராமத்தி லுள்ள பல ஆயிரம் மக்களில் ஒரு சிலர் பள்ளிக்குப் போகாமல் இருக்கலாம். ஆயினும் இன்னும் இன்னும் மக்கள் பெருகிக் கொண்டும் வளர்ந்து கொண்டும்தானே இருக்கிறார்கள். ஒருபோதும் தொழுகை தடைப்படாது. பள்ளிவாசல் பாழடையாது. ஆனால் எத்தும் கூட்டத்தின் செல்வாக்கு வருமானம் போன்றவைதான் பாழடையும். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள உலமாக்கள், மக்கள் உணரக்கூடிய வகையில் விஞ்ஞானரீதியான விளக்கத்தைத் தொழுகை முதலாம் இபாதத்துகளால் மக்களுக்கேற்படும் நன்மை தீமைகளைப் பகுத்தறிவுக்குப் பொருத்தமாய் குத்பாவின் போது விளக்கிக்கொண்டிருந்தால் ஒவ்வொரு கிராமத்திலும் பல பள்ளிகள் இன்னும் கட்டவேண்டி வரும். வேதாந்தம் என்பது இந்துக்களின் வாதம் என்றும் இஸ்லாத்தில் வேதாந்தம் என்று ஒன்று கிடையவே கிடையாது என்றும் கூறுகிற சில ஆசிரியர்களும் நம்மிடையே உண்டு என்று நான் அறியும் போது; எமது சமூக மக்களில்





சிலரைப் பற்றி நான் வெட்கப்படுகிறேன். வேதம் + அந்தம் அல்லது வேத + அந்தம் என்பதே வேதாந்தம் என்பது. அந்தம் என்றால் முடிவு. தொங்கல், கடைசி, இறுதி என்பதே அதன் அர்த்தம். உலகிலுள்ள வேதங்கள் தௌறாத், சபூர், இஞ்ஜீல், புர்கான் என்பவைதான். உங்கள் பகுத்தறிவைக்கொண்டு நோக்குங்கள். வேதத்தின் அந்தமாய் முடிவாய் இருப்பது (வந்தது) புர்கான் மட்டுமே. ஆகவே வேதாந்தம் என்பது புர்கானே ஆகும். புர்கான் என்ற எமது வேதமான குர்ஆனே முழுப்படியான வேதாந்தமாய் இருக்கும் போது இஸ்லாத்தை நிலைப்படுத்தவே வேதாந்தம் தரப்பட்டிருக்கும் போது, இஸ்லாத்தில் வேதாந்தம் இல்லையென்று கூறுகிற ஓர் ஆசிரியரின் அறிவை நீங்களே எடைபோடுங்கள். இவ்விதமானவர்கள் பட்டதாரிகளாய் இருந்தால்; கலாசாலையின் பின்புறமாய் நுழைந்து பட்டம் பெற்றவர்களாகவே இருப்பார்கள். இவ்வகையினரிடம் கல்வி பயிலும் மாணவர்களின் அறிவின் தகைமை எப்படியிருக்கும் என்பதையும் நீங்களே எடைபோடுங்கள். இப்படியெல்லாம் நொண்டிச்சாட்டிடுவது தங்கள் அமீர்பதவி பறிபோய்விடலாம் என்பதற்காகத்தானே! தாங்கள் அறிஞர்களென்று காட்டிக்கொள்ளத்தானே!

*குர்ஆன்: 2:7*
*(அவர்கள் மனமுரண்டாக நிராகரிப்பதன் காரணமாக) அவர்களுடைய இருதயங்கள் மீதும், கேள்விப்புலன்கள் மீதும், அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான். அவர்களுடைய பார்வைகள் மீதும் திரையிடப்பட்டு விட்டது. தவிர அவர்களுக்கு மகத்தான வேதனையும் உண்டு.*

முத்திரையிடப்பட்டவர்கள் யாரென்பதை இப்போதாவது நாம் அறியமுடியாதா? முத்திரையிடப்படாவிட்டால் காபீரின் சொல்லைக் கேளாதே என்றும் காபீரின் நூலை வாசிக்காதே என்றும் கூறுவார்களா? மனிதர்களால் எழுதப்பட்ட நல்லுபதேசங்களைப் பாராமல் இருப்பது அவர்கள் கண்களில் இடப்பட்ட திரைதான். நல்லுபதேசத்தைச் செவியேற்காமல் இருப்பது அவர்களுடைய செவிக்கிடப்பட்ட முத்திரைதான். குர்ஆனை இலேசாக நினைக்காதீர்கள். அது முற்றறிஞனான இறைவனின் பேச்சு. இறுதி நாள்வரையிலும் உள்ள சகல மனிதருக்கும் வேண்டிய சகலமும் அதில் உண்டு. விரும்பியோர் அதை எடுத்துக் கொள்ளுங்கள். குர்ஆன் ஹதீஸ்களின் உதவியோடு மனிதனையும் மிருகத்தையும் ஷைத்தானையும், தஜ்ஜால் போன்றோரையும் கண்டறியுங்கள். என்னைப்பொறுத்த வரையில் ஷைத்தான் என்றாலும் அவன் சொல்வதை, எழுதுவதைக் கேளாமல் வாசிக்காமல் நான் அவனை

ஷைத்தான் என்று தீர்ப்புக் கட்டவே மாட்டேன். குர்ஆனை மறுக்கும் மதிமாறாட்டமுள்ள ஒருசிலர்; பாடசாலைகளில் இஸ்லாமிய பாடபோதனை செய்கிறார்கள் என்றால் இதுவும் ஓர் ஆச்சரியம் என்றே எனக்குத் தென்படுகிறது. முஷ்ரிக்கீன்கள், காபிரீன்களைக் கொண்டு இறைவன் இஸ்லாத்தையும் மூ.ஃ.மீன்களின் ஈமானையும் உறுதிப் படுத்துகிறான் என்பதை இவ்வினமான ஆசிரியர்கள் அறியவில்லை போலும். ஈமான் விளக்கமே தெரியாத இவ்வித முனாபீக்கீன்களான ஒருசில ஆசிரியர்களும் அவர்களின் வால்களும் சேர்ந்துதான் எம்மைக்கொண்டு தப்லீக்கின் அந்தரங்கத்தை வெளிப்படுத்தவும் இஸ்லாத்தை, ஈமானை நிலைப்படுத்தவும் செய்திருக்கிறார்கள். இவ்வித சந்தர்ப்பத்தை இறைவன் எனக்கருளியதற்காக '*அல்ஹம்துலில்லாஹ்*' என்று அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறேன். இவ்வித முட்டாள்கள் இல்லாவிட்டால் தப்லீக்கின் உண்மை உங்களுக்குப் புலப்படாதல்லவா? நாம் எல்லோரும் சேர்ந்து அல்லாஹ்வுக்கும் அவன் கருணைக்கும் நன்றி செலுத்த வேண்டும். எம்சமூகத்தில் உள்ள படித்தவர்கள் கூட, இவ்வித இருளில் தவிப்பதன் காரணம்தான் என்ன?

*குர்ஆன்: 2:78*
*"அன்றிக் கல்வியறிவு(ஆராய்தல்) இல்லாதவர்களும் அவர்களில் உண்டு. (வேதத்தைப்பற்றிக் கேள்விப்பட்டுள்ள) வீண் நம்பிக்கை களைத் தவிர (உண்மையை) அவர்கள் அறியவேமாட்டார்கள். அவர்கள் வீண் சந்தேகத்தில் ஆழ்ந்து கிடப்போரைத்தவிர வேறில்லை."*

இவ்விதமான குருட்டு விசுவாசத்தில் ஊறிவளர்ந்த நாம், சரியான வயது வந்தபிறகாவது உண்மையை அறிந்துகொள்ள முயற்சி செய்யக் கூடாதா?

*குர்ஆன் 54:17*
*"சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை மிக்க எளிதாக்கியிருக்கிறோம். ஆகவே (இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோருண்டா?"*

*குர்ஆன்: 47:24*
*"அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க மாட்டார்களா? அல்லது இவர்களுடைய இருதயங்கள் மீது தாளிடப்பட்டு விட்டதா?"*





*குர்ஆன்: 38:29*
*"நாம் உமக்கு அருட்செய்திருக்கும் (குர்ஆன்) வேதம் மிக்க பாக்கியமுடையது. அறிவுடையோர் இதன் வசனங்களை ஆராய்ந்து சிந்தித்து நல்லுணர்ச்சி பெறுவார்களாக".*

நம் முன்னோரில் பலர் தமது நன்மையைக் கருதியும் குருட்டுப் பக்தியைக் கொண்டும் நம்மை நிச்சயமாக ஏமாற்றியே இருக்கிறார்கள். இந்த 21ஆம் நூற்றாண்டிலும் நாம் ஏமாறுவது எம் எதிர்கால சந்ததியை நரகில்தள்ளுவதாகவே அமையும்.

*குர்ஆன்: 25:44*
*"அவர்களில் பெரும்பாலார் கேட்கிறார்கள் என்றோ அல்லது அதனை உணர்ந்து பார்க்கிறார்கள் என்றோ நீர் எண்ணிக் கொண்டீரா? அவர்கள் மிருகங்களேயன்றி; வேறில்லை. பின்னும் வழி கெட்டவர்களாகவும் இருக்கின்றனர்."*

*ஹதீஸ்*
*அரசர்களின் அநீதியைப்பற்றியும், அல்லாஹ்வுடைய கலாமை (குர்ஆனை) ஏற்றுக் கொள்ளாமல் கற்பனைகளையும், சாஸ்திரம் என்ற பஞ்சாங்கத்தையும், ஈமான் கொள்வதைப் பற்றியுமான, இம்மூன்று காரியங்களும் எனக்குப்பின் என் உம்மத்துகளில் ஏற்படும் என்று நான் பயப்படுகிறேன்.*

(இந்த ஹதீஸை எஹ்யாவில் இருந்தே எடுத்திருக்கிறேன். எஹ்யாவில் றாவி குறிப்பிடப்படவில்லை. தற்போது அதைத்தேடி எடுக்கவும் எனக்கவகாசமில்லை. விரும்பியோர் தேடி அறியுங்கள். இல்லையேல் எஹ்யாவையே பாருங்கள். நீங்கள் இதை நம்பா விட்டால் விட்டுவிடுங்கள்.)

(24)

இப்போது குர்ஆனைப் பற்றிய மருட்சி ஓரளவு நீங்கி யிருக்கலாம் என்று நம்புகிறேன். மேலே நாம் காட்டிய விவரங்களைக் கண்டறிவதற்காக மனிதனால் கையாளப்படும் பணி ஜிஹாதே யாகும். ஆகையால்தான் நீங்கள் ஒவ்வொருவரும் ஜிஹாது செய்த வர்களாகவே மவுத்தாகுங்கள் என்று கூறப்படுகிறது. இதில் பல அகமியங்களுண்டு. மவுத்தாகாமல் மவுத்தாகும் நிலைமையையும் இந்த வாக்கியம் உள்ளடக்கியிருக்கிறது. ஜிஹாது நம் காலத்தில்

கடமையல்ல என்று சிலர் நினைக்கலாம். வாள், ஆயுதம் கொண்டு செய்வது மட்டும் ஜிஹாதல்ல. இது எல்லோராலும் கையாள முடியாத ஒன்று. ஆனால் நீங்கள் ஒவ்வொருவரும் ஜிஹாது செய்து மவுத்தாகுங்கள் என்னும் போது அதன் அர்த்தம் வாள் போன்ற ஆயுதம் கொண்டு செய்வதே ஜிஹாது என்று பொருள்படாது. றசூலின் ஹதீஸ்கள் காலாகாலம் மரணமடைவதில்லை. அவை என்றும் உயிருடையவைதான். ஆகவே நம்பேரில் ஜிஹாது கடமையல்ல என்று கூற முடியாது.

ஹதீஸின்படி நாம் ஒவ்வொரு கணமும் ஜிஹாதில் அறிவுப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கவேண்டும். அந்த ஜிஹாதில் வெற்றியடைந்து என்றும் நிலையானவனுடன் இரண்டில்லாத ஒன்றாய் அமர வேண்டும். இதுதான் அல்லாஹ்வுடைய பாதை யல்லாமல் புதுடில்லிக்கு நாற்பது நாள் பிரயாணம் செய்வது அல்லாஹ்வுடைய பாதையாகாது. நாம் கூறுகிற ஈமானைக் கொண்டு இறைவனை அடையும் பாதைதான் அல்லாஹ்வுடைய பாதை. ஸிறாத் என்ற பாலமும் அதுதான். இதில் பிரயாணம் செய்து கரைகண்டு அல்லாஹ்வின் நல்லாசியைப் பெற்றவர்கள்தான் நல்லடியார்கள். அவர்களுக்கு அச்சமில்லை. நாம் தொழுகையின் போது ஒரு நாளைக்குப் பதினேழு முறை இறைவனிடம் கேட்டு மன்றாடும் பாதை கலிமாவினால் ஏற்பட்ட பாதை, ஸிறாத் என்ற பாதை, தௌஹீதின் பாதையேயாகும்

நாம் தொழுகையில் கேட்கும் பிரார்த்தனையை இறைவன் அங்கீகரிக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக நாம் அப்பாதையைப் பெற்றிருப்போம். இறைவனின் கை என்றும் விரிந்து தான் இருக்கிறது. அதில் எமக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ள முடியாதபடி எம் கைகளை நாம் இறுக்கிப்பிணைத்துக் கொண்டோம். நமக்கு எடுக்கத் தெரியவில்லை. தற்செயலாக அந்தப் பாதை எமக்குத் தென்பட்டாலும் அதை ஏற்க மறுத்துவிடுகிறோம். காரணம் என்ன தெரியுமா? நாம் இறைவனை ஏமாற்ற நினைத்து, எம்மையே நாம் ஏமாற்றிக் கொண்டதால் ஏற்கப்பட்ட சாபக்கேடாகவே இது இருக்கிறது. என்னுடன் ஆத்திரமடைவதில் அர்த்தமில்லை. குர்ஆனோடு கோபித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் 1408 வருடங்களுக்கு முன்பே எமது இன்றைய நிலைமையைக் குர்ஆன் மூலம் இறைவன் விளக்கியிருக்கிறான். நாம் குர்ஆனைப்பிரித்துப் பாராமலே சாம்பிராணி தீபம் போட்டுப்





பூட்டி வைத்துக் கொண்டிருக்கிறோம். அக்குர்ஆனின் போதனைகளை வீசி எறிந்துவிட்டு எமது எண்ணம்போல் செயல்படுகின்றோம்.

*குர்ஆன்: 107:4, 5, 6.*
*தவிர, தங்கள் தொழுகையில் பாராமுகமாய் இருக்கும் தொழுகையாளிகளுக்கும் கேடுதான். அவர்கள் (தொழுத போதிலும் ஜனங்களுக்குக்) காண்பிக்கவே தொழுவார்கள்.*

என்று இறைவன் கூறுகிறான். இங்கே பாவிக்கப்படுகிற சொல்லும் ஸலாத் என்பதுதான். இந்த ஸலாத் நாலு படித்தரங்களில் உள்ளவர்களையும் குறிப்பிடும். பெரும்பாலாரின் தொழுகை அவர்களுடைய தலைக்குமேல் போவதில்லையென்றும், பெரும்பாலாரின் தொழுகையினால் உடல் சோர்வு ஏற்படுகிறதேயன்றி அதனால் பிரயோசனம் பெறப்படுவதில்லையென்றும் றசூல் விளக்குகிறார்கள். தொழுகை பெரும்பாலாருக்குச் சாபக்கேடாகவே இருக்கிறதென்று முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜெய்லானி அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே ஈமானை விளக்கி அதை உறுதிப்படுத்தும் நோக்கமாகவே நாம் தொழுகையைக் கையாள வேண்டும் என்று நான் கூறுகிறேனேயன்றி அதைவிட்டுவிடும்படி நான் கூறவில்லை.

மனிதனின் தொழுகை ஏன் பிரயோசனம் செய்யாமல் தடைப்படுகிறது? மனிதரில் பெரும்பாலார் அதை அல்லாஹ்வுக்காகச் செய்வதில்லை, தங்களுக்காகவே செய்கிறார்கள். தொழுகை அல்லாஹ்வுக்குரியதேயன்றி மனிதனுக்கு அதில் பங்கில்லை என்பதை நல்லறிஞர்களிடம் விளங்கித் தெளிவுபெற வேண்டும். சுவர்க்கத்தை ஆதரவுவைத்தே தொழுகிறார்கள். சுவர்க்கம் ஒரு சிருட்டிதான். எமது அவாவைப் பூர்த்தி செய்யவே அதைச் செய்கிறோம். இது ஒரு சிருட்டிக்காக இன்னொரு சிருட்டி செய்த செயல் தான். றப்புக்காக அப்து செய்த செயல் அல்ல. ஆகையால்தான் அது எதிரிடையாய் வேலை செய்கிறது. சுவர்க்கத்துக்குப் பதிலாய் நரகையே தருகிறது. பெயர் புகழை விரும்பிச் செய்வோருக்கும் இதே கதிதான். அத்தொழுகை எதிரிடையாய் வேலை செய்வதை இவர்கள் அறிவதே இல்லை. இவர்களின் உள்ளத்துக்குப் போடப் போகிற சட்டையையும், குடிக்கும் சீழ்நீரையும், உண்ணும் ஸக்கூம் பழத்தையும் உணரும் அறிவு இவர்களிடமில்லையே.

*குர்ஆன்: 102:1, 2, 3, 4, 5, 6, 7.*
*நீங்கள் கப்றுகளைச் சந்திக்கும் வரையில் அதிகப்படுத்திக் கொள்ளும் பேராசை உங்களைப் பராக்காக்கி விட்டது. பின்னர் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் இல்முல்எகீன் உடையவர்களாய் இருந்தால் நீங்கள் நிச்சயமாக நரகத்தைக் காண்பீர்கள். (உலகிலேயே காண்பீர்கள்.) நீங்கள் ஐனுல்எகீன் உடையவர்களாய் இருந்தால் (கண்ணால்) கண்டு கொள்வீர்கள் என்பது உறுதி.*

இதை விளக்குவதற்கு இந்த நூல் இடம்தராது. நீங்களே சிந்தனை செய்து தெளிவு பெறுங்கள். ஆகிறாவில் எமக்குக் கிடைக்கும் தீர்ப்பு குர்ஆனின் தீர்ப்பேயன்றி வேறொரு புதிய தீர்ப்பேயல்ல. நாம் அறிவுடையவர்களாய் இருந்தால் குர்ஆனைக் கொண்டே எமது நிலைமையை, நாம் நரகசுவர்க்கங்களில் எந்த இடத்துக்குரியவர் என்பதை எம்மால் அறியமுடியும்.

*குர்ஆன்: 65:8*
*எத்தனையோ ஊர்வாசிகள் தங்கள் தங்கள் இறைவனின் கட்டளைக்கும் அவனுடைய தூதர்களுக்கும் மாறுசெய்தனர். ஆதலால், அவர்களை நாம் வெகுகடினமாகவே கேள்வி கணக்குக் கேட்டு, அவர்களைக் கொடூரமான வேதனையும் செய்தோம். (துன்யாவிலும் கேள்விக் கணக்கு உண்டு என்பது தெரிகிறது)*

*குர்ஆன்: 65:10*
*அன்றி (மறுமையில்) அல்லாஹ் அவர்களுக்குக் கடினமான வேதனையைச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறான். ஆகவே விசுவாசம் கொண்ட அறிவாளிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு (குர்ஆன் என்னும்) நல்லுபதேசத்தை இறக்கி வைத்திருக்கிறான்.*

மேற்காட்டிய ஆயத்துகளை நுட்பமாய் நோக்குபவர்களுக்கு இம்மையிலேயே கேள்விக் கணக்குண்டு என்பது தெரியவரும். இம்மை பொலீஸ்கோட், மறுமை அப்பீல்கோட் அவ்வளவுதான்.

மனிதர்கள் குர்ஆனை ஏற்கலாம். அல்லது உதாசீனம் செய்யலாம். இது அவரவர் சுயநிர்ணய உரிமையைப் பொறுத்த விஷயம்.





அன்பர்களே!

நான் கல்வியின் பட்டினம். அலி(றலி) அதன் வாசல், என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த அலி(றலி) என்ன கூறுகிறார்கள் என்பது தெரியுமா? *“அதஹ்ஸிபு அன்னகஜிர் முன்ஸகிர், வபீகன்தவல் ஆலமுல் அக்பறு”* என்று கூறுகிறார்கள். இதன் கருத்து: *“(மனிதனே!) நீ உன்னை ஒரு சிறிய ஜடப்பொருள் என்று நினைக்கிறாயா? உன்னிலே இந்த மாபெரும் ஆலங்களே அமைந்திருக் கின்றன”* என்பதே.

மனிதன் தன்னை எல்கையில் கட்டுண்ட ஓர் அற்பப் பொருளாய், உடலென்ற ஜடத்துக்குள் குடிபுகுந்துள்ள ஒரு சிறு பொருளாய்க் கணிக்கிறான். ஆனால் சர்வ ஆலங்களுக்கும் ஜனாக (ஆலங்கள் யாவும் தன்னிலேயே அமைந்துள்ள நிலைக்களனாக) இன்ஸான் இருக்கிறான். இவனைவிடச் சிருட்டிகளில் வேறு எதுவும் உயர்ந்ததல்ல. ஆகையால்தான் மலக்குகளையே ஆதம் (அலை) அவர்களுக்குச் சுஜூது செய்யும்படி ஏவினான். தனது கலீபாவாகத் தன்னுடைய றஹ்மான் என்னும் தோற்றத்திலே (ஸூறத்திலே) அமைத்திருக்கிறான். இறைவனின் செயல்கள் கலீபா என்ற இன்ஸானைக் கொண்டே நிரப்பமாய் வெளியாக வேண்டும். அப்படித்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை அறிவில்லாத மனிதன் அறியவேமாட்டான். இந்த அறியாத நிலைமைக்குத்தான் மறதி, மருட்சி, வஹ்மு என்றெல்லாம் கூறப்படுவது. இந்த மறதியை நீக்கித் தன் சுயநிலைமையை உணரச் செய்யவேண்டும் என்பதே திக்று தரப்பட்ட நோக்கம். திக்று என்றால் நினைத்தல், ஞாபகப்படுத்தல் என்பதே பொருள். இந்த நினைத்தலை, ஞாபகப்படுத்தலை உருவாக்குவதற்குரிய ஆரம்பப் பயிற்சிகள்தான் தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு மற்றும் இபாதத்துக்கள் யாவும்.

மறந்துபோன ஒன்றை நினைவுக்குக் கொண்டுவருவதானால்; தற்போது நினைவிலுள்ளதை முதலில் மறக்க வேண்டும். இல்லையானால் நினைவு ஏற்படாது. இதில் பாமர மனிதனின் பங்கு நாளைக்கு ஐந்து வேளை துன்யாவை மறந்து றப்போடு உறவாடுவதே. இது பூரண ஞாபகத்தைத் தராது. இது ஓர் ஆரம்பப் பயிற்சிதான். இதைக் கருத்தில் கொண்டே “திக்றுக்காகத் தொழு” என்று இறைவன் கூறுகிறான். இது முதலாவது பயிற்சி, இரண்டாவது பயிற்சி தன்னையும் சர்வ உலகங்களையும் மறந்து இறைவனை மட்டுமே நினைப்பதாய் இருக்கிறது. இவ்விஷயம் ஆரம்ப பயிற்சியின் போது அமையாது. ஆகையால்தான் *“தொழுகை முடிந்தபின் திக்று செய்யுங்கள்”* என்று இமாம்கள் கூறுகிறார்கள். உண்மைதான். இது ஆரம்ப மாணவர்களின் நிலைதான். இதில் கடினமாய்

ஊறிவிட்டால், குழந்தையின் பயிற்சி வாலிபனுக்கு அவசிய மில்லாதிருப்பது போல; ஆரம்ப மாணவனின் பயிற்சி அவசியமில்லாமலாகிறது. இதற்குப் பலவருடங்களும் பிடிக்கலாம். இது இஸ்லாத்துக்கு விரோதமல்ல. எமது வஹ்முக்குத்தான் விரோதம். எமது பரம்பரைப் பழக்க வழக்கத்துக்குத்தான் விரோதம்.

**“லாஇலாஹ”** என்னும் போது *“ஒன்றுமே இல்லை”* என்று அது வலியுறுத்துவதால், அதைக்கல்பு ஏற்கும் அதேவேளை; மறதியும் ஏற்பட்டுவிடும். மறதி ஏற்பட்ட அதேகணத்தில் நினைவும் ஏற்பட்டுவிடும். அதாவது இல்லல்லாஹ் என்பது ஞாபகத்தை உருவாக்கிவிடும். இது ஓர் நாளில் வாய்ப்பதல்ல. இந்த நிலைமை கிடைக்கும் வரையிலும் ஸலாத்தின் நான்கு படித்தரங்களில் ஒன்றில் நிற்கவும், அப் படித்தரத்துக்கேற்ற திக்றில் கவனம் செலுத்தவும் வேண்டியது அவசியமாகும். இவர்கள் தொழுகையை விட்டவர் களல்ல. ஆனால் நமது பழக்கவழக்கத்துக்குமாறான தொழுகையில் இருக்கிறார்கள். அவ்வளவுதான். ‘வஅகிமிஸ்ஸலாத்தலிதிக்றி’ என்ற ஆயத்தைக் கவனத்துக்கெடுங்கள்.

*“வஹ்புதுறப்பக்க ஹத்தா எ.்.தியக்கல் எகீன்”* என்ற ஆயத்துக்கு மவுத்தாகும் வரையிலும் வணங்கு என்று பாமர மக்களுக்குப் பொருள் கூறுவதை நான் தடுக்கவோ மறுக்கவோ இல்லை. ஆனால் இப்படிக்கூறினால் அம்மனிதன் நின்ற இடத்தை விட்டு உயரமாட்டான். ஆகவே மவுத்து என்பதை அம்மனிதனுக்கு எடுத்து விளக்கினால் அம்மனிதன் சாதாரண தொழுகையை விடமாட்டான். சமயம், பக்குவம் வரும் போது உயர்பதவியையும் பெறுவான். இதில் விவாதிக்க வேண்டிய அவசியமே இல்லை. தரீக்கத்தை எய்திக் கொண்டவர் சுவர்க்க இன்பத்தையல்லாமல் இறைவனையே தன் உடைமைப் பொருளாக ஆக்கிக்கொள்கிறார். இவருடைய அன்றாட நிகழ்ச்சிகள் யாவும் அல்லாஹ்வுக்காகவே செய்யப்படுவதால் இவர் கடலில் விழுந்த மழைத்துளி போல் ஆகிவிடுகிறார். கடலாகவே இருக்கிறார்.

கடல் நீர், ஆவியாய், மேகமாய், மழையாய் இருந்து மீண்டும் கடலானது போல இம்மனிதரும் சர்வமர்த்தபாக்களையும் தாண்டித் தன் சொந்தநிலைமையை நினைவுபடுத்திக் கொண்டதால் கனவு கலைந்தவராகிறார். இவரிடம் வெளியாவது இறைவன் செயலே. இதுதான் பூரணஅடிமையில் வெளியாகும் இபாதத் என்ற சொல்லின் உண்மை. இதை விளங்கிக் கொள்ளாமல் வழக்கத்தில் ஊறியிருக்கிற மக்களுக்கு இது ஓர் புதுமார்க்கம்போல் தென்படலாம். இல்லை. இதுதான் றசூலால் கையாண்டு காட்டப்பட்ட





குர்ஆன் ஹதீஸுகளால் விளக்கப்பட்ட, தீனுல் இஸ்லாம் என்பது. இது நீண்ட காலத்துக்கு முன்பே புதையுண்டுகிடக்கிறது.

(25)

## அன்புப் பெருமக்களே!

திண்மப் பொருளான ஐஸ் என்ற பனிக்கட்டியும் திரவப் பொருளான தண்ணீரும் ஒன்று மற்றதுதானாகவே இருக்கிறது. பனிக்கட்டியாய் இருப்பது எதுவோ; அது உண்மையில் நீர்தான். ஆனால் நீரின் திரவத் தன்மை பள்ளத்தைநோக்கி ஓடும் தன்மை, அலைகிளப்பும் தன்மை போன்ற சிற்சில பண்புகள் மட்டும் பனிக்கட்டியில் இல்லாமல் இருக்கின்றன. இந்த மாற்றமான பண்புகள் பனிக்கட்டியில் இல்லை. ஆகவே பனிக்கட்டியின் இயற்தன்மையான பண்புகள் கூட, நீரைவிட்டும் வேறானவைதான். ஆயினும் இந்தப் பனிக்கட்டியின் ஸூறத்தும் அதன் குணங்களும் உண்மையான ஹக்காக இல்லை. தண்ணீரின் ஸூறத்தைக் காண்பிக்க ஏதுவாய் இருந்த ஏதோ ஓர் மூலகாரணம் தான், பனிக்கட்டிக்கும் மூலாதா ரமாய் இருக்கிறது. இந்தப் பனிக்கட்டியின் ஸூறத்தோ உண்மையான ஆதாரத்தின் வாடையைக்கூடப் பெறவில்லை. புலனறிவினால் அமைந்த வெறும் கற்பனையில்தான் பனிக்கட்டியின் ஸூறத் அமைந் திருக்கிறது. தண்ணீரும் இதே நிலைமையிலுள்ளதுதான். ஆயினும் எமது புலனறிவைக் கொண்டு இவை இரண்டையும் நாம் பார்க்கும் போது இவை வெவ்வேறுதான் என்றும் கூற முடியாது; ஒன்றேதான் என்றும் கூற முடியாது.

பனிக்கட்டி நீர் என்ற பெயரைப் பெறாததாய் இருப்பினும் எதிர்காலத்தில் தண்ணீராகத்தான் இருக்கிறது. இதைப்போலவே நீர் பனிக்கட்டி என்ற பெயரைப் பெறாவிட்டாலும் எதார்த்தத்தில் பனிக்கட்டியாகத்தான் இருக்கின்றது. இவ்விரண்டு பொருட்களும் பெயரிலும் ஸூறத்திலும் பண்பிலும்தான் வேறுபட்டிருக்கின்றன. ஒன்றின் பெயரை நாம் இன்னொன்றுக்குச் சூட்டுவதே இல்லை. இவற்றின் உண்மைதான் என்ன? இப்பொருட்களுக்கிடப்பட்ட நாமங்கள், இவை இரண்டுக்கும் ஆதாரமாய் இருந்த ஏதோ ஓர் பொருளுக்கிடப்பட்ட இருநாமங்களாய் இருக்கின்றன. பனிக்கட்டி நீர் ஆகிய இரு பொருட்களையும் நோக்கி நாம் கூறும் பெயர்கள் அறபு பாஷையில் கௌனியான அஸ்மாக்கள் என்று கூறப்படும். அதாவது தோன்றி மறையும் பொருட்களுக்கு எம்மால் இடப்பட்டு நாவினால் கூறும் நாமங்களையே கௌனியான அஸ்மா என்று கூறப்படும்.

இந்தக் கெளனியான நாமங்களால் உணரப்படும் பொருட்கள் ஏதோ இனம் தெரியாத ஒன்றின் ஓவ்வோர் நிலைமையிலுள்ள ஸூறத்தாகும். இந்தப் பொருட்கள் இலாஹியான அஸ்மாக்களின் ஸூறத்தாகவே இருக்கின்றன. இறைவனுக்கென்றுள்ள தனியான நாமங்களையே இலாஹியான அஸ்மா என்று கூறுகிறோம். அந்த இலாஹியான அஸ்மாக்களின் ஸூறத்தே சர்வஆலங்களுமாய் இருக்கிறது. நாம் எம் வாயால் கூறும் நாமங்களோ, இலாஹியான நாமத்துக்கு நாமமாய்க் கெளனியான வெறும் நாமங்களாகவே இருக்கின்றன. அவை உண்மைப் பொருட்களல்லாத வெறும் கற்பிதமானவையாய் இருக்கின்றன. ஏதோ ஒரு பொருளின் இயல்பான நாமத்தையே லாஹிர் என்று கூறுகிறோம். இந்த நாமம் பொருளும் சொல்லும் ஒன்றித்தது. நாம் வாயால் கூறும் நாமம் பொருளல்லாத வெறும் நாமமாய் இருக்கிறது. (நுட்பமாய் உணர்க)

இதைத்தான் எமது குர்ஆன் "*குல்லுஷையின் ஹாலிகுன் இல்லாவஜ்ஹஹு*" என்றும் "*பஐனமாத்துவல்லூபதம்ம வஜ்ஹுல் லாஹி*" என்றும் கூறுகிறது. இவற்றின் கருத்து அவனுடைய வஜ்ஹுவைத் தவிரச் சகலவஸ்துக்களும் இல்லாமலானவையாகும் என்றும் நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வுடைய வஜ்ஹு இருக்கிறதென்றும் நீங்களறிந்திருக்கிறீர்கள். இன்னும் பல ஆயத்துகள் தரலாம். நான் விரிவைப் பயப்படுகிறேன். வஜ்ஹு என்றால் முகம் என்று தப்ஸீர்கள் கூறுவதை நாம் ஏற்போம். அதுவே இப்போது போதுமானது. ஆயினும் வஜ்ஹு என்பதற்கு அந்தரங்கமுண்டு.

இந்த வேதவசனங்களை அவதானித்துப் பாருங்கள். உள்ளது வுஜுதேயன்றி அதனுடன் எதுவும் கிடைக்கவே கிடையாது. இந்த வேதவசனங்களைக் கலிமாவும், கலிமாவை வேதவசனங்களும் உறுதிப்படுத்துகின்றன. இதை விளங்கித் தெளிவு பெறும் வரையிலும் தொழுகை முதலாம் கடமைகளிருந்தும் மனிதன் விடுபடமுடியாது, இது உண்மை. இந்த நிலையில் தெளிவு பெறுவதானால் பட்டதாரி களுக்குக்கூடப் பல வருடங்கள் தேவையாகும். என்னுடைய அனுபவத்தில் இதை விளங்கித் தெளிவுபெற எனது 10 வயதில் இருந்து 35 ஆவது வயதில்தான் முடிவு பெற்றது. அதுவரையிலும் வெளித்தொழுகை போன்றவற்றை பெரும்பாலான மனிதர்களைவிட மிக அதிகமாய் இரவு பகலாய் அரும்பாடுபட்டுத்தான் செய்தேன். இறைவன் என் முயற்சிக்கு அவனுடைய பெருந்தன்மையைக்





கொண்டு அருள் செய்தான். ஆகவே இந்தத் தெளஹீதைக் கூறினால் மக்கள் தொழுகையை விட்டுவிடுவார்கள் எனபது வரட்டுத் தத்துவமேயன்றி உண்மையல்ல. இதை உணராமல் பேசுபவர் குர்ஆன் ஹதீஸுகளை உதாசீனம் செய்தவராவார். அவருக்கும் நமக்கும் பேச்சுக் கிடையாது.

மேலும் நான் கூறவிரும்புவது என்னவென்றால் நான் கூறும் குர்ஆன் ஹதீஸுகளை ஒதுக்கித்தள்ளிவிட்டு, நான் ஷரீயத்தை உடைக்கிறேன் என்று யாராவது கூறினால்; அது அவரின் விளக்கப்பிசகேயாகும். மவுத்தாகும் வரையிலும் யாவரும் தொழுதே ஆக வேண்டும் என்பதை நான் பூரணமாய் ஒப்புக்கொண்டிருக்கிறேன். ஆயினும் மனிதர்களின் நிலைமைக்கேற்பத் தொழுகையின் வகை மாறுபட்டிருக்கிறதென்று கூறுகிறேன். மனிதர்களின் அறிவுப்படிகளுக்கேற்ப அனுஷ்டானங்கள் வேறுபடுகின்றன என்று கூறுகிறேன். ஆகவே இறைவழிசெல்லும் மக்களை (ஸூபிகளை)ப் பிழையாய்க் கணித்து அவர்களை வெருட்டக் கலைக்க முற்படுவது; குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறான மார்க்க விரோதமான செயல் என்று கூறுகிறேன். யாரையும் தொழாமல் இருந்துவிடும்படி நான் கூறவில்லை. எனக்கு அவ்வித அதிகாரம் கிடைக்கவே கிடையாது. நான் மக்களைத் தொழ வேண்டாம் என்று தடைப்படுத்துவதாகக் கூறுவது ஒருசிலரின் பொறாமையினால் ஏற்பட்ட அபாண்டப் பொய்யாகும்.

ஷரீயத் தரீக்கத் இரண்டையும் ஒப்பிட்டு நான் காட்டியது உண்மையை நீங்கள் உணரவேண்டும் என்பதற்காகத்தான். சூபிகளின்மீது ஓர்சிலர் காணும் தவறுகளை அறியாமையை நீக்கி வைக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். சூபிகளான நல்லடியார்களுக்குப் பாமரமக்களால் தடையேற்படும் போது சூபிகளின் முன்னேற்றம் தடைப்படுகிறது. அதனால் பாமர மக்களிடையே இறைதண்டனை ஏற்படுகின்றது, இது உலகறிந்த உண்மை.

*குர்ஆன்: 72:16,17*
*மார்க்கத்தின் தரீக்கத் என்னும் வழியில் உறுதியாக இருந்தால் தடையின்றியே அவர்களுக்கு மழையைப் பொழிவித்துக் கொண்டிருப்போம். அவர்களை நாம் சோதிப்போம். ஆகவே, எவன் தன் இறைவனைத் திக்று செய்வதைப் புறக்கணிக்கி றானோ அவனைக் கடினமான வேதனையில் புகுத்தி விடுவோம்.*

இந்த ஆயத்தில் மிகப்பல உண்மைகள் தென்படுகின்றன. மழை பொழிவதற்கு ஓர் காரணம் தரீக்கத்வாதிகளே என்பதை நீங்கள் உணரவேண்டும். மழை என்பதில் உள்ள பல கருத்துகளை நீங்கள் ஆராயவேண்டும். மழை என்பதில் இப்போது நமக்கு அவசியமானது மார்க்கவிளக்கம் என்பதே. இதற்கு ஆதாரம் உண்டு. இடைவிடாமல் மழைபெய்தால் உலகம் அழிந்துவிடுமல்லவா? ஆகவே துன்யாவின் மழை மட்டுமல்ல கல்பின் மூலம் வெளியாக்கி இறைவனால் மக்களுக்கறிவிக்கப்படும் இல்ஹாமத் இல்முல்லதுன்னீ, வாரிதாத்றஹ்மானி போன்ற மழைகளும் தடைப்படலாம். எவன் இறைவனைத் திக்று செய்வதைப் புறக்கணிக்கிறானோ தட்டிக்கலைக்கிறானோ அவன் கடினமான வேதனைக்காளாவான் என்பது தென்படுகிறது. வேதனை எங்கே? இம்மையிலும் மறுமையிலும்தான்.

இந்த வேதனைகளில் முதலாவதாகக் கொடுபடுவது என்ன தெரியுமா? சூபிகளால் விளக்கப்படுகிற குர்ஆன் ஹதீஸுகளினால் உறுதிப்படுத்தப்படுகிற சாதாரண ஓர் சிறுவிஷயத்தைக்கூட விளங்கிக் கொள்ளமுடியாதபடி கல்பில் முத்திரையிடப்படுவதே. இத்திரை மூன்று பகுதிகளைக் கொண்டது. ஐந்து புலன்களும் பகுத்தறிவும் இதில் அடங்கும். இதை நல்லடியார்கள் ஏகமனதாய் (இஜ்மாஉ)க் கூறியுள்ளார்கள். குர்ஆன் ஹதீஸ்கள் விளக்கியிருக் கின்றன. நாம் அவற்றை இங்கே கூறவில்லை. றசூலைக் கண்டவர்களில் மிகப்பலர் றசூலின் முகத்தைப் பாராமல் திருப்பிக் கொண்டதையும் அவர்களின் பேச்சைக் கேளாமல் செவிகளில் விரல்களை நுழைத்துக் கொண்டதையும் நீங்கள் அறிந்துதானே இருக்கிறீர்கள்.

தொழுகை முடிந்த பிறகு திக்று செய்ய வேண்டும் என்று தானே பல பெரிய மனிதர்கள் (இமாம்கள்) கூறியிருக்கிறார்கள். நீங்கள் கூறுவது அவர்களின் பேச்சுக்கு மாறுபோல் தென்படுகிறதே என்று நீங்கள் கேட்கலாம். தொழுகை பர்லாகவும் திக்கிர் நபிலாகவும் இருப்பதால் தொழுகையை முடித்த பிறகு திக்று செய்வதுதான் சரியென்று சிலர் நம்புகிறார்கள். தொழுகை என்பதே திக்று செய்வதுதான். மக்களால் பெரியார்கள் என்று கூறப்படுப வர்கள், மார்க்கத்தின் வெளிப்புறமான சிற்சில விஷயங்களை விளங்கியறிந்து பிக்ஹுக்கலையில் தேர்ச்சி பெற்ற புகஹாக்களே யன்றி, முஹக்கிக்கூன்களான தத்துவ மேதைகளோ ஆரிபுகளான





அவ்லியாக்களோ அல்ல. நான் இமாம்களைக் குறைகூறுவதாகச் சிலர் நினைக்கிறார்கள். அது அவர்களின் அறியாமை. நான் அப்படிக் கூறுவதில்லை.

இந்த இமாம்கள் பாமரமக்களுக்கு (அவாம்) வேண்டிய வற்றை வெளிப்படையாயும் தரீக்கத்துடைய மக்களுக்கு வேண்டிய வற்றை மூடலாகவும் கூறினார்களேயன்றி மார்க்கத்தில் எல்லா நுட்பங்களையும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. ஆனால் இவர்கள் இஸ்லாத்தின் நாலு படித்தரங்களையும் எங்கேயும் எப்போதும் மறுக்கவும் இல்லை. இவர்களைப் பின்பற்றிச் சென்ற சிலர் இமாம்களின் உண்மையை உணர்ந்து கொள்ளாமல் கொடுத்த வியாக்கியானங்கள் ஷரீயத்தையேயன்றி மற்றப் படித்தரங்களை மறைக்கக் கூடியதாய் அமைகின்றன. நான் *“வியாக்கியான கர்த்தாக்கள்”* என்று கூறுவதெல்லாம் இவர்களைத்தான். இவர்கள் தொழுகை விஷயமாய்க் கையாளும் பிரமாணம் பெரும்பாலும் கியாஸைச் சேர்ந்ததாகவே தென்படுகிறது. கியாஸ் என்பது நாலாம் இடம் கொண்டதே. இதை அறிஞர்கள் அறிவார்கள். அறியாத மக்கள் வியாக்கியான கர்த்தாக்களின் பேச்சையே ஆணித்தரமாய்ப் பிடித்துக் கொண்டிருப்பதால் குர்ஆன் ஹதீஸுகளின் பேச்சுக்குச் செவி கொடுக்கிறார்களே இல்லை.

உதாரணமாக *“திக்றுக்காகவே ஸலாத்தை எடுத்துக் கொள்”* என்ற வசனத்தை நோக்கினால் இதில் பர்ளு, நபில் என்ற இரு பகுதிகள் இருக்கின்றன. பர்ளு என்றால் முதலில் செய்யப்பட வேண்டியதென்றும் நபில் என்பது மேலதிகம் என்ற பொருளைக் கொடுப்பதனால் பர்ளின் பின் செய்யப்பட வேண்டும் என்றும் தீர்ப்புக் கட்டியுள்ளார்கள். இவர்களுடைய தீர்ப்பு அவாம்களுக்குப் போதுமானதும் சரியானதும்தான். ஆனால் குர்ஆன் ஹதீஸுகளை ஆராயும் போது பர்ளுக்கு முதல் விதியாய் அமைவதும் சிற்சில விஷயங்களில் பர்ளே என்பது தென்படுகிறது. (எல்லா விஷயங்களிலுமல்ல.) திக்றுக்காகவே தொழு என்ற வசனத்தை நோக்கினால், தேவை திக்றே என்பதும் அதற்குதவியாகவே தொழுகை என்பதும் தென்படுகிறது. அப்படியானால் தொழுகை என்பதும் பர்ளாக இருந்தால், திக்று என்பதோ மிகக்கடினமான பர்ளாகவே இருக்க வேண்டும். ஆயினும் இந்த நபில் என்ற சொல்லுக்கு மேலதிகம் என்று பொருள் கொண்டிருப்பதால் நபில் அவ்வளவு முக்கியமல்ல என்று நினைக்கிறோம். அவ்லியாக்களான மகான்கள் இதை ஏற்கவில்லை.

அவ்லியாக்கள் அனுபவஸ்தர்களாய் இருப்பதால் குர் ஆனின் உண்மையில் இருந்து அணுவும் அவர்கள் தவறுவதில்லை. ஆகவே அவர்கள் லாஹிறையும் அறிகிறார்கள், பாதினையும் அறிகிறார்கள். புகஹாக்கள் லாஹிறை மட்டும் எடுத்திருக்கிறார்கள். இவர்கள் நபிலுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இப்போது குர்ஆனைப் பாருங்கள்.

*குர்ஆன்: 17:99*
*தஹஜ்ஜத்தை நீர் நபிலாக இரவில் ஒரு பாகத்தில் செய்வீராக. (இதன் பாக்கியத்தால் மகாமன் மஹ்மூத் என்னும்) மிக்கப் புகழ் பெற்ற ஸ்தானத்தில் உம் இறைவன் உம்மை அமர்த்தலாம்.*

இவ்வாயத்தில் தொழுகையைக் குறிப்பிடும் ஸலாத் என்ற சொல் பாவிக்கப்படவில்லை, ஆயினும் பெரும்பாலான தப்ஸீர்களில் தஹஜ்ஜத் என்பதைக் கொண்டு தொழுகையே விபரம் தரப்பட்டிருக்கிறது. ஆயினும் நபில் என்ற வணக்கத்தைக் கொண்டே உயர் பதவியைப் பெறலாம் என்பதற்கு இந்த ஆதாரம் போதுமானது. பர்லான வணக்கங்களைப்பற்றி இப்படியெல்லாம் கூறப்படவில்லை. அனேக ஆதாரங்களைத் தரலாம்.

*குர்ஆன்: 18:54*
*மனிதர்களுக்கு இந்தக் குர்ஆனில் ஒவ்வோர் உதாரணத்தையும் விபரித்திருக்கிறோம். எனினும் மனிதனோ அதிகமாக (வீண்) தர்க்கம் செய்பவனாகவே இருக்கிறான்.*

இப்போது குர்ஆனில் வேறோர் ஆயத்தைப் பார்ப்போம்.

*குர்ஆன்: 29:45*
*வஹிமூலம் உமக்கு அறிவிக்கப்பட்ட வேதத்தை ஓதி தொழுகையைக் கடைப்பிடித்துவாரும். ஏனென்றால் நிச்சயமாகத் தொழுகையானது மானக்கேடான காரியங்களில் இருந்தும் பாபங்களிலிருந்தும் விலக்குகிறது. அல்லாஹ்வை நினைவில் வைத்துத் திக்று செய்வது நிச்சயமாக மிகப் பெரிய காரியம், அன்றி நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிவான்.*

இந்த ஆயத்தில் ஸலாத் என்ற வெளித் தொழுகையையும் திக்றையும் பிரித்து விளக்கம் தருகிறான். இங்கே திக்றுக்காகத் தொழு என்ற ஆயத்தையும் இத்துடன் இணைத்து நோக்குங்கள். தொழுகையாளரில் மானக்கேடான காரியங்களில் இருந்தும் பாபங்களிலிருந்தும் விடுபட்ட எத்தனை மக்களை நீங்கள் காண்கிறீர்கள்?





அவ்லியாக்களில் இருந்து மானக்கேடான பாபமான காரியங்கள் நிகழ்ந்திருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? வாசித்தறிந்ததுண்டா?

*குர்ஆன்: 62:9*
*மு..மீன்களே! ஜும்ஆதினத்தன்று தொழுகைக்காக (ஸலாத்துக்காக) நீங்கள் அழைக்கப்பட்டால் வர்த்தகத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வை தியானிக்க (திக்று செய்ய) நீங்கள் விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிவுடையோராக இருந்தால் இதுவே உங்களுக்கு மிக்கநன்று.*

இவ்வாயத்தில் வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு பாங்கு (அதான்) கூறப்பட்டால் வியாபாரத்தை விட்டுவிட்டுத் தொழுகைக்குப் போங்கள் என்று கூறாமல் திக்றுக்காகச் செல்லுங்கள் என்றுதான் இறைவன் கூறுகிறான். இது எம் உலகக் கல்விகளின்படி இலக்கண வழுவுடையதாய் இருக்கிறது. ஆனால் குர்ஆனோ இறைவனின் பேச்சு. அதில் வழுவிருக்க முடியாது, இந்த ஆயத்தின் நுட்பம்தான் என்ன? ஸலாத் நாலு வகை என்பதையும் திக்கிர் நாலுவகை என்பதையும் ஜும்ஆ நாலுவகை என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ளாவிட்டால், குர்ஆனை உங்களால் ஒப்புக்கொள்ள முடியாது. வெளித்தொழுகை மட்டும்தான் ஸலாத் என்றும் வெள்ளிக்கிழமை மட்டுமே ஜும்ஆ உடைய நாள் என்றும் திக்கிர் என்றால் மணி உருட்டுவதே என்றும் நம்பிக் கொண்டிருக்கின்ற நாம் குர்ஆனை உணர முடியாது. அதன்படி நடக்கவும் முடியாது. உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானதே குர்ஆன் என்பதையும் முஸல்மான்களுக்கு மட்டுமல்ல என்பதையும் நீங்கள் உணரவேண்டும். மனிதனுக்காக மனிதன் அமைக்கும் சட்டங்கள் வேறு. மனிதனுக்காக இறைவன் அமைத்த சட்டங்கள் வேறு. இமாம்களின் விளக்கம் முஸ்லீம் மக்களோடு மட்டும் நின்றுவிடும்

*குர்ஆன்: 33:21*
*எவர்கள் அல்லாஹ்வைவும் இறுதி நாளையும் உறுதியாக ஈமான் கொள்கிறார்களோ அவர்கள் பின்பற்றி நடக்கவேண்டிய அழகான உதாரணம் நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே இருக்கிறது. அவர்கள் அதிகமாகத் திக்று செய்து கொண்டிருப்பார்கள்.*

உதாரணம், தூதரில் இருக்கிறது என்பது றசூல்(ஸல்) அவர்களுடைய சொல், செயல், கருத்து மூன்றையும் ஏற்றுக் கொண்டதே கியாஸ் என்பதை அறிவிக்கிறது. கருத்து, சொல், செயல் என்பவற்றில் செயலை மட்டும் எடுத்துக்கொண்டு இது

மட்டும்தான் கியாஸ் என்பது பொருந்தாது. கெட்ட நோக்கோடும் றசூலின் செயலைச் செய்யமுடியும்தானே! இன்றைய உலகில் பெரும்பாலான அறிவற்ற மக்கள் றசூலின் சொல்லுக்கும் கருத்துக்கும் மாறாக அவர்களுடைய செயலை மட்டும்தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் கூறுவது பொய்யா? வட்டிவாங்கும் முஸ்லீமை விபசாரம் செய்கிற முஸ்லீமை அடாத மது போதைகளை உபயோகிக்கும் முஸ்லீம்களை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? கண்டதில்லையா? இவர்களை றசூலின் கருத்தை, சொல்லை, செயலை ஏற்றுக்கொண்ட முஸ்லீம்கள் என்று உங்களால் கூற முடியுமா? சட்டம் இவர்களை முஸ்லீம்களாய்க் கணிக்கிறது. ஆனால் இவர்கள் மூ.ஃ.மீன்களல்ல. முஸ்லீம்கள் எல்லோரும் மூ.ஃ.மீன்களல்ல. மூ.ஃ.மீன்கள் எல்லோரும் முஸ்லீம்களே.

ஆகவே ஒருவர் றசூலைப் பின்பற்றுகிறார் என்றால் அவரில் றசூலின் கருத்து, சொல், செயல் மூன்றும் அமைய வேண்டும். சொல்லுக்கும் செயலுக்கும் கருத்து ஆதாரமாய் இருப்பதால் சொல் செயல்களில் சிற்சில வழுக்கள் ஏற்படினும் கருத்தில் வழு ஏற்படக்கூடாது. ஓர் சிறு உதாரணம், றசூல் (ஸல்) அவர்கள் ஜெட் விமானத்தில் பயணம் செய்யவில்லை. நாம் அதைச் செய்கிறோம். இது வெளிநோக்கில் பித்அத்துத்தான், ஆயினும் அனுமதியளிக் கப்பட்ட ஆகுமான நல்ல பித்அத்தாய் இருக்கிறது. றசூலின் நோக்கம் குறிப்பிட்ட இடத்தையடைவதுதான். எமது நோக்கமும் அதுதான். ஆயினும் செயலில் வேறுபாடு இருக்கிறது. இதைப் போலவே சிற்சில விஷயங்களை றசூலின் கருத்துக்கும் சொல்லுக்கும் மாற்றமில்லாமல் செயலாற்ற இஸ்லாத்தில் அனுமதியுண்டு. அனேக ஆதாரம் தரலாம். செயல் மூன்றாமிடமுடையதே.

இன்னோர் உதாரணம், றசூல் (ஸல்) அவர்களுடைய காலத்தில் ஒரே இமாமின் கீழ் ஆண்களும், பெண்களும் ஒன்று சேர்ந்தே வணங்கியிருக்கிறார்கள். உமரேபாரூக் (றலி) அவர்களுடைய காலத்தில் றசூலின் கருத்துக்கும் சொல்லுக்கும் மாறு செய்யக் கூடாதே என்பதற்காக ஆண், பெண்களுக்கிடையில் திரையிடச் செய்து தொழவைத்திருக்கிறார்கள் றசூலின் செயலை மாற்றியிருக் கிறார்கள். இதைப் *"பித்அத் ஹஸனா"* - *"அழகிய பித்அத்"* என்று இஸ்லாம் தீர்ப்புச் செய்கிறது. இதன் பின் வந்தோர், உமரே பாரூக் (றலி) அவர்களின் செயலை நீக்கி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு இடம் ஒதுக்கியிருக்கிறார்கள்.





இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது, றசூலின் கருத்துக்கும் சொல்லுக்கும் மாற்றமில்லாமல் சிறிசில வேளைகளில் செயலில் மாற்றஞ் செய்ய உரிமையுண்டு என்பதே.

றசூல் (ஸல்) அவர்களிடம் *"எப்போது தாங்கள் றசூலாக்கப் பட்டீர்கள்?"* என்று கேட்டபோது நான் ஆதம் (அலை) தண்ணீருக் கும் மண்ணுக்குமிடையிலிருந்த போது றசூலாக்கப்பட்டேன் என்று கூறியிருக்கிறார்கள். இன்னோர் ஹதீஸில் "உடலுக்கும் உயிருக்குமிடையில் இருந்த போது றசூலாக்கப்பட்டேன்" என்று கூறியுள்ளார்கள். நாம் முன்பு காட்டிய 33:21ஆவது ஆயத்தில் *"விசுவாசிகளான"* மூ.ஃ.மீன்களுக்கு வேண்டிய உதாரணம் என்று கூறினானேயன்றி; உலக மக்களுக்கு வேண்டிய உதாரணம் என்று கூறவில்லை. ஆகவே றசூலின் ஆரம்பம் முதல் முடிவுவரையுள்ள சகல விபரங்களுமே மூ.ஃ.மீன்களுக்கு அவசியமாகிறது. மூ.ஃ.மீன்களை நான்கு வகையாய் இறைவனும் றசூலும் விளக்கியிருக்கிறார்கள். ஆரம்பமான மூ.ஃ.மீன்கள் இல்முல் எகீன் உடையோர் றசூலின் 51ஆம் வயதிற்குப்பின்னுள்ளதை மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள். இவ்வளவுதான் இமாம்களால் வரையறுத்துத் தரப்பட்ட விஷயம்.

ஐனுல் எகீன் உடைய இரண்டாம் வகுப்பு மூ.ஃ.மீன்கள், றசூலின் 40 வயதிலிருந்து இறக்கும் வரையிலுமுள்ளதை எடுத்துக்கொள்கிறார்கள். இதில் ஷரீயத்தும் தரீக்கத்தும் உண்டு. ஹக்குல் எகீன் உடைய மூன்றாம் வகுப்பு மூ.ஃ.மீன்கள், றசூலின் நூர் என்ற ஆரம்பத்தில் இருந்து இறுதி வரையிலுமுள்ள சகல உதாரணங்களையும் எடுத்துக் கொள்கிறார்கள். கமாலுல் எகீன் உடைய நான்காம் வகுப்பாரின் செய்தி இங்கே விபரம் தரக்கூடிய தல்ல. அதை விட்டுவிடுவோம். இந்த விபரம்தான் குர்ஆன் ஹதீஸு களின் தீர்ப்பாகும்.

*குர்ஆன்: 84:19*
*நீங்கள் படிப்படியாய்க் கடக்க வேண்டியதாய் இருக்கிறது. என்று இறைவன் கூறுகிறான். நின்ற இடத்தில் நின்று கொண்டே இருப்போர், படியைக் கடக்க முற்படுவோரைத் தடைசெய்வோர் எத்தும் கூட்டமேயன்றித் தப்லீக்காகாது.*

*குர்ஆன்: 49:14*
*நாட்டுப்புறத்து அறபிகளில் சிலர் தாங்களும் மூ∴மீன்களே என்று கூறுகின்றனர். நீர் கூறும் நீங்கள் உங்களை மூ∴மீன்கள் என்று கூறாதீர்கள். ஏனென்றால் ஈமான் உங்களுடைய உள்ளத்தில் நுழையவே இல்லை. ஆயினும் முஸ்லீம்கள் (வழிப்பட்டவர்கள்) என்று கூறிக்கொள்ளுங்கள்.*

*ஹதீஸ்*
*எவர் நம்முடைய தொழுகையைப்போல் தொழுபவரும் எமது கிப்லாவைத் தொழுகையில் நோக்குபவரும் எம்மால் அறுக்கப்பட்ட இறைச்சியை உண்பவருமாக உள்ளாரோ அவர் முஸ்லீம் தான்.*

*அறிவிப்பவர்: அனஸ்(றலி)*
*ஆதாரம்: நஸாயி.*

இந்த ஹதீஸில் மூ∴மீன்கள் என்று கூறப்படாமல் முஸ்லீம்கள் என்று மட்டும் கூறியிருப்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

*குர்ஆன்: 2:62*
*மூ∴மீன்களாயினும் யூதர்களாயினும் நஸாறாக்கள் (கிறிஸ்தவர்கள்) ஆயினும் ஸாபியீன்களாயினும் எவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உண்மையாகவே விசுவாசித்து நற்கருமங்களைச் செய்கிறார்களோ அவர்களுடைய கூலி இறைவனிடத்தில் உண்டு. மேலும், அவர்களுக்கு எவ்வித பயமுமில்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.*

இந்த ஆயத்து மிகப்பல அபூர்வமான உண்மைகளை விளக்குகிறது. அவசியமானவற்றை மட்டும் நோக்குவோம். அச்சம் தீர்ந்த நல்லடியார்கள் றசூலைப் பின்பற்றியவர்கள் மட்டுமல்லாமல் எஹுது, நஸாறா, ஸாபியீன்கள் போன்றோரிலும் உணடு என்பது புலனாகிறது. அல்லாஹ்வையும் இறுதிநாளையும் என்று இறைவன் கூறினானேயன்றி றசூலையும் என்று கூறப்படவில்லை. மேலும், இவ்வாயத்தில் மூ∴மீன்களையும் மற்றோரையும் பிரித்துக்காட்டியும் ஒன்றுசேர்த்துக்காட்டியும் இருக்கிறது. ஒன்றுபடுத்தும்போது பயப்படமாட்டார்கள்; துக்கப்படமாட்டார்கள் என்றும் பிரிக்கும்போது மூ∴மீன், எஹுூது, நாஸறா, ஸாபியீன் என்றும் கூறப்பட்டுள்ளதை நுட்பமாய் நோக்குங்கள்.





அச்சம், பயம் இல்லாத மூ∴மீன்களைக் குர்ஆனில் நல்லடியார்களென்றும் அவ்லியாக்கள் என்றும் இறைவனே கூறியுள்ளான். பல ஆதாரங்களைக் குர்ஆனிலிருந்தே தரலாம். ஆகவே, முஸ்லீம் அல்லாத ஒருவர் குர்ஆனுடைய உண்மையைக் கூறினால், இவர் கூறுவது இஸ்லாத்திலுள்ளதல்ல எனறு எவராவது கூற முடியுமா?

சங்கர், மாத்தே, சோக்றட்டீஸ் போன்ற மேதைகள் பலர் சுத்தசத்தியமான தௌஹீதை, ஈமானை ஒப்புக்கொண்ட பெரியார்கள் தான். ஆனால், இவர்கள் தௌஹீதென்ற உண்மையை விளக்கிய முறைகளில் சிற்சில தவறுகளுண்டு. ஆனால் கொள்கையோ இஸ்லாத்திலுள்ளதுதான். கொள்கையை விளக்கக் கையாண்ட தத்துவ விளக்கத்தில்தான் பேதம் தென்படுகிறது. முன்பு நான் இதைக் கூறியுள்ளேன். இவர்களுடைய தத்துவ விளக்கங்களை றசூலுடைய உம்மத்திலுள்ள மூ∴மீன்களான அவ்லியாக்கள் விளக்கிக்காட்டி உண்மையை நிலைப்படுத்தியுள்ளார்கள். கொள்கை ஒன்றே என்றும் தத்துவ விளக்கம்தான் பிழை என்றும் அழகான விபரம் தந்துள்ளார்கள். ஆகவே சங்கர் கொள்கை விஷயமாய்ச் சொன்ன குர்ஆன் ஏற்றுக்கொண்ட ஓர் உண்மையை; ஒரு மூ∴மீன் கூறினால், அவரின் கொள்கை இந்துக்களின் கெள்கையென்று முடிவுக்கு வருகிற எமதறிவை என்னென்று கூறுவது? பிறமதங்களிலுள்ள எல்லாமே பிழையென்று கணிக்க முடியாது. எல்லாமே சரியென்றும் ஏற்கமுடியாது. ஒவ்வோர் மதத்திலும் சிற்சில தவறுகளும் சிற்சில உண்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன. சோக்றட்டீஸ், கொன்பியூசியஸ், அரிஸ்டோட்டில், ரூசோ போன்றோரின் கொள்கைகள் சுயசிந்தனை விளக்கங்கள் என்பது உண்மைதான். ஆயினும், குர்ஆன் ஹதீஸுகளினால் உண்மைதான் என்று கணிக்கப்பட்ட சிற்சில விஷயங்களும் அவர்களின் தத்துவ விளக்கங்களில் காணக்கிடக்கின்றன. மேலும் கூர்ப்புக் கொள்கை, உளவியற் தத்துவங்கள் பரிணாமம் போன்ற கொள்கைகளிலும் குர்ஆன் ஹதீஸுகள் ஏற்றுக் கொண்ட சில உண்மைகள் இருக்கவே செய்கின்றன. நிறைய ஆதாரங்கள் தரமுடியும். ஆராய்ந்த வர்களுக்கேயன்றி ஒருசில தத்துவநூற்களை மட்டும் மேலோட்டமாய் வாசித்தவர்கள் இதை அறியமாட்டார்கள்.

ஒரே ஆத்மாவில் இருந்தே சகல மனிதரும் வெளிப்பட்டது போல; ஆதம் (அலை) அவர்களிடமிருந்த தௌஹீதில் இருந்தே அவரவர் அறிவுக்கேற்றபடி காலக்கிரமத்தில் கொள்கைகள்

மாறுபாடடைந்து வந்திருக்கின்றன. இந்துக்கள் கூறுகிற அத்வைதம் கூட இப்றாஹீம் (அலை) அவர்களிலிருந்து வெளியாகிக் காலக் கிரமத்தில் சிற்சில தவறுகளுடன் வெளியானதேயாகும். அல்லாமல் இந்துக்களே அதைக் கண்டறிந்தார்களென்று கூறமுடியாது. நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் இப்றாஹிமியாக்கள் என்ற சொல்லே பிராமணிகள் என்றும், றஹ்மான் எனற சொல்லே ராமன் என்றும் மருவி வந்துள்ளது என்பதை நீங்கள் அறிய முடியும். தௌஹீது அத்வைதம் என்று கூறப்படும் கொள்கை இந்துக்களுக்கோ இக்கால முஸ்லீம்களுக்கு மட்டுமோ உரியதல்ல. அது நபிமார் வாயிலாகத்தான் உலக மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் காலக்கிரமத்தில் திரிபுபடுத்தப்பட்டு வந்திருக்கிறது. இப்றாஹீம் (அலை) அவர்களுடைய மறைவுக்குப்பின் அவர்களைப் பின்பற்றிய ஒரு கூட்டத்தார் வடஇந்தியாவில் வந்து குடியேறி அவர்களே ப்ராமணிகள் என்றாகி இருக், யஜுர், சாம, அதர்வணம் என்பவற்றை உருவாக்கியிருக்கிறார்கள். இவற்றின் அடிப்படை நபிமார்களின் சுஹ்புகள்தான். இவை காலக்கிரமத்தில் திரிபுபடுத்தப்பட்டிருக் கின்றன. இந்துக்களுக்கென்று ஓர் அத்வைதம் கிடையவே கிடையாது.

விவரம் அறியாத நுனிப்புல் மேய்ந்த தத்துவவாதிகள் அத்வைதம் இந்துக்களின் கொள்கையென்றும் தௌஹீதே இஸ்லாத்தின் கொள்கையென்றும் கூறுவது சுத்தப்பிசகாகும். தௌஹீதுதான் அத்வைதம் என்பது. இந்த அத்வைதம் என்பதில் இந்துக்கள் சிற்சில இடைச்செருகலைப் புகுத்தியிருக்கிறார்கள். நபிமாரினால் அறிவிக்கப்பட்ட தௌஹீது உயிரற்றுப் போகும் போதெல்லாம், ஒவ்வோர் நபிமாரைக் கொண்டு றப்பு அதற்கு உயிரூட்டினான். றசூல் (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின் பூர்வீக மக்களைப் போலவே முஸ்லீம்களும் இதைப் புரட்டிக் கொண்டு தௌஹீதை நிலைப்படுத்தும் கலிமாவுக்கு வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று கருத்துக் கொண்டிருக்கிறார்கள். றசூல் (ஸல்) அவர்களுக்குப் பின் வந்த சில ஒலிமார்கள் இந்தப் புரட்டலை மறுத்துக் கலிமாவின் உண்மைப் பொருளையும் சுத்தமான தௌஹீதையும் நிலைப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். தற்காலம் நம்மிடையேயுள்ள பிரச்சினையும் இதுதான். இப்போது நாம் என்னவிதமாய் உண்மையைக் கூறினாலும் அந்த உண்மை காலக்கிரமத்தில் புரட்டல் வேலைக்கு உள்ளாகத்தான் செய்யும். அவ்வப்போது ஒவ்வோர் நல்லடியாரைக் கொண்டு உண்மையை இறைவன் வெளிப்படுத்திக்கொண்டுதான்





இருப்பான். இது முடிவுநாள் வரையிலும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்.

*ஹதீஸ்*

*"நிச்சயமாக இஸ்லாம் மார்க்கமானது பாம்பு தன் பொதும்புக்குள் வந்து ஒதுங்கிவிடுவது போன்று ஹிஜாஸ் மானிலத்தில் வந்து ஒடுங்கிவிடும். அன்றி திட்டமாக இஸ்லாம் மார்க்கமானது மலையாடு மலையுச்சியில் இடம் பிடித்துக்கொள்வது போன்று ஹிஜாஸில் இடம்பிடித்துக் கொள்ளும். மெய்யாகவே இஸ்லாம் எளிய நிலையில் தோன்றியது போன்று இறுதியில் எளிய நிலைக்குத் திரும்பிவிடும். எனவே, ஏழைகளுக்கு நல்வாழ்த்து உண்டாவதாக. அவர்கள்தாம்; மக்கள் பாழாக்கிவிட்ட என்னுடைய நடைமுறையை சீர்திருத்தம் செய்யக்கூடியவர்களாவர்" என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அம்ருப்னு அவ்∴பு(றழி)*
*ஆதாரம் : திர்மிதி.*

*ஹதீஸ்*

*"நிச்சயமாக இறை நம்பிக்கை பாம்பு தன் பொதும்புக்குள் வந்து ஒதுங்கிவிடுவது போல் மதீனாவில் வந்து ஒடுங்கி விடும்" என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)*
*ஆதாரம் : புகாரி, முஸ்லீம்.*

இன்னோர் ஹதீஸில் இஸ்லாத்தில் இறுதியாகக் கெட்டுப் போவது மதீனாதான் என்று கூறப்படுகிறது. (ஹதீஸ் நீளமாய் இருப்பதால் நான் இங்கே அதை எழுதவில்லை. இன்னும் அனேக ஆதாரங்கள் தரலாம். உள்ள ஒன்றே காலக்கிரமத்தில் மாறுபாடடைந்தது என்பதை மறுக்கமுடியாது.

இந்தப் பிறமதவாதிகள் கலிமாக் கூறவில்லையே அவர்களை முஸ்லீம்கள் மூ∴மீன்கள் நல்லடியார்கள் என்று எப்படிக் கூறுவது? இவர்கள் கலிமாவை நாவினால் கூறவில்லையென்பது உண்மை தான். ஊமையன் பேரில் கலிமாவைக் கூறுவது பர்லல்லாமல் இருப்பது போல; இப்பெரியார்கள் அன்னிய பாஷைக்காராய் இருந்த தால், இருப்பதால் கலிமாவின் முதலாவது பர்லில் இருந்தும் விடுபட இவர்கள் உரிமையுடையவர்களே. கலிமாவை விளங்கியறிபவர்தான் மூ∴மீன். இதை அறபு பாஷையில்தான்

விளங்க வேண்டும், மற்றப் பாஷைகளில் விளங்கக் கூடாது என்று ஓர் நியதியோ சட்டமோ கிடையாது. விஷயம்தான் அவசியமல்லாது பாஷை அவசியமேயல்ல. இம்மக்கள் முதலாம் பர்லை விட்டுவிட்டாலும் விளங்கியறிதல், கல்பில் பதித்தல், நழுவவிடாமல் பாதுகாத்தல் என்ற மூன்று பர்லுகளையும் முடித்திருப்பதால் இவர்கள் மூ.ஃமீன்கள்தான். இவர்கள் முஸ்லீம்களும்தான். ஏனென்றால், றசூலுக்குப்பின்தான் முஸ்லீம்கள் என்ற பெயர் பாவிக்கப்பட்டதல்ல. முஸ்லீம்கள் என்ற பெயரைச் சூட்டியவர்கள் இப்றாஹீம் (அலை) அவர்களே.

*குர்ஆன்: 5:111*
*"அன்றி என்னையும் என்னுடைய தூதரையும் விசுவாசிக்கும்படி (அப்போஸ்தர்களாகிய) சிஷ்யர்களுக்கு நான் வஹியின் மூலம் தெரிவித்த சமயத்தில், அவர்கள் நாங்கள் விசுவாசித்தோம் (ஈமான் கொண்டோம்) நிச்சயமாக நாங்கள் முஸ்லீம்களே என்பதற்கு நீரே சாட்சியாக இருப்பீராக என்று கூறியதையும் நினைத்துப்பாரும்."*

ஆகவே, நாம் குறிப்பிட்டபடி எஹுூது நஸாறாக்களான மக்களிலும் மூ.ஃமீன்கள், முஸ்லீம்கள் உண்டு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். றசூலுக்கு முந்திய மக்கள் மட்டும்தான் அப்படியென்றும் வாதிட முடியாது. இதை குர்ஆன் 6:52ஆவது ஆயத்துத் தெளிவுபடுத்துகிறது. இதை மறுப்பவர் குர்ஆனை ஏற்றுக் கொள்ளாத பின்பற்றல்வாதியாகவே இருப்பர்.

*குர்ஆன்: 4:146*
*"ஆகவே எவர்கள் அல்லாஹ்வை விசுவாசித்து அவனைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்கிறார்களோ அவர்களை அவன் தன்னுடைய அன்பிலும் அருளிலும் (றஹ்மத்திலும்) செலுத்திவிடுகிறான். அன்றித் (தன்னிடம் வருவதற்குரிய ஸிறாத் என்ற) நேரான வழியிலும் செலுத்துகிறான்."*

இவ்வாயத்திலும் அனேக நுட்பங்கள் தென்படுகின்றன. எக் காலமானாலும் எந்த மதத்தை, எந்த நாட்டை, எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும் அல்லாஹ்வை விசுவாசித்துப் பற்றிப்பிடித்துக் கொண்டால், அவன் வேறு அமல்கள் இல்லாதிருப்பினும் நிச்சயமாய் வெற்றிபெறுவான் என்பது நிச்சயமான உண்மையாகும்.





*குர்ஆன்: 7:40*
*நிச்சயமாக எவர்கள் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கி அவற்றைப் புறக்கணிப்பதைப் பெருமையாகக் கொண்டார்களோ, அவர்களுக்கு வானத்தின் வாயில்கள் திறக்கப்பட மாட்டாது. ஊசியுடைய காதில் ஒட்டகை நுழையும் வரையில் அவர்கள் சுவனபதியை அடையவே மாட்டார்கள். குற்றவாளிகளுக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்.*

இவ்வாயத்தின்படி குர்ஆனை மறுப்பவன் எவனோ அவன் நரகவாதிதான் என்று தீர்ப்பிடப்பட்டிருக்கிறது. வானத்தின் வாசல்கள் என்பது, கல்பின் வாசல்கள் திறக்கப்பட மாட்டாதென்பதற்குச் சைக்கினையாகும். குர்ஆனை மறுப்பவன் மூடனும் நரகவாதி யுமேயாகும்.

சரிதான், அப்படியானால் இவர்களை இறைவன் மூ.ஃமீன்களை விட்டும் ஏன் பிரித்துக்காட்டுகிறான்? காரணம், இவர்களுக்கும் றசூலைப் பின்பற்றிய மூ.ஃமீன்களுக்குமிடையில் ஓர் சிறு வேற்றுமை இருக்கிறது. இவர்களுடைய தத்துவவிளக்கம் அறிவு குறைந்த மக்களை மீண்டும் ஷிர்க்கில் நுழைக்கும். றசூலுடைய மூ.ஃமீன்களின் தத்துவ விளக்கம் கடைசிவரையிலும் ஷிர்கில் நுழைக்காது. அப்படியானால் முற்றாய் ஷிர்க்கு நீங்காத மக்களை நல்லடியார்கள் என்று கூறுவது எப்படி? ஆர்ப்பளவாவது ஈமானுடையவர் கரை சேர்க்கப்படுவார் என்பது றசூல் (ஸல்) அவர்களுடைய வாக்கு. இந்த ஆர்ப்பளவுக்குரிய வரைவிலக்கணமும் தந்திருக்கிறார்கள். மனிதன் செய்யும் தீமைக்கு அதேயளவு கூலியென்றும், நன்மைக்குப் பத்து மடங்கு என்றும் விபரம் தரப்பட்டிருக்கிறது. ஈமானுடைய நன்மையோ இன்னும் இன்னும் பெருகிக்கொண்டேயிருக்கும்.

இந்த அடிப்படையில் அவர்களுடைய ஈமானும் பெருக்கம் அடைவதால் இறை அன்பைக் கொண்டு அவர்களுடைய சிறுதவறுகள் மன்னிக்கப்படுகின்றன. ஆகையால்தான் அவர்களை அச்சம் தீர்ந்த நல்லடியார்கள் என்று இறைவன் கூறுகிறான். அச்சம் தீர்தல் என்பதன் வெளிப்படை நரகபயம் தீர்தல் என்பதே. இவ்வாயத்தில் மிக நுட்பவிளக்கங்கள் இருப்பினும் இவ்வளவே உங்களுக்குப் போதுமானது. மனிதன் பார்ப்பதும் தீர்ப்புக்கட்டுவதும் சொல், செயல் களைக் கொண்டுதான். இறைவன் தீர்ப்புக்கட்டுவது நோக்கத்தை, கருத்தைக் கொண்டே. இவர்களின் உன்மையை ஏன் மனிதன் மறுக்கிறான்? இனப்பற்று, மதப்பற்று, தேசப்பற்று என்ற திரைகளில் சிக்கிக்கொண்டு திணறுவதால்தான் மறுக்கிறான். உண்மை வேறாக இருக்கிறது.

## (26)

குர்ஆன் ஹதீஸுகள் பலகோணங்களில் மனிதனைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. மனிதன் அதைப் பொருட்படுத்தாமலே போய்க்கொண்டிருக்கிறான். மார்க்கத்தை மேலோட்டமாகவே மனிதன் நோக்குகிறான். விஷயம் அப்படியல்ல. இமாம்கள் பாமர மக்களை நோக்கித் தந்துள்ள விளக்கங்களே முடிவானவை என்று கணிப்பது மனித அறிவுக்கு விலங்கிடுவதாகும்.

குர்ஆன் என்பது நம்போன்ற ஒருவரால் கூறப்பட்டதல்ல. இறைவனின் கூற்று அது. இதில் அனாவசியமான ஒரு வசனம், ஓர் அட்சரம் கூடக் கிடையாது. குர்ஆனில் பாவிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் வசனமும் ஒவ்வோர் சொல்லும் கரைகாண முடியாத ஆழிய ஞான சமுத்திரமாய் இருக்கிறது. மிகப்பெரியது என்று இறைவனால் கூறப்படுகிற ஓர் விஷயத்தைச் சிறியதாய்க் கணிப்பது எமது அறிவீனமாகும். குர்ஆனின் சிற்சில முஹ்கமுவான ஆயத்துகள் தவிர முதஷாபிஹாத்தான ஆயத்துகள் ஒவ்வொன்றும் பற்பல ஆழிய கருத்துகளைக் கொண்டமைந்திருக்கின்றன. இதை நிரூபித்துக்காட்டுவதற்காகக் குர்ஆனில் பாவிக்கப்பட்டுள்ள ஓர் சொல்லைமட்டும் இப்போது விளக்கிக்காட்டுகிறேன். இமாம்களால் எமக்குத் தரப்பட்ட கல்வி எந்த அளவு மட்டும் உண்மையானது என்பதைப் பாருங்கள்.

நபிமார்களைப்பற்றியும் அவர்களுக்களிக்கப்படும் வஹியைப் பற்றியும் எமது விளக்கவான்கள் விளக்கியிருக்கிறார்கள். அவர்கள் தந்த விளக்கப்படி நபிமாருக்கேயன்றி ஜிப்ரீல் (அலை) அவர்களைக் கொண்டு யாருக்கும் வஹி அறிவிக்கப்படுவதில்லை யென்பதை அறிந்திருக்கிறோம். இந்த விளக்கமோ குர்ஆனுக்கு மாறாய் இருக்கிறது. கடிதம் கொடுக்கும் தபாற்சேவகன் குறிப்பிட்ட விலாசமுள்ள நபருக்கேயன்றிக் கடிதம் கொடுக்காதது போல; ஜிப்ரீல் (அலை) அவர்களும் நபிமாருக்கேயன்றி வஹி கொண்டுவருவதில்லை என்பதுதான் நாம் அறிந்துள்ள விளக்கம். இது பாமர மக்களின் விளக்கம்தான்.

குர்ஆனை நோக்கிப் பாருங்கள் சில நுட்பங்கள் தென்படுகின்றன.





*குர்ஆன்: 21:7*
*உமக்கு முன்னரும் ஆண்களையேயன்றி, நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை. அவர்களுக்கும் வஹி அறிவித்தோம். ஆகவே நீங்கள் அறியாவிட்டால் முன்னுள்ள வேதத்தையுடையோரையேனும் கேட்டறிந்து கொள்ளுங்கள்.*

இந்த ஆயத்தின்படி வஹி அறிவிக்கப்பட்ட நபிமார்கள் யாவரும் ஆண்களே என்பது நமக்குத் தென்படுகிறது. ஆனால், இதே குர்ஆனில் மர்யம் (அலை) அவர்களுக்கு வஹி அறிவிக்கப் பட்டதாகவும், மூஸா (அலை) அவர்களுடைய தாய்க்கும், பிர்அவுனு டைய மனைவி ஆசியா அம்மையாருக்கும், தேன்பூச்சிக்கும் கூட வஹி அறிவித்ததாகவும் இறைவன் கூறுகிறான். பெண்கள் நபிமார் களல்லவே?

மேலே நாம் காட்டிய 21:7ஆம் ஆயத்தில் இன்னோர் சந்தேகம். நபிமார்தான் மறைந்து விட்டார்களே. அப்படியானால் ஜிப்ரீல் (அலை) அவர்கள் இப்போது மனிதர்களைப்போல் ஓய்வு பெற்றிருக்கிறார்களா? இவ்விதமான சந்தேகம் நமக்கு ஏன் ஏற்படுகிறது? ஆரம்பத்தில் நாம் அறிந்திருந்த அரைகுறை விளக்கம்தான் இந்தச் சந்தேகங்களுக்கு மூலமாய் இருக்கிறது. நமக்குத் தரப்பட்டிருந்த லாஹிறுடைய கல்வியினால்தான் எமக்கு இக்குழப்பம் ஏற்படுகிறது. குர்ஆனில் 28:7, 18:86, 16:68, ஆயத்துகளைப் பாருங்கள். (நான் விரிவை அஞ்சுவதால் இங்கே எழுதவில்லை.)

ஆண்களான நபிமாருக்கு வஹி அறிவித்ததாகக் கூறுகிற அதே இறைவன்தான்; நபிமாரல்லாத பெண்களுக்கும் மனித இனமல்லாத தேனீக்கும் வஹி அறிவித்ததாகக் கூறுகிறானே? இதன் உண்மை தான் என்ன? எம் அறிவில் குழப்பம் ஏற்பட வில்லையா? சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறதல்லவா? இதற்கு விடைகண்டறிய பிக்ஹுக்கிதாபுகள் உதவிசெய்யா. சரியான வழிகாட்டலும் நுட்பமான அறிவும் இருந்தால்தான் குர்ஆன் தரும் விளக்கத்தை அறிய முடியும். நூலறிவு என்ற திரையை நீக்கிக் கொண்டவர்கள் இதை அறிவார்கள். ஒளியைக் கொண்டு ஒளியை அறிவதுபோல; அறிவை; அறிவைக்கொண்டே அறியவேண்டும். விஷயத்துக்கு வருவோம்.

வஹி என்ற சொல்லை ஆழமாக ஆராய்ந்தால் வஹி என்பது குர்ஆன் ஹதீஸ்களுள் வாயிலாய் ஏழுவகையானது என்பது தென்படுகிறது. இவற்றில் ஒரு பிரதானமான வெளிப்படையான பகுதிமட்டும்தான் இமாம்களால் எமக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் வஹியின் வகைகளில் முதலில் நாம் குழப்பமடைந்தோம்.

1ஆவது: "வஹ்யுபில் வாஸிதா" என்று கூறப்படும். அதாவது நபிமார்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை ஏதோ ஓர் ஸூறத்தில் நேராகக்கண்டு பேச்சைக் கேட்டறிவது. இந்த ஒன்றுதான் எமது முன்னோர் தந்த பாடம். இந்த வஹியை *"வஹ்யுஜலிலி"* என்று ஆரிபுகள் கூறுகிறார்கள். இது உண்மைதான். இதை யாரும் மறுப்பதற்கில்லை. இதுதான் றசூல் (ஸல்) அவர்களுக்குக் குர்ஆனின் சிலபகுதிகள் அருளப்பட்ட முறை.

2ஆவது: "வஹ்யுகபி" என்று கூறப்படும். இது செவி மூலமாய்க் கேட்கப்பட்டுக் கல்பில் பதிவது. இதில் பேசுபவரைக் காண முடியாது. தூர்சீனா மலையில் மூஸா (அலை) உரையாடியது இவ்வகையைச் சேர்ந்ததே. றசூலுல்லாஹ்வுக்கும் இப்படி ஏற்பட்டதுண்டு.

3ஆவது: இதை ஆரிபீன்கள் "இல்காஉ" என்று கூறுகிறார்கள். இது கண்ணைக் கொண்டோ செவிமுதலாம் புலன்களைக் கொண்டோ பெற்றுக்கொள்ளப்படாமல் நேரே கல்பில் போடப்படுவதாகும். றசூல் (ஸல்) அவர்கள் ஓர் சமயம் "இன்ன றூஹுல் குத்ஸீ நபதபீ றூஹி" என்னுடைய கல்பில் றூஹுல்குதஸி ஊதியது என்று கூறியிருக்கிறார்கள். றூஹுல்குத்ஸி என்றால் ஜிப்ரீல் (அலை) அவர்களைக் குறிக்கும் என்றாலும் இதில் வேறு சிர்ரு (இரகஸியம்) உண்டு.

4ஆவது: இது "இல்ஹாம்" என்பதாகும். அதாவது கொதிகொண்ட பால் வெளியேறுவது போல அறிவு மிகைத்துப் பொங்கி, அறிவுக்கும் புலன்களுக்கும் எட்டக்கூடியதாய் பேச்சாக அல்லது எழுத்தாக வெளியாவது. இந்த நிலைமையும் றசூலுக்கிருந்ததுதான். பெரும் பாலும் ஹதீஸ்கள் இவ்வகையைச் சேர்ந்தவையே. அப்படியானால் பேசுவோர் எழுதுவோர் எல்லோரும் இல்ஹாமத்துடையவர்கள் தானா? இல்லை. இல்ஹாமத்தை அறிவதற்குச் சில சட்டங்களுண்டு. இதில் வாரிதாத் என்றோர் பகுதியும் உண்டு. அவ்விபரங்கள்





இங்கு நமக்கு அவசியமல்ல. இவ்வகையிலுள்ளதுதான் பெண்களான மூஸா (அலை) தாயார், பிர்அவுனின் மனைவி ஆசியா, மர்யம் (அலை) போன்றோர்க்கருளப்பட்ட வஹி என்பது. குர்ஆனின் 28:7ஆம் ஆயத்தில் இதைக் காணலாம். இதன் உயர்பதவி நபிமாருக்கு நெருங்கியதாயும் தாழ்பதவி நப்ஸானியாவோடு நெருங்கியதாயும் இருக்கிறது. நப்ஸானியாவைச் சேர்ந்தது விவேகம், நுண்ணறிவு போன்றவையாகும். இதில் முகக்கிகூன்களான தத்துவ மேதைகள் இன்றுள்ள விஞ்ஞானிகள் எல்லாம் அடங்குவார்கள். ஆனால் சாதாரண மனிதனுடைய பேச்சு, எழுத்து என்பவை பகுத்தறி வோடுள்ளவையே. இவற்றில் உண்மையும் பொய்யும் இடம் பெறும்.

5ஆவது: "இல்முல்லதுன்னீ" என்று கூறப்படும். மூஸா(அலை) அவர் களுக்கும் கிலுறு(அலை) அவர்களுக்குமிடையில் நடைபெற்ற விவகாரத்தில் கிலுறு(அலை) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வஹி "இல்முல்லதுன்னீ" என்ற வகையிலுள்ளதே. அப்போது மூஸா (அலை) அவர்களின் அறிவு பகுத்தறிவாகவே இருந்தது. இதைக் குர்ஆன் 18:86ஆம் ஆயத்தில் விளக்கம் பெறலாம்.

6ஆவது: "வ அவ்ஹா றப்புக்க இலன்னஹ்லி" என்று குர்ஆன் விபரம் தருகிறது. அதாவது உம்முடைய றப்புத் தேனீ அளவில் வஹி அறிவித்தான் என்பதே. இதைக் குர்ஆனின் 16:68ஆம் ஆயத்தில் காணலாம்.

7ஆவது: "றூயா" என்பது. இதைத் தனியாக வஹியென்று கூற முடியாது. ஆயினும் இதுவும் அவ்வினத்திலுள்ளதே. இதில் ஒன்று சரியான உண்மையான கனவு. மற்றொன்று விழிப்பு நிலையில் கண்ணை மூடிக்கொண்டு ஐந்து புலன்கள் வாயிலாயும் உணரப் படுவது. இது கஸ்பு என்ற வகையிலுள்ளது. இவ்வளவு விரிவான விளக்கமுடைய வஹி என்ற சொல்லை, நம் அறிவுக்குத் தெரிந்த ஓர் கருத்தை மட்டும் வைத்துக்கொண்டு நான் கூறுவதே சரியென்று தீர்ப்புக் கட்டுவது தவறல்லவா? இதைப்போலத்தான் ஸலாத், சௌமு, ஸக்காத், ஹஜ்ஜு போன்ற சொற்களும். இச்சொற்களைக் கொண்டு அவாம்களான பாமரமக்களுக்குத் தரப்பட்ட விஷயம் மட்டுமே உண்மையென்றும் அதற்கப்பாற்பட்ட தெல்லாம் வழிகேடு என்றும் எந்த அடிப்படையைக் கொண்டு தீர்ப்புக்கட்டுவது? எமது இமாம் குர்ஆன் தான், நீதிபதி குர்ஆன்தான் என்றால் அதைத்தான் நாம் ஏற்க முடியும். வரட்டுவாதங்களில் அர்த்தமில்லை. ஆகவே

குர்ஆனுக்கு மாறாய்க் கூறுபவர் மூளை வளர்ச்சியற்றவர் என்று நான் கூறுவது குற்றமாகுமா? நப்ஸின் பகுதி ஏழாய் அமைந்தது போல வஹியின் பகுதியும் ஏழாய் அமைந்திருக்கிறது. இதில் வியப்பொன்றுமில்லை.

இன்னோர் விஷயத்தை நான் கூறவேண்டியிருக்கிறது. மனித புலன்களில் இறைவனை நோக்கிச் செல்லக் கூடிய புலன்கள் கண், செவி ஆகிய இரண்டு மட்டும்தான். இவற்றில் முதலிடம் பெறுவது செவிதான். கண் தன் முன்னுள்ளதை மட்டும் சில கட்டுப்பாடுகளுக்கமைவாய்க் காணும். செவி கட்டுப்பாடில்லாமல் எத்திசையிலுள்ளதையும் கேட்கும், கண் வெளித்தோற்றத்தை மட்டும் காணும். செவியோ எல்லாவற்றையும் கேட்டறியும். தூர்ஸீனா மலையில் மூஸா (அலை) இறைவனின் பேச்சை செவியேற்றார் களேயன்றி இறைவனைப் பார்க்கவில்லை. அவர்களின் செவிபெற்ற இடத்தைக் கண் பெறவில்லை. நபிமார்களில் குருடர்கள் இருந்திருக் கிறார்களேயன்றிச் செவிடர்கள் இருந்ததாக நாம் அறியவில்லை. "அலஸ்த்துபிறப்பிகும்" என்ற சொல்லை அர்வாஹுடைய ஆலத்தி லிருந்த றுஹுகள் கேட்டனவேயன்றி அதைக்கேட்ட இறைவனை அவை காணவில்லை. குன் என்ற சொல்லால் இறைவன் விழித்தபோது சர்வ சிருட்டிகளும் அச்சொல்லைக் கேட்டு அதைக் கொண்டே சிருட்டிகளாய் அமைந்தன. இறைவனைக் கண்டதாலல்ல.

குர்ஆனில் எங்கெங்கும் *"ஸமீஉன்" "பஸீருன்"* என்று கூறப்படுகிறதோ அங்கெல்லாம் கேட்பவன் பார்ப்பவன் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். இவற்றில் கேள்விப்புலனை முற்படுத்தியும் பார்வைப்புலனை பிற்படுத்தியுமே இறைவன் கூறியுள்ளான். நான் சுருக்கமாய்க் கூறிய இந்த ஆதாரங்களில் இருந்து நூலறிவைவிடக் கேள்வியறிவு சிறந்தது என்பது புலனாகிறது. ஆயினும் கேள்வியறிவு நல்லதென்னும் போது பெரியோர்களான நல்லடியார்களின் உபதேசத்தையே நான் குறிப்பிடுகிறேன் என்பதை நீங்கள் உணர வேண்டும். பெரியார்கள் என்பதை எடைபோடும் தராஸு குர்ஆன் ஹதீஸுகளேயன்றி அவர்களின் வெளித்தோற்றமல்ல. கேள்வியறிவும் ஓர் திரைதான். ஆயினும் மூடர்களின் உபதேசம் திரையாயும் நல்லடியார்களின் உபதேசம் திரைநீக்கமாகவும் இடம்பெறுகின்றன. ஆகவே, மார்க்க விளக்கம் மௌலவிமாரிடம்தான் கற்கவேண்டும் என்ற





மூடத்தனத்தை நீக்கிவிட்டு மார்க்க விளக்கத்தைச் சரிவர விளங்கியறிந்துள்ள நல்ல மனிதர்களைத் தேடிக்கண்டறிந்து ஹக்கை நாம் கண்டறிய வேண்டும்.

(27)

இறை அன்பைத்தேடி ஆவல் கொண்டுள்ள கவாஸுகளான உங்களுக்கு இன்னோர் உண்மையை விளக்கிக் காட்டவேண்டியது எனது கடமையாய் இருக்கிறது. நம் காலத்துக்குமுன்னுள்ள நல்லடியார்களில் மிகப்பலர் ஹாஸிக்கீன்களாக வாழ்ந்திருக்கிறார்கள். முஸ்லீம்கள், இந்துக்கள் முதலாம் சகல சமூகத்திலுமுள்ள பல பெரியார்களை இதற்கு ஆதாரம் தரலாம். இவர்களுடைய பைத்துக் கள் பாடல்கள் உபதேசங்களை நோக்கினால் இவர்கள் மிகச்சிறந்த பக்திமான்களாகவும் மஜ்தூபுகளாகவும் இஸ்லாம் காட்டிய தௌஹீதில் குறுகிய காலத்தில் வெற்றி பெறமுடியாதவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பது தென்படுகிறது. இவர்களைத் தமிழ் மொழியில் கூறுவதானால் விசிட்டாத்வைதிகள் என்று கூறலாம். அதாவது இவர்களில் தௌஹீதும் உண்டு, துவித உணர்வும் உண்டு. இவர்களில் பலர் அல்லாஹ்வைக் காணவே துடித்திருக் கிறார்கள். இதனால் இவர்கள் தங்களை அல்லாஹ்வைவிட்டும் வேறாய்க் கண்டதால் திரிபுடியுணர்வுடன் தான் வாழ்ந்திருக்கிறார்கள்.

இதற்குக் காரணம் கலிமா உணர்த்தும் உண்மை இவர் களுக்குப் பிடிபடாததும் உணர்ந்திருந்தாலும், உண்மையோடு ஒன்றி நிற்கும் மனோ உறுதி இல்லாமையும் பக்தி என்ற தளையில் சிக்குண்டிருந்ததுமேயாகும். ஆனால் குத்புகளாக, குத்புல் அக்தாபு களாக, சேகு முறப்பிகளாக இருந்த பெரியார்கள் இஷ்க்குடைய மஜ்தூபுகளாக இருந்ததில்லை. இவர்களுக்கிருந்த இஷ்க்கு அல்லது காதல் என்பது தங்கள் அறிவில் குடிகொண்டிருந்த மருட்சியை நீக்குவதாகவே இருந்திருக்கிறது. இவர்களுடைய பெரும்பாலான இபாதத்துகள் இருதய பரிசுத்தத்தை ஏற்படுத்துவதாகவே இருந்திருக்கின்றன. இஷ்க்குடைய பக்தர்கள் ஏன் இப்படியான நிலையில் சிக்குண்டிருந்தார்கள் என்பதை நோக்குவோம். நான் தரும் விளக்கம் பகுத்தறிவுடைய கவாஸுகளுக்கன்றி, மிருகங்கள் போல் வாழும் அறிவிலி மக்களுக்கல்ல என்பதை நீங்கள் முதலில் உணர்ந்துகொள்வது நல்லது.

*"ஹுர்புல் பராயிலி"* பர்லான வணக்கங்களைக் கொண்டு இறைவனை நெருங்கும் பாதை என்பதே பக்திமார்க்கம் என்பது. இது இரண்டு வகைப்படும். ஒன்று மூடபக்தி, அல்லது குருட்டுப்பக்தி என்றும் மற்றொன்று. உண்மையான பக்தி என்றும் கூறப்படும். ஓர் பொருளைப் புலனறிவு வாயிலாய் அறிந்து அல்லது அனுமான வாயிலாய் அறிந்தும் (உண்மையாகவே அப்படியோர் பொருள் உண்டு என்றறிந்தும்) அதை இலகுவாய்ப் பெறமுடியாததாயும் இருக்கும்போது; அதன் பேரில் ஏற்படும் அவா அல்லது ஆசைக்கே பக்தி என்று கூறுகிறோம். உதாரணமாக லைலாவைக் கண்ட காதலன் கொண்ட பக்தியைத்தான் இஷ்க்கு காதல், பக்தி என்று கூறலாம். லதாமங்கேஷ்கரின் பாடலைக் காதாரக்கேட்ட நாம் லதாவை அடைய ஆசை கொள்வது போல என்று கூறலாம். அதாவது எமது புலன்வாயிலாய் உண்டு என்று கண்ட பொருளில் ஆசைகொள்வதே இஷ்க் என்பது. பக்திக்கும் மூலதனம் ஆசைதான்.

இந்த ஆசை, பொருளுண்டு என்பதை அறியாத நிலைமையில் ஏற்படவே முடியாது. நாம் அடைய வேண்டிய பொருள் அதை அடைவதற்குதவியாய் விதித்த நிபந்தனைகளை முறையாய்க் கையாள வேண்டியதாய் இருக்கிறது. அப்படிக் கையாண்ட போதும் கிடைப்பது தாமதமானால் ஆசை வலுவடைகிறது. இந்த இஷ்க் என்பது துன்யாவையும் அதன் பொருட்களையும்(லைலாவையும் லதாவையும்) பற்றி நிற்குமேயானால் அதன் பெயர் வெறும் காதல், அல்லது புலனுணர்வு ஆசைதான். ஆயினும் கண்டதனால் கேட்டதனால்தான் மனிதன் ஆசைப்படுகிறான் என்பது உங்களுக்குத் தெரியும். இதைப்போலவே உண்மையான பகுத்தறிவுடைய மனிதர் தன்னுடைய அனுமானப் பிரமாணத்தைக் கொண்டு சர்வ ஆலங்களும் இறைவனின் வெளிப்பாடே என்பதை அறிந்து கொண்டார். இந்த ஆலங்கள் யாவும் வெறும் கற்பனையான ஸூறத்தே என்பதையும் அறிந்து கொண்டார். ஆகவே அழிவடையும் கற்பனை உலகுக்கு ஆதாரமாய் அமைந்துள்ள மூலப்பொருளை அடைய ஆசைப்படுகிறார். தேடுகிறார். அலைகிறார். இபாதத்துச் செய்கிறார்.

ஆயினும் அவர் விரும்புவது இலகுவில் அவருக்குக் கிடைப்பதே இல்லை. எனினும் அவர் தன்னம்பிக்கையை இழப்பதுமில்லை. ஏன்? தான் தேடியலைவது நிச்சயமாக உள்ளதே என்பதை அவர் அறிந்திருக்கிறார். ஆகவே விடாமுயற்சி செய்கிறார். இதைத் தான் உண்மையான பக்தி, இறைபக்தி என்று கூறுகிறோம். ஹுர்புல் பராயிலி என்பதும், ஷரீயத் என்பதும் பக்திமார்க்கம்



என்பதும் இதுதான். இதன் ஆரம்பநிலை ஷரீயத்தாகவும் பக்தியின் இறுதி நிலை தரீக்கத்தாகவும் இருக்கின்றன. இந்தத் தரீக்கத் வாதிகள்தான் ஹாஷிக்கீன்கள் என்போர். இவர்கள் இந்த இஷ்க் என்ற நிலைமைக்காளாவது ஏன்?

இவர்கள் குர்ஆன் ஹதீஸுகளும் கலிமாவும் உணர்த்தும் தௌஹீதின் உண்மையைச் சரிவர அறிந்து உணர்ந்து கொள்ளாதது ஓர் விஷயம். அப்படி உணர்ந்தாலும் கூட அந்த உண்மையோடு ஒன்றி நிற்கக்கூடிய மனோபக்குவம் இல்லாதிருப்பது இன்னோர் விஷயம். இவர்கள் காண்போன், காட்சி, காட்சிப்பொருள், என்ற திரிபுடி உணர்வு கொண்டிருந்தமையாலும் அதை இலகுவில் நீக்கிவிட முடியாதவர்களாயிருந்தமையாலும்தான் இந்த இஷ்க் என்ற தெய்வீகக் காதலில் சிக்கியிருக்கிறார்கள். இதை ஞாபகத்தில் இருத்திக் கொள்ளுங்கள் .

அடுத்ததாய் மூடபக்தி என்றால் என்ன? என்பதை நோக்குவோம். குதிரைக்கொம்பு நமக்குக் கிடைத்துவிட்டால் உலகை ஆளலாம், அரசகுமாரிகளை அடையலாம் என்று யாரோ ஒருவர் சொல்லக் கேட்டுக்கொண்ட ஒரு மனிதன் குதிரைக் கொம்பை அடைவதற்காக ஆசைகொள்கிறான். தனக்கு அறிவுறுத்திய ஆசிரியரின் கட்டளைப்படி எல்லாக் கடமைகளையும் (இபாதத்தையும்) கையாள்கிறான். ஆனால் இந்த மனிதன் இறக்கும் வரையிலும் இறந்த பின்னும்கூடக் குதிரைக் கொம்பைப் பெறவேமாட்டான். ஏன்? குதிரைக்கொம்பு என்று ஓர் பொருள்தான் இல்லையே! எப்படி எங்கே அடைவது? இதைத்தான் மூடபக்தி என்பது. இம்மனிதன் இறுதியில் பெற்றுக்கொண்டது ஏமாற்றம்தான். ஏன் ஏமாற்றம் ஏற்பட்டது?

குதிரைக் கொம்பை ஆசைப்படுபவன் அதைப்பற்றி முதலில் பூரணமாய் அறிவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் விளங்கியறிய வேண்டும். அதன்பின்தான் அதற்குரிய முயற்சி செய்ய வேண்டும். இப்படிச் செய்யாமல் இறுதியில் ஏமாற்றமடையக் காரணமாய் அமைந்திருந்தது அவனுடைய அறிவீனமே. இந்த உதாரணத்தைப் போலவே பாமரமனிதனும், இறைவன் ஒருவனுண்டு என்று எல்லோரும் சொல்வதை மூடத்தனமாகவே ஏற்றுக்கொண்டு இபாதத்தில் ஈடுபடுகிறான். இவனுக்கு அல்லாஹ்வைப்பற்றிய அறிவு குர்ஆன் ஹதீஸுகளைப்பற்றிய விபரமோ அணுவேனும் தெரியாமலிருக்கும்போது இவனுடைய இபாதத்துகளைக் கொண்டு இவன் தன் குறிக்கோளை எப்படிப் பெறுவான்? இவன் இறைவனை, சுவர்க்கத்தை

கண்டதோ அனுமானித்தறிந்ததோ கிடையாதே. அறிவில் அமையாத ஒன்றுக்காகப் பாடுபடுவது அஸ்திவாரமில்லாத கட்டடம் போன்றதே.

தொழுகையைச் சாபக்கேடாக ஆக்கிக்கொள்ள வேண்டாம் என்றும் பெரும்பாலாருடைய தொழுகை உச்சிக்குமேல் உயர்வ தில்லை என்றும் பலவிதமான சொற்கள் குர்ஆன் ஹதீஸுகளில் இடம் பெறுவது இந்த மூடபக்தியைச் சுட்டியவைதான். இன்று நம்மிடையேயுள்ள பெரும்பாலான பாமரமக்களும் எத்திவைக்கும் கூட்டத்தாரும் இவ்விதமான மூடபக்தியில்தான் ஊறித்திளைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் கானுகிறேன். இவ்விதமான மருட்சியுடைய பகுத்தறியும் தன்மையில்லாத கூட்டங்களை விட்டும் என்னையும் உங்களையும் இறைவன் காப்பானாக.

இப்போது நாம் முன்பு கூறிய ஹாஷிக்கீன்களை நோக்கு வோம். இவர்கள் லைலா மஜ்னுக் கதையில் இடம் பெறும் கதாபாத்திரங்களைப்போல் இருக்கிறார்கள். இவர்கள் கலிமாவை விளங்கியறிந்தபோது அல்லாஹ்வையன்றி ஒன்றுமில்லை என்பதை அறிந்து கொண்டார்கள். ஆயினும், இவர்களுடைய புலனறிவுவாயிலாய் அனுபவ மூலம் சர்வஆலங்களும் இருப்பதாய்க் காண்பதால் இருப்பது யாவும் அல்லாஹ்தான் என்று நிச்சயப்படுத்தினார்கள். ஆகவே அறியப்படும் பொருள் அல்லாஹ்வாகவே இருப்பதனால் இக்கொள்கைக்கு வஹ்ததுஸ்ஷுஹுது என்று பெயர் சூட்டிக் காட்சிப் பொருள் ஒன்றே என்று தரிபடுத்தினார்கள். இந்தக் காட்சிப் பொருளான சர்வஆலங்களும் இறைவனின் வெளிப்படையாய் இருப்பதால் அதில் மறைந்தவனாய் இருக்கும் இறைவனைத் தேடி அலைந்தார்கள். ஆசை கொண்டார்கள். இந்த ஆசையின் பெயர் தான் இஷ்கு என்பதும் தெய்வீகக்காதல் என்பதும். இவர்களை இவ்வளவு ஸ்திரமான நிலைமையில் மயக்கியிருப்பது இவர்களுடைய சுயநிர்ணய உரிமையுடன் செய்யும் இபாதத்துகள்தான். ஆச்சரியமடைகிறீர்களா? வேண்டாம் விபரம் தருகிறேன்.

இவர்களுடைய இபாதத்துகள் எவ்வளவு அதிகமாக இருந்ததோ அவ்வளவு அதிகமாகவே திரிபுடி உணர்வு அதிகப்பட்டு (நிலைப்பட்டு) வந்திருக்கிறது. இவர்கள் இபாதத்துக்கு முக்கியத் துவம் கொடுத்தார்களே அன்றி (முறாக்கபா) சிந்தித்தல், ஆராய்தல், நோட்டமிடல் போன்ற இபாதத்துக்கு இவர்கள் அவ்வளவு முக்கியம் கொடுக்கவில்லை. மேலும் இவர்களிடத்தில் போதிய





அறிவும் மனோ வலிமையும் இல்லாதிருந்தது. இவர்களுடைய அறிவு எவ்வளவு மிகைப்பட்டிருந்ததோ அவ்வளவு அச்சமும் அவர்களிடம் குடிகொண்டே வந்திருக்கிறது. ஆதரவும் இருந்திருக்கிறது. பக்தியறிவு எவ்வளவு மிகைப்படுகிறதோ அவ்வளவு அச்சமும் அதனுடன் அமையும் என்பதை நாம் உணரவேண்டும். இதற்குக் காரணம் இவர்கள் கலிமாவை மேலோட்டமாய் அறிந்தார்களேயன்றி அதன் உயிரான தௌஹீதை உணர்ந்து கொள்ளாமையாகும். அதாவது கலிமாவை உள்ளாலுள்ளபடி விளங்கித் தெளிவு பெறுவதும் அதில் ஊறிவிடுவதும் மிகமிகக் கடினமானதுதான். ஆயினும் இவர்கள் இறைவனை நெருங்கிய அச்சமுடைய நல்லடியார்கள்தான் என்பதில் எவருக்கும் சந்தேகமே கிடையாது.

*ஹதீஸ்*

*ஒருவன்(நரக) நெருப்பை நோக்கிச் செல்வதை அல்லாஹ் தடுத்திராவிட்டால் அல்லாஹ்வைத் தவிர இலாஹு இல்லை யென்றும் முகம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் இருதயபரிசுத்தத்துடனே சாட்சி கூறக்கூடியவன் எவனுமில்லையென்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அனஸ்(றலி)*

*ஆதாரம்: புஹாரி*

கலிமாவை விளங்கியறிந்து கல்பில் பதிப்பது உண்மை யாகவே கடினமானதுதான். காரணம் நாம் மனுஷத்தன்மையான இயற்றன்மையை விட்டும் நீங்கியிருப்பதே. ஐயூப் (அலை) அவர்களின் சமூகத்தார் *"ஐயூபே! நீர் கூறுவதில் பெரும்பாலானவற்றை எம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை"* யென்று கூறியதாகக் குர்ஆன் 11:91ம் ஆயத்து அறிவிக்கிறது. இதே போல ஒவ்வோர் நபிமாருடைய சமூகத்தாரும் இப்படித்தான் கூறியிருக்கிறார்கள்.

நாம் கூறிய இந்த ஹாஷிக்கீன்களை இஸ்லாம் பூரணமாய் அனுமதிக்கிறது. இவர்களுடைய விஷயத்தில் எவரும் தலையிட வேண்டாம் என்றும் இஸ்லாம் சட்டம் போட்டிருக்கிறது. இவர்கள் என்றோ ஓர்நாள் தங்கள் குறிக்கோளை அடைவார்கள் என்பது நிச்சயம். இவர்கள் குதிரைக் கொம்பைத் தேடவில்லை. உண்மை யாக உள்ள ஒன்றைத்தான் தேடுகிறார்கள். ஆனால் தங்களை விட்டும் வேறாக, வேறான இடத்தில் தேடுகிறார்கள். ஆனால் இவர்கள் குர்ஆன் காட்டும் சுத்தசத்தியமான தௌஹீதை நூறுவீதமும் கையாண்டவர்களல்ல. இவர்கள் கையாண்ட பாதைதான்

ஹுஃபுல் பராயிலி என்னும் பர்லான வணக்கங்கள் வாயிலாய் இறைவனை நெருங்கும் பக்தி மார்க்கம் என்று கூறப்படுவது. இதுதான் இஸ்லாத்தில் பாவிக்கப்பட்டுள்ள ஷரீயத் என்ற படித்தரங் களின் பொது விபரம்.

இந்த நல்லடியார்கள் இறைவனின் மணிப்பேஸுக்கோ, மக்களின் மதிப்புக்கோ ஆசைப்பட்டவர்களல்ல. இறைவனையே உடைமைப் பொருளாக்க முனைந்தார்கள். தாயின் பாதங்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டு தன்னைத் தூக்கிக்கொள்ளச் சொல்லி அழுகிற குழந்தைகளுக்கொப்பானவர்கள் இந்த நல்லடியார்கள். அன்பே உருவான அந்தத் தாயும் அக்குழந்தையை ஆட்கொள் கிறாள். முஸ்லீம்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் மதத்தைச் சேர்ந்த பல பக்திமான்களின் வாழ்வில் இறையருளால், புத்திமயங்கக் கூடிய எவ்வளவோ காரியங்கள் (அற்புத நிகழ்ச்சிகள்) நடைபெற் றிருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். *“ஒரு தாய் தன் மடிமீதிருக்கும் குழந்தையில் கொண்டிருக்கிற அன்பைவிடப் பத்துமடங்கு அதிக மான அன்பை எனதடியார் மீது வைத்திருக்கிறேன்”* என்று இறைவன் கூறுவது இந்த நல்லடியார்களை நோக்கித்தான்.

அடுத்தது ஷரீயத், தரீக்கத் ஆகிய பக்தி நிலைக்கு அப்பாற்பட்ட ஹகீகத் என்ற ஓர் படித்தரமும் உண்டு. இங்குதான் இஸ்லாத்தின் உண்மை தெளிவுபடுகிறது. கலிமாவினால் உணர்த்தப்படும் உண்மை கல்பில் இடம் பிடிக்கிறது. இந்த நிலைமையிலுள்ளோர் சரியான மனோ உறுதியுடையவர்களாயும் மிகப்பெரும் மேதைகளாயும் அமைகிறார்கள். இவர்கள் கலிமாவை முறாக்கபா (ஆராய்தல்) செய்வதையன்றி வேறு இபாதத்துகளில் ஈடுபாடு கொள்வதில்லை. கொள்ளவும் முடியாது. இவர்களுடைய முறாக்கபாவில் எல்லா இபாதத்துக்களுமே அடங்கியிருக்கின்றன. இது சாதாரண மனிதனின் அறிவில் அமைவதுமில்லை. இவர்கள் கலிமாவை முறாக்கபா செய்து கொண்டிருக்கும் போது திடீரென இவர்களிடமுள்ள இன்ஸானியத் என்ற மனித இயல்பு மாய்ந்து விடுகிறது. நான் என்ற சுய உணர்வு கூட இவர்களிடமில்லை. இவர்கள்தான் சுயநிர்ணய உரிமையற்ற பூரண அடிமை (அப்து)கள். இவர்கள் மவுத்தாகாமல் மவுத்தாகி மீண்டும் உயிர் பெற்றவர்கள். மாவுல்ஹயாத் என்ற ஜீவ நீரைப் பருகிக்கொண்டவர்கள்.

இவர்களுக்கு இந்த நிலைமை எப்படிக் கிடைக்கிறது? இவர்கள் இலாஹு என்ற சொல்லைத் திட்டவட்டமாகப் பொதுப் பெயர்ச்சொல்தான் என்பதைக் குர்ஆன் ஹதீஸுகளின் ஆதாரங்





களோடு அறிந்துதான் முறாக்கபா செய்தார்கள். *“லாஇலாஹ”* என்னும் போது ஒன்றுமே கிடையாதென்றறிகிறார்கள். ஒன்றுமே இல்லையென்றால் நானும் இல்லை என்பதை உணர்கிறார்கள். இவர்கள் கூறிய *“லாஇலாஹ”* என்ற வாக்கியம் சர்வஆலங்களையும் தன்னையும் இல்லையென்றுணர்த்துவதால் இந்த உணர்வு அறிவின் உணர்வில்லாமல் றூஹின் அனுபவமாய் மாறுகிறது. இந்த றூஹை நோக்கிக் *“குன்”* என்ற சொல்லைக் கொண்டு இறைவனால் கட்டப்பட்டிருந்த கட்டு ஒரே செக்கனில் அவிழ்ந்துவிடுகிறது. ஆகவே நான் ஓர் சிருட்டி என்று பதிந்திருந்த இயல்பான உணர்வு அழிந்து விடுகிறது. ஆகவே இங்கே இன்ஸான் என்பது இல்லை. அங்கே இறைவன் தஜல்லியாகிறான். ஹக்கு நிலைப்படுகிறது. இந்த ஹக்கு நிலைப்படுவது *“இல்லல்லாஹ்”* என்ற வாக்கைக் கொண்டு தான். இவர்கள் மவுத்தாகி இறையருளால் ஹயாத்தைப் பெற்றவர்கள்.

*குர்ஆன்: 6:122*
*மரித்தோராக இருந்தவர்களில் எவரை நாம் உயிர்ப்பித்து மனிதர்களுக்கிடையில் நடமாடுவதற்குரிய பிரகாசத்தையும் (நூறையும்) கொடுத்திருக்கிறோமோ, அவர் இருள்களில் சிக்கி அவற்றி லிருந்து வெளிப்பட முடியாமலிருப்போருக்குச் சமமா வார்களா? இவ்வாறே நிராகரிப்போருக்கு அவர்களின் செயல்கள் அழகாக்கப்பட்டு விட்டன.*

இந்த ஆயத்தையும் இதைப்போல் குர்ஆனிலுள்ள வேறுபல ஆயத்துகளையும் ஆழமாய் ஆராயுங்கள். அவ்லியாக்களில் இந்த நிலைமையை எய்திக்கொண்டோருக்குக் கொடுபட்டிருக்கிற அறிவு நூரைச்சேர்ந்ததே. இது றிஸாலத்தைச் சேர்ந்ததாகும். இவர்கள் மருட்சியென்ற காரிருளில் இருந்தும் விடுபட்டவர்கள். இவர்கள்தான் குத்புகள், குத்புல் அக்தாபுகள், சேகுமுறப்பிகள் என்போர். இவர்களின் சொல், செயல், கருத்துயாவுக்கும் அடிப்படை குர்ஆன் ஹதீஸுகளேயன்றி அவர்களின் சுயவிருப்பமல்ல. இவர்களிடம் சுயவிருப்பம் என்பதுதான் கிடையாதே. ஆயினும் மனிதர்களுக்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை எவ்வகையிலும் இலகுவாய் உணரமுடியாது. இவர்களைப்பற்றி குர்ஆன் 10:64ஆம் ஆயத்தில் இவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மாராயமுண்டு என்று இறைவன் வாக்குறுதியளிக்கிறான். இம்மக்களின் நப்ஸு இறந்தழிந்து இப்போது வேறோர் நப்ஸு அவர்களிடமுண்டு. இதன்பெயர்தான் மர்ழியா என்பது. இது வலுவடையும் போது கமாலிய்யா என்ற பெயரைப்பெறும்.

இவ்விதமான நல்லடியார்களிடத்தில் குர்ஆனில் இறைவனால் கூறப்பட்டுள்ள உண்மைகள் வெளியாகின்றன. "*இன்னனீ அனல்லாஹு லாஇலாஹ இல்லாஹுவ*" திட்டமாக நான்தான் அல்லாஹ். அல்லாஹ் அல்லாத இலாஹு இல்லையென்ற குர்ஆனின் தீர்ப்பு இவ்வித நல்லடியார்களின் திரைகளைக் கிழித்தெறிந்து விடுகிறது. அல்லாஹ்வையன்றி அவர்களிடத்தில் அவர்களாக எதுவும் கிடையாது. இவருடைய நாவின் மூலம் வெளியாவது றப்பின் பேச்சுத்தான். "*இருதயபரிசுத்தத்துடன் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை நாற்பது நாள் ஒருவர் தியானம் செய்தால் நாற்பத்தோராம் நாள் அவருடைய நாவில் இருந்து வெளியாவது இறைவனின் பேச்சாகவே இருக்கும்*" என்று றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸின் உண்மை இந்த விபரம்தான். இப்போது நோக்குங்கள். இந்த நல்லடியார்கள் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை ஆரம்பித்துத் தெளிவுபெறும் அதேவேளையில்; ஷரீயத், தரீக்கத், ஹகீகத், மஹ்ரிபத் ஆகிய நாலு படித்தரங்களையும் அதாலத், றஹ்மத், றுபூபியத், தௌஹீது ஆகிய நாலு படித்தரங்களையும் கடந்து நப்ஸின் அம்மாறா, லவ்வாமா, முத்மஇன்னா, முல்ஹிமா, றாளியா, மர்லியா, கமாலியா ஆகிய ஏழு படிகளையும் கடந்து வானம், பூமி, அர்ஸு, குர்ஸு யாவையும் கடந்து தன்னையும் கடந்து (இழந்து) இறைவனின் லிகா என்ற பரிபூரணத்தில் ஒன்றி விடுகிறார்கள். ஆகையால்தான் "*திக்றில் சிறந்தது லாஇலாஹ இல்லல்லாஹ் என்றும் பிரார்த்தனையில் சிறந்தது அல்ஹம்து லில்லாஹ்*" என்றும்" றசூலுல்லாஹ் கூறினார்கள். இதை ஏன் பிரார்த்தனை என்று கூறுகிறார்கள் என்பதை நீங்களே ஆராயுங்கள்.

மேலும் சர்வ ஆலங்களையும் ஓர் தட்டிலும் கலிமாவை மறு தட்டிலும் வைத்தால் கலிமா கதிக்கும் என்றெல்லாம் கூறப்படுவதன் உண்மை என்ன? என்பதை ஆராயுங்கள். தெளிவு பெறுங்கள். ஸிறாத் என்ற பாலத்தை நல்லடியார்கள் மின்வெட்டு நேரத்தில் கடப்பார்கள் என்பதன் இரகஸியம் இப்போது புரிகிறதல்லவா? "*என்னைச் ஸிறாத்தின் ஆரம்பத்திலும், ஹவ்லுல் கௌதரிலும், மீஸானிடத்திலும் சந்திக்கலாம்*" என்று றசூலுல்லாஹ் கூறியதை துன்யாவிலேயே நீங்கள் காண வேண்டும். இதற்கு அறிவுக்கண் வேண்டும். குர்ஆன் ஹதீஸுகளும் அனுபவமும் உண்மைப்படுத்துகிற ஒன்றை மறுக்கிற ஒருவர் எந்த மதத்தில் இருப்பார்? அவர் இஸ்லாத்தில் மூமீனாய் இருக்கிறார்





என்பதற்கு ஆதாரம் என்ன? ஆகவே நல்லடியார்கள்தான் மிஹ்றாஜைப் பெற்றவர்கள்; சுயநிர்ணய உரிமையற்ற பரிபூரண அப்துக்கள்.

*குர்ஆன்: 11:56*
*நிச்சயமாக நான் என்னுடைய காரியங்கள் யாவற்றையும் என்னையும் உங்களையும் படைத்துப் பாதுகாப்போனாகிய அல்லாஹ்விடமே ஒப்படைத்து விட்டேன். ஒவ்வோர் ஜீவராசியின் முன் குடுமியையும் அவனே பிடித்துக் கொண்டிருக்கிறான். நிச்சயமாக என் இறைவன் ஸிறாத் என்ற நேர்ப்பாதையில் இருக்கிறான்.*

இந்த ஆயத்தில் என் சகல காரியங்களையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டேன் என்பதில் மூன்று படித்தரங்கள் இருக்கின்றன. ஒன்று தவக்கல், மற்றது தஸ்னீம், அடுத்தது தப்வீஸ் என்பது. இப்றாஹீம் (அலை) நெருப்புக்குண்டத்தில் எறியப்பட்டபோது இந்த தப்வீஸ் என்ற நிலையில் இருந்தமையால்தான் நெருப்பின் இயற்றன்மையே மாற்றமடைந்து பூஞ்சோலையானது. இதைக் குர்ஆனே விபரம் தந்திருக்கிறது. இதுதான் றசூல்(ஸல்) அவர்களிடத்திலும் அவர்களைப் பின்பற்றும் நல்லடியார்களிடத்திலும் இருக்கும் தப்வீஸ் ஆகும். தஸ்னீம் தரீக்கத் மக்களின் நிலைமை. தவக்கல் ஆரம்ப மூ.்.மீன்களின் நிலைமை. பூரண அடிமைத்தனம் இல்லையானால் தப்வீஸ் அங்கில்லை. இஸ்லாம் விளக்கும் இறுதி எல்கை இதுதான். இதுதான் வஹ்தத்துல் உஜுதுக் கொள்கை என்பது. இதன் சரியான தமிழ் ஏகத்துவக் கொள்கை என்பதே. இந்த ஆயத்தில் இறைவனும் ஸிறாத்தில் இருக்கிறான் என்று கூறப்பட்டதன் அந்தரங்கத்தை நீங்கள் சிந்தனை செய்யுங்கள். நாம் தொழுகையின் போது கேட்ட ஸிறாத் எது? ஆகிறாவில் கடந்து செல்லும் ஸிறாத் எது? என்பதைக் கண்டறியுங்கள்.

(28)

நாம் மேலே கூறியபடி கலிமாவைக்கொண்டு மிஹ்றாஜ் செல்லும் போது உபயோகப்படுத்துகிற வாகனத்தின் பெயர்தான் புறாக் என்பது. பர்க் என்ற சொல்லடியாய்ப் பிறந்த ஓர் சொல்தான் புறாக் என்பது. பர்க் என்றால் இக்லாஸ், உறுதியான எண்ணம், ஏகாக்கிரசித்தம், என்பதே. இன்ஸானுடைய (நம் போன்றவர்களின்)

வாகனம். றசூல் (ஸல்) அவர்களும் இதே வாகனத்தைத்தான் எடுத்துக்கொண்டார்கள். ஆயினும் வெளிப்படையான மிஹ்றாஜும் அவர்களிடம் இருந்ததுதான். இது லாஹிறுடைய விஷயமாய் இருப்பதால் நான் இதை விபரிக்காமல் நீங்களே புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

பல பெரியார்கள் றசூல் (ஸல்) அவர்கள் மிஹ்றாஜுக்கு உடலோடு ஒரு முறையும் பலமுறைகள் (39, 37, 17) உடலின்றியும் போயிருக்கிறார்கள் என்று அவரவர் அறிவுக்கேற்றபடி கூறியுள் ளார்கள். நான் அவர்களின் எண்ணிக்கையை மறுத்துக் குர்ஆன் எத்தனை முறை இறக்கப்பட்டதோ அத்தனை முறை மிஹ்றாஜ் சென்றுள்ளார்கள் என்று கூறுகிறேன். ஆதாரமும் தருவேன். இன்ஷா அல்லாஹ். றசூல்(ஸல்) அவர்கள்; என்று றசூலாக்கப்பட்டார்களோ அன்றிலிருந்து இன்றுவரையிலும் யாவும் அழிந்தொழியும் வரையிலும் போய்க்கொண்டும் வந்துகொண்டும்தான் இருக்கிறார்கள். இதை இப்போது உங்களால் விளங்கிக்கொள்ள முடியாது. ஆயினும் றிஸாலத் இன்னும் இருந்து கொண்டிருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டால் விளங்கிக் கொள்வீர்கள்.

மனிதனின் ஆரம்பமும் முடிவும் கலிமாவைக் கொண்டே நிலை கொண்டிருக்கிறது. மனிதன் மட்டுமல்ல சர்வ ஆலங்களும் கலிமாவைக் கொண்டே தரிபாடாய் இருக்கின்றன. ஆகையால்தான் இஸ்லாத்தின் ஆரம்பம் அடிப்படை கலிமாவாய் அமைக்கப் பட்டிருக்கிறது. வேதத்தின் அடிப்படை கலிமா என்பதையும் அது ஒரே கருத்துடைய முஹ்கமுவைச் சேர்ந்தது என்பதையும் எமது முதல் நூலில் குர்ஆனின் 3:57ஆவது ஆயத்தைக் கொண்டு தெளிவாய் விளக்கியிருக்கிறேன். ஈமானைக் கொண்டு இறை சந்நிதானத்தை அடையலாமேயன்றி இபாதத்துகள் கொண்டு அடையமுடியாது. ஈமானை உறுதிப்படுத்தவே இபாதத்துகள் தரப்பட்டுள்ளன என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. இப்போது ஈமானுக்கும் இபாதத்துக்குமுள்ள வேறுபாட்டை நீங்கள் அறிந்திருக்க முடியும். அனேக ஆதாரங்கள் இருப்பினும் நாம் அவற்றை இங்கே கூறவில்லை.

இப்பேர்ப்பட்ட பாக்கியம் பெற்ற கலிமாவை அணுவேனும் நெருங்காமல் மூடத்தனமாய் இபாதத்தில் ஈடுபாடுகொள்வது அறிவுடைமையல்ல. இபாதத் என்ற பெயரும் பொருந்தாது.





*ஹதீஸ்*

*அல்லாஹ்வை நினைவு கூர்வதைவிட (திக்று செய்வதைவிட) அடியானின் எந்த இபாதத்தும் அல்லாஹ்வின் வேதனையை விட்டும் காப்பாற்றக் கூடியதாய் இல்லை என்று றசூல் (ஸல்) கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: முஆதிப்னு ஜபல்(றலி)*
*ஆதாரம்: அபூதாவூத்.*

இவை போன்ற அனேக ஹதீஸ்களை எமது முதல் நூலில் இஸ்லாத்தின் நோக்கமென்ன என்ற தலைப்பில் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளேன். அவற்றை மீண்டும் கூறவேண்டியதில்லை. மேலும் இக்காலத்தில் அமலைவிட அறிவு சிறந்ததாய் இருக்கிறதென் பதையும் ஆதாரங்களோடு விளக்கியுள்ளேன். அங்கே சுமார் 10 ஹதீஸுகள் தந்துள்ளேன்.

*ஹதீஸ்*

*ஈமான்தாரிகளின் அறிவுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள். அவர்கள் மெய்யாகவே இறைவனின் பேரொளியைக் கொண்டு பார்க்கிறார்கள் என்று கூறி உண்மையைக் கண்டறிவோ ருக்கு நிச்சயமாகப் பல நல்லாதாரங்கள்(சான்றுகள்) உள்ளன என்ற 15:75ம் ஆதாயத்தையும் றசூலுல்லாஹ் ஓதிக்காட்டி னார்கள்.*

*அறிவிப்பவர்: அபூஸஹீத்(றலி)*
*ஆதாரம்: திர்மிதி*

பன்றிகளின் கழுத்தில் இரத்தின மாலையை அணிந்து விடாதீர்கள் என்று ஈஸா(அலை) கூறுகிறார்கள். இரத்தின மாலை என்பது கலிமாவால் உணர்த்தப்படும் தௌஹீதாகும். இதைப் பெற்றுக்கொள்ள முடியாத அறிவிலி பன்றியாய் இருக்கிறான் என்பது பொருள். ஆகவே நான் இங்கே கூறப்போவது அறிவுத்தாகமுடைய அறிஞர்களுக்கேயன்றிப் பாமரமக்களுக்கல்ல. பிறக்கிற ஒவ்வோர் நப்ஸும் ஸிறாத் என்ற பாதையில்தான் தன்வாழ்வை ஆரம்பிக்கிறது. அந்த நப்ஸு இறக்கும் வரையும் ஸிறாத்தில் இருந்து தவறி நரகில் வீழ்ந்துவிடக் கூடியதாயும் இருக்கிறது. அடிக்கடி சறுக்கி விடக் கூடியதாயும் இருக்கிறது. தாமதமாய் அல்லது விரைவாய்க் கடக்கக் கூடியதாயும் இருக்கிறது. ஆனால் இந்த நப்ஸும் புலனுணர்வு என்ற மறதியில் சிக்குண்டிருப்பதால் நாம் ஸிறாத்திலேயே (பாலத்திலேயே) நடந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிவதே இல்லை. இதைப்போலவே ஒவ்வோர் நப்ஸும் அர்ஷில்

சன்னிதானத்திலேயே வாழ்கிறோம் என்பதையும் அறிந்து கொள்வ தில்லை. இந்த நப்ஸுகள் தங்களை; தங்கள் செயல்களை மீசான் என்ற தராசில் அளந்து நிறுத்துத் தீர்ப்புக் கட்டிக்கொள்ளப் படுவதையும் அறிவதில்லை. அந்த நப்ஸுகளின் பட்டோலைகள் இங்கேயே தயாராகிக் கொண்டிருக்கின்றன என்பதையும் அறிவதில்லை.

இந்த நப்ஸுகள் தங்களுக்குத் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட மயக்கமென்னும் மறதியே இதற்குக் காரணமாய் இருக் கிறது, இது சுயநிர்ணய உரிமையின் விளைவாகும். இந்த நப்ஸுகள் ஒவ்வோர் கணப்பொழுதும் இறப்பதாயும் அதே வேளை உயிர் பெறுவதாயும் இருக்கின்றன. நரகில் தோல் கருகும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் உண்டாகும் என்றும் உயிர் பிரியும் போதெல்லாம் உயிரூட்டப்படும் என்றெல்லாம் நாம் படித்தோ கேட்டோ அறிந்திருக்கிறோம். இதன் வெளிப்படைதான் நமக்கறிவிக்கப்பட்டுள்ள இம்மை மறுமை என்பது. அதாவது லாஹிறின்படி துன்யா விதை நிலமாயும் விளைநிலமாயும் ஆகிறா விளைவை அனுபவிக்கும் நிலமாயும் இருக்கின்றன.

ஈமான்தாரிகள் இந்த நப்ஸின் மறதியில் இருந்து விடுபடு கிறார்கள். நினைவை உண்டாக்கிக் கொள்கிறார்கள். உறக்கத்தில் இருந்து விழிப்பு நிலையை அடைவது போல, இவர்கள் கலிமாவை விளங்கித் தௌஹீது என்ற ஹவ்லுல்கவுதரில் நீராடுகிறார்கள். இங்கே ஹவ்லு என்பது தௌஹீதின் இல்மு என்பதே பொருள். இவர்கள் அந்த ஹவ்லிடத்தில் றசூலைக் காண்கிறார்கள். முகக் கண்ணால் அல்ல. அறிவுக்கண்ணால்தான். ஸபாஅத் அவர்களுக்குக் கிடைக்கிறது. இவர்களுடைய மரணம் (மவுத்துகபுல் அன்த மவுத்) தும்பையாட்டின் ஸுறத்தில் அறுக்கப்பட்டு மரணமற்ற நித்திய ஜீவனைப் பெறுகிறார்கள். நித்திய ஜீவனைப் பெறவேண்டும் என்ற ஆசையினால்தான் எம் தந்தை கோதுமைக் கனியை உண்டார்கள். அவர்கள் உண்ட கனி அனாநிய்யத் (நான் வேறு ஹவ்வா வேறு) என்ற துவித உணர்வாகும். இவ்வுணர்வுதான் ஜென்னத் துன்யாவாக அமையக் காரணியாகும். இதுதான் ஷிர்க்கின் ஆணிவேர். மீண்டும் தன்சுய இடமான ஜன்னத்தில் நுழைவதானால் இந்த ஷிர்க்குடன் நுழைய முடியாது. இந்த ஷிர்க்கை நீக்கிவிட்டால் நாம் முன்பிருந்த ஜென்னத்தை அதே கணம் எம்மால் உணரமுடியும். இந்த நிலைமையை உணர்த்துவதற்காகத்தான் 124000 நபிமாரும் 4





வேதங்களும் கறாமாத் முஹ்ஜிஸாத்துக்களும் யுத்தங்களும் அவசியமாயின.

கலிமாவை உணர்ந்து கொண்ட ஆரம்ப மு..மீன் இந்த உண்மையை உணர, அனுபவத்தில் அடையப் பல வருடமுயற்சி (இபாதத்துக்கள்) அவசியமாகும். இந்த முயற்சிகள் தகைமைக்கேற்ப நாலு படித்தரங்களாய் அமைந்திருக்கின்றன. இதில் ஆச்சரியப் படுவதற்கும் பிழைகாண்பதற்கும் என்ன இருக்கிறது. தரீக்கத் வாதியான மனிதரின் நிலைமை மாறுபட்டதாய் இருக்கிறது. ஆகையால் தான் இவர் அப்தாலு என்று கூறப்படுகிறார். இவருடைய உடலும் புலன்களும் துன்யாவை ஒட்டியவையாயும் (ஷிர்க்கில் சிக்குண்டதாயும்) அறிவு ஸிர்க்கில் இருந்து வெளியேறி நித்திய வாழ்வைப் பெறத் துடிப்பதாயும் இருக்கிறது. இவர் இடைவிடாமல் ஞாபகத்தில் மூழ்கிறார். (திக்றில் ஈடுபடுகிறார்) இவர் மனஉறுதியடையும் போது இவருடைய அறிவு ஆலம் மிதாலைச் சேர்ந்ததாயும் அமைகிறது. இம்மையையும், மறுமையையும் பிரிக்கும் திரையான அறிவு இவரை விட்டும் கிழிக்கப்பட்டு(நீக்கப்பட்டு) விடுகிறது. இவர் இங்கேயே நரகைப் பார்க்கிறார். சுவர்க்கத்தின் சாயலை அறிகிறார். இவர்களையும் இவர்களின் அறிவையும் பாமர மனிதன் எப்படி அறிவான்? இவ்விபரம் குர்ஆன் ஹதீஸுகளில் நிறைய இடம்பெறுகிறது.

இந்த நல்லடியார்கள் செய்த இபாதத்துகளில் மிகமுக்கிய மானது கல்பில் குடிகொண்டிருந்த ஷிர்க் என்ற உளநோயை நீக்கியதுதான். இந்தநோய் கல்பை (அறிவை) விட்டு நீங்காத வரையில் துன்யாவிலோ ஆகிறாவிலோ சாந்திகிடைப்பதே இல்லை. ஷிர்க்கு நீங்கிவிட்டால் *"நான் மறைவாக இருக்கவில்லை, அழைப்போனின் அழைப்புக்கு நான் விடையளிக்கிறேன். நீங்கள் எறியவில்லையென்கினும் அல்லாஹ்தான் எறிந்தான். நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வுடைய முகம் இருக்கிறது, அல்லாஹ்வைவிட வர்ண அழகன் யார்?"* என்பவை போன்ற குர்ஆன் வாக்கியங்கள் றப்பு யார்? அப்து யார்? என்பதைத் துல்லியமாக உணரச் செய்துவிடும். இந்த நல்லடியார்களுக்கு அறபோ, ஆங்கிலமோ அவசியமல்ல.

*"எனக்கும் என்னுடைய அடியானுக்குமிடையில் ஸிர்ரு (இரகசியம்) இருக்கிறது. முகற்றபான மலக்கோ, முர்ஸலான*

*நபியோ அதற்கு இடம்பெறமாட்டார்கள்"* என்று அல்லாஹ் கூறுவதாக றசூலுல்லா கூறுகிறார்கள். இந்த ஹதீஸின் விபரம் எஹ்யா உல்உலூமுத்தீன் என்ற நூலில் கஸ்ஸாலி(றஹ்) அவர்களால் விளக்கப்பட்டிருக்கிறது.

*ஹதீஸ்*

*"உங்களுடைய இபாதத்துகளுக்கெல்லாம் மேலானதையும் எதனால் உங்களுடைய பதவிகள் மேலாகின்றன என்பதையும் அதில் எது உங்களுடைய இறைவனிடம் மிகத் தூய்மையானது என்பதையும் நீங்கள் பொன்னையும் வெள்ளியையும் தர்மம் செய்வதைவிட மேலானது எது என்பதையும் நீங்கள் உங்கள் எதிரிகளைப் போரில் சந்தித்து நீங்கள் அவர்களைக் கொன்று குவிப்பதையும் அவர்கள் உங்களைக் கொன்று குவிப்பதையும் விட மேலானது எது என்பதையும் நான் உங்களுக்கு அறிவிக்க வேண்டாமா?" என்று றசூல் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்குத் தோழர்கள் ஆம் அறிவியுங்கள் என்றனர். அதற்கு றசூல் (ஸல்) அவர்கள் திக்று செய்வதுதான் என்று கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அபூதர்தா(றலி)*
*ஆதாரம்: முஅத்தா, திர்மிதி*

இந்த ஹதீஸில் எவ்வளவோ நுண்ணறிவுகள் தென்படு கின்றன. மனித வாழ்வில் ஏற்படக்கூடிய எல்லா இபாதத்துகளுமே திக்றில் அடங்கியிருக்கின்றன என்பது புலனாகவில்லையா? *"மார்க்கத்தை விளங்கியறிவதைவிடச் சிறந்ததைக் கொண்டு அல்லாஹ்வை வணங்கப்படுவதே இல்லையென்றும் மார்க்கத்தை விளங்கியறிந்த ஒருவர் ஆயிரம் ஆபிதுகளைவிட மேலானவர் என்றும் ஒவ்வோர் மாளிகைக்கும் தூண் இருப்பது போல மார்க்கத்தின் தூண் மார்க்க விளக்கமாய் இருக்கிறதென்றும்"* றசூல் (ஸல்) கூறிய உண்மையை நாம் உணர வேண்டும். இன்னும் எவ்வளவோ தரலாம். இது றசூல்(ஸல்) அவர்களுக்கும் அவர்களுடைய உம்மத்துக்கும் கொடுக்கப்பட்ட ஓர் விசேட நன்கொடையாகும். ஆகவே *"றசூலின் உம்மத்தில் உள்ள ஓர் நல்லடியார் முந்திய நபிமார்களைப் போல் உயர் பதவி உடையவர்"* என்று றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட உண்மையை நாம் கண்டறிய வேண்டும். ஷிர்க் மன்னிக்கப்படாத குற்றம் என்பதன் அந்தரங்கம் இப்போது ஓரளவு விளங்கியிருக்கலாம். நபியின் உம்மத்தில் ஸிர்ருடைய அடியார்கள் உண்டு.





தௌஹீதை விளக்கினால் பள்ளிவாசல்கள் பாழடைந்து விடும் என்பதும் வாழ்வை நடாத்த முடியாதென்பதும் வெறும் மருட்சியாகும். றசூல்(ஸல்) அவர்களும் தோழர்களும் பள்ளிவாசல் களைப் பாழ்போட்டார்களா? காடுகளில் ஒதுங்கி வாழ்ந்தார்களா? யுத்தமே செய்திருக்கிறார்களே! மார்க்கத்தை விளங்கிப ்புரிந்து கொள்ளாமைதான் இந்த மருட்சிகளுக்கெல்லாம் காரணம். றசூல் (ஸல்) அவர்களும் அவர்களுக்கு முந்திய நபிமார்களும் உம்மி மக்களான, ஜாஹில்களான, மூடமக்களிடையேதான் கலிமாவைக் கூறித் தௌஹீதை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அந்தப் பாமர மக்கள் வழிகெட்டு விடுவார்களென்றோ கடினமான துர்க்கிருத்தி யங்களில் ஈடுபடுவார்கள் என்றோ அல்லாஹ்வும் றசூலும் கருத வில்லை. கலிமாவின் விபரமான தௌஹீதைக் கொண்டுதான் அந்த மூடமக்களை நேர்வழியிலாக்க வேண்டும் என்பதே இறைவனின் ஆழிய நோக்கமாகும். இந்த நோக்கத்துக்காகவே கலிமாவை நாவினால் கூறும் வரையிலும் வாள்கொண்டு யுத்தம் செய்யும்படியும் ஏவினான். நசூல்(ஸல்) அவர்கள் யுத்தமே செய்தார்கள். பொதுசன அமைதிக்காக அல்லது பாதுகாப்புக்காக உண்மையை மறைக்கலாம், அல்லது புரட்டலாம் அல்லது தடைப்படுத்தலாம் என்று ஒருசாரார் கூறுவது உண்மையானால்; றசூல் (ஸல்) அவர்கள் உண்மையை உணர்த்துவதற்காகப் பொதுசன அமைதியைக் கெடுத்துப் பல மக்களைக் கொலை செய்திருக்கிறார்களே? அது ஏன்? என்பதைப் பகுத்தறிவைக் கொண்டு சிந்தனை செய்து நாம் தெளிவு பெறவேண்டும்.

தௌஹீதை எத்திக்கொள்ளாத மனிதன் வாழத் தகுதியற்ற வனாய் இருப்பதால் அவனுக்குத் தௌஹீதை எத்திவைக்க வேண்டும். இல்லையானால் அவனைக் கொன்றுவிட்டு அவன் பொருள் பண்டங்களை மூ.்மீன்கள் அனுபவிக்க வேண்டும், என்பதே இறைவனின் நாட்டமாகும். ஏனென்றால் இன்ஸானுக்காகவே உலகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மனித வேஷத்திலுள்ள மிருகங் களுக்காக அல்ல. தௌஹீதை வெளிப்படுத்தினால் பாமரமனிதன் வழிகெட்டுவிடுவான் என்பது விதண்டாவாதம். ஏன்? பாமரமனிதன் தான் எந்த ஓர் நல்ல வழியிலும் இல்லையே. அவன் வழிகெட்டான் என்றால் தீய பாதையை விட்டுவிட்டு நல்வழிக்கு வந்தான் என்பதே பொருள். ஆகவே மருட்சியாளர் தங்களை நேர்வழியில் இருப்பதாக நம்பிக்கொண்டுதான் வழிகெட்டு விடுவார்கள் என்று கூறுகிறார்கள். இது அவர்களின் அறியாமைதான்.

124,000 நபிமாரும் முஹ்ஜிஸாத்துக்களும் யுத்தங்களும் எதற்காக? வழிகெட்ட மக்களைத் தெளஹீதைக் கொண்டு வாழ வைக்க வேண்டும் என்பதற்காகத்தான். வழிகெட்ட மக்கள் அப்படி நல்லடியார்களானதுண்டா? ஆம் உண்டு. பல்லாயிரம் உண்டு. கலிமாவை விளங்கித் தெளிவு பெற்றதனால்தான் உலகக் காடையர்களில் குடியர்களில் முதலிடம் வகுத்த உமர் என்பவர் உமரேபாரூக் (றலி) என்றும் நீதியின் அரசன் என்றும் பெயர் பெற்றார்கள். எத்தனை எத்தனையோ கெட்டவர்கள் மாபெரும் மேதைகளாக, அறிஞர்களாக அவ்லியாக்களாக, மாற்றமடைந்தார்கள். றசூல் (ஸல்) அவர்களை வாளின் வலியினால் ஒழித்துக்கட்ட முனைந்த மூட மக்கள்தான் வானத்தின் நட்சத்திரம் போல் அமைந்தார்கள். பாவியாய் மிருகமாய் மாறியுள்ள மனிதனை; உண்மை மனிதனாக்க முனைவதில் எவ்விதப் பிழையும் கிடையாது. இம்மனிதர்கள் பள்ளிவாசலுக்கு வராவிட்டால் இஸ்லாத்துக்கு எவ்விதக் கெடுதியும் ஏற்படாது. இறைவனுடைய ஆழிய அறிவை நாம் பிழையாய்க் காண்பதும் பள்ளிவாசல் பாழுறும் என்பதும் தெளஹீதை மறைக்க வேண்டும் என்பதும் அறிவிலிகளின் வரண்ட கற்பனை அல்லவா? நம் அறிவு இறையறிவை மிஞ்சியதா? தெளஹீதை நாஸ்திகவாதமாய்க் காண்பதும் விளக்கமின்மைதான்.

தைமியா, அப்துல்வஹ்ஹாப் இல்யாஸ் போன்றோர் அவரவர் கட்சிக்கேற்ற அளவு குர்ஆன் ஹதீஸுகளை ஏற்றுக்கொண்டு மீதியைத் தள்ளிவிட்டிருக்கிறார்கள். இவர்கள் குர்ஆன் ஹதீஸுகளை முற்றாய் ஒப்புக்கொண்டவர்களல்லர். பூரணமாய் மார்க்க விளக்கம் பெற்றவர்களும் அல்லர். நாஸ்தீகவாதியாய் இருப்பவன் இறைவன் தான். நான்தான் அல்லாஹ் என்னையன்றி இலாஹு இல்லையென்று குர்ஆனில் கூறுகிறான். என்னையன்றி எதுவும் இல்லை; இருப்பது நான் மட்டுமே என்று விபரம் தருகிறான். இதைத்தான் நாஸ்தீகம் என்கிறார்கள். உண்மையை நோக்கினால் இதுதான் ஆஸ்தீகமாய் இருக்கிறது. இதைப் புரிந்துகொள்ளாதவன் தான் தெளஹீதை நாஸ்தீகவாதம் என்கிறான். இதைவிட நாஸ்தீகவாதமென்ற ஓர் மருட்சி மனிதனில் இருப்பதாகவும் அது உண்மையான ஆஸ்தீக வாதத்தையே உறுதிப்படுத்துகிறது என்பதையும் எமது முதல் நூலில் தெளிவுபடுத்தியுள்ளேன்.

மேலே நான் காட்டிய விபரங்களில் இருந்து ஓர் சிறு சந்தேகம் தோன்றலாம். மனிதன் தனக்குத்தானே நன்மை தீமைகளைச் செய்து கொள்கிறானா? அல்லாஹ்தான் செய்கிறானா?





என்பதே சந்தேகம். எல்லாம் இறைவன் செயலே என்பது உண்மை. ஆயினும் இன்ஸான் என்பதும் றப்பு என்பதும் சிற்சில சட்ட நுட்பங்களைக் கொண்டு (ஹுக்கும்) ஒரு பொருளின் இரு பெயர்களாய் இருக்கின்றன. றப்பு என்பது இலாஹியான நாமம். இதன் ஹுக்கும்கள் வேறு. இன்ஸான் என்பது கௌனியான நாமம். இதன் ஹுக்கும்கள் வேறு. இந்த ஹுக்கும்கள் நிலைப்பாடாய்த் தரிபட்டிருப்பதால் இரண்டும் வேறுவேறாய்த் தென்படுகின்றன. இது ஓர் மயக்கம். இந்த மயக்கம் இருக்கும் வரையில் இன்ஸானுக்குச் சுயநிர்ணய உரிமை இருப்பதால் அங்கே இன்ஸானுக்கும் செயலுண்டு. இதற்கு ஆதாரம் றப்புதான். ஆகவே இன்ஸான் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறான், உயர்த்திக் கொள்கிறான் என்று கூறுவது தவறாகாது. இது குர்ஆன் ஹதீஸுகளின் தீர்ப்புத்தான்.

அப்து றப்பாகவோ றப்பு அப்தாகவோ ஆவதில்லையென்று றசூல் (ஸல்) அவர்களுடைய ஓர் ஹதீஸ் இருக்கிறது. இது தெளஹீதுக்கு மாற்றமானதுபோல் வெளிநோக்கில் தென்படுகிறது. உண்மை அப்படியல்ல. இந்த ஹதீஸ் தெளஹீதையே உறுதிப்படுத்துகிறது. அப்து றப்பு என்று பொருள்கள் இல்லாமல் உள்ள ஒரே பொருள் இரு பெயர்களைப் பெற்றிருக்கும் போது ஒன்று மற்றொன்றாக எப்படி மாறும்? ஹுக்கும்களைப் பொறுத்துப் பெயர்களும் ஸூறத்தும் செயல்களும் அமைகின்றனவேயன்றிப் பொருட்கள் இரண்டல்லாத ஒன்றே தான்.

(29)

இறைவனை முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஆரம்ப ஸூபிகளுக்கும் இங்கே நான் ஓர் அறிவுரை கூறிவைக்க வேண்டியது அவசியமாகிறது. நீங்கள் இறைவனையடையத் துடிக்கிறீர்கள் என்பதை இறை உதவியால் நான் அறிவேன். லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைக் கொண்டு அல்லாஹ்வையன்றி ஒன்றுமில்லை என்பதை நீங்களறிவீர்கள். ஆயினும் அனுபவ வாயிலாய்ச் சர்வஆலங்களும் இருப்பதை நீங்கள் காணுகிறீர்கள். ஆகவே இருப்பவையாவும் அவனே என்று உறுதி கொண்டிருக்கிறீர்கள். அந்தச் சிருட்டிகளுடன் அதனதன் ஹுக்கும்களின்படி நடந்தும் கொள்கிறீர்கள். மெச்சக்கூடிய விஷயம்தான். ஆயினும் இன்னும் உங்களிடம் திரை இருந்து கொண்டேதான் இருக்கிறது. நான் இங்கே கூறும் விஷயத்தை நீங்கள் பரிபாஷையாய்க் கொண்டால் உங்களை மூடிக் கொண்டிருக்கும் திரை அதே கணம் நீங்கிவிடலாம். ஊன்றிக் கவனியுங்கள்.

குர்ஆன் ஹதீஸுகளில் ஸமீஉன், பஸீறுன், கலாமுன் - செவியேற்போன், பார்ப்போன், பேசுவோன் என்பவை போன்ற சொற்கள் பரவலாய்ப் பாவிக்கப்பட்டிருக்கின்றன. றப்புக்கு அப்து நேர்மாற்றம் என்பதை நீங்கள் அறிவீர்கள். றப்பில் எது உண்டோ அது அப்துவில் அமையாது. றப்புச் செவியேற்பவன் என்றால் அப்துச் செவியேற்க முடியாதவன். றப்பு பார்ப்பவன் என்றால் அப்து பார்க்க முடியாதவன். றப்பு பேசுபவன் என்றால் அப்து பேச முடியாதவன், என்பது அறிவின் தீர்ப்பு. அப்படியானால் கலிமா கூறுவதுபோல் அல்லாஹ்வையன்றி எதுவும் இல்லையென்றால் யாரை யார் பார்க்கிறான்? எவருடைய சொல்லை எவன் கேட்கிறான்? எவருடன் எவன் பேசுகிறான்? எந்த வேலையை யார் செய்கிறான்? இதை நீங்கள் தொடர்ந்து முறாக்கபா செய்தால் இறைதரிசனையை உங்கள் உளப்பக்குவத்துக்கேற்ப இம்மையிலேயே பெறமுடியும். ஆகையால் தான் அலி (றலி) அவர்களும் பல மேதைகளும் அல்லாஹ்வையன்றி எதையும் நான் பார்த்ததில்லை என்று கூறுகிறார்கள். நான் றப்பைக் காணாமல் வணங்குவதில்லை என்று கூறுகிறார்கள். இது அனுபவத்தில் ஏற்பட வேண்டிய விஷயம். முயலுங்கள், இறைவன் நிச்சயமாக நம்மோடுதான் இருக்கிறான்.

பக்தியென்பது ஸூபிகளான உங்கள் விஷயத்தில் அறிவில் ஏற்பட்ட ஓர் மருட்சியாய் இருக்கிறது. ஹக்குல் எகீனை நீங்கள் பெற்றுவிட்டால் பக்தியென்ற சொல் செயலிழந்துவிடும். அச்சம், பயம் எல்லாம் மாயமாய் மறைந்துவிடும். பனாவில் நுழையும் உபாயம் எதுவோ அதைக் கையாளுங்கள். அந்த உபாயம் முறாக்கபா செய்வதே. இந்தப் படித்தரத்தை விளக்குவதுதான் நாம் முதலில் எடுத்துக்கொண்ட *"வமாகலக்கத்துல் ஜின்ன வல்இன்ஸ இல்லாலிய.்.புதூன்"*, *"வ.்.புது றப்பக்க ஹத்தா எ.்.தியக்கல் எகீன்"* என்ற இரு ஆயத்துகளின் நோக்கமும் ஆகும்.

நான் இந்த நூலை எழுதியுள்ள பாணி விஷய விளக்கம் யாவும் எழுத்துலக இலக்கணங்களுக்கு முற்றும் மாறான ஓர் முறையாகும். முதிய பாட்டனார் பேரப்பிள்ளையை மடியில் இருத்திக் கொண்டு ஓர் கதையைத் திரும்பத் திரும்பக் கூறுவது போலவே நானும் பல விஷயங்களைப் பலவாறாகக் கலந்து விஷய அட்டவணை கூட இல்லாமல் எழுதியிருக்கிறேன். கவாஸுகள் கூடத் தௌஹீது விஷயத்தில் குழந்தைகளுக்கொப்பாகவே இருக்கிறார்கள். தௌஹீதுடைய இல்மோ வயது முதிர்ந்த பாட்டன்மாரைப் போல் இருக்கிறது. நான் ஓர் எழுத்தாளனோ





பேச்சாளனோ அல்ல. எனக்கு அவை அவசியமுமல்ல. என் அறிவுத்திறனை வெளிப்படுத்துவதும் நோக்கமல்ல. என்னிடம் எந்த ஓர் அறிவும் எனக்கென்று சொந்தமாகக் கிடைக்கவே கிடையாது. நான் என் றப்பிடத்தில் முற்றிலும் சரணடைந்தவன். அவனிடமே என் சகல காரியங்களையும் ஒப்படைத்து என் ஆத்மாவைக் கொண்டு முற்றிலும் ஸுஜுதிலேயே இருந்து கொண்டிருக்கிறேன். உங்களை என் நப்ஸாகவே காண்கிறேன். ஆகவே தான் குர்ஆனு டைய ஹதீஸுகளுடைய விஷயத்தை விளக்கினேன். இந்தத் தௌஹீது விஷயத்தில் நான் கையாண்ட முறையே சரியான தென்பதைக் குர்ஆனைக் கொண்டே நான் அறிந்தேன். ஆகையால் தான் நாட்டுத் தமிழில் வளவளவென்று கூறியிருக்கிறேன். நீங்கள் சொல்லழகில் மூழ்காமல் கருத்தழகை மட்டும் நோக்குங்கள். 'சொல்பவரை நோக்காதே சொல்லை நோக்கு' என்று அலி (றலி) அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே நுட்பமாய் விளங்கித் தெளிவுபெற அரும்முயற்சி செய்யுங்கள்.

(30)

இன்னோர் எத்துக் கூட்டத்தையும் அறிவுடைய மக்களுக்கு நான் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சிறிது செவிதாழ்த்துங்கள். லேபல் தப்லீக்கைப்போல் இன்னோர் வகையான எத்திவைக்கும் ஏமாளிக்கூட்டமும் நம்மிடையே இருந்துகொண்டிருக்கிறது. இக்கூட்டம் ஸூபிகள், ஷேகுகள் என்ற லேபலைப் போட்டுக்கொள்கிறது. இந்த ஷேகுகளுக்கு வால்களாய் அமைந்த பலர் இவர்களைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றிக் கொண்டு வஹ்தத்துல் வுஜுதுக் கொள்கையை அதன் உண்மையை விளக்கி வைக்கவும் தங்களை, எழுத்தாளர்களாய் ஆரீபீன்களாய்க் காட்டிக்கொள்ளவும் முனைகிறார்கள். உதாரணம் ஒன்று மட்டும் தருகிறேன்.

27-08-88இல் அக்கரைப்பற்றில் எம்.ஏ.ஏ. அப்துல் மஜீத் என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட *"வஹ்தத்துல் வுஜுத்"* நூலின் 15ஆவது பக்கத்தைப் புரட்டிப் பாருங்கள். லாஇலாஹ இல்லல்லாஹ் என்றால் எந்த உலகத்திலும் அல்லாஹ் இல்லாமல் வேறு யாரும் இல்லையென்றும் முகம்மதுர்ரசூலுல்லாஹி என்றால் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஹக்கு வெளிப்படும் இடமாக இருக்கும் என்றும் கூறுகிறார். மேலும் ஷரியத்தின்படி வணக்கத்துக்குப் பாத்திர மானவன் அல்லாஹ்வை அன்றி வேறுயாரும் இல்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதராக இருக்கும்

என்றும் எழுதி இருக்கிறார். இவரை நோக்கினால் இவருக்குக் கலிமா எது, உபவாக்கியம் எது? என்பது கூட இன்னும் தெரியாமல் இருக்கிறது என்ற உண்மையை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இவர்கொண்டுள்ள கலிமாவின் கருத்து, இபாரத்துன்னஸ் தலாலத்துன்னஸ், இஸாரத்துன்னஸ், இஹ்திலாவுன்னஸ் என்ற நான்கு பிரமாணங்களின் படியும் சுத்தமான ஷிர்க்காக இருக்கிறது. இது அபூஜஹ்ல் போன்ற முஷ்ரிக்குகளின் கொள்கையாக இருக்கிறது. ஆகவே இந்த நூலாசிரியர் கலிமாவை நாவினால் கூறியதால் முஸ்லீமாயும் கலிமாவைத் தவறாக விளங்கிக் கொண்டதால் முஸ்ரிக்கின் கொள்கையில் ஊறியவராயும் இருக்கிறார்.

*குர்ஆன்: 3:7*
*அவனே இவ்வேதத்தையும் உம்மீது அருளினான். இதில் குறிப்பாக உள்ள அர்த்தத்தையுடைய (முஹ்கமாதுன்) வசனங்களும் இருக்கின்றன. இவைதாம் இவ்வேதத்தின் அடிப்படை, மற்றவை பல பொருள்களுக்கு இடம்பாடானவை (முதஸாபிஹா துன்). எவர்களுடைய உள்ளங்களில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள் அதில் (முஹ்கமுவில்) குழப்பத்தை உண்டுபண்ணக் கருதிப் பல அர்த்தங்களையே பின்பற்றுவார்கள். ஆயினும் (முதஸாபிஹாத்) இதன் உண்மைக் கருத்தை அல்லாஹ்வை யன்றி எவரும் அறியார். கல்வியில் நிலை பெற்றவர்களோ இதனையும் நாங்கள் விசுவாசித்தோம், யாவும் எங்கள் இறைவனிடத்தில் இருந்து வந்தவைதாம் என்று கூறுவார்கள். அறிவுடையோர்களையன்றி மற்றொருவரும் நல்லுபதேசமடைய மாட்டார்கள்.*

இந்த ஆயத்தின்படி வேதத்தின் அடிப்படை கலிமாவே யென்றும், அது முஹ்கமு என்றும், ஒரே கருத்துடையது என்றும் மாற்றப் புரட்ட வலிந்துரைகொள்ள முடியாதென்றும் எமது முதல் நூலில் சரியான தர்க்கரீதியான ஆதாரங்களோடு நிரூபித்துக் காட்டியுள்ளேன். கலிமாவை முதஸாபிஹாத்தாய் பல கருத்துடை யதாக யார்? ஏன்? மாற்றினார்கள் என்றும் மிகமிகத் தெளிவாய் யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் விளக்கியுள்ளேன். இந்த நூல் சுமார் பத்து வருடங்களின் முன் எழுதப்பட்டது. உலமாக்களில் மிகப்பலர் அந்த உண்மையைப் பூரணமாய் ஏற்றுக்கொணடு எழுத்துமூலமும் நேரிலும் நல்லாசி வழங்கிக்கொண்டு இருக்கி றார்கள்.





இந்த எம்.ஏ.ஏ.அப்துல் மஜீத் என்பவர் கலிமாவைப் பற்றிய எள்ளளவு அறிவும் இல்லாமல் இருக்கும் போதும் தம்மை "*கலீபத்துல் காதிரிய்யில் ஜிஸ்த்திய்யி*" என்ற ஓர்லேபலைப் போட்டுக் கொண்டு வஹ்துல்வுஜுத் உண்மை விளக்கம் என்ற நூலை எழுத முற்பட்டு உளறி இருக்கிறாரே! இவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். கலிமாவின் கருத்தைப் புரிந்து கொள்ளாத ஓர் கபோதி வஹ்தத்துல் வுஜுத் என்ற வாக்கியத்தைக் கேடயமாய்க் கொண்டு தம்மை அறிஞனாய், ஆண்மகனாய்க் காட்டிக்கொள்ள முனைகிறாரே! இவர் எந்த ஷைத்தானை அவ்லியாவாக எடுத்துக்கொண்டு இந்தத் திருவிளையாடலில் குதித்திருக்கிறார் என்பதை இப்போது நாம் அறிந்து கொண்டோமல்லவா? ஒவ்வோர் ஸமானிலும் ஆண்மக்கள் இருக்கிறார்களென்று இந்த நூலாசிரியர் கூறியது உண்மை. அந்த ஆண்மக்கள்தான் இவ்விதமான, கலிமாவை அறிந்து கொள்ளாத கபோதிகளின் வேஷங்களைக் களைந்துவிட்டு இவர்களின் நிஜரூபங்களை மக்களுக்கு விளக்கிக் காட்டுகிறார்கள். வாய்வேதாந்தம், வரட்டுஞானம் வேறு; வஹ்தத்துல் வுஜுத் வேறு. கபோதிகளான கால்நடைகளுக்கு வஹ்தத்துல் வுஜுத் என்று கூறத்தெரியலாம். அதில் நுழைந்து வெற்றிபெற முடியாது. நக்கியுண்ணும் நாய்க்கூட்டம் எப்படி ஊளையிட்டாலும் மலைகள் அசைவதேயில்லை.

எம்முடைய "*பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி*" என்ற நூலில் அல்லாஹ்வைப் பார்க்க முடியாதென்றும் றப்பின் சிற்சில தோற்றங்களைப் பார்க்க முடியும் என்றும் நான் கூறியிருப்பதன் உண்மையை உணர்ந்து கொள்ளாத அந்த லேபல் கலீபாவுக்கு; அல்லாஹ் மர்த்தபாக்களால் உயர்ந்தவன் என்ற வேதவசனத்தின் அந்தரங்கம் எப்படித் தெரியவரும்? "*இஸ்த்தியாரா*" என்ற சொல்லின் உண்மையைப் புரிந்துகொள்ளாத லேபல் பேர்வழி; அல்லாஹ் வெளியானான் என்றாலும் றப்பு வெளியானான் என்றாலும் ஒரே விஷயம்தான் என்று நான் கூறியுள்ளதை எப்படிப் புரிந்து கொள்வார்!

எமது முதல் நூலான "*ஈமானின் உண்மையை நீ அறிவாயா?*" என்ற நூலில் கலிமா முஹ்கமுவைச் சேர்ந்ததென்றும் அது வலித்துரைகொள்ள, மாற்ற, புரட்ட, திரிபுபடுத்த முடியாத ஒரே கருத்துடையதென்றும் ஆணித்தரமான ஆதாரங்களோடு உறுதிப் படுத்தியிருக்க; அதை அறிந்து கொள்ளாத, புரிந்து கொள்ளாத ஒருவர் முன்பின் யோசிக்காமல் கண்ணை மூடிக்கொண்டெழுதித் தன் அறிவின் தகைமையைக் காட்டிக் கொள்கிறார் என்றால் இதில் நமக்கொன்றும் நஷ்டமோ கஷ்டமோ கிடையாது. எமது நூலில் 26ஆம் பக்கத்தில் மார்க்க விஷயத்தில்

பெரும்பாலார் யானையைப் பார்த்த குருடர்கள் போல் இருக்கிறார்கள் என்று சுமார் பத்து வருடங்களின் முன்பே நான் கூறியிருந்தும், அதை உணரமுடியாத நுனிப்புல் மேயும் லேபல் பேர்வழிகள் வான் கோழிகளாய் மாறுவது ஆச்சரியமல்ல. வாழை மரத்தில் சொண்டை மாட்டிக் கொண்ட மரங்கொத்திகளாய், ஆப்புப்பிடுங்கிய மந்திகளாய் மாற்றமடைவதும் புதிய ஓர் விஷயமல்ல.

எமது நூலில் நபிமாருக்கும் மடமையுண்டு என்று நான் கூறியிருந்தேன். ஆதாரங்களும் காட்டியிருந்தேன். குர்ஆன் ஹதீஸு களை ஏற்றுக்கொள்ளாத இந்த *"வஹ்தத்துல்வுஜூத் உண்மை விளக்கம்"* நூலை எழுதிய லேபல் மனிதர் இப்படிக்கூறினால் ஈமான் போய்விடும் என்று கூறுகிறார். இவர் கூறுகிற ஈமான் எது? வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று நம்புவதே ஈமான் என்று இவர் நம்பியுள்ளார் போலும். இந்த ஈமான் நிச்சயமாக நீக்கப்பட வேண்டிய ஒன்றுதான். றசூல்மார்கள் மறதி மடமையில்லாதவர்கள் என்று ஏற்றுக் கொள்வதுதான் றசூல் (ஸல்) அவர்களை உயிரிலும் மேலாய் மதிப்பதற்கு ஆதாரம் என்று இவர் நம்புகிறாரா? றசூல் (ஸல்) அவர்கள் தாயின் ஜனனேந்திரிய உறுப்பினால் பிறக்காமல் அரைக்கும் தொப்புளுவுக்குமிடையில் இருந்தே வெளியானார்கள் என்று வருணித்த இமாம்களும் நம்மிடையே இருந்திருக்கிறார்கள். இவ்வித மக்கள் றசூலைக் கண்ணியப்படுத்தும் நோக்கமாகத்தான் இப்படியெல்லாம் எழுதினார்களென்றால் இவர்களெல்லாம் மூ.'.மின்கள் என்பதற்கு இது ஆதாரமாய் அமையுமா? றசூலைக் கண்ணியக்குறைவாகக் கணித்தார்கள் என்பதற்கே இவை ஆதாரமாய் அமையுமா? றசூலைக் கண்ணியக் குறைவாகக் கணித்தார்கள் என்பதற்கே இவை ஆதாரமாக அமையும். இதை விபரிக்க நீண்ட நேரம் தேவையாகும். ஆயினும் அறிவுத்தாகமுடைய மக்களுக்குச் சிறிது கூறவிரும்புகிறேன். எமது முதல் நூற்களில் இவ்விபரம் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது.

(இன்ஸானியத்) மனிதத்தன்மை வேறு; நுபுவ்வத், றிஸாலத், ஸிர்ருடைய அப்து வேறு. மனிதத் தன்மை உடலையும் வெளிமனத் தையும் பொருத்த ஓர் விஷயம். இதில் ஷைத்தானிய்யா ஹைவா னிய்யா நப்ஸானிய்யா மூன்றும் இடம்பெறும். இந்த மனுஷனுடைய இயற்றன்மை தவறு செய்வதே. இந்தச் சிருட்டியின் நோக்குச் சுயநிர்ணய உரிமையுடன் தவறு செய்வதும் அதில் இன்ப துன்பங் களை அனுபவிப்பதும்தான். குர்ஆனின் பல ஆயத்துகளில் ஒன்றை மட்டும் நாம் நோக்குவோம்.





*குர்ஆன்: 33:72*
*நிச்சயமாகப் பொறுப்பை (அமானத்தை)ச் சுமந்து கொள்வீர்களா? என்று நாம் வானங்கள் பூமி மலைகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை அதனைப்பற்றிப் பயந்து அதனைச் சுமந்து கொள்ளாது விலகிவிட்டன. அத்தகையதைத்தான் மனிதன் சுமந்து கொண்டான். நிச்சயமாக அவன் அறியாமையால் தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்டான்.*

இவ்வாயத்தில் மிக அபூர்வ இரகஸியங்களுண்டு. மனிதன் அமானத்தை அடையும் முன்பே அறியாமையிலிருந்தான் என்பது மட்டுமே இங்கு நமக்குப் போதுமானது.

*ஹதீஸ்*
*நீங்கள் பாபம் செய்யாவிட்டால் அல்லாஹ் உங்களை அழித்துவிட்டுப் பாபம் செய்யக்கூடிய வேறு ஓர் படைப்பைக் கொண்டு வருவான். பின்னர் அவன் அவர்களை மன்னித்து விடுவான். என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அபூஐயூப்(றலி)*
*ஆதாரம்: முஸ்லீம், திர்மிதி.*

இவை போன்ற இன்னும் அனேக ஆதாரங்கள் தரமுடியும். ஆயினும் இவ் விஷயத்தை வெளிப்படுத்துவதைவிட மறைப்பதில் பாமரமக்களுக்கு நன்மையிருப்பதால் அவசியமானதை மட்டும் தருகிறேன். சிருட்டியின் இயக்கம் தடையின்றி நடைபெற; மனிதனிடத்தில் தவறிருக்க வேண்டியது அவசியமாகிறது. இல்லையானால் இறைவனுடைய ஹப்பார், கஹ்ஹார், றஹ்மான் போன்ற மற்றும் திருநாமங்களும் செயலிழந்தவையாய் *"அமா"* மட்டுமே தரிபட்டிருக்க நேரிடும். ஆகவே இன்ஸான் எவ்விதமான பட்டம் பதவிகளுடன் இருப்பினும் தவறு நிகழவே செய்யும். இல்லையானால் சிருட்டியாய் இருக்கமுடியாது. றப்புக்கு அப்து நேர்முரணானது. றப்பு அறிஞனானால் அப்து மடையன்தான். றப்பு தவறில்லாதவனென்றால் அப்து தவறுடையவனேதான். ஆகவே சுயநிர்ணய உரிமையுள்ள அப்து தவறு செய்யும் என்பதில் எவரும் ஆட்சேபிக்க முடியாது. றசூல் (ஸல்) அவர்களும் மற்றும் றசூல்கள் நபிமார்களும் நம் போன்ற சுயநிர்ணய உரிமையுடைய மனிதர்களாய் இருந்தது நிச்சயமான உண்மை. ஆகையால்தான் அவர்கள் உலகின் சகல இன்பதுன்பங்களையும் அனுபவித்தார்கள். இது உடலையும் வெளிமனதையும் பொறுத்த மனுஷ இயல்புதான்.

ரிஸாலத், நுபுத்துவம் என்பவை இந்த உடலோடும் வெளிமனத்தோடும் தொடர்புடையதல்ல. நுபுத்துவம் என்பது உள்மனத்தோடும் அகிலோடும் றூஹுவோடும் தொடர்புடையது. இது தவறு செய்யாது, மறக்காது. இப்படியிருந்தும் அது வெளிப்படும் இடமான சுயநிர்ணய உரிமையுள்ள மனிதரையே நாம் நபி என்று கூறுகிறோம். அதாவது தவறு, மறதியுடைய சாதாரண மனிதர் நுபுத்துவம் என்ற (பரிவட்டத்தை) செட்டிபிக்கட்டைத் தாங்கிக் கொண்டிருக்கும் போதும் நாம் அவரை நபி என்கிறோம். இதில் ஓர் பெரிய மயக்கம் இருக்கிறது. தவறு செய்யும் சாதாரண மனிதரையே நாம் நபி என்று கூறுகிறோம். இது எமது அறியாமையே. நுபுத்துவம் அகிலோடுள்ளது என்பதையும், தவறு; மறதி உடலோடுள்ளது என்பதையும் மறந்து விடுகிறோம். உதாரணம் றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட வார்த்தைகளில் மார்க்க விஷயமானவற்றை ஹதீஸு என்றும் மனைவிமாருடன் உரையாடிய சரச வார்த்தைகளை ஹதீஸல்ல என்றும் நாம் கூறுவது ஏன்? அவர்கள் நபிதானே! அவர்கள் மனைவிமாருடன் பேசியவார்த்தைகளை நாம் ஏன் ஹதீஸாக ஏற்கக்கூடாது? இதில் நாம் சிக்கிக்கொண்ட மயக்கம்தான் என்ன? நபிமார்கள் தவறு செய்யக்கூடியவர்கள் என்று எம்போன்றோர் கூறும் வார்த்தையின் அர்த்தம்தான் என்ன? நபிமாரின் மடமை, தவறு, மறதிகளை இறைவன் குர்ஆனில் கூறுவதன் இரகஸியம்தான் என்ன?

தவறு செய்யக்கூடிய குறைவுடைய உடலுக்கு நபி என்ற சொல்லை *"இஸ்திஆரா"*வாக இரவலாக நாம் பாவிப்பதுதான் எமது மயக்கத்துக்குக் காரணம். மனித உயிருக்கு நாமம் கிடையாது. ஆயினும் மனிதஉயிரைக்கொண்டுள்ள உடலின் பெயரைக் கொண்டே அந்த மனித உயிரையும் நாம் அழைக்கிறோம். இதைப்போலத்தான் நபிமார்கள் தவறுடையவர்கள் என்ற பரிபாஷையும். நுபுவ்வத், ரிஸாலத் என்பவை சுய நிர்ணய உரிமையற்ற பூரண அப்துவில் வெளியாவதால் நுபுத்துவத்திலோ, ரிஸாலத்திலோ எவ்வித தவறும் அணுவேனும் இருக்கவே இருக்காது. நபிமார் றசூல்மார்களின் துன்யாவில் நிகழ்ந்த சகல நிகழ்ச்சிகளும் எம்போன்ற மனித அறிவோடுள்ளவை தான். ஆனால் அவர்களால் விளக்கப்பட்ட மார்க்க விளக்கங்கள் அவர்களுடைய சொந்த அறிவோடுள்ளதல்ல. குர்ஆன் இவ்வகையிலுள்ளது தான். இவற்றில் கூட்டல் குறைத்தலுக்கிடமேயில்லை.





ரிஸாலத் என்ற தகைமைக்கு(அறிவுக்கு) பாத்திரமானவர் எவரோ அவர் றசூல் என்ற பெயரைப் பெறுகிறார். இந்த றசூல் துன்யா விஷயத்தில் எம்போன்ற தவறுடைய மனிதராயும் மார்க்க விஷயத்தில் தவறில்லாத, எம்போலல்லாத வேறுபட்டவராயும் இருக்கிறார். இதில் ஆச்சரியப்படவோ மூடி மறைத்துக் குழப்பியடிக்கவோ வேண்டியதில்லை.

*ஹதீஸ்*

*றசூல்(ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது மதீனாவாசிகள் பேரீச்சை மரங்களுக்கு ஒட்டுவைத்து ஆண்பாளைகளைப் பெண் பாளைகளுடன் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது றசூல் (ஸல்) அவர்கள் நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் வழமையாய்ச் செய்துவந்த ஒன்றைச் செய்கிறோம் என்று கூறினார்கள். அதற்கு றசூல் (ஸல்) அவர்கள் நீங்கள் அவ்விதம் செய்யவேண்டாம் என்று கூறினார்கள். எனவே அவர்கள் அவ்விதம் செய்வதை விட்டு விட்டார்கள். அதன் காரணமாய் மரங்கள் காய்க்கவில்லை. இச்செய்தி றசூல் (ஸல்) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது உங்களின் மார்க்கம்பற்றி ஒன்றை உங்களுக்கு நான் கட்டளையிடுவேனானால் அதனை நீங்கள் கடைப்பிடித்தொழுகுங்கள். நான் உங்களுக்கு என் ஆலோசனைப்படி கூறினால் நிச்சயமாக நானும் மனிதன் தானே (உங்கள் நோக்கப்படி செயலாற்றுங்கள்) என்று கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: இப்னுகதீஜ்(றலி)*
*ஆதாரம்: முஸ்லிம்*

நானும் மனிதன்தானே என்பதில் மனிதன் தவறு செய்யக் கூடியவன் என்பது புலனாகவில்லையா? றசூலாய் இருந்தபோது தானே பாளைகட்ட வேண்டாம் என்று கூறினார்கள். அவ்வேளையில் வெளியான அவர்களுடைய அறிவு; நம்போன்ற மனித அறிவைப் போன்ற தவறுடையதுதான். ஆனால் இந்த அறிவு ரிஸாலத்தைக் கொண்டதல்ல என்பது நமக்குப் புரிகிறதல்லவா? ஆகவே றசூலுக்கும் தவறுண்டு என்றால் ரிஸாலத்தில் தவறுண்டு என்பது பொருளல்ல. ரிஸாலத்தைக் கொண்டிருந்த, றசூல் என்ற பெயரை இரவலாய் *"இஸ்த்தி ஆராவாகக்"* கொண்டிருந்த, மனிதருக்கும் தவறுண்டு என்பதே அதன் உண்மையாகும். இதை விளங்கித் தெளிவு பெறாத லேபல் பேர்வழிகளின் குற்றமே. அன்றி எமது குற்றமல்ல. ஆகவே பகுத்தறிவுக்கு இடம்கொடுக்க வேண்டும். பதர்களை வீசிவிட்டு நெல்மணிகளைக் களஞ்சியத்தில் சேர்ப்பதே அறிவுடைமையாகும்.

ஆத்மீகஞானம் அந்தரத்தீவில் இருந்தும் அகமதாபாத்தி லிருந்தும் இறக்குமதி செய்யப்படுவதல்ல. பரிசுத்தமான உள்ளத்தில் இருந்து இறையுதவியால் உதயமாவதே தெய்வீகஞானம். இதற்குக் கால்நடைகள் பயன்படா. தெளிந்த அறிவுடைய இன்ஸானுக்குரியதே வஹ்தத்துல்வுஜுூத் கொள்கையென்பது. இதைக் கேடயமாய்க் கொண்டுள்ள விஷமிகளை இக்கொள்கை மேலும் மேலும் படுகுழியிலேயே வீழ்த்தும் என்பது உலகசரித்திரம் உணர்த்தும் உண்மை. எமது வாழ்விலும் இதை நான் கண்டுகொண்டே இருக்கிறேன். இக்கொள்கை நூர்உடையது மட்டுமல்ல: கஹ்ஹாரியத்துமுடையதே. இறந்த பூமிக்கு உயிரளிக்கும் ஆற்றல் இறைவனிடம்தான் உண்டு.

குர்ஆன் ஹதீஸுகள் ஒன்றுக்கொன்று முரண்படும்போது அவற்றின் சரியான உசூலை, முறையாக விளங்கியறிந்து தெளிவு பட்ட பிறகுதான் நாம் முடிவுக்கு வரவேண்டுமேயன்றி மனம் போன போக்கில் விதண்டாவாதம் செய்வதில் அர்த்தமே இல்லை. பெரும்பாலார் மார்க்கத்தைப்பற்றிக் கேள்விப்பட்டுள்ள வீண் நம்பிக்கைகளைக் கொண்டு செயல்படுகிறார்கள் என்று இறைவன் கூறுவது நூறு வீதமும் உண்மைதான். வீண் சந்தேகம் ஒரு கரைக்கும் இழுத்துச் செல்லாது என்று குர்ஆன் கூறுகிறது. அப்படியானால் நியாயமான சந்தேகம் மட்டும்தான் ஓர் கரைக்கு இழுத்துச்செல்லும் என்பதை நாம் உணரவேண்டும். இரவல் மூளைகளுடன் எழுதுவதையும் பேசுவதையும் நிறுத்திக்கொண்டு உண்மையைக் கண்டறிவதற்காக நாம் அயராது உழைக்க வேண்டும். இந்த அயராமுயற்சி நிச்சயமாக இறையன்பை ஈட்டித்தரலாம். லேபல்கள் வயிறுவளர்க்க உதவலாம். உண்மையை உணர அறிவுத்தாகம் அவசியம்.

ஓர் விஷயத்தில் ஒரு ஆயத்தையும் ஓர் ஹதீஸையும் ஆதாரமாய்க் கொண்டு தீர்ப்பிட முடியாது. நாம் எடுத்துக்கொண்ட விஷயம் சார்பான எல்லா ஆயத்துகளையும் எல்லா ஹதீஸ் களையும் ஒன்று சேர்த்து உசூலைக் கொண்டாராய்ந்தால் எந்த ஆயத்துகளும் எந்த ஹதீஸ்களும் ஒன்றுக்கொன்று முரணல்ல என்பதையும் அவற்றால் உணர்த்தப்படும் அளவிட முடியாத ஞான நுட்பங்களையும் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தின் சரியான உண்மையையும் எம்மால் நிச்சயமாகக் கண்டறிய முடியும். ஒவ்வோர் வகையான அறிவுகள், கலைகளுக்கும் ஒவ்வோர் வகையான அணுகுமுறையுண்டு என்பதை நாம் மறக்கக்கூடாது. யாரோ ஒருவரின் கையைத் தொட்டுக்கொண்டால் நாம் ஆண்மகனாய் அறிவில் மகானாய் ஆகிவிட்டோம் என்று





நினைப்பது தாரினால் (கீலினால்) சட்டையணிவதாகவே முடியும். இந்தச் சட்டைதான் நரகவாதிகளின் சட்டை. இதன் வெளிப்படைதான் ரியா என்ற மேலெண்ணம். வரட்டுக் கௌரவம் என்பது.

தௌஹீதை எவர் வெளிப்படுத்தினாலும் அவர்கள் வெளிப் படுத்தும் தௌஹீது இஸ்லாத்திலுள்ளதா? இல்லையா? என்பதைக் கண்டறிய ஓர்வழி இருக்கிறது. அல்மதலுல் காமீல் என்ற கிதாபின் ஆசிரியர் தௌஹீதுக்கு நாலு மழாஹிர்கள் உண்டு என்று கூறுகிறார். இவரின் கூற்றை உலக மேதைகளான உலமாக்களும் ஆரிபுகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மழாஹிர்களின் விபரம் என்னவென்றால்,

1ஆவது: உண்டாய் (உண்மையாய்) இருப்பது இறைவனுக்கு மட்டும் வாஜிபாகும் என்பது.

2ஆவது: வானம் பூமி முதலியவற்றைப் படைப்பது (மழ்ஹறாக்கிக் கொள்வது) இறைவனின் விசேட தன்மையாகும், இதில் யாருக்குமே கூட்டில்லை.

3ஆவது: அவனுடைய தாத்து; எண்ணிக்கையில் கட்டுப்படுத்த முடியாத ஒன்றேயாகும். (விளங்குவதற்காகவே ஒன்று என்ற சொல் பாவிக்கப்படுகிறது.)

4ஆவது: இந்த லாஹிறான பௌதீக உலகை நிர்வகிப்பதிலும் பாத்தினான ஆத்மீக உலகமென்னும் சூட்சுமஉலகை நிர்வகிப் பதிலும் அவற்றின் செயல்பாடுகளிலும் அவன் தனித்தவன். (இதில் யாரும் கூட்டுக்கிடையாது.)

கலிமாவைப் புரட்டிக்கொண்ட மக்கள் கூறும் தௌஹீது இந்த மழாஹிர் நான்கிலும் கட்டுண்ணாத வெறும் பித்தலாட்டமாகவே இருக்கும். இந்த நாலு மழாஹிரும் சரியாய்ப் பூரணமாய் ஏற்றுக் கொண்ட சுத்தசத்தியமான தௌஹீதைத்தான்; குர்ஆன் ஹதீஷு களோடு நான் எனது இரு நூற்களிலும் விளக்கியுள்ளேன் என்பதை நண்பர் மஜீதைப்போன்றோர் உணர்ந்து கொள்ளாமை எமது தவறா? ஒவ்வோர் கலைக்கும் ஒவ்வோர் அணுகுமுறையுண்டு என்று கூறினே னல்லவா? பாம்பு கடித்தவனைச் சுமந்து செல்வதைக் கண்ட நாக்குளிப்பாம்பு பாம்பென்றால் கடிக்கமாட்டோமா? என்று கூறுவது போல் இருக்கிறது நண்பர் மஜீதின் சொல். கிணற்றாழம் பார்ப்பதற்குக் குரங்கின்வால் சரிவராது. தௌஹீதை நிலைப்படுத்த, தௌஹீதில் நிலைப்பட, அறிவு அவசியமேயன்றி லேபல் பிரயோசனம் தராது.

எதைப் பேசுகிறோம் எதை எழுதுகிறோம் என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத மௌட்டீகத்தில் ஊறிய பின்பற்றல் வாதிகளை ஷெய்க்குகளாக ஏற்றுக் கொண்ட மக்களை நோக்கி இறைவன் கூறுகிறான்.

*குர்ஆன்: 7:30*
*சிலரை அவன் நேரான பாதையில் செலுத்தியிருக்க மற்றோர் மீது வழிகேடே விதிக்கப்பட்டதன் காரணம், அவர்கள் அல்லாஹ்வையன்றி ஷைத்தான்களையே தங்கள் அவ்லியாக்களாக எடுத்துக் கொண்டதுடன் தாங்கள் நிச்சயமாக நேரான பாதையில் இருப்பதாகவும் நம்பிக்கொண்டதுதான்.*

சகோதரர் எம்.ஏ.ஏ அப்துல் மஜீத் அவர்களும், இந்த ஆயத்தில் கூறப்பட்டபடி ஷைத்தானையே ஷெய்காகக் கொண்டிருக்கிறார் என்பதும் தானும் நேர்பாதையில் இருப்பதாக நம்பிக்கொண்டிருக்கிறார் என்பதும் தென்படுகிறது. ஏனென்றால் இவருடைய ஷெய்க் அவர்களே அவரின் ஆசியுரையில் கலிமாவுக்கு லாஹிர் பாத்தினான கருத்துகள் உண்டு. (பல கருத்துகள் உண்டு) என்று கூறுகிறார். இவருக்கு முஹ்கமு என்றால் என்ன? என்பதும் கலிமாவின் பொருள் என்ன என்பதும் தெரியவே தெரியாது. இவரை ஷெய்காகப் பெற்றுக் கொண்ட நண்பர் மஜீத் எமது *"ஈமானின் உண்மையை நீ அறிவாயா?"* என்ற நூலை நுனிப்புல் மேய்ந்து விட்டு இமாம்களை நான் தாக்குவதாகக் கூறுகிறார். எமது நூலின் 76ஆம் 189ஆம் 190ஆம் 191ஆம் பக்கங்களை நண்பர் மஜீத் வாசித்திருந்தால் அல்லது விளங்கியிருந்தால் அவருடைய அறிவைப்பற்றி அவரே நாணமடைவார். மேலும் அந்த நூலின் 162ஆம் பக்கத்திலுள்ள ஒருசில உலமாக்களின் புரட்டல் என்ற தலைப்பிலுள்ள விஷயத்தை அவர் வாசித்து விளங்கியிருந்தால் அருடைய அறிவீனத்தை நூல் வடிவில் வெளியிட்டிருக்க மாட்டார். வஹ்தத்துல் வுஜுத் என்ற கொள்கையை நாவினாலும் கூறியிருக்கமாட்டார்.

நானும் நண்பர் மஜீத்தைப் போல சில்சிலா உள்ள பல ஷைத்தான்களைச் ஷெய்குகளாக ஏற்றுக் கொண்டு பல வருடங்களைப் பாழ்படுத்திவிட்டேன் என்பதைக் கூறி வைக்க விரும்புகிறேன். இன்றைய உலகில் பெரும்பாலான ஷெய்க்குகள் வெறும் மௌட்டிகத்திலூறிய பின்பற்றல்வாதிகளே என்பதையும் அவர்கள் பிழைக்கும் நோக்கமுடையவர்களே என்பதையும் நண்பர் உணரவேண்டும். ஷெய்க் ஒருவர் இருந்தால் இறைவழி நடைமுறைக்கு மிகமிக நல்லதுதான். ஆனால் கட்டாயக் கடமையல்ல. எமது ஷேக் வழிகாட்டி குர்ஆனும், ஹதீஸும், இஜ்மாஉ, கியாஸும்,





பகுத்தறிவும்தான். வேஷத்துக்கு அல்லாஹ் வழிகாட்டுவதில்லை. குர்ஆன் ஹதீஸுகளைப் புரிந்து கொள்ளாத ஷைத்தான்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஸில்ஸிலாக்களை நான் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டேன். ஏன் தெரியுமா? ஸில்ஸிலா தற்கால உலகில் பிழைக்கும் வழிகளில் ஒன்றாகவே இருக்கிறது. ஷெய்க்கில்லாதவனுக்கு ஷெத்தான் ஷெய்க்காக அமையலாம் என்பது உண்மைதான். ஆகவே உண்மையான ஷெய்கைக் கண்டறிவது நம் கடமையாகும். முடியாவிட்டால். 'ஹாதி' என்ற இறைநாமத்தை உளப்பரிசுத்தமாயிருந்து திக்று செய்தால் ஆத்மீகார்த்த முறையில் ஓர் ஷெய்கை இறைவன் அறியத்தருவான் என்பதை நண்பர் மஜீதும் மற்ற மனிதர்களும் அறிந்துகொள்ள வேண்டும். நல்லடியார்கள் வாயிலாகவே இறைவனின் ஹிதாயத் வெளியாகிறது என்பதை நாம் உணர வேண்டும். இவ்விதமாகத்தான் எனக்கும் இறைவன் வழிகாட்டினான். இவ்விஷயத்தை நண்பர் மஜீத் அறிய வேண்டுமானால் எமது முதல் நூலின் 58, 59, 60ஆம் பக்கங்களை வாசித்தறியவேண்டும்.

*குர்ஆன்: 29:66*
*யார் நம்மில் பாடுபட்டார்களோ அவர்களுக்கு நாம் நம்முடைய வழிகளைக் காட்டுவோம்.*

தரீக்காக்களின் ஸ்தாபகர்கள் எல்லோரும் நல்லடியார்கள் தான். ஆனால் காலக்கிரமத்தில் அந்தத் தரீக்காக்களின் கலீபாக்களில் மிகப்பெரும்பாலார் தங்கள் வயிறு வளர்ப்புக்காக அந்தத் தரீக்காக்களையும் அதன் ஸ்தாபகர்களையும் லேபில்களாகக் கொண்டிருக்கிறார்கள். உண்மை இதுதான். விரும்புவோர் ஆராய்ந்து தெளிவு பெறுங்கள். ஆத்மீகத் துறையில் வெற்றி பெற்ற குத்துபுல் அக்தாபுகள், ஷேகுமுறப்பிகளான மேதைகளில் எவரும் எங்கேயும் கலிமாவுக்கு லாஹிர், பாதின் உண்டு என்று கூறியதோ எழுதியதோ கிடையாது. கலிமா புரட்டப்பட்ட பிறகு வந்த பின்பற்றல்வாதிகள்தான் கலிமாவுக்குப் பதினாறு பொருள் வரையிலும் கூறியிருக்கிறார்கள். உண்மை தெரியாத மக்கள் இவர்களையும் இமாம்கள் என்றே நம்பிவிட்டார்கள். இந்த உண்மையை எவரும் மறுக்க முடியாதபடி இறை உதவியால் சரியான ஆதாரங்களோடு எமது முதல் நூலில் தெளிவாய் விளக்கியிருக்கிறேன். நுனிப்புல் மேயும் வாசகர்கள் இதை உணரமாட்டார்கள் என்பதற்காக அதே நூலில் திரும்பத் திரும்ப வாசித்து விளங்கும்படி பலமுறை கூறியுள்ளேன். முதலிலிருந்து முடிவு வரையும் வாசிக்காமல் முடிவுக்கு வரவேண்டாம் என்றும் கூறியுள்ளேன். ஆகவே அந்த நூலை வாசிக்காமல் அல்லது வாசித்தும் விளங்கிக் கொள்ளாமல் திண்டாடுவதற்கு

வாழைமரத்தில் சொண்டை ஏற்றிக்கொண்டோ அல்லது ஆப்பைப் பிடுங்கிக் கொண்டோ அல்லல்படுவதற்கு நான் பொறுப்பாளியேயல்ல.

பொய்யின் தலையில் உண்மையைத் தூக்கி வீசுகிறேன். அது பொய்யின் தலையைச் சுக்கு நூறாக்கிவிடுவதாக இறைவன் கூறியதை அறிவாளர்கள் அலசி ஆராயவேண்டியது அவசியம். கலிமாவின் சரியான உண்மை விளக்கமான தௌஹீதைத்தான் வஹ்தத்துல் வுஜூதுக்கொள்கை என்பது, கலிமாவைப்பற்றி எள்ளளவும் அறிவில்லாத ஒருவர் வஹ்தத்துல் வுஜூதுக் கொள்கையை விளக்க முற்படுவது 21ஆம் நூற்றாண்டின் அதிசயங்களில் ஒன்றுதான். இஸ்லாத்தின் உயிரைக் குழிதோண்டிப் புதைத்தவர்கள் இவ்வகையினர்தான். இவ்வித மருண்ட கூட்டம் கபுறுஸ்த்தானங்களை வணக்கத்தலங்களாக ஆக்கிக்கொண்டும் தர்க்கரீதியான எவ்வித ஆதாரமுமில்லாத படாடோபச் செயல்களில் ஈடுபாடு கொண்டும் பாமரமக்களைக் காரிருளில் தள்ளிக்கொண்டும் இருந்தமைதான் வஹ்ஹாபிஸம் வளர்வதற்கு மூலகாரணமாய் இருந்திருக்கிறது. இது தரீக்காக்களை உருவாக்கிய மேதைகளை மக்கள் தவறாக எடைபோடுவதற்கும் காரணமாய் விட்டது. இன்று உலக மக்களிடையே தௌஹீதை வஹ்தத்துல் வுஜூதை உள்ளாலுள்ளபடி குர்ஆன் ஹதீஸ்களைக் கொண்டும் பகுத்தறிவைக் கொண்டும் விளக்கமுடியாதிருப்பதற்கு ஸூபிகள் வேஷத்தில் காட்சியளிக்கும் எத்துக்கூட்டமும், தப்லீக் என்ற பெயரில் இயங்கும் எத்துக்கூட்டமும் வேறுபல எத்துக் கூட்டங்களும் காரணிகளாய் அமைந்திருக்கின்றன. இவ்விதமான மருண்டமதியுடைய எத்துக்கூட்டங்களை விட்டும் இறைவன் நம்மைக் காப்பாற்றுவானாக.

*குர்ஆன்: 10:39*
*என்கினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் தாவீல் (ஆதாரம், விளக்கம்) அவர்களுக்குக் கிடைக்காததுமான சங்கதியைப் பொய்யென்றும் அவர்கள் கூறுவார்கள்.*

*குர்ஆன்: 17:36*
*நீர் அறியாத யாதோர் விஷயத்தையும் நீர் பின் தொடராதீர் ஏனென்றால் நிச்சயமாக செவி, கண், இருதயம் ஆகிய இவை ஒவ்வொன்றிடமும் கேள்வி கேட்கப்படும்.*

*ஹதீஸ்*
*அறிவு ஈமான்தாரிகளின் தவறிப்போன ஓர் சொத்தாகும். எனவே அவர் அதனை எங்கே கண்டாலும் அது அவருக்கே உரிமையுள்ளதாகும்.*





இவற்றை ஆராய்ந்து பாருங்கள். உண்மையைக் கண்டறிவதற்கு ஸில்ஸிலாவோ சூபிகளின் வேஷமோ, கலீபா, ஷெய்க் பட்டங்களோ கல்விக் கூடங்களின் பட்டங்களோ பயன்படா. அயராத (ஜிஹாது) அறிவுப்போராட்டம்தான் உதவி செய்யும். றசூல் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபாப் பெருமக்கள் வேறு யாருக்காவது ஸில்ஸிலா கொடுத்ததாக, அல்லது ஸஹாபாப் பெருமக்கள் வேறு யாருக்காவது ஸில்ஸிலாக் கொடுத்ததாக நிரூபிக்கமுடியுமா? பொய்பரவி நிரப்பமான பிறகுதான் பிழைக்கும் வழிகளில் ஒன்றாகச் சிலர் ஸில்ஸிலாவை உண்டாக்கியிருக்கிறார்கள். ஸஹாபாக்களும் பெண்பாலாரும் கைமூலமும் துணிமூலமும் றசூல் (ஸல்) அவர்களிடம் பைஅத்; இஜாஸா, பெற்றிருக்கிறார்கள். றசூலால் ஸஹாபாக்களுக்கு அன்பளிப்புச் செய்த சிற்சில பொருட்களை ஸில்ஸிலாவாக ஏற்று மருட்சியடைவது தவறு. றசூல்(ஸல்) அவர்களோ ஸஹாபாக்களோ யாருக்கும் எப்போதும் ஸில்ஸிலாக் கொடுக்கவேயில்லை.

நபிமார்கள் தவறு செய்யமாட்டார்களென்று ஒரு சாரார் கூறுவதன் காரணமென்ன? என்பதை இன்னும் சிறிது விளக்கிவைக்க விரும்புகிறேன். இந்த மருட்சி நீக்கப்படவேண்டியது.

ஈஸா(அலை) அவர்களின்பின் சுமார் 210 வருடங்களின்பின் றசூல்(ஸல்) அவர்களுக்கு முன் கிறிஸ்தவர்கள்தான் ஸில்ஸிலாவை உருவாக்கியிருக்கிறார்கள்.

*குர்ஆன்: 22:52*
*இதற்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வோர் நபியுடையவும் றசூலுடையவும் மனத்தில் ஷைத்தான் குழப்பத்தை உண்டு பண்ண முயற்சிக்காதிருக்கவில்லை. ஷைத்தான் உண்டு பண்ணிய தப்பெண்ணத்தை அல்லாஹ் நீக்கியபின் தன்னுடைய வசனங்களை அல்லாஹ் இஸ்திரப்படுத்தி விடுகிறான். அல்லாஹ் அறிந்தோனும் ஞானமுடையோனுமாய் இருக்கிறான்.*

இவ்வாயத்தில் அனேக ஞான இரகஸியங்கள் இருக்கின்றன. அவசியமானவற்றை மட்டும் நோக்குவோம். இவ்வாயத்தில் நபிமார், றசூஸூல்மார் என்று வெவ்வேறாகப் பிரித்து இறைவன் கூறுகிறான். மேலும் தன்னுடைய வசனங்கள் என்பதை ஆயாத்திஹி (ஆயத்துகள்) என்று கூறுகிறான். றசூல் (ஸல்) அவர்கள் என்னுடனும் ஓர் ஷைத்தான் இருக்கிறான். அவன் எனக்கு

அடங்கிவிட்டான் என்று கூறியுள்ளார்கள். நபி வேறு; றசூல் வேறு என்பது தெரிகிறது. மேலும் சிர்ருடைய அடியார் என்பது இவ்விரண்டையும் விட வேறானது. இது இப்போது நமக்கு அவசியமல்ல. ஷைத்தான் குழப்பத்தை உண்டுபண்ண முயற்சிப்பது மனிதனிடத்தில்தான். நுபுவத்திலோ றிஸாலத்திடத்திலோ ஷைத்தான் குழப்பத்தை ஏற்படுத்துவதில்லை. ஆயினும் இவ்வாயத்தில் நபிமார், றசூல்மார் என்றே இறைவன் கூறுகிறான். இதில் ஓர் நுட்பம் உண்டு. மனிதனாய் இருப்பவர் ஷைத்தானியாவின் போது குழம்பிய அறிவுடையவர் என்பதும் அதேமனிதன் ஷைத்தானிய்யாவை விட்டும் நீங்கிய பின்தான் ஆயத்தைப் பெற்றுக்கொள்ளும் (நுபுவ்வத், றிஸாலத்) உடைய நபியாய், றசூலாய் இருக்கிறார் என்பதும் தெரிகிறது. ஆயினும் இவ்வாயத்தில் ஷைத்தானின் குழப்பத்தோடிருக்கும் போதும் அவர்களை நபி என்றும் றசூலென்றுமே கூறப்பட்டுள்ளது. இங்கே ஷைத்தானின் குழப்பத்தோடிருந்த மனிதரை, றசூல் என்றும் நபியென்றும் கூறப்படுவது *"இஸ்த்தியாரா"*வாக இரவல் வழக்காக இருக்கிறது.

ஓர் நீதிபதியின் ஆசனத்திலிருந்து நீதி செலுத்தும் போது அவரை நாம் நீதிபதி என்கிறோம், அந்த நீதிபதி தன் மனைவி மக்களோடு துன்யா விஷயத்தில் ஏதோ ஓர் தவறைச் செய்து விட்டால் நீதிபதி தவறு செய்து விட்டார் என்றுதான் கூறுகின்றோம். இங்கே நீதிபதி என்ற சொல்லை தவறு செய்யும் அல்லது செய்த மனிதருக்கு இரவலாக *"இஸ்தியாராவாகவே"* பாவிக்கிறோம். இந்த வகையில்தான் இந்த ஆயத்தும் இதைப்போன்ற மற்றும் பல ஆயத்துகளும் கூறப்பட்டிருக்கின்றன. இதில் நாம் அறிய வேண்டியது என்னவென்றால், ஆயத்துகள் அருளப்படும்போது ஒருவர் நபியாக, றசூலாக, பூரணமாய்ச் சுயநிர்ணய உரிமையற்ற அப்துவாய் (அடிமையாய்) இருக்கிறார் என்பதே. மீதி வேளைகளில் நபி, றசூல் என்ற பெயரோடிருந்தாலும் அவர்களிடம் தவறு, மறதி இருக்கலாம். இருக்கவேண்டும். அப்படி அவர் மனிதராய் தவறுடைய வராய் இல்லாவிட்டால், தவறுடைய மனிதனுக்கு அவரால் வழிகாட்ட முடியாது. இதை நோக்கி, மலக்குகளையே நாம் நபியாக, றசூலாக அனுப்புவதானாலும் மனிதனுடைய தோற்றத்திலேயே அனுப்புவோம் என்று இறைவன் தெளிவாக விளக்கம் தருகிறான். ஹாறூத், மாறூத் என்ற மலக்குகளையும் அவர்கள் மனிதர்களுக்குக் கற்றுக் கொடுத்த தீய கல்விகளையும் நாம் அறிந்திருக்கிறோம். மலக்குகள் தீய கல்வியை ஏன் கற்றுக்கொடுக்க வேண்டும்? துன்யாவில் வாழ்வதானால் நல்லதும் தீயதும் கலந்திருக்கவேண்டும் என்பதற்காகத்தான். மறதி, தவறு,





பாபம் இல்லையானால் துன்யா வாழ்வு பொருந்தாது. இங்கே நான் தருகிற ஆயத்துகளை நோக்குங்கள்.

*குர்ஆன்: 6:9*
*தூதரை ஓர் மலக்காகவே அனுப்புவதாயினும் அவரையும் ஒரு மனிதருடைய ரூபத்தில்தான் நாம் அனுப்புவோம். (அச்சமயத்திலும்) இப்போதிருக்கும் சந்தேகத்தையே அவர்களுக்கு நாம் உண்டுபண்ணிய வராவோம்.*

*குர்ஆன்: 17:95*
*நீர் கூறும், பூமியில் மலக்குகளே வசித்திருந்து அதில் சாவதானமாக அவர்கள் நடமாடிக் கொண்டுமிருந்தால் நாமும் வானத்திலிருந்து ஓர் மலக்கையே தூதராக (றஸுலாக) அனுப்பியிருப்போம்.*

இவ்வாயத்தின் மூலம் பூமியில் வாழும் மனிதருக்குப் பூமியில் வாழும் மனிதராய் இருப்பவரே றசூலாக வரவேண்டும் என்பது தென்படுகிறது.

*குர்ஆன்: 62:2*
*உம்மிகளுக்கு அவர்களில் நின்றுமே ஓர் றசூலை அனுப்பி வைத்தான்.*

இவ்வாயத்தின்படி றசூல் (ஸல்) அவர்களும் ஓர் மனிதரே என்பதும் உம்மி (எழுதப்படிக்க அறியாதவர்) என்பதும் தென்படுகிறது.

*குர்ஆன்: 18:110*
*உங்களைப் போல் நானும் ஓர் மனிதனே என்று நீர் கூறும்.*

இவ்வாயத்தின்படி றசூல் (ஸல்) அவர்கள் எம்மைப்போன்ற ஓர் மனிதரே என்பது தென்படுகிறது.

இவ்வளவையுமே இப்போது போதுமாக்குவோம். ஹதீஸுகளும் அனேகமுண்டு. மேற்காட்டிய ஆயத்துகளின்படி றசூல்(ஸல்) அவர்களும் எம்போன்ற ஓர் மனிதர்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் றசூல் (ஸல்) அவர்கள் *"நானும் உங்களைப் போன்ற ஓர் மனிதனேயாயினும் என்னைப்போன்றவர் எவருமில்லை"* என்று கூறுகிறார்கள். ஆகவே அவர்கள் நம் போன்ற மனிதரேயானாலும் அவர்களுக்கும் எமக்குமிடையில் ஏதோ

வேறுபாடு உண்டு என்பது தென்படுகிறது. அந்த வேறுபாடுதான் நுபுத்துவம், றிஸாலத் போன்றவை. நாம் மனிதராய் மட்டும் இருக்கி றோம். ஆனால் அவர்கள் நுபுத்துவம் றிஸாலத்தும் பெற்ற மனிதர் களாய் இருக்கிறார்கள். இதை மறந்து விடாதீர்கள்.

*ஹதீஸ்*
*மனிதன், தவறினாலும் ஞாபகமறதியினாலும் இணைக்கப்பட்டி ருக்கிறான்.*

இது ஓர் ஹதீஸ் இந்த ஹதீஸின்படி றசூல்மார்கள் நபிமார் களான மனிதர்களும் தவறுடையவர்கள், ஞாபகமறதியுடையவர்கள் என்பது தென்படுகிறது.

*குர்ஆன்: 4:28*
*அல்லாஹ் உங்களுக்கு இலேசாக்கவே விரும்புகிறான். ஏனென்றால் மனிதன் பலவீனமாகவே படைக்கப்பட்டுள்ளான்.*

பலவீனம் என்பது அறிவின்மைதான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

*குர்ஆன்: 33:72*
*நிச்சயமாக அமானிதத்தைச் சுமந்து கொள்வீர்களா? என்று நாம் வானங்கள் பூமி மலைகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை அதனைப்பற்றிப் பயந்து அதனைச் சுமந்துகொள்ளாது விலகி விட்டன. அத்தகையதைத்தான் மனிதன் சுமந்து கொண்டான். நிச்சயமாக அவன் அறியாமையினால் தனக்குத்தானே தீங்கிழைத்துக்கொண்டான்.*

இவ்வாயத்தை நோக்கினால் மனிதன் சிருட்டியாய் இருந்த ஆரம்ப நிலைமையில், பௌதீக உடல் இல்லாத போதே அறிவீன னாயிருந்தான் என்பது தென்படுகிறது. மேலும், இஸ்ஸான் என்பதை ஒருமையாய்க் கொண்டால், எல்லா இன்ஸானுக்கும் ஆரம்பநிலையி லிருந்த ஒருவர் என்பது பொருள்படும். பன்மையாய்க் கொண்டால் இறந்த, இருக்கிற, இருக்கப்போகிற எல்லா மனிதர்களையும் சுட்டிய தாய்ப் பொருள்படும். இவ்விபரத்தைக் கவனத்தில் இருத்திக் கொள்ளவும்.

*குர்ஆன்: 47:19*
*(நபியே) நிச்சயமாக அல்லாஹ் தவிர வேறு இலாஹு இல்லை என்பதை நீர் அறிந்து கொண்டு விசுவாசம் கொண்ட ஆண்களுக்காகவும் விசுவாசம் கொண்ட பெண்களுக்காகவும் உமக்காகவும் பாப மன்னிப்பைக் கோருவீராக.*





குர்ஆனில் இவ்வாயத்தின்படி றசூல் (ஸல்) அவர்களை நோக்கி உமக்காகப் பாபமன்னிப்பைக் கோருவீராக என்று இறைவன் கூறுகிறான். இவ்வாயத்தில் நபியென்றோ றசூல் என்றோ கூறாமல் உமக்காக என்றே கூறுகிறான். உமக்காக என்பதைக் கொண்டு அதனால் சுட்டப்பட்டது நபியை, அல்லது றசூலைத்தான் என்று நாம் கணிக்கிறோம். ஆகையால்தான் உலமாக்கள் தப்ஸீர் களில்(நபியே) என்ற சொல்லை அடைப்புக்குறிக்குள் இட்டிருக்கி றார்கள். அவர்கள் கூறுவது போல நபியென்று எடுத்துக்கொண்டால் நபிக்கும் தவறுண்டு என்பது தென்படுகிறது. இந்த ஆயத்து மனிதர்கள் எல்லோரையுமே விளித்துச் சொல்லப்பட்டதென்றால் நபி குற்றமுடையவரல்ல என்றும் நபியல்லாத மனிதர்கள் ஒவ்வொரு வரும் பாபமுடையவர்கள், குற்றமுடையவர்கள் என்பதும் தென்படு கிறது. இவ்விஷயத்தையும் கல்பில் இருத்திக் கொள்ளவேண்டும்.

*குர்ஆன்: 40:55*
*(நபியே) நீர் பொறுமையாய் இரும். நிச்சயமாக அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானது. நீர் உம்முடைய தவறுகளுக்கு மன்னிப்பைக் கோரிக்கொண்டும். காலையிலும் மாலையிலும் உமதிறைவனைப் புகழ்ந்து துதிசெய்துகொண்டும் இருப்பீராக.*

இவ்வாயத்தையும் நாம் முன்பு கூறியது போல றசூலை மட்டும் நோக்கியும் உலகமக்கள் அனைவரை நோக்கியும் கூறப்பட்டதாய்க் கொண்டு நோக்குங்கள். நபிக்குத் தவறுண்டு என்றும் நபிக்கல்ல மற்றோருக்கே தவறுண்டு என்றும் அறிவிக்கிறது.

*குர்ஆன்: 9:43*
*அல்லாஹ் உம்மை மன்னித்தருள்வானாக. அவர்களில் உண்மை சொல்பவர் யார்? என்பது உமக்குத் தெளிவாகாத வரையிலும் பொய்யர்கள் யார் என்பதை நீர் அறியாத வரையிலும் நீர் அவர்களுக்கு ஏன் அனுமதியளித்தீர்.*

இவ்வாயத்துக்கு ஓர் சரித்திரப்பின்னணி இருப்பதால் இவ் வாயத்தில் சுட்டப்பட்டது நபியைத்தான் என்பதில் பிரச்சினை கிடையாது. இன்னும் பல ஆதாரங்களைத் தரலாம். மேலேதந்த ஆதாரங்களை நோக்கினால் இரு உண்மைகள் தென்படுகின்றன.

1ஆவது: நபிமார் றசூல்மார்களுக்கும் தவறுண்டு என்பது.

2ஆவது: நபி என்ற சொல்லை நாம் “*இஸ்தியாரா*” இரவலாய்ப் பாவிக்கிறோம் என்பது. அதாவது தவறு செய்யும் மனிதரை நாம்

நபி றசூல் என்று கூறுவது இரவல் வழக்காக இருக்கிறது. ஆனால் நம் முன்னோரில் பலர் நபிமார் றசூல்மார்கள் *"ம.்ஸூமீன்கள்"* என்றும் அவர்கள் பாபமற்றவர்கள் என்றும் கூறியிருக்கிறார்கள். இவ்விடத்தில் பாபமற்றவர்கள் தவறு செய்ய முடியாதே என்று எமக்கு ஓர் மயக்கம் தென்படுகிறது. இந்த மயக்கம்தான் நபிமார் மடமையற்றவர்கள் என்று எம்மை விடாப்பிடியாய் வாதாடச் செய்கிறது.

உண்மையோ வேறாக இருக்கிறது. பாபமில்லாதவர்கள் அல்லது பாபமற்றவர்கள் என்றால் பாபமே செய்யாதவர்கள் மடமை யில்லாதவர்கள் என்று தீர்ப்புக் கட்டிவிடுகிறோம். இது எங்களுடைய ஓர் மருட்சிதான்.

*குர்ஆன்: 5:49*
*நிச்சயமாக மனிதரில் பெரும்பாலார் பாபிகளாகவே இருக் கின்றனர்.*

இவ்வாயத்தில் கூறப்பட்டபடி பெரும்பாலார் பாபிகளென்றால் சிறுபாலார் பாபிகளல்ல என்பது இவ்வாயத்தின் பொருளல்ல. மன்னிக்கப்படாமல் இருக்கிற பெரும்பாலார் பாபிகள் என்பதே ஆயத்தின் பொருளாகும். மனிதர்களில் பாபம் செய்யாதவரும் உண்டு என்பது பொருளல்ல. இப்படிப் பொருள் கொண்டால் குர்ஆன் வசனங்கள் ஒன்றுக்கொன்று முரணாய்த் தென்படும். குர்ஆனில் எவ்வசனமும் ஒன்றுக்கொன்று முரணாகாது.

*குர்ஆன்: 4:17*
*எவர்கள் தங்கள் மடமையினால் பாவத்தைச் செய்து பின்னர் பச்சாதாபப்பட்டு அதிசீக்கிரத்தில் நீங்கிவிடுகிறார்களோ அத்தகையோரை மன்னிப்பதுதான் அல்லாஹ்வின் மீது கடமையாகி விடுகிறது.*

இவ்வாயத்தில் தரப்பட்டதுதான் பாபமில்லாதவர்கள் என்பதன் உண்மை. இவ்வாயத்துகளிலும் நபியென்றோ றசூல் என்றோ வேறுபடுத்திக் கூறாமல் *"எவர்கள்"* என்ற சொல்லைக் கொண்டு எல்லா மக்களையுமே இறைவன் கருதினான் என்பது தென்படுகிறது. ஆகவே ஏதோ சிற்சில தவறுகள் நடந்திருந்தாலும் அவை மன்னிக்கப்பட்டு பாபமற்றவர்களாய் இருந்தார்களென்பது பொருளேயன்றி எப்போதுமே பாபம் செய்யாதவர்கள் என்பது பொருளல்ல. அப்படிப் பொருள் கொண்டால் முன்தரப்பட்ட ஆயத்துகளெல்லாமே பொய்யென்றாகும். குர்ஆனில் பொய்யோ முரணோ கிடையாது.





அடுத்தது நபிமாருக்கு மடமை கிடையாதென்பதை நோக்கிப் பார்ப்போம். நபிமார்கள் கூரிய புத்தியுடையவர்கள் என்பதை *"தலாலத்துன்னஸ்"* என்ற சொற்பிரமாணத்தைக் கொண்டு நோக்கினால் *"இபாரத்துன்னஸ்"* என்ற கருத்துப்பிரமாணத்தினால் மடமையற்றவர்கள் என்றாகும். கூரிய புத்தி என்பதன் எதிர்ச்சொல்லே மடமை என்பது. கூரிய புத்தியுடையவரிடத்தில் மடமை இருக்க முடியாது. இந்த அனுமானப்பிரமாணத்தை வைத்துத்தான் நபிமாருக்கு மடமை இல்லையென்று ஒருசில புகஹாக்கள் கூறியிருக்கிறார்கள். இதில் ஓர் சிறுதவறை அவர்கள் விட்டுவிட்டார்கள். கூரிய புத்தி என்றால் முடிவான புத்தி என்று நம்பிவிட்டார்கள். அவர்களுடைய தவறு இதுதான்.

குர்ஆனில் ஒவ்வோர் கல்விமானுக்கும் மேலான ஓர் கல்விமான் உண்டு என்று இறைவன் கூறுகிறான். இறைவன் கூறுவதே உண்மையென்றால் ஒரேயொரு கல்விமான் மட்டும்தான் இறுதியில் மிஞ்சுவான். மற்றெல்லோரும் நிரப்பமில்லாத கல்மான் களாகவே இருப்பார்கள். அப்படியானால் இறுதியில் மிஞ்சுகிற கல்விமான் அல்லாஹ்வாகத்தான் இருக்கும். அவன்தான் கல்விமான் என்றால் மற்றெல்லோரும் கல்வியில் நிரப்பம் பெறாத மூடர்கள் என்பது உண்மையாகும். இதில் நபிமார் றசூல்மார்கள் விலக்காக முடியாது. ஆகவே *"அல்பதானத்"* புத்திக்கூர்மையுடையவர்கள் என்றால் நிரப்பமான பூரண அறிவைப் பெற்றவர்கள் என்பது பொருளல்ல. நுண்ணறிவு உடையவர்கள் என்பதே அதன் பொருள். நுண்ணறிவு அல்லது புத்திக்கூர்மை தவறுசெய்யாது என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது.

இந்தப் புத்திக்கூர்மை மனிதர்கள் யாவருக்கும் பொதுப்படை யாய்த்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மனித இயல்போடுள்ளது. இது தவறு செய்யாது என்பதை நிரூபிக்கமுடியாது. இதற்குமுன்னும் இப்போதும் உலகின் நாலாபாகங்களிலும் நிகழ்ந்த நிகழ்கிற சர்வபயங்கர விளைவுகளுக்கும் புத்திக்கூர்மைதான் காரணமாய் இருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆகவே புத்திக் கூர்மை உடையோர் மடமை இல்லாதவர்கள் என்று எப்படிக் கூற முடியும்? மடமை மனித அறிவின் பாலர் பருவம். பகுத்தறிவு வாலிபம். நுண்ணறிவு வயோதிபம். மூன்று நிலைகளும் மூன்று பெயர்களும் ஒரே அறிவுக்குரியதுதான். இது சிருட்டியைப் பொறுத்த ஒன்றாய் இருப்பதால் இந்த அறிவு இந்த மூன்று நிலைகளில்

மூன்று பெயரோடிருப்பினும் நிச்சயமாக இம்மூன்றும் ஒன்றாகவே இருப்பதால் எந்த நிலையிலும் தவறுக்குள்ளாகக் கூடியதாகவே இருக்கும். அதாவது நுண்ணறிவின் போதும் மடமை கலக்கும், மடமையால் கொண்ட நோக்கை நிறைவேற்ற நுண்ணறிவு செயல்படக்கூடும். ஆகவே மடமை நபிமாருக்கில்லையென்பது வெறும் வாதமேயன்றி ஆதாரத்தோடுள்ள வாதமல்ல.

மூஸா (அலை) அவர்கள் புத்திக்கூர்மை என்ற நுண்ணறிவு டையவர்கள். வாழ்க்கையில் அனுபவமுடையவர்கள். ஓர் சமூகத் துக்கு றசூலாய் வந்தவர்கள். அவர்கள் வாயிலாக மக்களுக்கு ஓர் வேதத்தையே கொடுத்திருந்தான் இறைவன். வேதம் கொடுக்கப் பட்ட ஓர் றசூலாய் அவர்கள் இருந்தும், இல்முல்லதுன்னி வெளியான ஹில்று(அலை) அவர்களிடத்தில் தங்களின் நுண்ணறிவின் தவறைக்காட்டி விட்டார்களல்லவா? மூஸா (அலை) புத்திக் கூர்மை யுடையவர்களாய் இருந்தும் அவ்விஷயத்தில் ஏன் தவறிழைத் தார்கள்? மூஸா (அலை) அவர்கள் மனித அறிவான புத்திக் கூர்மையோடு றிஸாலத்தற்று இருந்தார்கள். ஹில்று(அலை) மனித அறிவற்று இறையறிவென்ற இல்முல்லத்துன்னீயோடிருந்தார்கள். ஆகவே, மனிதனுக்குள்ள புத்திக்கூர்மை தவறும் என்பதில் ஆட்சே பணை தேவையில்லை. இன்றைய உலகிலுள்ள அழிவுச்சக்திகளுக் கெல்லாம் காரணம் புத்திக்கூர்மை என்ற நுண்ணறிவுதான் என்று முன்பே கூறினேன்.

ஆனால் இந்த நிகட்சியின் போதும் மூஸா (அலை) அவர்களை றசூல் என்றுதான் குர்ஆன் கூறுகிறது. இந்த றசூல் என்ற வசனம் குர்ஆன் ஹதீஸுகளில் இவ்விடயத்தில் *"இஸ்தி ஆரா"* இரவலாகப் பாவிக்கப்பட்டிருக்கிறது. இதை எம் முன்னோரில் ஒரு சில புகஹாக்களே உணர்ந்து கொள்ளாமல்தான் அவர்களு டைய யூகங்களைக் கொண்டு நபிமாருக்கு மடமையில்லையென்று கூறினார்கள். இவர்களுடைய கூற்றுக்குக் குர்ஆனிலோ ஹதீஸிலோ ஆதாரம் கிடையாது. நான் முன்பு கூறியது போல றசூல்(ஸல்) அவர்கள் தாயின் அபத்தினால் வெளியாகவில்லையென்றும் றசூலுக்கு மலஜலமில்லை என்றும் நபிமாருக்குக் கொடிய ரோகங் கள் வருவதில்லையென்றும்கூட சில முன்னோர்கள் கூறியுள்ள கூற்றுக்கள் அவர்களுடைய வெறும் யூகங்களும் கற்பனைகளுமே யொழிய தர்க்கரீதியான ஆதாரங்களோடுள்ள சொற்களல்ல. இவ் விதமான ஆதாரமற்ற பேச்சுகள் பெரும்பாலான முஸ்லீம்களின்





பகுத்தறிவைப் பறித்துவிட்டதென்பது அறிஞர்களுக்குத் தெரியுமே யன்றிப் பாமரமக்கள் அறிய மாட்டார்கள். ஒருசாரார் றசூல்மார்களைப் பற்றி வருணித்த வருணனைகள் மூடபக்தியினால் ஏற்பட்ட விளைவுதான். இந்த வருணனைகளில் மிகப்பல அறிவுக்கு அப்பாற்பட்ட மூடபுத்தியினால் ஏற்பட்ட வர்ணனைகள்தான்.

*ஹதீஸ்*

*நபி(ஸல்) அவர்கள் தொழுதார்கள். இந்த ஹதீஸை றிவாயத்துச் செய்த றாவியான இப்றாஹீம் தமக்கு அல்கமா அறிவித்ததாகவும் அவருக்கு, இப்னுமுமஸ்ஊத் அறிவித்த தாகவும் கூறுகிறார். நபி(ஸல்)அவர்கள் அதிகமாய்ச் செய்தார்களா? குறைவாகச் செய்தார்களா? என்பதை நான் அறியேன். (எனக்கு ஞாபகமில்லை) அவர்கள் தொழுது முடிந்தவுடன் "யாறசூலல்லாஹ் தொழுகையில் ஏதாவது புதிதாக ஏற்பட்டிருக்கிறதா?" என்று விசாரித்தார்கள். அது என்ன? என்று நபி(ஸல்) விசாரித்தார்கள். அப்போதவர்கள், "தாங்கள் இன்னவிதமாகத் தொழுதீர்கள்" என்று கூறினார்கள். (இதனைச் செவியேற்ற) உடன் தங்கள் இரு கால்களையும் ஒடுக்கி, கிப்லாவை முன்னோக்கி இரண்டு ஸஜதாக்களைச் செய்து, பின்னர் ஸலாம் கொடுத்தார்கள். அப்புறம் அவர்கள் எங்கள்பால் திரும்பி "தொழுகையில் ஏதாவது புதிதாக ஏற்பட்டிருந்தால் உங்களுக்கு அதனை நான் அறிவித்திருப்பேன். என்றாலும், நான் உங்களைப் போன்ற மனிதன்தான். நீங்கள் மறப்பதுபோல நானும் மறக்கி றேன். நான் மறந்து விட்டால் எனக்கு ஞாபகமூட்டுங்கள். உங்களில் எவராவது தன்னுடைய தொழுகையில் சந்தேகப் பட்டால் சரியானது எது என்று நிதானித்து அதன்படி பூர்த்தி செய்து, ஸலாம் கொடுத்து, இரண்டு ஸஜதாக்களைச் செய்ய வேண்டும்" என்று கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னுமஸ்ஊத்(றலி)*
*ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி.*

றசூல் (ஸல்) அவர்களுக்கும் மறதி இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியுமா? மறதி தவறு, சிறுபாபம், பெரும்பாவம், மடமை என்ற பதங்களின் அடிப்படை மறதிதான் என்பதை நண்பர் மஜீதும் அவரின் ஸஹாக்களும் அறிவார்களா? நபி(ஸல்) அவர்களின் மறதியினால் தொழுகையில் ஏற்படும் பிழையைத் திருத்தும் அறிவு எமக்குக் கிடைத்தது என்பதை நண்பர் மஜீத் மறுப்பாரா? தொழுகை என்பது சுயநிர்ணய உரிமையுடைய

மனிதரால் கையாளப்படுவது என்பதையும் மனித அறிவுடன் செயலாற்றும் எவரிடமும் தவறிருக்கலாம் என்பதையும் நண்பர் மஜீதினால் மறுக்கமுடியுமா? துன்யா விஷயத்தில் மட்டுமன்றி மார்க்கக் கிரிகைகளிலும் சொல்லிலும்கூடத் தவறேற்படலாம் என்பதை மறுக்க முடியுமா? குர்ஆன் இறங்கும் போது மனித அறிவு அங்கிருப்பதில்லை. அதில் பிழையும் ஏற்படாது! ஏன்? அது உள்ளத்தில் பதிவான பிறகுதான் வெளியே சொல்வடிவில் வெளிவருகிறது. அதில் மறதி ஏற்பட முடியாது. ஆனால் ஹதீஸில் ஏற்படலாம். அது மனித அறிவோடுள்ள வியாக்கியானம்தான். ஆகையால்தான் ஹதீஸில் மனிதன் சந்தேகப்படுவதை நீக்க மனிதனுக்கு றசூல் (ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள்.

அப்துல் கரீமுல் ஜீலி (றஹ்) அவர்கள், "*ஆதம் (அலை) அவர்கள் கனியை மட்டும் புசித்தார்கள். வேரோடு அம்மரத்தைச் சாப்பிட்டிருந்தால் நாம் இன்னும் அனேக அறிவுகளைப் பெற்றிருப் போம்*" என்று கூறுகிறார்கள். "*ஆதம் (அலை) அவர்கள் தவறு செய்யாவிட்டால் எமக்குக் கலிமா கிடைத்திருக்க முடியா*"தென்று நான் கூறியதை நண்பர் மஜீத் பிழைகாண்பது ஏன்? நண்பருக்குக் குர்ஆன் ஹதீஸுகளைத் தெரியாது? அவற்றின் ஞானவிளக்கம் அவருக்குத் தெரியாது. இவர் நூற்கேள்வியறிவு மனோ இச்சை யாகிய முத்திரையில் சிக்குண்டிருக்கிறார். இவர் நபிமாருக்கு மடமையில்லையென்றெழுதிய முத்திரையில் மாட்டிக்கொண்ட ஒரு சில புகஹாக்களின் எழுத்தைக் குர்ஆனைவிட மேலாய் மதித்து, ஆதாரமாய்க் கொண்டிருக்கிறார். இவர் வெட்கமில்லாமல் வஹ்தத்துல் வுஜூதுக் கொள்கையை அதன் உண்மையை விளக்க முற்பட்டிருப்பது ஒரு சில மக்களிடையே தானும் அறிஞன், எழுத்தாளன் என்று காட்டிக்கொள்வதற்கேயென்பது வெளிப்படை யாய்த் தென்படுகிறதல்லவா? ஒருசில புகஹாக்களின் கூற்று, குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறான வெறும் யூகங்களை மட்டும் அடிப்படையாய்க் கொண்டிருக்கின்றன என்பதை நண்பர் மஜீத் இனிமேலாவது அறியட்டும்.

நபிமாரில் இடம்பெற்ற சிற்சில தவறுகள் மனிதவர்க்கத்துக்கு இறைவனால் அருளப்பட்ட அருட்கொடையென்றே கூறலாம். இந்தத் தவறுகள் வாயிலாக எவ்வளவோ நுண்ணறிவுகளை மனிதர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பது வெளிப்படையான உண்மையாகும்.





மறதி இல்லையானால் மடமையில்லை. மடமையில்லை யானால் தவறில்லை. தவறில்லையானால்; சிறுபாபமோ பெரும்பாபமோ கிடையாது. மனிதன் அமானிதத்தை ஏற்றது அறியாமையினால்தான் என்றால், மறதியில்லையானால் அறியாமை ஏது? மனிதன் சிருட்டியாய் வெளியாவதற்கு முன்பே அறியாமையில் இருந்தான் என்றால் எந்த மனிதனில் மறதி, மடமை, பாபம் இல்லாமலிருக்க முடியும்? மனிதராய்ப்பிறந்த எல்லோரிலும்தான் இருக்கும். மனிதன் என்ற வகையில் நபியோ றசூலோ வேறுபட்டவரல்லர். ஆகவே அன்னோரிடத்தில் சிற்சில தவறுகளிருப்பது ஆச்சரியப்படப் பிழையாய்க் காணவேண்டிய அவசியமில்லை. இதைப் பிழையாய்க் கணிப்பது மூளைவளர்ச்சியற்ற, பகுத்தறிவு சரியாய்த் தொழிற்படாத குழந்தை களின் கணிப்புத்தான். பகுத்தறிவுடையோர் இப்படிக் கணிப்பதில்லை.

ஒரு மனிதர் மடமை-அறிவின்மை இல்லாதவராய் இருந்தால் அவர் கூறுவது கலப்படமில்லாத சுத்தமான இறைவாக்காக இருக்கும். றசூல்மார்கள் மடமை, அறிவின்மை இல்லாதவர்கள் என்றால் அவர்களால் கொண்டுவரப்பட்ட சகல வேதங்களும் றசூல் மாரின் அறிவினால் உருவானவைதானென்று நம்பவேண்டியல்லவா ஏற்படும். ஆகவே குர்ஆன் இறைவசனம்தான் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? இப்போது நண்பர் மஜீத் சிந்திக்க வேண்டும். ஆராய்வில்லாத ஒரு சிலர்; நபிமார் றசூல்மாருக்கு மடமையில்லை யென்று நமக்குத் தந்த புரட்டல் வேதங்களை; நபிமார் தங்கள் அறிவாலேயே கற்பித்தார்கள் என்று கூறக்கூடிய ஷிர்க்கை உருவாக்குகிறதல்லவா? அந்தப் புரட்டர்கள் தங்கள் யூகங்களால் கற்பித்த மூடத்தனமான புரட்டல், இஸ்லாத்தை எதிர்காலத்தில் எப்படிப் பாதிக்கும் என்பதை அறிந்திருந்தால் இப்படியெல்லாம் கற்பனைபண்ணி மக்களை வழி கெடுத்திருக்கமாட்டார்கள். நாமும் சிந்திக்கும் ஆற்றலுள்ளவர்களாய் இருந்தால், இவ்வித லேபலில் புதைந்திருந்த ஒருசில இமாம்களைப் பின்பற்ற மாட்டோம். இந்த மருட்சியுடைய மக்களின் கொள்கை விளக்கங்களை அடிப்படையாய் வைத்து ஆராய்வு செய்த, பிறமத ஆராய்வாளர்களில் சிலர், வில்லியம் மூர் போன்றவர்கள் குர்ஆன் இறைவசனமல்ல என்று கூறினார்கள். இந்த மூடர்களின் கொள்கை விளக்கம்தான் அவர்களை அப்படிக் கூறும்படி தூண்டியது.

மனிதன் பனாபித் தௌஹீதில் நுழைந்தாலேயன்றி ஓர்கண மேனும் பூரண அறிஞனாய் மடமையில்லாதவனாய் இருக்கவே

இருக்க முடியாது. ஈமான்தாரிகளின் அறிவு ஒவ்வோர்கணமும் வளர்ந்து கொண்டேயிருக்கும். இந்த ஈமான்தாரி முதலாம் கணத்தில் தான், மடையனாயிருந்தேன் என்பதை இரண்டாவது கணத்திலும்; இரண்டாவது கணத்தில் மடையனாயிருந்தேன் என்பதை மூன்றாவது கணத்திலும்; இப்படிப் படிப்படியாய் அறிவுத்துறையில் முன்னேறி பனாவின் போது இறையறிவில் கலந்து விடுகிறார். இவர் இப்போது தோற்றத்தில் மனிதனாயும் உள்ளத்தில் பூரண அடிமையாயும் அமைகிறார். அவருடைய உள்ளத்தில் இறைவசனம் பதிவு செய்யப்படுகிறது. இந்தப் பதிவில் பாவிக்கப்படுவது இறைவனுடைய பாஷையான, தெளிவு என்ற பொருள் கொண்ட அறபு என்ற பாஷையாகும். அடிமையில் மட்டும்தான் இந்த அறபு அமையும். இந்தப் பாஷையைக் கொண்டு குர்ஆன் வசனங்கள் பதிவு செய்யப் பட்ட பிறகு அம்மனிதர் சுயநிர்ணய உரிமையுள்ள மக்களிடையே நபியாய் றசூலாய் அனுப்பப்படுகிறார். இம்மனிதர் அவர் சமூகத் துக்கும் அவருக்கும் தெரிந்த அறபு நாட்டின் பாஷையில் அறிவிக் கிறார். இதுதான் றிஸாலத், நுபுத்துவம். இந்த வகையில்தான் றசூல் (ஸல்) அவர்களுக்கும் அவர்களுக்கு முந்திய றசூல்மார் களுக்கும் வேதம் அருளப்பட்டிருக்கிறது. அவை இறைவனால் அருளப்பட்டவையேயன்றி றசூல்மாரின் யூகத்தினால் கூறப்பட்டவையல்ல. இந்த வேதங்களில் கூட்டுதல் குறைத்தலையும் நபிமார் செய்ய முடியாது. ஏனென்றால் அவர்கள் எல்லோருமே ஸித்திக்கீன்கள். அவர்கள் பொய் கூறவே மாட்டார்கள்.

இதிலிருந்து நாம் புரிவதுதான் என்ன? நபிமார் றசூல்மார்கள் மட்டுமல்லாமல் சாதாரண மனிதர்களிலும் ஸித்திக்கீன்கள் இப் போதும் இருக்கிறார்கள். சாதிக்கீன்கள் இருக்கிறார்கள் ஆனால் சாதாரண மனிதர்மட்டுமன்றி நபிமார் றசூல்மார்களும் மடமை, மறதி, அறியாமை உடையவர்களே என்பதுதான் உண்மை. சட்ட நுட்பங்களில் மட்டும் ஆராய்ந்து கொண்டிருந்த ஒரு சில புகஹாக்களுக்கு இவ்விஷயம் தெரியாதிருந்தது வியப்புக்குரியதல்ல. ஆனால், ஆரிபீன்கள் ஆத்மீகத்துறையிலேயே முற்றிலும் ஊறி அதிலுள்ள ஒவ்வோர் அணு போன்ற விஷயங்களையும் சரியாய்த் தெளிவுகட்டி வெற்றியடைந்த முப்லிஹீன்கள். இவர்கள் தங்கள் யூகத்தைக் கொண்டு மட்டும் எதையும் தீர்ப்புக்கட்டுவதே இல்லை.

நண்பர் மஜீத் அவருடைய நூலில் 13ஆம் பக்கத்தில் முஹ்யித் தீன் இப்னு அறபி(றஹ்) அவர்களுடைய ஓர் நல்லுபதேசத்தை





எடுத்துக்காட்டியுள்ளார். அதே உண்மையைத்தான் நானும் நண்பர் மஜீதுக்கு எடுத்துக்கூறுகிறேன். ஆகவே நண்பர் எம்.ஏ.ஏ. மஜீத் அவர்களே! ஓர் அனுபவஸ்த்தரின் நூலை வாசிக்கும் போது உங்கள் கல்பில் நீங்கள் மாட்டிக்கொண்ட கறுப்புக் கண்ணாடியைக் கழட்டிவிட்டுப் பார்வையிட்டால் அந்த அனுபவஸ்தர்களின் அடிப்ப டையைக் கொண்டு, நீங்கள் இது வரை கேட்டறியாத, கண்டறியாத பல அறிவுரைகளை நீங்கள் பெறமுடியும் என்று உங்களுக்குக் கூறி வைக்கிறேன்.

ஆரிபீன்களின் கூற்று அவர்களின் யூகமோ தனிப்பட்ட அபிப் பிராயமோ அல்ல. குர்ஆன் ஹதீஸுகளின் சரியான தீர்ப்பேயாகும். றசூல் (ஸல்) அவர்களிடத்தில் ஐந்து மர்த்தபாக்கள் ஒன்றித்திருந்தன என்பதை எமது முதலிரு நூற்களிலும் விபரித்துள்ளேன். நுபுத்துவம் றிஸாலத்துடையவர்களுக்கு வஹியுள்ளபோது மனித அறிவு இருப்ப தில்லை. குறிப்பிட்ட ஆயத்துகள் அவர்களுடைய உள்ளத்தில் பதிவு செய்யப்பட்ட பிறகு அதில் எவ்வித கூட்டல் குறைத்தலும் இல்லாமல் மனித அறிவையும் பாஷையையும் கொண்டு வெளிப்படுத்துவார்கள். குர்ஆன், றசூல் (ஸல்) என்ற மனிதரின் சொந்த அறிவோடுள்ளதல்ல, அது இறை அறிவோடுள்ளது. இதற்கு மனித அறிவு இடம் தராது. இதில் யாரும் கூட்டக் குறைக்க மாற்றப் புரட்ட முடியாது. றசூலின் வாயினால் வெளியான ஹதீஸ்கள் இப்படியல்ல. இது நபியின் கூரிய அறிவோடும் அனுபவத்தோடும் உள்ள வியாக்கியானம் தான். இதில் கூட்டக்குறைக்க மறுக்க இடம் உண்டு.

ஆகையால்தான் றசூல் (ஸல்) அவர்கள் "*நான் குர்ஆனுக்கு மாற்றமாய்க் கூறமாட்டேன். அப்படிக் கூறியிருப்பதாய் நீங்கள் கண்டால் என் சொல்லை நீக்கிவிட்டுக் குர்ஆனையே பின்பற்றுங்கள்*" என்று கூறியுள்ளார்கள். ஆகவேதான் நாம் சிற்சில ஹதீஸுகளை "*ழயீப்*" ஆனவை என்றும் இடைச்செருகல் என்றும் தீர்ப்புக் கட்டுகிறோம். மனித அறிவு நிலைகொண்டிருக்கும் போது ஆயத்துகள் மட்டுமென்ன, இல்ஹாமத்துக்கூட வெளியாவதில்லை. இறையறிவும் மனித அறிவும் ஒன்றித்து இயங்குவதில்லை. இது அனுபவமுள்ள ஆரிபீன்களுக்குத் தெரியுமேயன்றி புகஹாக்களுக்குத் தெரியவே தெரியாது. புகஹாக்களே இப்படியென்றால் லேபலைப் போட்டுக்கொண்ட நண்பர் மஜீதோ, அவரின் ஷெய்கோ, அவரைப்போன்ற மக்களோ இதை எப்படி விளங்குவார்கள். இவ்வித நுட்பங்களை விளக்கக் கலந்துரையாடல் பொருந்துமேயன்றி மேடைப்பிரசங்கத்தில்

எழுத்தில் விளக்குவது முடிந்த காரியமல்ல. நபிமார் றசூல்மாருக்குள்ள இலட்சணங்களில் ஒன்று '*ஸித்கு*' என்பது. அதாவது உண்மை பேசுதல், உண்மைப்படுத்தல், உண்மை கொள்ளல் என்பது அதன் பொருள். ஆகவே இறைவனால் அறிவிக்கப்பட்ட எந்த ஓர் விஷயத்திலும் நபிமாரோ றசூல்மார்களோ அணுவளவேனும் பொய் கூறமாட்டார்கள் என்பது உண்மை. ஆயினும் சிற்சில சந்தர்ப்பங்களில் அவசியமானால் உயிர்ப் பாதுகாப்புக்காக, அல்லது தீனை நிலைப்படுத்துவதற்காக இரட்டுற மொழிதல் என்ற அடிப்படையில் பொய் கூறுவார்கள். உண்மையில் அது பொய்யல்ல. வெளிநோக்கில் பொய் போலிருந்தாலும் அடிப்படையில் உண்மையாகவே இருக்கும்.

உதாரணமாக இப்றாஹீம் (அலை) அவர்கள் தன் மனைவி யைச் சகோதரி என்றும், விக்கிரகங்களை; தான் உடைக்காமல் பெரியவிக்கிரகமே உடைத்திருக்கலாம் என்றும், இப்படி இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களைக் கூறியுள்ளார்கள். இவை பொய்போல் தென்பட்டாலும் உண்மையில் பொய்யேயல்ல. உயிரைப் பாதுகாக்கும் நோக்கோடு இவ்விதம் கூற மார்க்க அனுமதியுண்டு. றசூல்(ஸல்) அவர்கள் ஓர் வயோதிபப்பெண்ணை நோக்கிக் கிழவிகள் சுவர்க்கம் புகுவதில்லையென்று கூறியுள்ளார்கள். வெளிநோக்கில் பொய்போல் இருப்பினும் விஷயம் உண்மைதான். கிழவிகள் குமரிகளாக்கப் பட்டுத்தான் சுவனம் செல்கிறார்கள். இது றசூல் (ஸல்) அவர்களு டைய விகடமாய் இருக்கிறது. இவற்றை நுட்பமாய் ஆராய்வு செய்து தெளிவுபெறாத ஒருசிலர் நபிமாரைப் புகழும் நோக்கமாக, ஆதாரமற்ற எவ்வளவோ படுபொய்களை மக்களிடையே விதைத்து விட்டிருக்கிறார்கள். இந்தக் களைகளை எம்போன்ற மனிதரால் எப்படித்தீர்த்து வைக்கமுடியும். முந்திய நபிமாரை அளவுக்கதி கமாய்ப் புகழ்ந்தது போல, என்னையும் புகழாதீர்கள் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸை நாம் உணரவேண்டும்.

றசூல்(ஸல்) அவர்கள் தம் இஷ்டப்படி எதையும் கூறுவதில்லையென்பதும், என்னுடைய ஊண், உறக்கம், வணக்கம் யாவும் அல்லாஹ்வுக்காகவேயென்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியதும் அவர்களுடைய ஸிர்ருடைய மர்த்தபாவைச் சுட்டியதாகும். ஆகையால்தான் நாம் அவர்களைக் காமீல் என்று கூறுகிறோம். இந்த ஸிர்ருடைய நிலைமை; வேறு எந்த றசூலுக்கும்; வேறு எந்த நபிக்கும் கிடைக்கவே கிடையாது. இந்த ஸிர்ருடைய





நிலைமை றசூல்(ஸல்) அவர்களுக்கும் அவர்களுடைய உம்மத்திலுள்ள ஷேகு முறப்பிகளுக்கும் மட்டுமே உரித்தான விஷேட நன்கொடையாகும். இதற்கதிகமாய் விளக்கிக்காட்ட இந்த நூல் இடம்பாடாகாது. சிந்தனையாளருக்கு இவ்வளவே போதுமானது.

உண்மையை உணர்த்த நபியாக, றசூலாக அனுப்பப்பட்ட அனேகர் கொலை செய்யப்பட்டார்கள்; சித்திரவதை செய்யப்பட் டார்கள்; நாடுகடத்தப்பட்டார்கள். அவர்களைப் பின்தொடர்ந்த நல்லடி யார்களான எத்தனையோ அவ்லியாக்கள் கொலை செய்யப்பட்டனர். முர்த்தத், காபீர் பட்டங்களைப் பெற்றார்கள். ஆயினும் இறைவன் அவனுடைய வேலையைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறான். எனக்குத் தெரிந்த அளவு குர்ஆன் ஹதீஸுகளின் தீர்ப்பை நான் கூறுகிறேனேயன்றி என்னுடைய சொந்த அபிப்பிராயங்கள் எதையும் நான் கூறவில்லை. ஆகவே, மக்களில் ஒருசாரார் என்னைக் கோபிப்பதைவிட இறைவனுடைய குர்ஆனையும், றசூலின் ஹதீஸை யும், இஜ்மாஉ, கியாஸுகளையும், பகுத்தறிவையும் கோபித்துக் கொள்வதே நல்லது. நான் தருவது வியாக்கியானம் மட்டும்தான்.

நபிமார்களின் குற்றம் குறைகளைத் துருவி ஆராய்வது தடுக்கப்பட வேண்டியதாய்; மறைக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. ஆயினும், ஓர் ஹதீஸை மட்டும் பகுத்தறிவாளர்களான கவாஸு களுக்கு மட்டும் எத்திவைக்கிறேன்.

*ஹதீஸ்*

*நீங்கள் பாபம் செய்யாமல் விட்டால், அல்லாஹ் உங்களை நீக்கிவிட்டுப் பாபம் செய்யக்கூடிய, ஓர் படைப்பைப் படைத் திருப்பான். பின்னர் அவர்களை அவன் மன்னித்தும் விடுவான். என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அபூஜயூப்(றஹ்)*
*ஆதாரம்: முஸ்லீம், திர்மிதி.*

இதைப்போல் இன்னும் பல ஹதீஸுகள் இருக்கின்றன. அவற்றை நான் இங்கே கூறவில்லை. தௌஹீதை விளங்கிக் கொள்ளாத மக்களிடையே இந்த வாசல் மூடப்பட வேண்டியிருப்பதால், நான் இத்துடன் இதை மூடிவிடுகிறேன். மனித இனத்திடம் பெரியதோ சிறயதோ சிற்சில தவறுகள் இருக்கலாம் என்பதை எவர் மறுக்கிறாரோ அவர் ஆதாரங்களை

ஏற்றுக்கொள்ளாத பகுத்தறிவுக்கிடமளிக்காத ஒருவராகவே இருப்பார். இவருக்கும் எமக்கும் எவ்வித பேச்சும் கிடையாது.

*குர்ஆன்: 9:119*
*விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து உண்மையாளர்களுடன் (சாதிக்கீன்களான உண்மை பேசுவோருடன்) இருங்கள்.*

*குர்ஆன்: 8:2*
*உண்மையான விசுவாசிகள் யாரென்றால் அல்லாஹ்வுடைய திருநாமம் கூறப்பெற்றால் அவர்களுடைய இருதயங்கள் பயந்து நடுங்கிவிடும். அல்லாஹ்வுடைய வசனங்கள் ஓதிக் காண்பிக்கப் பெற்றால் அவர்களுடைய விசுவாசம் (ஈமான்) பின்னும் அதிகரிக்கும். அவர்கள் தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பியிருப்பார்கள்.*

நபிமார்கள் றசூல்மார்களுக்கும் மடமை உண்டு என்னும் விஷயத்தில் இங்கே ஓர் துல்லியமான (மிகநுட்பமான) சிறுவிளக்கம் தர விரும்புகிறேன். நுட்பமாய்ப், பொறுமையுடன் ஆலோசனைக்கு எடுங்கள். உங்கள் மருட்சியை நீக்கவேண்டும் என்பதே எனது நோக்கம். எங்களுடைய றசூல் (ஸல்) அலைஹிவஸல்லமவர்கள் ஹிஜ்றத் செய்த விஷயம் நம்மெல்லோருக்கும் ஆதாரபூர்வமாய்த் தெரிந்த ஓர் விஷயம்தானே!

றசூல் (ஸல்) அவர்களை வெட்டிக்கொலை செய்யும் நோக்கோடு அவர்களிருந்த இடத்தை ஒருசாரார் முற்றுகையிட்டார்கள். அவ்வேளை (இரவில்) றசூல் (ஸல்) அவர்கள் தங்கள் உதவியாளருடன் அர்த்தராத்திரியில் வெளியேறிச் சென்று; பின் ஓர் குகையில் தங்கி; அதன் பின் மதீனா சென்றடைந்தார்கள். இதை நீங்கள் மறுப்பீர்களா? இல்லையே.

றசூல் (ஸல்) அவர்கள் ஏன் வெளியேறித்தப்பிச் சென்றார்கள்?

1ஆவது: தன்னைக் கயவர்கள் கொலை செய்து விடுவார்கள் என்று பயந்ததனால்.

(அல்லது)

2ஆவது: தன்னைக் கொலை செய்தாலும் பரவாயில்லை, தீனுல் இஸ்லாத்தைப் பரப்ப வேண்டும் என்பதனால்.

(அல்லது)





3ஆவது: தன்னுடைய றப்பின் அறிவிப்பின்படி வெளியாகியே ஆக வேண்டும் என்பதனால்.

(அல்லது)

4ஆவது: றப்பின் சொற்படி நடக்காவிட்டால் தண்டனை கிடைக்கும் என்ற பயத்தினால்.

(அல்லது)

5ஆவது: றப்பின் கட்டளையை நிறைவேற்றினால் வெற்றி பெறலாம், சாந்திப்படலாம், தன்னிறைவு பெறலாம், என்ற ஆதரவினால்

(அல்லது)

6ஆவது: தம்முடைய மனைவி, மக்கள், பொருள் பண்டங்களை இழக்கவேண்டி ஏற்படும் என்ற பேராசையினால்

இது போல் நாம் வேண்டியவாறு சிந்தனை செய்து பார்ப் போம். உங்கள் அறிவுக்கேற்றபடி எப்படி வேண்டுமானாலும் கற்பனை செய்துபாருங்கள்.

1ஆவது: கொலையைப் பயந்து சென்றிருந்தால்; அவர்கள் எம் போன்ற மனிதர்தான். ஏனென்றால், நான் இந்த உடல் என்று நம்பினால்; உடலைப்பற்றிய பயம் ஏற்படும். நான் அழியாதவன். என் உடல்தான் அழிவது என்ற அறிவு இல்லாமலிருந்தால்தான் இந்தப் பயம் ஏற்படும். இவ்வித காரணத்தினால் வெளியேறி யிருந்தாலும் றசூல் (ஸல்) அவர்கள் அறிவு குறைந்தவர்களாயிருப் பார்கள். ஆனால், றசூல் (ஸல்) அவர்கள் அறிவு குறைந்தவர்க ளல்ல. அவர்கள் மிகக்கூரிய அறிவுடையவர்கள்தான்.

2ஆவது: தீனுல் இஸ்லாத்தைப் பரப்ப முடியாதே என்று பயந்திருந்தால் அப்போதும் அல்லாஹ்வைப்பற்றிய அறிவு அவர்களிட மில்லையென்றாகும். ஏன்? தான் கொலை செய்யப்பட்டாலும் இறை நாட்டம் நிறைவேறியேயாகும் என்ற அறிவு இருந்தால், தீனுல் இஸ்லாத்தைப் பரப்ப; நான்தான் இருக்க வேண்டும் என்ற மடமை ஏற்பட முடியாது. ஆனால் றசூல் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வைப் பற்றி எம்மைப் போல் அரைகுறை அறிவுடையவர் களேயல்ல. அவர்கள் பூரண காமீல். திட்டவட்டமாக அறிந்தவர்கள்.

3ஆவது: தன் றப்புடைய கட்டளையை நிறைவேற்றும் நோக்க மாகவே வெளியேறியிருந்தால், அவர்கள் எம்மைப் போன்ற சுய நிர்ணயஉரிமை உடையவர்களாகவே இருந்திருக்க வேண்டும்.

ஏனென்றால், 4ஆவதில் விளக்கப்பட்ட அச்சம் அவர்களிடமிருந் திருக்கும். றசூல்(ஸல்) அவர்களே அச்சம் தீர்ந்த நல்லடியார்களில் முதலாம் இடம் பெற்றவர்கள். அதாவது கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்ற அவாவும் நிறைவேற்றாவிட்டால் தண்டனை கிடைக்கும் என்ற பயமும் இருந்திருக்க வேண்டும். றசூல் (ஸல்) அவர்கள்தான் அச்சம் தீர்ந்த நல்லடியார்களல்லவா? அவர் களிடத்தில் அச்சம் பயம் இருக்க முடியாது.

5ஆவது: றப்பின் கட்டளையை நிறைவேற்றினால் சாந்தி பெறலாம் என்று வெளியேறியிருந்தால்; அப்போதும் அவர்கள் தன்னிறைவு பெற விரும்பினார்களென்றாகும். தன்னிறைவு பெறவிரும்புபவர் குறைவுடையவராவார். அறிவு குறைந்தவருமாவார். றசூல் (ஸல்) அவர்கள் அறிவு குறைந்தவர்களோ, தன்னிறைவு பெற விரும்பியவர்களோஅல்ல.

6ஆவது: மனைவி மக்களை இழக்க நேரிடுமே, உலகம் பறிபோய்விடுமே, என்ற பேராசையினால் எம்மைப்போல் வெளியேறி யிருந்தால், துன்யாவான பிணத்தை விரும்பும் எம்மைப்போல் குணமுடையவராய் இருப்பார். றசூல் (ஸல்) அவர்கள் ஸூறத்தில் எம்மைப்போல் இருந்தாலும், அவர்களைப்போல், அவர்கள் அறிவைப்போல், நல்லொழுக்க குணசுபாவங்களைப்போல் எம் மனிதரும் முன்னுமில்லை இனிமேலும் கிடைக்காது. அவ்வளவு பரிபூரணமானவர்கள்.

நாம் மேலே காட்டிய நுண்விபரப்படி நோக்கிப்பாருங்கள். நாம் காட்டிய இந்த ஆறு காரியங்களை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் எப்படிக் கணித்தாலும் அவர்கள் நபி, றசூல் என்ற பெயர்களுடன் வாசம்செய்த, எம்போல் ஓர்வெளி உடலுள்ள மனிதரே தான் என்பதை உங்களால் எவ்வகையிலும் மறுக்க முடியாது.

இப்போது நோக்குங்கள். அர்வாஹுடைய ஆலத்தில் அல்லாஹ்விடமிருந்து அமானத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, எமது றசூல் (ஸல்) அவர்கள் எம்மைவிட்டும் விலகியிருக்க, மற்ற மனிதர்கள் மட்டும்தான் அந்த அமானத்தை ஏற்றார்களா? அல்லது றசூல் (ஸல்) அவர்களும் நம்மோடு கூட்டாக இருந்து பெற்றிருப்பார் களா? நம்மோடிருந்துதான் பெற்றிருப்பார்கள். ஏன்? மனிதர்தானே அமானதம் பெற்றவர்கள். அம்மனிதரில் ஒருவர்தான் றசூல் (ஸல்)





அவர்கள். மனிதன் அறியாமையினால் அமானத்தைப் பெற்றுக் கொண்டான் என்று இறை வேதமான குர்ஆன் கூறுவது உண்மை யானால்; அந்த றசூலும் அமானதத்தைப் பெறமுன்பு எம்மைப்போல் அறியாமையில்தான் இருந்திருக்க வேண்டும். இதை மறக்காமல் நினைவில் இருத்திக் கொள்ளுங்கள். நாம் முன்பு கூறிய 33:72ஆம் ஆயத்தை மீண்டும் ஓர் முறை வாசித்துப் பாருங்கள்.

“*மனிதனின் இவ்வுலகில் வெளியான உடலை எவரும் கண்டறிய முடியாத அர்வாகுடைய ஆலத்தில் இவ்வுடல் இல்லாதிருந்தபோது மனிதன் அறியாமையால் சுமந்து கொண்டான்*” என்று இறைவன் கூறுகிறானே! அது எந்த மனிதன்? உலகில் ஏதோ ஓர் தோற்றத்தில் காணுகிற ஓர் ஸூறத்தைத்தான் மனிதன் என்று நாம் நம்பியிருக்கிறோம். அர்வாகுடைய ஆலத்தில் இந்தப் பௌதீக உடல்தான் இல்லையே! அப்படியானால் மனிதன் என்று இறைவன் கூறுவது எதை? ஆத்மா அல்லது றூஹுவையா? அப்படியும் இருக்க முடியாது. ஏன்? றூஹு செயலற்றது. அதன் அறிவு அதனுடன் இருந்தாலேயன்றி அமானத்தை ஏற்றிருக்க முடியாது. றூஹுவை விட்டு அதன் பண்பான அறிவு பரிந்திருக்கவும் முடியாது. அப்படியானால் மனிதன் என்று இறைவனால் கூறப்பட்டிருப்பது நப்ஸையும் அதன் குணத்தையும் சுட்டியதேயாகும். ஆகவே சிலசமயம் றூஹுக்குரிய அறிவை இன்ஸான் என்றும் றூஹுவையே இன்ஸான் என்றும் இறைவன் அறிவிக்கிறான் அல்லவா? ஆதாரம் அனேகம் தரலாம்.

ஆகவே மனிதன் என்பது மனிதனுடனுள்ள அறிவே என்பது இப்போது நமக்குத் தென்படுகிறதல்லவா? இந்த இன்ஸான் என்ற அறிவு அல்லது றூஹுதான் மனிதனின் சூட்சுமஉடல் என்று கூறப் படுவது. றூஹு, அல்லது அறிவு என்ற பாதினான உடலுக்குரிய லாஹிறான ஸூறத்துத்தான் வெளியுடல் என்பது. குர்ஆனில் இவ்விரண்டையும் ஒன்றாயும் வெவ்வேறாயும் இறைவன் விளக்கி யிருப்பதை நாம் அவதானிக்க வேண்டும். ஷரீயத் வெளி உடலோ டுள்ளது. தரீக்கத் மறைவான உடலோடுள்ளது. இது படைக்கப்பட்டது. இந்த அறிவு அர்வாஹுடைய உலகில் படைக்கப்பட்டதாய் வெவ்வேறாய் இருந்தது. அப்படியானால் அமானிதம் கொடுபடும்போது மனிதர்களைக் குறித்துப் பன்மையில்தான் இறைவன் உரையாடிக் கொடுத்திருக்கவேண்டும். ஆகவே குர்ஆனில் மனிதர்கள் அறிவீனத் தால் சுமந்து கொண்டார்கள் என்றுதான் கூறியிருக்க வேண்டும். ஆனால், அல்லாஹ்வோ இன்ஸான் என்ற ஒருமையிலேயே சொல்கி

றான். ஆகையால் படையுண்ணப்பட்ட இன்ஸான்கள் முன்னொரு போது ஒரே இன்ஸானாக இருந்திருக்க வேண்டும். இல்லையானால் குர்ஆன் பொய்யாய் முடியும். குர்ஆன் பொய்யாகாது. அது இறைவன் பேச்சு. ஆகவே எல்லா இன்ஸானும் ஒன்று என்ற நிலையிலிருந்த இன்ஸான் யார்? ஒன்று என்றிருந்தால் அல்லாஹ்வாகத்தான் இருக்கும். அப்படியானால் அல்லாஹ்வும் மடையன்தானா? இல்லையே!

நுட்பமாய் அவதானிக்கவும். அல்லாஹ் சமதல்லவா? எல்லாம் நிரப்பமானல்லவா? அவனிடத்தில் எல்லாமே இருக்கு மல்லவா? ஓகோ! அவன்தான் இன்ஸான் என்று கூறப்போவதாயும், அவனறிவே குறைவானதென்று கூறப்போகிறதாயும் நினைக்கிறீர் களல்லவா? நிச்சயமாக நான் அப்படிக் கூறமாட்டேன்.

இன்ஸான் என்ற சொல்லின் ஓர் பொருள் அறிவீனம் என்பது. இது மனிதனை நோக்கி மறதி, அறிவீனம் என்பது பொருளேயல்லாமல் அல்லாஹ்விடத்தில் மறதியோ அறிவீனமோ கிடையாது. கசப்பையும் இனிப்பையும் வேறாய்க் காண்பது சிருட்டியறிவாய் இருப்பதுபோல, அறிவீனமும் அறிவும் வேறுவேறு என்று காண்பதும் சிருட்டியின் அறிவேயல்லாமல் அல்லாஹ்வின் பேரறிவல்ல. கசப்பு இனிப்பு இவ்விரண்டும் ஒரே அறிவில், சிருட்டியில் அமைவது போல, உயர்வு தாழ்வில்லாமல் இருப்பது போல, இவ்விரண்டும் ஓரறிவின் இருநிலைமைகளில் ஏற்பட்டாலும் அறிவே அதற்கு மூலமாய் ஒன்றாய் அமைவது போல், இறைவனுடைய அறிவில் உயர்வு தாழ்வு எதுவுமேயில்லாத ஓர் அறிவாகவே இருக்கிறது. அந்த அறிவு தன்னிடத்தே இயல்பாயுள்ள இயற்றன்மையுடன்தான் என்றுமிருக்கிறது. காலத்தினாலும் இடத்தினாலும் கட்டுண்டு வெளியாக வேண்டிய ஒவ்வோர் நிலைமையில் ஒவ்வோர் பெயரைப் பெறுகிறது. அதிலொன்று அறிவீனம். இந்தச்சொல் இன்ஸானை நோக்கியதேயன்றி அல்லாஹ்வை நோக்கியதல்ல. இன்ஸான் என்ற கட்டிலிருப்பவன் இந்த அறிவீனம் இல்லையானால் அவன் சிருட்டியாய் இருக்கவோ இன்பதுன்பங்களை அனுபவிக்கவோ முடியாது.

அல்லாஹ்விடத்தில் எந்த இன்பதுன்பமும் அறீவீனமும் கிடைக்கவே கிடையாது. அவன் மிக மிகப் பரிசுத்தவான். இன்றும் என்றும் அவன் அப்படித்தான். ஆகவே இறைவனின் மர்த்தபாவில் உள்ள ஒருவகை அறிவை அறிவீனம் என்றும் வேறோருவகையான மர்த்தபாவிலுள்ள வேறு ஒரு வகையான அறிவை, அறிவென்றும்





காண்பது சிருட்டியறிவாகும். இதற்கதிகமாய் உங்களை அழைத்துச் செல்ல முடியாதென்பதை நான் அறிவேன் ஆகவே சுருக்குகிறேன்.

உண்மையாய் உள்ள பொருளின் அறிவில் உள்ள ஓர் நிலைமைக்கு அறிவீனம் என்பது பெயர். இந்த அறிவீனம் என்பதைச் சூறத்தாக்கி, தோற்றமாக்கியிருப்பதன் பெயர்தான் இன்ஸான் என்பது. ஆகவே இன்ஸான் என்றால் முழுஅறிவீனத்தின் ஸூறத் என்பது தான் உண்மையான ஹக்கான பொருளாகும். இன்ஸான் எனறால் மூடன், அறிவிலி என்பதே அதன் பொருள்.

இன்ஸான் என்றால் உறவாடுபவன் என்பது இன்னோர் பொருள். யாருடன்? தன் றப்புடன் றப்பும் அப்தும் வேறுவேறு என்று காணாதவரையில் அவன் தன் றப்புடன் உறவாட முடியாது. அப்து வேறு றப்பு வேறு என்று காண்பதோ முழுமூடத்தனமான அறிவீனமாய் இருக்கிறது ஆகவே *"உன்ஸியத்"* என்ற சொல்லடியாகப் பிறந்த இன்ஸான் என்ற சொல், அறிவீனம், மூடத்தனம் என்ற பண்புகளின் ஓர் லாஹிறான ஹூறத்தைக் குறிப்பிடுவதற்காகப் பாவிக்கப்பட்ட சொல்லாயிருக்கிறது

இறைவன் இவ்வளவு மூடத்தனத்துக்காகவா இந்தச் சர்வ ஆலங்களையும் படைத்துள்ளான்? ஆம், நிச்சயமாக ஆம். இரத்தம் சிந்தி, அழிம்பு செய்யக்கூடிய மனிதனையா நீ படைக்கப் போகிறாய் என்று மலக்குகள் வினவ, நீங்கள் அறியாததை நான் அறிவேன் என்று இறைவன் கூறிவிட்டதாகக் குர்ஆன் கூறுகிறது. ஆகவே இந்த அறிவீனம் என்ற இன்ஸானில் மலக்குகள் கூட அறிய முடியாத, அல்லாஹ்வால் மட்டும் அறியக்கூடிய ஏதோ ஓர் சிர்ரு உண்டு என்பது பொருள். இதற்கு அனேக ஆதாரங்களுண்டு. அறிவீனம் என்பதில்லையானால் அனுபவம் என்பதும் கிடையாது. இன்ஸான் அறிவீனம் என்ற குறையறிவை அடிப்படையாய்க் கொண்டு நிறையறிவில் நுழையும் அனுபவத்தை அடைகிறான். நிறையறிவோ குறையறிவைக் கொண்டு அனுபவம் பெறுவதல்ல. அப்துவான இன்ஸானுக்கு எவ்விஷயத்திலும் முன்மாதிரி அவசியமாகும். நிறையறிவுக்கு முன்மாதிரி அவசியமல்ல. அனுபவமும் அவசியமல்ல. ஆகவே எம் அறிவில்தான் எம்அறிவீனம் தென்படுகிறதேயன்றி இறையறிவில் இல்லவே இல்லை.

இறைவனால் சிருட்டிக்கப்பட்ட எந்த ஓர் சிருட்டியாலும் இறையறிவின் அளவை, பெருமையை, தன்மையை அறிந்து

கொள்ளவே முடியாது. கலிமாவின்படி இருப்பது, அவனும் அவன் வலிமையென்ற சக்தியுமேயன்றி வேறு எதுவுமில்லை. அவனுடைய அறிவின் ஓர் அணு போன்ற அல்லது அதிலும் மிக மிகக் குறைந்த ஓர் பாகத்தைச் ஸுறத்தாய்க் கொண்டிருப்பதே இன்ஸான் என்பது. இந்த இன்ஸான் கொண்டுள்ள அறிவில்தான் நான் அறிவிலி, மூடன், மடையன் என்று காண்கிறானேயன்றி இறைவனிடத்தில் அறிவீனம், மடமை இல்லவே இல்லை. இறைவனின் பேரறிவின் ஓர் அணுத்துளியை மனிதன் அறிவீனம் என்று ஓர் நிலைமையில் அறிகிறான், இதை நிலைகொள்ளச் செய்திருப்பது சட்டமே. ஆகவே, அறிவிலிக்குச் சட்டம் அவசியம்தான். நிறையறிவிடத்தில் சட்டம் எதுவும் இல்லை. சட்டத்தை உருவாக்கியதும் அந்த நிறையறிவு தான். ஆகவே, ஏவல் விலகல் நன்மை தீமை இன்ஸான் என்ற ஓர் மர்த்தபாவைப் பொருத்த ஓர் விஷயமாயும் இறைதன்மை அதற்கு நேர் விரோதமாயும் இருக்கிறது. இதற்கதிகமாய் உங்களில் அனேகர் இதற்கு மேல் செல்ல முடியாதென்பதை நான் அறிவேன்.

இலகுவாய் விளங்குவதற்காக ஓர் உதாரணம். ஒரு மனிதன், தன் மகன் பாடசாலைக்குப் போகாவிட்டால் கோபிக்கிறான். தண்டனை கொடுக்கிறான். மகன் விஷயத்தில் இப்போது தந்தையில் வெளியானது கஹ்ஹாரியத் என்ற மர்த்தபாவின் ஓர் சிறு அம்சமாகும். இதைத்தான் நாம் கோபம் என்று கூறுகிறோம். மகன் சோதனையில் வெற்றி பெற்றுவிட்டால் அவன் செய்த முன்தவறுகளையெல்லாம் தந்தை மன்னித்துவிட்டு இரங்கி மகனுக்கு ஓர் பைசிக்கிள் வாங்கிக் கொடுக்கிறார். இங்கே தந்தையில் வெளியான குணம்; ஹப்பார், றஹ்மான் என்ற ஒவ்வோர் மர்த்தபாவின் ஒவ்வோர் சிறு அம்சம்தான். இந்த நிலைமையிலுள்ள தந்தையை நாம் இரக்கமுடையவர் என்று கூறுகிறோம். இப்போது நுட்பமாய் நோக்கிப் பாருங்கள். கோபம், இரக்கம் என்ற இருவகைக் குணங்களும வெளியாவதற்கு ஓர் அடிப்படைதான் இருந்திருக்கிறது. அதாவது மகனோடு கொண்டிருந்த அன்புதான் ஓர்நிலைமையில் கோபமென்ற பெயரோடும் இன்னோர் நிலைமையில் அன்பு என்ற பெயரோடும் வெளியானது. இதை எம்மால் மறுக்கமுடியாது. அப்படியிருந்தும் இரக்கம் சிறந்தது; கோபம் தாழ்ந்தது என்றோ, கோபம் கூடாதது; இரக்கம் நல்லதென்றோ நாம் கூறுவது எம் அறிவீனம்தான். நாம்தான் அறிவீனத்தின் முழுப்படைப்பாய் இருக்கிறோமே. தந்தைக்கு ஏற்பட்ட கோபம், இரக்கம் என்பவை தந்தையின் தன்னிறைவை அடிப்படையாய்க் கொண்ட இரு குணங்கள்தான்.





இதைப்போல இறைவனின் அறிவின் ஓர் நிலைமையில் வெளியாவதைப் பூரணம் என்றும்; இன்னோர் நிலைமையின் அவனறிவு வெளியாவதைக் குறைவு அல்லது அறிவீனம் என்றும் நாம் கூறலாமேயன்றி உண்மையாகவே அவனறிவில் உள்ளது எதுவும் அவனையன்றியில்லாதிருப்பதால், அவனிடம் அறிவீனம் என்பது அணுவும் இல்லை. அது மட்டுமின்றி அறிவு, அறிவீனம் என்ற சொற்கள் கூட அங்கில்லை. நுட்பமாய் உணர்க. அறிவு ஏற்றுக் கொள்ள மறுத்தால் நேரில் கலந்துரையாடித் தெளிவு பெறுக.

றசூல் (ஸல்) அவர்கள் மட்டுமல்லாமல் எந்த நபிமார் றசூல்மார்களாயினும் எப்போதெப்போது வஹியைப் பெற்றுக் கொண்டார்களோ அப்போதப்போது மட்டுமே மனித அறிவற்ற நிலையில் மறதி, மடமை, அறிவீனங்களை விட்டு நீங்கியிருக்கி றார்கள். மீதி நேரங்களில் அனுபவ அறிவோடும் கூரிய புத்தியோடும் தாங்கள் அறிந்துணர்ந்தவற்றை உள்ளாலுள்ளபடி சொல்லக்கூடிய ஸித்திக்கீன்களாகவும் எம்மைவிடப் பன்மடங்கு சிறந்த நல்ல மனிதர்களாகவும்தான் வாழ்ந்திருக்கிறார்கள். இவ்வுண்மை இறந்து பின் உயிர்ப்பிக்கப்பட்டுப் பிரகாசத்துடன் நடமாடும் நல்லடியார் களுக்கேயன்றிப் புகஹாக்களுக்கு எட்டவில்லை.

றசூல் (ஸல்) அவர்கள் ஹிஜ்றத்தை மேற்கொண்ட போது தம் சுயநிர்ணய உரிமையுடன் செயல்பட்டார்களா? இறையறிவுடன் செயல்பட்டார்களா? இரு அறிவுகளையும் ஒன்றுசேர்த்தே செயல் பட்டார்களா? இதை நாம் கண்டறிவதற்கு வழியுண்டு. ஹிஜ்றத்தின் நோக்கத்தை நான் மேலே கூறியது போல் கொண்டாலும் அல்லது உங்களிஷ்டப்படி வேறு காரணங்களைக் கூறினாலும் றசூல் (ஸல்) அவர்களுடைய சொல், செயல்கள், மறதி, மடமையுள்ள மனிதனின் செயலல்ல; என்று உங்களால் எவ்வகையிலும் நிரூபிக்க முடியாது. றசூல் (ஸல்) அவர்களுடைய மர்த்தபாக்களைச் சரிவர விளங்கிக் கொள்ளாத ஒருவர் அஷ்ஹது அன்ன முஹம்மதர்றசூலுல்லாஹ் என்று கூறுவது பொய்யாய் முடியும்.

முஹம்மதுர்றசூலுல்லாஹ் என்ற வாக்கியம் கலிமாவுடன் உபவாக்கியமாக அமைந்துள்ளதுதான். இந்த உபவாக்கியத்தை யாவது மனிதன் விளங்கிக் கொண்டால் கலிமாவை அற்புதமாக மனிதன் பெற்றுக்கொள்ள முடியும் என்பதற்காகவே அந்த வாக்கியம் உபவாக்கியமாய் இணைக்கப்பட்டிருக்கிறது. இதையாவது விளங்கிக் கொண்டால் நாம் என்றோ ஓர் நாள் அதன் பறக்கத்தால்........

வெற்றிபெறலாம் என்பது நிச்சயம். அதற்காகவேதான் அந்த உபவாக்கியம் கலிமாவோடிணைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே றசூலைப்பற்றிய தெளிவான உண்மையைக் கண்டறிய முடியாமல் திணறியவர்கள்; றசூல்மார், நபிமார்களைப்பற்றிய உண்மையைப் புத்தக ரூபமாய் எப்படித் தரமுடியும்? இது ஆரிபீன்களின் கல்பு என்ற நூலில் இருந்தே கற்கப்பட வேண்டியதாகும்.

றசூல் (ஸல்) அவர்கள் ஒரு நாளைக்கு எழுபது முறை தவ்பா செய்கிறேன் என்று கூறிய ஹதீஸை நாம் அறிந்துதானே இருக்கிறோம். தவறு மடமை இல்லாத ஓர் றசூல் ஒரு நாளைக்கு எழுபது முறை ஏன் தவ்பா செய்ய வேண்டும்? நல்லறிவைப் பெற்றுக் கொள்ளாத எந்த ஓர் நாளிலும் எனக்குக் ஹைறில்லையென்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியதை நாம் அறிவோம். அப்படியானால் ஒவ்வோர் கணமும் ஒவ்வோர்நாளும் அறிவு குறைந்திருந்து நிரப்பம் பெற்றுக்கொண்டேயிருந்தார்கள் என்பது புரியவில்லையா? இந்த நிரப்பம் சமது என்ற அல்லாஹ்வுக்குடையது. இந்த நிரப்பத்தில் நுழையும் வரையிலும் அதிலழிந்தொழியும்வரையிலும் சிருட்டியாய் இருக்கும் எந்த ஓர் மனிதனும் அறிவு குறைந்த, மடமையுள்ளவராகத்தான் இருப்பார். இதை எம்மக்களில் ஒரு சாரார் புரிந்து கொள்ளாமை குர்ஆன் ஹதீஸுகளின் குற்றமல்ல. ஒரு சாரார் நபிமாருக்கு மடமையில்லை என்று கூறியது மனிதருக்கு மடமையுண்டு என்பதையே நிரூபிக்கிறது. இப்படிக் கூறியவர்களும் மடமை, அறிவின்மை என்பவற்றில் சிக்குண்ட மனிதர்களாகையால்தான் இந்தக் கூற்றைக் கூறியிருக்கிறார்கள். இப்படி மடமையுள்ள மனிதர்கள் ஒரு வகையான கூட்டத்தினருக்குக் கூறியதை அந்தக் கூட்டத்தினர் ஏற்கலாம். ஆனால் உலக மக்கள் யாவருமே அதை ஏற்கவேண்டும் என்பதும் அவர்கள் இமாம்கள் அல்ல என்போரைக் குறைகாண்பதும் ஏன்? அதுவும் அறிவீனம்தான்.

காத்தமுன் நபிய்யீன் றசூல் (ஸல்) அவர்களே இந்த நிலைமையில் இருந்தார்களென்றால் ஆதம் (அலை) மூஸா (அலை) போன்ற நபிமார்கள் றசூல்மார்களின் நிலைமை எதுவாயிருக்கும் என்பதைத் தெளிந்த அறிவோடு நாம் நோக்கவேண்டும். மனிதனை மேலும் மேலும் இருளில் புகுத்துவது மார்க்கவிளக்கமல்லாத புரட்டல்தான். பிரகாசத்தில் புகுத்துவதே மார்க்க விளக்கத்தின் நோக்கம். ஆகவே நுபுத்துவம் றிஸாலத் வெளியாகும் போது





எந்த நபியும் றசூலும் மடமை, அறிவீனத்தை விட்டு நீங்கியவர் களாகவும் துன்யாவில் எல்லா மனிதரையும் போல் வாழும் துன்யா வாழ்வில் மடமை, அறிவீனம், மறதியுடையவர்களாயும் இருப்பார்கள் என்பதை நாம் தெளிவாய்ப் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கே நான் விளக்கிக் காட்டிய ஹிஜ்ரத்துடைய விஷயத்தைமட்டும் நோக்காமல் மிஹ்றாஜ் போன்ற பிரதானமான ஒன்றிரண்டு விஷயங்களையும் கவனத்திற்கெடுத்துப் பாருங்கள். நீங்கள் இதுகால வரையிலும் அறிந்து கொள்ளாதிருந்த அனேக உண்மைகளை உணரமுடியும். சர்வஆலங்களையும் கடந்து இறை முன்னிலையைப் பெற்றுக் கொண்ட நிகழ்சியைத் தான் நாம் மிஹ்றாஜ் என்கிறோம். சர்வ ஆலங்களையும் கடந்து ஸிதறத்துல் முன்தஹா என்ற ஸ்தானத்தை அடையும் வரையில் றசூல் (ஸல்) அவர்கள் சுயநிர்ணய உரிமையுடைய பகுத்தறிவோடுள்ள மனிதராயும் அதன் பின்பு அர்ஸையடையும் வரையில் சுயநிர்ணயஉரிமை ஓரளவு நீக்கப் பெற்ற அகிலுடைய மனிதராயும் இறைசன்னிதானமான லிகாவை அடைந்த போது சுயநிர்ணய உரிமையற்ற பூரண அப்துவாயும் இருந்திருக்கிறார்கள். லிகா என்றால் தரிசனையென்றுதான் அகராதிகள் பொருள் கூறுகின்றன. இது பாமரமக்களுக்குரிய கருத்துத்தான்.

லிகா என்றால் இறைவன் தன் சொந்த அனுபவத்தோ டிருத்தல் என்பது ஆரிபீன்களின் பொருள். இந்த லிகாவின் போது றசூல் (ஸல்) அவர்களிடத்தில் எவ்வித சுயநிர்ணயஉரிமையுமே கிடையாது. அப்போது அவர்களிடம் சிருட்டியறிவு கிடையாது. அங்குள்ள விபரங்கள் அவர்களுடைய கல்பில் பதிவான பிறகு மீண்டும் கீழ்நிலைக்கிறங்கி மனித அறிவுடன், மனிதர்களுடன் சுயபாஷையில் சுயநிர்ணய உரிமையோடு அந்த விபரத்தை விளக்கியிருக்கிறார்கள். இந்த ஏற்ற இறக்கம்தான் மிஹ்றாஜ் என்பது. மனிதர்களுக்கு இது சார்பாய்த் தரப்பட்ட விளக்கங்கள் யாவும் மனித பாஷையைக் கொண்ட அரைகுறையான பரிபாஷை விளக்கங்கள் தான். இந்த ஏற்ற இறக்க விளக்கம் சரியாய் அறிவில் அமைந்து விட்டால்தான் றசூலைப்பற்றிய உண்மை எமக்குப் புலனாகும். றசூல் (ஸல்) அவர்கள் எம்மைப்போன்ற ஓர்குறைவுள்ள மனிதரே என்பதும் அவர்களில் இடம்பெற்ற நுபுவ்வத், றிஸாலத், குறைவற்ற இறை தன்மையென்பதும் தெரியவரும். (நுட்பமாய் உணர்க.)

றசூல் (ஸல்) அவர்கள் மடமையில்லாமலே செயல்பட்டார் கள் என்றால் அவர்களை மடமையுள்ள மனிதன் பின்பற்றி வாழ முடியாமல் போய்விடுமல்லவா? மடமையற்ற மனிதனின் செயலை மடமையுள்ள மனிதன் எப்படிப் பின்பற்ற முடியும்?

இங்கே மிகமிகக் குறுகலாய்த் தந்தவற்றின் சாரம் என்ன வென்றால் அறிவீனம் என்ற இடத்தில் இருந்து நிறையறிவு என்ற ஸ்தானம் வரையும் நிரப்பமாய்த் தன்னிடத்தே பெற்றுக்கொண்டி ருப்பது எதுவோ அதன் திரு நாமங்களில் ஒன்றுதான் இன்ஸான் என்பது. இதன் ஆரம்பம் அறிவீனம், முடிவு அறிவுதான். இந்த அறிவின் பெயர்தான் விஸ்வாசம், ஈமான், எகீன் என்பவையெல்லாம். இவ்வறிவு இன்ஸானின் பகுத்தறிவிடத்தில் அறிவீனம் என்று காணப் பட்டாலும் இறையறிவில் பரிபூரண நிரப்பம்பெற்ற அறிவேதான். இந்த ஆரம்பத்தையும் முடிவையும் விளக்கம் தருவதே கலிமா என்பது. வெளிநோக்கில் இக்கலிமாவை மனிதன் கூறுவதாய் நாம் கண்டாலும் அல்லாஹ்வையன்றி எவரும் கலிமாவை உணர முடியாதென்பதை நாம் அறியவேண்டும். நாம் நாவினால் கூறுவது வெறும் கொப்பிதான். என்னையன்றி வேறில்லை என்று இறைவன் உணர்ந்திருப்பதால்தான் அவன் மூ.்.மீன் என்றும் மூ.்.மீன்களின் ஒலியென்றும் பெயர்பெற்றிருக்கிறான். மேலதிக விபரங்களை இங்கு தரமுடியாது.

நாம் கூறிய இச்சிறு விபரம் வஹ்தத்துல் வுஜூதின் ஓர் சிறு அம்சம்தான். இவ்வித நுண்ணறிவுக்குரிய ஓர் கொள்கை விளக்கத்தை, அதன் உண்மையை விளக்கக் கலிமாவையே புரிந்து கொள்ளாத ஒருவர் முயல்வது அறிவீனத்திலும் மிகக்கடைத் தரமானது என்பதை இனிமேலாவது நாம் உணர்வோமாக.

இன்ஸான் சிருட்டியென்ற கட்டில் மாட்டுப்பட்டிருக்கும் வரையில் அவனைவிடக் கீழ்த்தரமான வேறொன்றில்லவே இல்லை. மற்றும் சிருட்டிகளான கால்நடை, ஊர்வனம், தாவரம் முதலாம் சர்வசிருட்டிகளிலும் மிக மிகத்தாழ்ந்த அறிவீனன் இன்ஸான்தான். இந்த இன்ஸான் கலிமாவைக்கொண்டு எப்போது ஈமானைப் பெற்று அதனைப் பூரணமாய் அனுபவத்தில் அமைத்துக்கொண்டானோ அவனை விட மகத்தான, சிறந்த, ஒப்புவமை கூறக்கூடிய வேறொன்று இல்லவே இல்லை. அவ்வளவு நிரப்பமான சமதாய் அமைகிறான். பொறுமையுடன் நுட்பமாய் உணர்ந்து வெற்றிபெறுவீர்களாக.





நாம் எல்லோரும் ஈமானைப் பெற்றுக் கொண்டவர்களென்றும் இறைதரிசனையைப் பெறுவோம் என்றும் மேலோட்டமாக நம்பி யுள்ளோம். இந்த நம்பிக்கை எம் அறியாமையிலுள்ளது. துன்யாவில் இறைவனை, அவன் செயலை, அவன் பேச்சை அறியும் ஆற்றல் எம்மிடம் இல்லையென்றால் ஆகிறாவிலும் நாம் குருடர்களும் செவிடர்களும்தான். இறைவனை எங்கெல்லாமோ தேடுகிறோம். எம்மை யார் என்று நாம் புரிந்து கொள்ளும் போதுதான் இறை தரிசனை உள்ளாலுள்ளபடி கிடைக்கப்பெறுவோம். இந்த விளக்கத்தை உறுதியாய்ப் பெற்றுக்கொள்வது ஈமானாகும். இதற்குரிய மந்திரம் தான் கலிமா என்பது. இக்கலிமா ஆரம்பக்குறையறிவில் (அறிவீனத் திலிருந்தும்) மனிதனை நிறையறிவில் புகுத்தும் விளக்கம்தான் ஞானம் என்பது. இந்த ஞானத்தை அடையக் குர்ஆன் ஹதீஸுகள் வகுத்துத்தந்த சில அடிப்படைச் சட்டங்கள்தான் தத்துவ விளக்கம் என்பது. இந்தத் தத்துவ விளக்கத்தின் மிகத்தாழ் பதவியுள்ளதுதான் அதாலத் ஷரீயத் என்பது. இவ்வளவையும் ஒன்று சேர்த்துக் கொண்டதே வஹ்தத்துல் வுஜூத் கொள்கை என்பது. இதைத் தெளிவாய் விளங்கி அனுபவத்தில் பெறாத ஒருவர் இதைப் பேசுவது மாபெரும் மடமையும் குற்றமும் ஆகும். இக்குற்றம் இறை தண்டனையையும் தரலாம். வஹ்தத்துல் வுஜூதுக்கு ஆதாரம் தந்து விளக்கம் செய்வது குர்ஆன் ஹதீஸுகளின் நோக்கமாய் இருக்கிறது. இதைப் பேச்சு மூலம் எழுத்துமூலம் மக்கள் மனதில் பதிய வைப்பது, மவுத்தாகி, ஹயாத்தைப் பெற்றுக்கொண்டு நூர் என்ற பிரகாசத்தோடு வாழும் சிறப்புமிக்க ஸேகுமுறப்பிகளின் செயலேயன்றித் தாடி தலைப்பாகை ஸில்ஸிலாக்களுடன் காட்சிதரும் மனித ஸைத்தான்களின் செயல் அல்ல.

## (31)

இன்னோர் நுட்பம், படைக்கப்பட்டதில் முதலாவது படைப்பு என் நூரே என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறிய ஓர் ஹதீஸ் இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இதன்படி முதற் சிருட்டி நூர் என்பது தெரிகிறது. நூர் என்றால் என்ன? பிரகாசம், ஜோதி, அறிவு என்பதே அந்த நூர் என்பதன் பொருள். அறிவு அல்லது, பிரகாசம் அல்லது ஜோதி என்றால் அது ஓர் பொருளா? அல்லது பொருளின் குணமா? அறிவு என்று பெயர் பெறுவதால் அது குணம்தான். அந்த அறிவு என்ற குணம் குணியான பொருளை விட்டு வேறாகக் கணிப்பதால் தான் குணம் என்ற பெயரைப் பெறுகிறது.

அப்படி வேறாய்க் கணிக்காமல் நோக்கினால் அந்த அறிவு குணியாகவே இருக்கிறது. குணியை விட்டும் குணத்தைப் பிரிக்கமுடியாதல்லவா? ஆகவே, வேறு வேறுபடுத்தி நோக்கினால் அறிவு குணமாயும் ஒன்றுபடுத்தி நோக்கினால் அவ்வறிவு குணியாயும் இருக்கிறது, இவ்வுண்மையை எம்மால் மறுக்கமுடியுமா?

எப்போது குணியை விட்டும் குணத்தை வேறாகக் கணிக்கிறோமோ அப்போதுதான் சிருட்டி என்ற சொல் பிறக்கிறது. இப்படிக் கணிக்காவிட்டால் நூர் என்றோ சிருட்டி என்றோ பெயர் ஏற்பட முடியாது. இந்த நூர் என்ற அறிவு குணியை விட்டு வேறு என்று கணிக்கப் படுவது சிருட்டியாகிய எம்மால்தானே! இறைவனிடத்திலோ அவனும் அவன் குணமான நூர் என்ற அறிவும் ஒன்றாகவே இருக்கிறது. இதில் எவ்விதக் குறைபாடும், அறிவீனம், மடமை என்பதும் கிடையவே கிடைக்காது. நூர் என்ற தனிப்பெயர் ஏற்பட்டபோதே அந்த நூர் என்பதே சுத்த அறிவீனம், மடமை என்ற பெயரையும் பெறுகிறது. இந்த நூர் என்ற அறிவே சர்வ ஆலங்களுக்கும் முழுமூலமாய் இருப்பதால் சர்வ ஆலங்களும் சுத்த அறிவீனம், அல்லது மடமையின் தோற்றங்களாகவே இருக்கின்றன. எந்த ஆலத்திலுள்ள எந்த ஓர் பொருளும் மடமையை, அறிவீனத்தை விட்டும் எப்போதும் நீங்கவே முடியாது. நுட்பமாய் உணர்க. இறைவன் அறிஞன் என்றால் சிருட்டி அறிவில்லாததல்லவா?

இந்த நூர் என்ற அறிவை இறைவனை விட்டும் வேறாய்க் காணாமல் இறைவனே நூர், நூரே இறைவன் என்றும், அவை இரண்டும் பிரிக்க முடியாத ஒன்றே என்றும் கொண்டால் சர்வ ஆலங்களும் இறை அறிவில் இறைவன் வெளியான தோற்றமே சர்வஆலங்களும் என்றாகும். இது உண்மையானால் அறிவீனம் என்பதுதன் தோற்றமான சர்வஆலங்களும் இறை அறிவில் இயல் பாய் இருந்த அறிவேயாகும். இந்த அறிவு அறிவீனமாகாது. அது இறை அறிவாய் இருப்பதால் அதில் எவ்விதக் குறைவும் ஏற்பட முடியாது. அப்படியானால் அறிவீனம் என்பதன் பொருள்தான் என்ன? மனிதனில் அமைக்கப்பட்டுள்ள அல்லது இடம்பெற்றுள்ள அறிவு இறைவனையும் அவன் ஸிபத்தான அல்லது குணமான சர்வஆலங்களையும் தன்னையும் வேறாய்க் கணிப்பதனால்தான் அந்த இறையறிவு அறிவீனம் என்ற பெயரைப் பெறுகிறது. எங்கே பெறுகிறது? மனிதனிடத்தில்தான். இறைவனிடத்திலல்ல. இறைவனுடைய அறிவின் ஓர்நிலைமைக்கு மர்த்தபாவுக்கு, மனிதன்





அறிவீனம் மடமை என்று பெயரிட்டுக்கொள்கிறான். இறைவனையும் அவன் ஸிபத்தான குணத்தையும் எப்போது வேறு வேறு என்று மனிதன் காண்கிறானோ அப்போதுதான் அவ்வறிவு அறிவீனம், மடமை, மறதி, தவறு, பாபம், என்றெல்லாம் பெயரைப்பெறுகிறது. ஸிர்க் என்பதன் உண்மையான அந்தரங்கம் இதுதான், தவறு, பாபம், மடமை, அறிவீனம் எனபதெல்லாம் ஷிர்க்கிற்கு (வேறாக்கல்) உரிய பெயர்களேதான்.

இந்த அறிவீனம் என்று எம்மால் கணிக்கப்படுகிற விஷயம் எம்மிடத்தில் ஷிர்க்காயிருக்கிறதேயன்றி இறைவனிடத்தில் அப்படியல்ல. இறைவனிடத்தில் ஷிர்க்கோ அதற்கு மாற்றமான தௌஹீது என்பதோ வேறுபடாத ஓர் அறிவாகவே இருந்தது, இருக்கிறது, இருக்கும். இந்த வேறுபாடற்ற அறிவு இறை அறிவாகவும் வேறுபாடு காணும் அறிவு சிருட்டி அறிவாயும் இருக்கிறது. இந்த நூர் என்ற அறிவு வெளியானது என்று கொண்டால் அது அறிவீனம் என்ற பெயரையும், வெளியாகாமல் இறைவனோடு இருந்தபடியேதான் இருக்கிறது என்று கொண்டால் அவ்வறிவு குறைவற்ற பரிபூரண நிரப்பம் என்ற பெயரையும் பெறுகிறது; ஆகவே அறிவீனத்துக்கு ஆரம்பமாகவும் அறிவின் பூரண நிறைவுக்கு முடிவாகவும் அமைந்திருப்பது இந்த நூர் என்ற அறிவுதான். ஆகையால்தான் ஆரிபீன்களான நல்லடியார்கள் நூர் என்பது பிரிக்கும் ஸ்தானமாயும் சேர்க்கும் ஸ்தானமாயும் அமைந்திருக்கிறதென்று கூறினார்கள்.

இப்போது நாம் குறுகலாய்த் தந்த இந்த நுட்பத்தை ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் நம்மிடமே வந்து சேர வேண்டும் என்று இறைவன் கூறுவதன் ரகஸியம் உங்களுக்கு வெளிப்படலாம். மனிதன் மட்டுமல்லாமல் சர்வ ஆலங்களும் சம்பூரண அறிவில் நின்றும் அவ்வறிவிலேயே அறிவீனமாய் அமைந்திருந்து (சர்வஆலங்களுமாய் அமைந்திருந்து) அறிவீனம் என்ற ஷிர்க் ஒழிக்கப்படும் போது முன்னிருந்த பரிபூரணம் என்ற அறிவாகவே இருக்கும். இங்கே நாம் மருட்சியடைவது ஏன்? இறைவன் வெளியானான் என்ற சொல்லை விளங்கிக் கொள்ள முடியாமல் இருப்பதே. இப்போது உண்மையான திரையில்லாத அறிவைக்கொண்டு நோக்கிப்பாருங்கள். எந்த ஆலத்திலுள்ள எந்த ஓர் சிருட்டியேயானாலும், அது மலக்கோ, மனிதனோ, நபியோ, றசூலோ எவராயிருப்பினும் சிருட்டி என்ற நிலையில் (மர்த்தபாவில்) இருந்தால் அறிவீனம், மடமை, தவறு என்பவை இருக்கத்தானே

செய்யும். நபிமார் றசூல்மாருக்கும் மடமையுண்டு என்றால் அவர்களை நாம் அவமானம் செய்கிறோம், எம்முடைய ஈமான் போய்விடும் என்பது பொருளா?

நபிமார் றசூல்மார்களுக்கு மடமையில்லை என்று நம்புகிற (மூடத்தனமான) ஈமான் போய்விடுமே என்று கூறுகிற ஒருவர் அல்லது சிலர் ஈமான்தாரிகள்தானா? இவர்களிடம் இருப்பது வெறும் குருட்டு நம்பிக்கையும் குருட்டு அனுஷ்டானமுமேயன்றி ஈமானே அல்ல. கலிமாவை அதன் பிரமாணமான 12 அம்ஸங்களுடனும் நான்கு மூலப்பிரமாணங்களுடனும் சரிவர விளங்கித் தெளிவு பெறுவதே ஈமானாய் இருக்கிறது. முஹ்கமுவான வசனத்துக்கு லாஹிறும் பாத்தினும் உண்டு என்றும் பல கருத்துகள் உண்டு என்றும் நம்புகிற, குர்ஆன் ஹதீஸ்களை மறுக்கிறவர்களிடத்தில் ஈமான் எப்படி ஏற்படும்? தங்களை அன்னோர் மூ:ஃமீன்களாய்க் கணிப்பது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளும் ஏமாற்று வித்தைதான். றசூல்மாருக்கு மடமையில்லையென்ற அடிப்படையை நாம் ஏற்றுக் கொண்டால் றசூல்மார்களே தங்கள் அறிவுத்திறமையால் வேதங் களை உருவாக்கியிருக்கிறார்கள் என்று பிற மதவாதிகள் கூறுவதை உண்மை என்று ஏற்கவேண்டி வரும். வேதங்கள் குறைவில்லா தவை. அவை குறைவில்லாதவனிடமிருந்தே வெளியாகியிருக்க வேண்டும். நபிமார் றசூல்மார்கள் குறைவில்லாதவர்கள், மடமை இல்லாதவர்கள் என்றால் அவர்களே வேதங்களை உருவாக்கினார் களென்று அயல்மதவாதிகள் கூறுவது பிழையென்று நண்பர் மஜீதோ அவருக்கு வழிகாட்டிய ஷெய்க்கோ, பிக்ஹுடைய புகஹாக்களோ நிரூபணம் செய்வார்களா? ஒருபோதும் அவர்களால் முடியாது. ஆகவே, நபிமார் றசூல்மார்களுக்கு மடமையில்லையென்று கூறுவது மூடர்களின் யூகமேயாகும். குர்ஆன் ஹதீஸ்கள் நபிமார் றசூல்மார்களுக்கு நிச்சயமாக மடமையுண்டு என்பதை ஆணித்தரமாய் எடுத்து விளக்குகின்றன.

நான் ஒரு சில புரட்டல்வாதிகளின் புரட்டலை வெளிப் படுத்திக்காட்டினால் இமாம்களைத் தாக்குகிறேனென்று நண்பர் மஜீதும் அவரைப்போன்றோரும் நினைக்கிறார்கள். இமாம் என்பது இறைவனால் சூட்டப்பட்ட ஏதோ ஓர் பெரிய பட்டத்தின் பெயர் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். நல்ல, தீய பாதைகளைக் காட்டுபவர்கள் யாவரும் இமாம்கள்தான். அபூஜஹ்லும் ஓர் இமாம்தான். மூ:ஃமீன்களின் இமாம் குர்ஆன்தான். ஷெய்க் றசூல் (ஸல்) அவர்கள்தான். ஆராய்வில்லாத, வெறும் யூகத்தைக்





கொண்டனுமானித்தெழுதுகிற, பேசுகிற, குர்ஆன் ஹதீஸ்களுக்கு மாறான புரட்டலில் ஈடுபடுகிற எவரையும் என்னால் இமாமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இமாம்களைப் பற்றிய பல ஆயத்துகள் ஹதீஸ்களையும் மக்களுக்கு வழிகாட்டக்கூடிய இமாம்கள் யார் என்ற விபரத்தைத் தரக்கூடிய குர்ஆன் ஹதீஸ்களையும் அனேகம் ஆதாரம் தரலாம். அவசியத்தின் போது இன்ஸா அல்லாஹ் நான் விளக்கிக் காட்டுவேன்.

நபிமாருக்கு மடமையில்லையென்று ஒரு சாரார் கூறிய படுபொய்யை நண்பர் மஜீத் போன்றோர் இஜ்மாஉ என்று நம்புகிறார் கள் போலும். இஜ்மாஉ என்பதற்கு நான்கு அடிப்படைப் பிரமாணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று மார்க்க விஷயமாய்க் குர்ஆன் ஹதீஸ்களுக்கமைவாய்த் தகுதிவாய்ந்தோரால் கூறப்படுவதுதான் இஜ்மாஉ என்பது. குர்ஆன் ஹதீஸ்களுக்கு மாறாய் ஒரு சாரார் கூறுவது மார்க்க விரோதமான பித்அத்தேயன்றி இஜ்மாஉ ஆகாது. இவ்வித மருட்சியாளர் கூறுவதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்கு என்ன ஆதாரமுண்டு, மடையர்களின் கூற்றை ஒப்புக் கொள்வதும் அவர்களிடமிருந்து சில்சிலா பெறுவதும்தான் இஸ்லாத் தின் போக்கு என்று நண்பர் மஜீத் கருதுகிறார் போலும்.

இவ்வித மூடர்களின் முகமூடியைக் கிழித்தெறியும் ஆண் மக்கள் ஒவ்வோர் ஸமானிலும் நிச்சயமாக உண்டு. மேலே மலக்குகளும் மடமையுடையவர்கள் என்று கூறியதை நீங்கள் பிழையாய் விளங்கிக்கொள்ளக் கூடாது. மலக்குகளும் சிருட்டியாய் இருப்பதால் வேறு என்று கணிபடும் போது மடமையினால்தான் உருவாகியிருக்கிறார்கள். அவர்கள் நிறைவு பெறாத, பூரணமாகாத, சிருட்டிகள்தான் என்றால் மடமை உடையவர்கள்தான். ஆயினும் அவர்கள் எவ்வித தவறும் செய்யமாட்டார்களே! செய்தால் தூதுவிஷயத்தைப் புரட்டியிருப்பார்களே! அல்லாஹ்வின் ஏவலுக்கு மாறு செய்திருப்பார்களே என்று பெரிய ஓர்சந்தேகம் எமக்கு ஏற்படுகிறது. நியாயமான சந்தேகம்தான்.

மலக்குகளைப்பற்றி ஷரீயத்தில் எமக்குத் தரப்பட்ட விளக்கங் கள் வெளிப்படையான விளக்கங்கள்தான். அவை நிச்சயமான உண்மையும்தான். ஆனால் மலக்குகளைப்பற்றிய சில நுண் விளக்கங்கள் தரீக்கத் வாதிகளிடம்தான் உண்டு. அவ்விபரங்கள் இங்கே தரமுடியாது. ஆயினும் மலக்குகள் என்ற சிருட்டிகளும்

அறிவீனத்தைக் கொண்டே உருவாகியிருப்பதால், அதாவது மிகமிக அறிவீனத்தில் ஊன்றப்பட்டிருப்பதால் அவர்களிடம் சிந்திக்கும் ஆற்றலோ சுயநிர்ணய உரிமையோ கிடையாது. ஆகவே, அவர்கள் இறைவனுக்கு எக்கட்டத்திலும் மாறுசெய்யவே மாட்டார்கள். ஏன்? அவர்களிடம்தான் சுயநிர்ணய உரிமை கிடைக்கவே கிடையாதே. ஆகவே, அவர்கள் பிரித்தறியும் ஆற்றலற்றிருப்பதால் எங்கேயும் எதிலும் இறைவனுக்கு மாறு செய்யவே மாட்டார்கள். நுபுவத், றிஸாலத் வெளியாகும் போது நபிமார் றஸூல்மார்களும் இதே நிலைமையில்தான் அமைகிறார்கள். அவ்வேளைகளில் அவர் களிடத்தில் பகுக்கும் அறிவோ சிந்திக்கும் அறிவோ, சுய நிர்ணய உரிமையோ இருப்பதில்லை. எந்த ஓர் சிருட்டியேயானாலும் உறக்கம், விழிப்பு ஆகிய இரு நிலைமைகளையும் ஒன்றாய் ஒரே நேரத்தில் பெறவே முடியாது. விளிப்பிலிருக்கையில் உறக்கமும் உறக்கத்தின் போது விழிப்பும் எப்படி அமையும். இதைப் போலவே தஜல்லியென்ற தெய்வ வெளிப்பாடிருக்கும்போது எந்த ஓர் மனிதரிடமும் மனித அறிவு இருப்பதே இல்லை. இருக்கவும் முடியாது. ஆகையால் இறைநாட்டமான வஹியின் போது இன்ஸானியத் அங்கிருப்பதில்லை. ஆயினும் அந்த நபிமார் எம் போன்ற மனிதரே என்பதும் அறிவீனத்திலேயே படையுண்டவர்கள் என்பதையும் நாம் மறுக்க முடியாது. சர்வ சிருட்டிகளும் அறிவீனத் தின் ஸூறத்தே என்பதை நுட்பமாய் விளங்கித் தெளிவுபெறுங்கள்.

இவ்வளவு தெளிவாய்த் தெரிந்து கொள்ள வேண்டியது ஈமானை உறுதிப்படுத்த உதவியாய் அமையலாம். மலக்குகள் என்பதில் சில சிர்ருகள் இருக்கின்றன. இவ்விபரம் கவாஸுல் கவாஸுகளுக்கு அவசியமேயன்றிக் கவாஸுகளுக்கு அவசியமல்ல. ஆகையால் அவ்விபரத்தை நான் இங்கு தரவில்லை. தரமுடியாது.

விளக்கில் வீழ்ந்து மடியும் சிறு பூச்சிகளிடத்தில் நினைவு ஆற்றல் இல்லை. ஆயினும் அவற்றிடத்தில் அவசியமான அளவு சிந்திக்கும் ஆற்றலுண்டு. மலக்குகளிடத்தில் சிந்திக்கும் ஆற்றல் கிடையாது. ஆகவே அவர்கள் குறைவுடையவர்கள்தான். ஆயினும் நினைவாற்றல் அவர்களிடமுண்டு. ஆகவே இறை ஏவலை அவர்கள் மறக்கவே முடியாது. இறை ஏவலுக்கு மாறுசெய்யவும் முடியாது. இன்ஸானிடத்தில் இவை எல்லாமே நிரப்பமாய் உண்டு. மறதி என்பது இல்லையானால் மனிதனுக்குச் சிந்திக்க வேண்டிய, நினைவு படுத்தவேண்டிய அவசியமே இல்லாமல் போய்விடும். திக்று அவசிய மில்லாமல் ஆய்விடும். திக்கிர் அவசியமில்லையானால்





இபாதத்துக்கள் அவசியமில்லாமலாகி விடும். சிந்திக்க வேண்டுமானால் பகுத்தறிவு அவசியம். தொழில்படுவதானால் சரியும் பிழையும், நன்மையும் தீமையும் இருக்க வேண்டும். நன்மை தீமையை அனுபவிக்க வேண்டுமானால் மனிதனில் நிச்சயமாகத் தவறிருந்தேயாக வேண்டும். தவறிருப்பதானால் அறிவீனமும் அங்குண்டு. இந்த அறிவீனம் எனபதன் முழுத்தோற்றம் தான் இன்ஸான் என்பது. இந்த அறிவீனம் தன் கற்பனை நிலையைவிட்டு நீங்கித் தன் சொந்த நிலையில் தரிபடும் போது நூர் என்ற பெயரைப் பெறுகிறது. இந்த நூர் தன் ஆரம்ப நிலையில் பூரணத்தன்மையில் இருக்கும் போது றப்பென்றும் கற்பனை நிலையில் இருக்கும் போது சிருட்டி என்றும் பெயர் பெறுகிறது. இவ்விரு நிலைகளும் ஒன்றை விட்டு ஒன்று வேறென்றில்லாத இரண்டற்ற ஒன்றாகவே இருக்கிறது. கற்பனை தான் மனிதனை அறிவீனனாக, மூடனாகக் காண்கிறது. ஷிர்க் இல்லையானால் இந்த அறிவீனம் தன் கற்பனையை இழந்து விட்டுப் பூரணம் என்ற சுயநிலையைப் பெற்றுவிடும். இதுதான் இறை ஐக்கியம் என்பது. இவ்விபரத்தை விளக்குவதே வஹ்தத்துல் வுஜூத் என்பதன் அர்த்தம். இந்த விபரத்தை இந்து சொன்னாலும் முஸ்லீம் சொன்னாலும் தமிழில் சொன்னாலும் அறபியில் சொன்னாலும் எழுதினாலும் விஷயம் எமக்கு அவசியமேயன்றிக் கூறுபவரின் தோற்றம், செட்டிவிக்கட், ஸில்ஸிலா எமக்கு அவசியமல்ல.

ஆரம்ப மூஃமீன்கள் அல்லாஹ்வை, றசூல்மார்களை, வேதங் களை மலக்குகளை, இறுதி நாளை, கலாகதிறைப்பற்றி அறிந்துள்ள விபரங்கள் (லாஹிறுடைய) வெளிப்படை மட்டும்தான். ஆனால் வேதத்தின், விசுவாசத்தின் இறுதி எல்லை நாமறிந்துள்ளவை மட்டுமே என்று பிடிவாதம் கொள்ளக் கூடாது. பிடிவாதம் கொண்டால் அந்த ஈமான் நிரப்பம் பெறாது. மனிதர்களின் ஈமானைப் பூரணப் படுத்துவதே இறைவேதத்துடையவும் றசூல் (ஸல்) அவர்களுடை யவும் நோக்கமாகும். ஈமான் பூரணமடையும் போதுதான் இறைவனின் திருப்பொருத்தம் கிடைக்கும். திருப்பொருத்தம் என்றால் ஒன்றை மற்றொன்று பொருந்திக் கொண்டது என்பது பொருளல்ல. இன்ஸான் தான் வெளிக்கிட்ட இடத்தை மீண்டும் சென்றடைந்து தன்னை அறிந்து கொண்டான் என்பது பொருளாகும். திக்றில் சிறந்தது லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதுதான் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

(32)

*குர்ஆன்: 20:14* **“***வ அகிமிஸ்ஸலாத்தலிதிக்றி***”** திக்று செய்வதற்காகத் தொழு என்பதே அதன் பொருள். தொழுகை திக்றுக்காக, திக்று எதற்காக? திக்று என்றால் நினைத்தல் என்பது பொருள். எதை நினைப்பது? மறந்ததைத்தானே நினைவுபடுத்த வேண்டும். எம்முடைய மறந்து போன உண்மைநிலையை (ஆரம்பமும் முடிவுமான நிலையை) நினைவுக்குக் கொண்டு வருவதே திக்கிர் என்பது. நினைவுபடுத்தவே தொழுகை என்றால் றசூல்மார்கள் நபிமார்கள் யாவரும் ஒவ்வோர் வகையாய்த் தொழுகையைக் கையாண்டிருக்கிறார்களே! ஏன் தொழுதார்கள்? தாங்கள் மறந்து போன ஒன்றை நினைவுபடுத்துவதற்குத்தானே. அப்படியானால் தொழுது கொண்டிருந்த நபிமார் றசூல்மார்கள் மறதியற்றவர்கள் என்றோ மடமையில்லாதவர்களென்றோ கூறமுடியுமா? மறதியென்ற அறிவீனத்தை நீக்குவதுதானே திக்று.

ஆகவே நபிமாருக்கு மறதி மடமை இல்லையென்பது குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறான படுபொய்யும் புரட்டுமல்லவா? றசூல் (ஸல்) அவர்கள் தொழுகையில்கூட மறதியடைந்திருக் கிறார்கள். எத்தனையோ ஹதீஸுகளை ஆதாரம் தரலாம். மறதி என்பது என்ன? அறியாமை, மடமை, குறைவு, அறிவின்மை என்பது தான் பொருள். இச்சொற்கள் ஒவ்வோரிடத்தில் ஒவ்வோர் பொருளைக் கொடுத்தாலும் அடிப்படை அறிவுக்குறைவு என்பதே.

இது மனிதர்களின் விஷயம்தான். ஆனால் நீங்கள் மலக்கு களையும் குறைகூறுகிறீர்களேயென்று என்னைக் கேட்கிறீர்களா? ஆம். நான் விடை தருவேன். மலக்குகள் இறைவனை ஏன் தஸ்பீஹு செய்கிறார்கள்? தாங்கள் நிரப்பமில்லாத குறைவுடையவர்கள் என்றும் இறைவன் நிறைவுடையவனென்றும் இயல்பாக அவர்களிடம் பதிக்கப்பட்டிருந்த நினைவாற்றலைக் கொண்டுதான் தஸ்பீஹு செய்கிறார்கள். இறைவன் நம்மைவிடப் பெரியவன் என்பதை அவர்கள் சிந்தித்து அறிவதில்லை. அவர்களிடம் சிந்தனை கிடையாது. ஆகையினால்தான் அவர்கள் இறைவனிடத்தில் பூரண நம்பிக்கையுடைய சுயநிர்ணய உரிமையற்ற அடிமைகளாய் இருக்கிறார்கள். அவர்களும் சிருட்டிகள்தான். நூறை (அறிவை)க் கொண்டு படைக்கப்பட்டவர்கள்தான். நூறைக் கொண்டே சகல சிருட்டியும் அமைந்ததென்றால் சிருட்டிகளாகிய மலக்குகளும்





அதிலடங்கும். மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாயம் யாவுக்கும் அடிப்படை நூர்தான். மலக்குகளும் முடிவில் இறப்பவர்கள்தான். இறப்பது எதுவும் நிரப்பமுடையதாய் இருக்க முடியாதல்லவா? நூர் என்பது நாம் முன் கூறியதுபோல, ஓர் மறுத்தபாவில் அறிவீனம் போலும் இன்னோர் மறுத்தபாவில் பூரணஅறிவு போலும் மனித அறிவில் தென்பட்டாலும் உண்மை அப்படியல்ல. சர்வ சிருட்டிகளும் இறைவனின் அஸ்மாக்களின் ஸுறத்துகளாய் இருப்பதால் மாறுபடுவனவாயும் மறைவனவாயும் இருக்கின்றன. இதன் பெயர்தான் சிருட்டி என்பது. இது இறைப்பண்பேயன்றி உண்மையில் குறைவோ நிறைவோ உடையதல்ல. மலக்குகளின் உண்மையை உணர்ந்த தரீக்கத், ஹகீகத்வாதிகளேயன்றி இதை விளக்குவது கடினம்தான்.

சிருட்டி குறைவுடையதில்லாமல் இருந்தால் சிருட்டி என்ற பெயரைப் பெறவே பெறாது. நிறைவுடையது அல்லாஹ் மட்டும்தான். நுட்பமாய் உணரவேண்டும். இப்படியெல்லாம் கூறினால் ஏவல் விலக்கலெல்லாம் பாழாய் விடுமே என்று நினைக்கிறீர்களா? அது தவறு. இதற்குரிய விடையை எமது முதல் நூலில் 379ஆம் பக்கத்திலிருந்து 426ஆம் பக்கம் வரையிலும் மிகத்தெளிவான ஆதாரங்களோடு விளக்கியுள்ளேன். அங்கு கண்டு தெளிக.

நான் ஓர் சிருட்டியென்றும் மற்றும் பொருட்களைப் போலவே நானும் ஓர் பொருள் என்ற அறிவும் இருக்கும் வரையிலும் ஒவ்வோர் பொருளும் சிருட்டியேயாகும். இந்த அறிவீனம்தான் சிருட்டி என்பதன் உண்மை. இந்த அனாநிய்யத் என்ற தன்னுணர்வு நீங்கும் வரையிலும் அறிவீனம் என்ற ஷிர்க் ஒவ்வோர் சிருட்டியிடத்திலும் இருந்து கொண்டிருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது. அப்படியானால் நபிமார்களும் ஷிர்க்குடையவர்களென்றல்லவா ஆகும்? இல்லை. அப்படி ஆகாது. நபிமார்கள் றசூல்மார்கள் நல்லடியார்கள் இந்த அறிவீனம் என்ற ஷிர்க்கோடு போராடி வென்றவர்கள். அவர்கள் தாங்கள் செயலில் வெற்றி பெறாத எந்த விஷயத்தையும் மக்களுக்கு எத்திவைப்பதில்லை. இவர்கள் எத்திவைத்த முறைகளில் ஒன்று சொல், மற்றொன்று செயல். இந்தச் செயல்விளக்கங்களை மக்கள் கற்றுணர்ந்து தங்களைப் போல் எல்லோரும் வெற்றிபெற வேண்டும் என்பதே அவர்கள் நம்பிக்கை.

ஆகவே, அவர்கள் செய்த செயல்கள் தங்களுக்காக அல்ல. றப்புக்காகவும் மக்கள் அதைப் பின்பற்றுவதற்காகவும்தான்.

காமீல்கள் தேவையற்றவர்கள். அல்லாஹ்வுடன் இருப்பவர்கள். இரண்டில்லாத ஒன்றில் நிலைப்பட்டவர்கள். இவர்கள் ஜெயம் பெற்றவர்கள். பயமற்றவர்கள். றசூல் (ஸல்) அவர்கள் ஓர்நபி, ஓர்மனிதர், ஓர்றசூல், ஓர்றஹ்மத்து, ஓர்ஸிர்ருடைய அடியார். இந்த ஐந்து மர்த்தபாக்களும் ஒன்றையொன்று தடைப்படுத்தாமல் றசூல்(ஸல்) அவர்களிடத்தில் மட்டும்தான் அமைந்திருந்தன. ஆகையால்தான் அவர்கள் காமீல், மீமில்லாத அஹமது அவர்கள், அவர்களிடத்தில் ஷிர்க்கும் தௌஹீதும் நன்மை தீமையாவும் வேறு வேறென்றில்லாத தனியான பூரணமான நூர் ஆகவே இருந்திருக்கிறது. மக்களுக்கு எது அவசியமோ அதை மட்டுமே விளக்கினார்கள், குர்ஆனைப் போல். குர்ஆனில் நன்மைதீமை நேர்வழி கோணல்வழி எல்லாமே உண்டு. இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தே குர்ஆன் பரிசுத்தமான பிரித்தறிவிக்கும் வேதம் என்கிறோம். உலக மக்களனைவருக்கும் பொதுவானதே வேதம் என்றால் கள்வனுக்கும் அது வழிகாட்டத்தானே வேண்டும்? எவரெவர் எந்த எந்த நோக்கோடு குர்ஆனை ஆராய்கிறார்களோ அவர்களின் நோக்குக்கேற்ற உபாயங்களைக் குர்ஆனைக் கொண்டே அறிந்து கொள்ள முடியும்.

றசூல் (ஸல்) அவர்களும் இதே போல்தான் இருக்கிறார்கள். எந்தக் கலையை ஒருவர் படிக்கவேண்டும்? நல்லறிவைப் படிக்க வேண்டுமா? எதைப் படிக்க வேண்டும்? எல்லாமவர்களிலுண்டு? குர்ஆன் நல்லவற்றை மட்டும் எடுக்கும்படி கூறுவதுபோல றசூல் (ஸல்) அவர்களும் நல்லவற்றைக் கூறி நல்ல செயல்களையே வெளிப்படுத்தினார்கள். இப்போது நோட்டமிட்டுப் பாருங்கள். றசூல் (ஸல்) அவர்கள் செய்த செயல்கள் எதையும் மனித அறிவோடு செய்தார்களா? இறையறிவோடு செய்தார்களா? எல்லா அறிவு களோடும்தான் எல்லாச் செயலையும் செய்திருக்கிறார்கள். இவர்கள் காமீல் அல்லாதிருந்தால் அவர்களுடைய ஐந்து மர்த்தபாக்களும் ஒன்றையொன்று தடைப்படுத்தியிருக்கும். அவர்கள் காமீலாய் இருக்கமுடியாது. ஆகவே, காமீல் என்றசொல் றப்பையேயன்றி வேறு எவரையும் சுட்டாது என்பதை நுட்பமாய் நாம் அறிந்து கொண்டால் இதுதான் நபிக்குக் கொடுத்த கௌரவமாகும். நபியை நாம் அறிந்து கொண்டோம் என்பதற்கு ஆதாரமும் ஆகும். நபிமார் மடமையற்றவர்கள் என்றால் அவர்கள் சிருட்டிகளல்லவென்றாகும். இது பாமரமக்களை இந்து தர்மத்தில் புகுத்துவதாகும். ஒரு சாரார் சொல்வது போல றப்புத்தான் முஹம்மதாய் அவதாரம்





செய்தான் என்றாகும். அல்லது இறைவன், பிதா பரிசுத்தகுமாரர்களை உலகுக்கனுப்பினார் என்றாகும். இவையெல்லாம் சுத்தப்பிசகு.

சர்வ ஆலங்களும் இறைவனின் சொந்த அறிவில் அமைந் துள்ள இயல்பான ஸிபத்தும் அஸ்மாவுமே என்பதைக் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு விளங்கி உணர்ந்து கொண்டால் மார்க்க விளக்கத்தில் எவ்வித மருட்சியும் ஏற்பட முடியாது. நூறைக் கொண்டே சகலமும் படைத்தான். முதல் படைக்கப்பட்டது நூர்தான் என்றால் அந்த நூரிலிருந்தும் எச்சிருட்டியின் குணம் தவறமுடியும். அந்த நூர் ரிஸாலத்துத்தான் என்றால் அதில் இல்லாதது எது? நூர் அல்லாஹ்வின் அறிவு என்றால் அதில் இடம்பிடிக்காத சிருட்டியும் சிருட்டியறிவு என்றால் அதில் இடம்பிடிக்காத சிருட்டியும் சிருட்டியறிவும் ஏது? அப்படியானால் அதில் வேறுபாடு எப்படி ஏற்படும்? வேறுபாடு காண்பதே சிருட்டியறிவு. வேறுபாடின்றித்தான் தானாக இருப்பதே ஈமான். இதுதான் கலிமாவின் உயிர். இதை உணர்ந்து கொண்டவர் ஜெயம் பெற்றார். வேதாந்தம் இதுதான். குர்ஆன் ஹதீஸுகளின் ஒரேயோர் நோக்கம் இவ்வுண்மையை உணர்த்துவதே. மார்க்க விளக்கம் என்பதும் இதுதான். அல்லாஹ் யாருக்கு றஹ்மத்துச்செய்ய விரும்புகிறானோ அவருக்கு மார்க்க விளக்கத்தைக் கொடுக்கிறான் என்பது ஒரு ஹதீஸ்.

றசூல் (ஸல்) அவர்கள் நபிப்பட்டத்தைப் பெறமுன்பு கூரிய புத்தியுடைய மனிதராய் இருந்தார்கள். சித்கு என்ற உண்மை பேசும் பண்பும் அவர்களிடம் இருந்தது. இது மனிதனுக்குள்ளதுதான். நபிப்பட்டம் பெற்ற பிறகும் இந்த மனிதத்தன்மையுடன் மற்றும் நான்கு மர்த்தபாக்களையும் கொண்டவர்களாய்த்தான் வாழ்ந்திருக்கி றார்கள். அவர்கள் எந்தச் சொல்லை எந்தச் செயலைச் செய்திருந் தாலும் அது மனித அறிவோடு மட்டும் என்றோ இறையறிவோடு மட்டும் என்றோ எவ்வகையிலும் கணிக்கவே முடியாது. ஏனென்றால் அவர்கள் சம்பூரணமானவர்களாயிருந்தபடியால் எல்லா நிலைமை களும் ஒன்றித்தே இயங்கியிருக்கிறார்கள். இதில் ஏற்பட்ட தவறு, மடமை, மறதி, என்பவை மனிதத்தன்மையை நோக்கியவை. அதாலத் என்ற சட்டத்தின்படிதான் எம்மிடம் அவர்கள் மடமை, மறதியுடையவர்களாய்த் தென்படுகிறார்கள். எம்போன்ற அறிவீனர் களுக்குத்தான் சட்ட அடிப்படையில் இறைவன் இதை விளக்கித் தந்தான். ஆனால் அவர்களின் எல்லா நிலைமைகளிலுமுள்ள அறிவு ஒன்றேயொன்றுதான். அந்த அறிவு சிருட்டியிடத்தில் நூர்

என்று கூறப்பட்டாலும் அவ்வறிவு இறைவனுக்குடையதாய் இருப்பதால் 'விஜ்தான்' என்று பெயர் பெறுகிறது. இன்னோர் மர்த்தபாவில் அகில் என்றும், இன்னோர் மர்த்தபாவில் விவேகம், நுண்ணறிவு என்றும் இன்னோர் மர்த்தபாவில் பகுத்தறிவென்றும் இன்னோர் மர்த்தபாவில் வஹ்மு என்றும் பெயர் பெறுகிறது. இதில் உயர்வு தாழ்வு நம்மிடத்தில்தான். அந்த அறிவிடத்தில் வேறுபாடு கிடைக் கவே கிடையாது. விஜ்தானில் இல்லாத எதுவும் கிடையாது. அதையன்றி வேறோர் சக்தி கிடையாது. அதில் சரியோ பிழையோ கிடையாது. அதன் 'இறாதா' எதுவோ அதுதான் இருந்தது இருப்பது இருக்கப்போவது. எது எது எந்த எந்த நிலையில் எப்படி எப்படி அமைய வேண்டுமோ அப்படியே பூரணமாய் இருக்கிறது. தக்க காரணத்தைக் கொண்டேயன்றி நாம் எதையும் சிருட்டிப்பதில்லையென்றும், எம் நாட்டமேயன்றி வேறு எதுவும் எவராலும் செய்யமுடியாதென்றும் குர்ஆன் கூறுவதை, உண்மையை உணர முற்படும் கவாஸுகளான பகுத்துணரும் ஆற்றலுடையோர் ஆராய வேண்டும். இக்கல்வி பாமரமக்களுக்குரியதல்ல.

ஆகவே நபிமார் றசூல்மார்கள் தவறு செய்தார்களென்றால் மடமையோடிருந்தார்களென்றால் இது கற்பனையான யூகமல்ல. குர்ஆன் ஹதீஸ் பகுத்தறிவு முதலாம் ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்பட்ட குர்ஆனின் தீர்ப்பேயாகும். நாம் நாடியிருந்தால் ஒவ்வோர் மனிதனுக்கும் அவன் நேரான பாதையில் செல்லக்கூடிய அறிவை அவனுக்குக் கொடுத்திருப்போம் என்றும், நாம் நாடியிருந்தால் எல்லோரையும் ஒரே வகுப்பாய்ப் படைத்திருப்போம் என்றும் குர்ஆன் தருகிற விபரத்தை மேலோட்டமாய் நோக்காமல் நுட்பமாய் நோக்கினால் நாம் சொன்ன உண்மைகள் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும். அனேகர் வழிகெடுவதற்கும் ஒருசாரார் நேர்வழி பெற்று ஈமானை உறுதிப்படுத்துவதற்கும் குர்ஆன் காரணியாய் இருப்பது போல றசூல் (ஸல்) அவர்களுடைய சொல் செயல் கருத்துகள் சிலரின் ஈமானை உறுதிப்படுத்துவதற்கும் பலரின் மூடத்தனத்தை வெளிப்படுத்தி ஈமான் அற்றவர்கள் யார்? என்பதை உணர்வதற்கும் காரணமாய் இருக்கின்றன.





**என் அன்புக்குரிய அறிவுடைய பெருமக்களே!**

எம்முடைய கொள்கைக்கு விரோதமான பின்பற்றல்வாதிகளான ஒரு சிலர் நான் கூறுகிற ஆயத்துகள் எஹுது நஸாறாக்களால் உருவாக்கப்பட்ட குர்ஆனில் இருந்து எடுக்கப்பட்டவையென்று பாமரமக்களை ஏய்ப்பதாக நான் அறிகிறேன். நான் எந்த ஓர் ஆயத்தையும் புரட்டவோ என்னிஷ்டப்படி பொருள் கூறவோ இல்லை. உங்களிடம் எந்தக் குர்ஆன் தப்ஸீர்கள் இருக்கின்றனவோ அவற்றைத்தான் நானும் வைத்துக்கொண்டு எழுதுகிறேன். ஆகவே நான் கூறுவது பொய்யா? என்பதைக் கண்டறிவதற்காக நான் கூறியுள்ள ஆயத்துகளை உங்களுடைய அறபு, உர்து, இங்கிலீஷ் தமிழ்ப்பாஷைகளிலுள்ள எந்தத் தப்ஸிரை வேண்டுமானாலும் எடுத்துப்பாருங்கள். நான் பொய் கூறவில்லை என்பதையும், புரட்டர்களே பொய்கூறுகிறார்கள் என்பதையும் அறிந்து கொள்வீர்கள். மேலும், நான் தந்துள்ள ஆயத்துகள் மாற்றப்பட்டவையென்று யாராவது கூறினால், அவர்களும் வெறும் புரட்டர்களே என்பதை உணருங்கள். நான் மாற்றப்பட்ட எந்த ஓர் ஆயத்தையும் ஆதாராமாய்த் தரவே இல்லை. மக்களுக்கு அறிவு வெளிச்சம் ஏற்பட உதவி செய்வது என் நோக்கமன்றி மக்களை இருளில் தவிக்கவிட்டுவிட்டு நான் பெயரைப் புகழை அடையவேண்டுமென்பது என்நோக்கமல்ல.

ஆகவே, அறிவுடைய மக்களாகிய நீங்கள் என் பேச்சைத் திடீரென உதறித்தள்ளிவிடாமல் தெளிவாகப் பொறுமையோடு பல முறை மடக்கி மடக்கி வாசித்துத் தெளிவு பெற வேண்டும் என்றே நான் ஆசைப்படுகிறேன். உங்களிடம் எவ்வித கௌரவத்தையும் பட்டம் பதவி பொருள்களையும் நான் எதிர்பார்க்கவில்லை யென்பதையும் நம்புங்கள். எனது வெளிவேஷத்தை ஆதாரமாய்க் கொண்டு நான் கூறும் அறிவை எடைபோடாதீர்கள். மஃஸர் வெளியில் அல்லாஹ் நாடினால் நான் எனக்குத் தெரிந்த அளவு உண்மையை உங்கள் மத்தியில் எடுத்துரைத்தேன் என்பதற்கு நீங்கள் சாட்சியாய் இருங்கள். எம் இருபாலருக்கும் இறைவன் சாட்சியாய் இருப்பதே எமக்குப் போதுமானது. அல்ஹம்துலில்லாஹ். இன்னோர் விஷயம் என்னவென்றால் நண்பர் மஜீத் அவருடைய நூலின் 18ஆவது பக்கத்தில் நாம் மண்பானை, பொன் போன்ற விஷயங்களைக் கொண்டு உவமை கூறியதை சைவசித்தாந்தம் என்று நோக்குகிறார். மேலும் 29ஆம் பக்கம் சூபிகளின் கருத்தை

என்னால் புரிந்துகொள்ள முடியாமல் இருந்ததால் சுயகருத்துக் கொடுத்துள்ளேன் என்று சாடியுள்ளார். இவர் தெளிந்த அறிவுடையவராய் இருந்தால்தானே எமது பேச்சைப் புரிந்திருப்பார். இவர்தான் ஷைத்தானைச் செய்காக ஏற்றுக்கொண்டு முத்திரையிடப்பட்டவராயிருப்பதால் தமிழ்மொழி உவமானங்களை விளங்கும் ஆற்றல் கூட அவரிடம் இல்லையென்பது தென்படுகிறது.

ஏதாவதோர் விஷயத்தை விபரிக்கும்போது அவ்விஷயத்துக்குப் பொருத்தமான இன்னொன்றை ஒப்பிட்டுக்காட்டி விளக்குவதே உவமானம், உதாரணம் சொல்வது என்று கூறப்படும். இது யுக்தி சுருதிகளின்படி அங்கீகரிக்கப் பட்டதேயாகும். குர்ஆனில் 2:26ஆம் ஆயத்தில் கொசுவை (ஈயை)க் கொண்டு உவமானம் கூறுகிறான். இது ஏன் என்பதை இப்னு அப்பாஸ் (றலி) அவர்கள் தெளிவாய் விளக்கியிருக்கிறார்கள். இதை நண்பர் வாசித்ததேயில்லைபோல் இருக்கிறது. ஹிந்துக்கள் காட்டிய ஓர் உவமானத்தை அவசியத்தின் போது ஓர் முஸ்லிம் கூறுவதும் விளக்கிக் காட்டுவதும் பிழையென்று இந்த நண்பர் காணுகிறாரா? இவருக்குத்தான் சுய மூளையின்றி இரவல் மூளையிருக்கும்போது றஊப் வெளிப்படைக் கருத்தைக் கூறியதாகவும் நான் சுயசிந்தனை கருத்தைக் கூறியதாயும் அவர் கூறுவதில் நமக்கொன்றும் கிடையாது. நாம் காட்டிய உவமானங்களின், உதாரணங்களின் உண்மையை அவர் புரிந்து கொள்ளவே இல்லை என்பதுதான் உண்மை.

இற்றைக்குச் சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பே ஸூபிகளின் லேபிலில் (வேஷத்தில்) ஓர் எத்துக்கூட்டம் நம் நாட்டில் நடமாடுகிறதென்பது எனக்குத் தெரியும். ஆயினும், அவர்களுடைய அறிவுத்திறனை வெளிப்படுத்தி அவர்களுடைய வேஷத்தை வெளிப்படுத்திக் காட்டப்படக்கூடிய சூழ்நிலை எனக்கேற்படவில்லை. தற்போதுதான் இறைவன் அந்தச் சந்தர்ப்பத்தை சகோதரர் எம்.ஏ.ஏ.அப்துல் மஜீத் அவர்கள் மூலமாக எனக்கீந்திருக்கிறான். இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இன்ஸா அல்லாஹ் என்னாலியன்ற வரையிலும் பொய்யுடன் போராடியே இறப்பதென்று முடிவுக்கு வந்துள்ளேன். ஆகவே திருக்குர்ஆன் தீர்ப்பு என்ற பெயருடன் சில நுண் விபரங்களைப் பல பாகங்களாய் அவசியத்திற் கேற்றபடி எழுதி வெளியிட்டுள்ளேன்.





எனது கொள்கையின் ஓர் அம்சத்தையும் உங்கள் கவனத்துக்குத் தந்துவிடுகிறேன். எந்த இமாம், எந்த மனிதர், அவர் எந்த மதத்தை ஏற்றவராயினும் சரி குர்ஆன் ஹதீஸுகளின்படி பகுத்தறிவுக்காதாரமாய் கூறிய கூறுகிற எந்த ஓர் விஷயத்தையும் நான் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்வேன். ஆனால் குர்ஆன் ஹதீஸுகளுக்கும் பகுத்தறிவுக்கும் மாறாய்க் கூறுபவர் எவ்வித பட்டம் பதவிகளையுடைய மேதைகளேயானாலும் அவர்களுடைய பேச்சை எழுத்தை ஆதாரமாய் ஏற்றுக் கொள்ளவும் மாட்டேன். ஆகவே, வாசகநேயர்களான நீங்கள் குர்ஆன் ஹதீஸுகளை ஏற்றுக்கொள்ளாத பகுத்தறிவுக்கிடந்தராத புத்தகம், கிதாபுகளை ஆதாரங்களாய் வைத்துக்கொண்டு என்னைக் குறைகாண முற்படாதீர்கள். எங்கள் வேதமான குர்ஆனைக் கொண்டும் எங்கள் செய்க்கான காமில் றசூல் (ஸல்) அவர்களின் அமுதவாக்கான ஹதீஸுகளையும் பகுத்தறிவையும் ஆதாரமாக எடுத்துக் கொண்டும்தான் என் பேச்சை எழுத்தை எடைபோட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முடிக்கிறேன். சர்வசக்தனான இறைவன் நம்மெல்லோருக்கும் இன்னருள் பாலிப்பானாக. ஆமீன்.

ஷெய்ஹுல் முப்லிஹீன்
M.S.M அப்துல்லாஹ் (றஹ்)



அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன் ஸ்தாபகரும்,
ஆயுட்காலத் தலைவருமான, இசையரசர்,
ஆத்மீகஞானி, சுல்தானுல் ஆரிபீன்,
ஷெய்ஹுல் முப்லிஹீன்,
எம்.எஸ்.எம். அப்துல்லாஹ் (ரஹ்)



## ஷெய்குல் முப்லிஹீன் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்) அவர்களின் வெளியீடுகள்

1. ஈமானின் உண்மையை நீ அறிவாயா?
2. பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் 1)
3. பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் 2)
4. திருக்குர்ஆன் தீர்ப்பு (பாகம் 1)
5. திருக்குர்ஆன் தீர்ப்பு (பாகம் 2)
6. திருக்குர்ஆன் தீர்ப்பு (பாகம் 3)
7. ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்
8. பகுத்தறிவின் நீதிமன்றம்
9. ஏகத்துவப் பாடல்கள் (181 பாடல்கள்)
   (இவை உள்ளடக்கிய CD / Cassettes
   வெளிவந்துள்ளது)

*(குறிப்பு: 1ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவந்துள்ளது.)*